# வெண்ணிலவு சுடுவதென்ன...



## ரமணிசந்திரன்

தொகுப்பு: go2abdul

# பொருளடக்கம்

அத்தியாயம் – 1 .......... 1
அத்தியாயம் – 2 .......... 7
அத்தியாயம் – 3 .......... 14
அத்தியாயம் – 4 .......... 21
அத்தியாயம் – 5 .......... 28
அத்தியாயம் – 6 .......... 35
அத்தியாயம் – 7 .......... 42
அத்தியாயம் – 8 .......... 49
அத்தியாயம் – 9 .......... 57
அத்தியாயம் – 10 .......... 65
அத்தியாயம் – 11 .......... 73
அத்தியாயம் – 12 .......... 80
அத்தியாயம் – 13 .......... 88
அத்தியாயம் – 14 .......... 96
அத்தியாயம் – 15 .......... 103
அத்தியாயம் – 16 .......... 110
அத்தியாயம் – 17 .......... 118
அத்தியாயம் – 18 .......... 125
அத்தியாயம் – 19 .......... 132
அத்தியாயம் – 20 .......... 139
அத்தியாயம் – 21 .......... 146
அத்தியாயம் – 22 .......... 153
அத்தியாயம் – 23 .......... 160
அத்தியாயம் – 24 .......... 167
அத்தியாயம் – 25 .......... 175
அத்தியாயம் – 26 .......... 184

## அத்தியாயம் – 1



அன்றைய தேவைக்கான பட்டியலை ஒருமுறை படித்துப் பார்த்தாள் சுதாகரி.

காய்கறி லிஸ்ட் கிட்டத்தட்ட எந்நாளும் போலத்தான்! அடுத்தது, டவுனுக்குச் செல்லும்போதுதான் முடிவு செய்ய இயலும்!

பட்டியலையும் பணத்தையும் கைப்பைக்குள் வைத்தபடி, "நான் கிளம்புகிறேன், பெரியப்பா!" என்று குரல் கொடுத்தாள்.

"சரிம்மா! சாவி எடுத்துக் கொண்டாயா? இல்லை போலிருக்கிறதே! பூமணி கிளம்பியதும், நான் பவிக்குச் சாப்பாடு கொடுக்கப் போய் விடுவேன்! ஒருவேளை, நீ சீக்கிரம் வேலை முடிந்து திரும்பிவிட்டால்... இதை எதற்கும் வைத்துக்கொள்!" என்றபடி, பக்கத்து அறையில் இருந்து வந்த ரங்கநாதன், ஒரு சாவியை அவளிடம் நீட்டினார்.

'சாவிதான் என்னிடமே இருக்குமே' என்று யோசித்தவாறு அவள் கைப்பையைத் திறக்கையிலேயே, "நேற்று என்னிடம் தந்தாயேம்மா! நான் திருப்பித் தரவில்லையே, இந்தா!" என்று பெரியவர் கூற, "ஆமாமில்லை? பவித்ராவைக் கூப்பிடப் போகும்போது, என்னிடம் வாங்கிப் போனீர்களே!" என்று சாவியை வாங்கியவள், யோசனையாக லேசாகப் புருவம் சுருக்கி, "பவித்ராவை இனிச் சாப்பாடு கொண்டு போகப் பழக்க வேண்டும், பெரியப்பா! எதற்காக, எல்.கே.ஜி. குழந்தை மாதிரி, கொண்டுபோய்க் கொடுப்பதும், சாப்பிட வைப்பதும்? வீட்டில், அவளே தானே சாப்பிடுகிறாள்? பள்ளியிலும் செய்யட்டும்!" என்றபடி, சாவியைக் கைப்பைக்குள் வைத்து மூடினாள்.

"பவிச்செல்லம் சொன்னால் எடுத்துப் போய்விடுவாள். ஆனால், இப்படிச் சூடாகக் கொண்டுபோய்க் கொடுத்தால், கூடுதலாக இரண்டு வாய் சாப்பிடுவாளே என்று நான்தான்..."

“வேண்டாம் பெரியப்பா! உங்களுக்கு இருக்கும் வேலைகள் போதாதா? அதோடு, இரண்டு நாள் விட்டால், மூன்றாம் நாள் பசிக்குத் தேவையானதை, அவளே சாப்பிட்டு விடுவாள்! வயது ஆறாகப் போகிறதே! தனக்கு வேண்டியதைத் தானே செய்யட்டும்!” என்று சொல்லி முடித்து விட்டு, கைப்பையை ஸ்கூட்டரின் பக்கவாட்டுப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவிட்டு, வண்டியைக் கிளப்பினாள்.

ஸ்கூட்டர் கிளம்பிய சத்தத்தில், வீட்டுக்குள்ளிருந்து, பின் முப்பதுகளில் இருந்த ஒருத்தி ஓடோடி வந்து, “சுதாம்மா! நான் கேட்டிருந்த பவுடரை மறக்காமல் வாங்கி வாங்க!” என்று அவசரமாக நினைவுபடுத்தினாள்.

“குறிப்பில் எழுதிவிட்டேன்... மறக்க மாட்டேன் பூமணி! ஆனால், அது வாங்குவதற்கு, மதியம்தான் போக வேண்டும்! அப்போது கட்டாயமாக வாங்குகிறேன்! நீங்கள் இப்போது, மடமடவென்று வேலையை முடித்துவிட்டுக் கிளம்புங்கள். அப்போதுதான், பாக்கெட் போடச் சீக்கிரமாக வர முடியும்!” என்று கிளம்பினாள் சுதாகரி!

அரை கிலோ, கால் கிலோ, நூறு கிராம் என்று முடிந்த வகையில் காய்களையெல்லாம் பாக்கெட் போட்டு வைத்துவிட்டால், வீடு வீடாக ‘டெலிவரி’ செய்யும்போது, நேர விரயமே இருக்காது! ‘பொறுக்குகிறேன்... கொசுறு’ என்று அந்தப் பிரச்னையும் இராது! பத்து கிராம் அதிகமாகவே வைத்து பாக்கெட் போட்டால், யாரும் குறைப்படவும் மாட்டார்கள் என்பது சுதாகரி அனுபவத்தில் கண்டறிந்திருப்பது!



அதோடு, பாக்கெட்டாகக் கொடுக்கும்போது, தனியாக ஒரு கௌரவமும் கிடைத்தது! அப்போதைக்கப்போது நிறுத்து, பேப்பரில் கட்டிக் கொடுக்கும் பெட்டிக்கடையைவிட, சூப்பர் மார்க்கெட்டுக்கு இருக்கும் மதிப்பு அதிகம்!

அள்ளித் தெளித்தாற்போல ஒரு சில கிலோமீட்டர் தொலைவில் அடுத்தடுத்து இருந்த சிற்றூர்களில், அங்கங்கே விளைகிற காய்கறிகளைப் பறித்த அன்றே வாங்கிப் போய்ப் பச்சென்று, பசுமை மங்காமல், சக்தி நகர் குடியிருப்புவாசிகளிடம் விற்பதில்தான் அவள், அவளுடைய மகள், அவளுடைய பெரியப்பா அடங்கிய அந்த சின்னக் குடும்பத்தின் பிழைப்பு நடந்தது!

‘லாரிக்காரன்’ என்று அழைக்கப்படும், மொத்தமாகக் கொள்முதல் செய்கிறவரைவிட அதிக விலை கொடுத்து சுதாகரி வாங்குவதால், காய்கறி விளைவிப்பவர்களுக்கு, இவளிடம் கொடுப்பதில் லாபம் அதிகம். அது, ஐந்து பத்து கிலோவே ஆனாலும்!

அதே சமயம், சில்லறைக் கொள்முதல், மொத்தக் கொள்முதல், அதன்பின் மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி என்று நாலு கை மாறி, அதற்குச் சரியாக விலையும் ஏறி, அதற்கான ஓரிரு நாட்களில், ஓரளவு பசுமையும் குறைந்து வரும் காய்கறிகளைவிட, சுதாகரியிடம் வாங்குவதில், குடியிருப்புவாசிகளும் இரு வகையில் லாபம் கண்டார்கள்! நாலு கைகளின் கமிஷன் சேருகையில், சுதாகரி என்ன லாபம் வைத்தாலும், அவளிடம் கிடைக்கும் காய்களின் விலையும் மலிவு... காய்கறிகள் புதியனவாகவும் இருந்தன. பெரும்பாலும், வீடு தேடியே வந்துவிடும். இதனால், சுதாகரியின் வருமானமும், நன்றாகவே இருந்தது!

தனக்கு என்ன ஆயிற்று... என்ன நடக்கிறது என்றே ஒன்றும் புரியாமல், மலங்க விழித்தபடி, அவள் இந்த ஊருக்கு வந்தபோது, “பட்டாளத்தில் சேருவதற்கு முன்னால், நான் கிராமவாசிம்மா! ஊர்த் தோட்டங்களிலே, தக்காளி, வெண்டை என்று வாங்கி, விற்போம். ஏதோ, எனக்குத் தெரிந்ததைச் செய்து பார்க்கிறேன்!” என்று, அன்று அவள் மேல் பரிதாபப்பட்டுக் கூட்டிவந்த ரங்கநாதன் தொடங்கியது!

எப்படித்தான், அவளையும் கவனித்து, வருமானத்துக்கும் வழி செய்து... அப்போது, அவர் அஷ்டாவதானம் தான் செய்திருக்க வேண்டும்!

எத்தனை பிறவி எடுத்தாலும், அவருக்குப் பட்டிருக்கும் நன்றிக் கடனைத் தீர்க்கவே முடியாது!

அன்று அவர் தொடங்கியதை, ஒருவாறு அவள் தலை நிமிர்ந்தபின் அபிவிருத்தி செய்து, இன்னும் சில விதத்தில் சுதாகரி பெருக்கியும் இருந்தாள். இப்படியே போனால்... இன்னும் எவ்வளவோ உயரலாம்!

வழி இருக்கிறது! குடியிருப்புப் பகுதியில் நல்லதாக ஒரு கடை போட்டு, இரண்டு ஆட்களை அமர்த்தி, இன்னும் பெரிய அளவில் செய்யலாம். அவசரப்படாமல், ஆழ்ந்து யோசித்துத் தெளிவாகத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும்!

வழக்கம்போலவே, மறுநாளைக்கு என்னென்ன வேண்டும் என்று முன்தினமே சொல்லி வைத்து விட்டதால், அவள் வருகிற நேரத்துக்கு கீழூர் கலைச் செல்வி எல்லாவற்றையுமே, அவள் வீட்டுக்கே கொண்டு வரச் சொல்லித் தயாராகக் காத்திருந்தாள்.

கலைச்செல்வி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, கீழூரில் சுதாகரிக்கு ரொம்பவே நேரம் மிச்சமாயிற்று!

அந்த ஊரில் அதிகம் விளைவது வெண்டை, பீர்க்கு, கொத்தவரை மூன்றுமே! அந்தந்த விளைநிலம் தேடிச் சென்று வாங்கத் தேவையின்றி, ஒரே இடத்தில் மூன்று வகையையும் வாங்கிக்கொண்டாள். அதே போல, அங்குள்ள வீட்டரசிகள் கேட்டிருந்த வகையில், டவுனில் இருந்து வாங்கி வந்திருந்த பொருட்களை எடுத்துக் கொடுத்துவிட்டு, கொடுக்கல், வாங்கல் கணக்கைக் காகிதத்தில் தெளிவாக எழுதி, மீதிப் பணத்தையும் கொடுத்து முடித்து, அங்கிருந்து வெகு விரைவிலேயே சுதாகரி கிளம்பிவிட்டாள்.

டவுனில், சில கடைகளில் சுதாகரி வாடிக்கையாக வாங்குவதால், அவளுக்கு விலை குறைத்துக் கொடுப்பார்கள்! அதோடு, போக்குவரத்துச் செலவுக்கு என்று ஒரு சிறு தொகையும் சேர்கையில் சுதாகரிக்கு இதிலும் நல்ல லாபம் வந்தது. அதோடு, இங்கு வந்து கொள்முதல் செய்யும் பெட்ரோல் செலவும் பெரும்பாலும் அடிபட்டுப் போய் விடும்.

கடை மாதிரி வைத்தால், இன்னும் நிறையக் குறைத்துக் கொடுப்பதாக டவுன் கடைக்காரர் அவளிடம் சொல்லி இருந்தார். கடை வைக்க வாங்குவதிலேயே, இப்படிக் கொண்டுவந்தும் கொடுக்கலாம்! கொடுத்தாக வேண்டும்!

கிராமங்களில் உள்ள ஆண்கள், நினைத்தால் சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, எங்கே வேண்டுமானாலும் போய், என்ன வேண்டுமானாலும் வாங்கிக் கொள்வார்கள். ஓட்டலுக்குப் போவார்கள், சாப்பிடுவார்கள். ஆனால், பெண்களால் அப்படி வீட்டைப் போட்டுவிட்டுப் போக முடியாது. அப்படியே போனாலும், எதை, எங்கே வாங்குவது என்று ஒன்றும் தெரியாது!

இவர்களுக்கு இப்போது, சுதாகரியின் வரவு ஒரு வரப்பிரசாதம்! அலங்காரப் பொருட்கள், சமையல் சாமான்கள், உருளைக்கிழங்கு தோல் சீவ, எலுமிச்சம்பழச் சாறு பிழியக் கருவிகள்... இப்படி எத்தனையோ தேவைகள் இப்போது நிறைவேறி வருகின்றன. அதை இடையில் விட்டுவிடக் கூடாது. குறைந்த பட்சமாக, அடுத்த தலைமுறையேனும், துணிந்து சென்று, இதையெல்லாம் வாங்கி வருகிற பழக்கம் ஏற்படுகிற வரை, இதைச் செய்தாக வேண்டும்.

அடுத்திருந்த வளவூரில் அவரை, பாகல், புடலை, பீர்க்கை வாங்கிக்கொண்டு பக்கவாட்டில் மேலூரை அடைந்தபோது அவள் மனம் உள்ளூரச் சலித்தது!

அவளது வரவை எதிர்பார்த்தவன்போல, துரைப் பாண்டியன், தன் சகாக்களோடு நின்று கொண்டிருந்தான்!

அவனைத் தவிர்ப்பதற்காக, இந்த ஊரை விடவும் முடியாது! சற்றுப் பெரிய அளவில் விளைநிலங்கள் உள்ள கிராமம். தக்காளி, கத்தரி, பச்சை மிளகாய், முருங்கைக்காய், வெள்ளரி... எல்லாமே இங்கேதான்!

சொல்லப் போனால், துரைப்பாண்டி ஒன்றும் கெட்டவன் அல்ல! ஒரு மாதிரியான அன்புத் தொல்லை! உரிமை எடுத்துக்கொண்டு உதவி செய்வது! அவன் சும்மா இருந்தால் தேவலையே என்று எண்ண வைக்கிற ரகம்!

அன்றும், அதே போலத்தான்!

ஸ்கூட்டருக்கு நேர் முன்னே வந்து நின்றுகொண்டு, “ஸ்டாப்... ஸ்டாப்!” என்று கத்தி நிறுத்த வைத்தான்.

“வாங்க மேடம்! இன்னிக்கு, உங்களுக்கு வசதியாக, இங்கேயே எல்லாத்தையும் கொண்டுவந்து, வைக்கச் சொல்லிவிட்டேன்! கீழூரிலே அப்படித்தானே, செய்கிறீங்களாம்! எடுத்துப் போட்டுக்கொண்டு, உடனே கிளம்பிடாதீங்க. ஃபர்ஸ்ட் கிளாஸ் செவ்விளநி, ஆள் கொண்டு வருவான். குடித்துவிட்டுப் போகலாம்...” என்று அவன் சொல்லிக்கொண்டிருக்கையில் காதே கேளாதவள் போல, ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி, ஹெல் மெட்டை, வண்டியோடு சேர்த்துப் பூட்டினாள் சுதாகரி.

“எதுக்குப் பூட்டுகிறீங்க மேடம்? அதான்... நான் காவலுக்கு இருக்கேனே! என்னை மீறி, இங்கே எவன் உங்க வண்டியைத் தொடுவான்?”

அவனை ஒரேயடியாக அலட்சியம் செய்வதும் சரியில்லை. எனவே, சுருக்கமாக “அவசியமில்லை துரைப் பாண்டியன். நீங்கள், உங்கள் வேலையைப் பாருங்கள்!” என்று அவனை நிமிர்ந்து பாராமலே கூறிவிட்டு, “என்ன பெரியவரே! எல்லாம் தயாரா?” என்று வீட்டு வாசலில் நின்றவரிடம் கேட்டு, மடமடவென்று, ஸ்கூட்டரின் முன்னே, பின்னே என்று எல்லாவற்றிலும் காய்கறி மூட்டைகளை அடுக்கச் செய்தாள்.

உதவியாகத்தான் என்றாலும், துரைப்பாண்டியன் ஊடே ஊடே வந்தது, அவளுக்கு எரிச்சலூட்டியது! இதில், அவளுக்கு அறிவுரை வேறு!

“இவ்வளவு வெயிட்டை இந்த வண்டி தாங்காது, மேடம்! பாதியை விட்டுப் போங்க! நான் எடுத்தாந்து தர்றேன்!”

முகம் மாறாமல் மறுத்துவிட்டு, அடுத்து வந்த இளநீரையும் “வேற்று இடங்களில் நான் எதையும் சாப்பிடுவது இல்லை!” என்று தொடாமலே வைத்துவிட்டு, சுதாகரி கிளம்பிவிட்டாள்.

“ஏய்... என்ன... என்ன...” என்று துரைப் பாண்டியோடு நின்றிருந்த சிலர் அவனை விரலால் குத்தி, சங்கேதமாகக் கிண்டலடிப்பதும், “ஏய்... என்ன? மேடத்தைப் பத்தித் தப்புத் தவறா, ஏதாச்சும் சொன்னே சட்னியாக்கிருவேன்! தெரியும்ல?” என்று அவன் மிரட்டுவதும், காற்றோடு வந்து அவள் காதில் விழுந்தது!

சும்மா இருக்கிறவனைக்கூட சீண்டி விடுகிறார்களே! இந்த வயதில் ஒரு பெண், காடோ, மேடோ என்று தன்னந்தனியே அலைந்தால், சில சபலங்களுக்கு என்னென்னவோ தோன்றும்தான். அது போன்ற தருணங்களில் பெரியப்பாவின் மிலிட்டரி வாசம், சுதாகரிக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறது! அதிரடி நடவடிக்கை போல, உடனடிப் பலன் தருவது எதுவுமில்லை!



துரைப்பாண்டியனே அப்படி ஒருமுறை வாலாட்டி, அவளிடம் வாங்கிக் கட்டிக்கொண்டவன்தான். அதன் பிறகு, ஆளே மாறிவிட்டான்! ஆனால், இதுவும் அவளுக்குத் தொல்லையாகத்தான் பட்டது!

அதைவிடவும், பெண்களின் பேச்சு, இன்னமும் அதிகமாக, அவளைத் தாக்கியது!

“ஏம்மா, ஒனக்கு இதுதான் தாலியா? வூட்டுக்காரரு எப்ப வருவாக? இருக்காகத்தானே?” என்று கழுத்துச் சங்கிலியைக் கூர்ந்து நோக்கிவிட்டுக் கிராமத்துப் பெண்மணி கேட்டால், “கணவர் எங்கே? விவாகரத்தா, அல்லது விட்டுவிட்டு, ஊர் மேயப் போய்விட்டானா? அல்லது, வேறே கேஸா?” என்று படித்தவள் கேட்டாள்!

முதலில் வலித்து அழுதவள்தான் சுதாகரி! பதில் கொடுக்க முடியாத வலி! சொல்லப் பிடிக்காத வேதனை!

ஆனால், “இது உன் சொந்த விஷயம். இது பற்றிய விவரம் சொல்வதும், சொல்லாததும் உன் விருப்பம்! அதை மீறிக் கேட்க யாருக்கும் உரிமை கிடையாது! இது, கேட்டவர்களுக்கும் தெரியும்! எனவே, இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், நீ, உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போனால், சில தினங்களிலேயே, எல்லாம் சரியாகிப் போகும்! ஏனெனில், இந்த இரு தரத்தாருக்குமே, நாம் தேவைப்படுகிறோம்! தேவை இருக்கிற இடத்தில், தொடர்ந்து தொல்லை தர மாட்டார்கள். அப்படித் தருகிற முட்டாள்களை அலட்சியம் செய்து ஒதுக்கு. நாலு நாள் ஒதுக்கினால், தானாக ஒழுங்காகப் பேசுவார்கள்! நம்மை ஒருவர் எப்படி நடத்தவேண்டும் என்று, நாம்தான் கற்றுக் கொடுக்க வேண்டும்!” என்று, அப்போதும் ரங்கநாதன்தான் அவளுக்குச் சொல்லிக் கொடுத்தார். அவர் சொன்னதே சரியாக, அந்தக் கேள்விகள் பெரிதும் குறைந்து, கிட்டத்தட்ட நின்றே போயின எனலாம்!

“சுதாகரி என்றால், தன்னிறைவு உடையவள் என்று பொருள்! உன் நிம்மதிக்கும், மகிழ்ச்சிக்கும் நீ அடுத்தவரைச் சார்ந்து இருக்கக் கூடாது!” என்பார் அவர். எல்லா வகையிலும், இன்றைய சுதாகரியை உருவாக்கியவர், அவரே! அவர் மட்டும் இல்லையென்றால்... நினைத்துப் பார்ப்பது கூட முடியாத காரியம்!

வீட்டை அடைந்தபின், காய்கறிகளைப் பிரிப்பது... பாக்கெட் போட்டு விலை எழுதுவது... வாடிக்கையாளர்களிடம் சேர்ப்பித்துப் பணம் வாங்குவது என்று சுதாகரிக்கு நேரம் சரியாக இருந்தது!

அவள் ஒரு சுற்று போய்விட்டு வந்ததும், “அம்மா!” என்று பவித்ரா ஓடி வந்தாள்!

“அம்மா! நீங்கள் வெளியே போயிருந்த போது, மூணு போன்!” என்று, போன் கால்களின் விவரம் சொன்னாள். “செகரட்டரி ஆன்ட்டிக்கு, பேபி பிங்க்கில் சேலைக்கு ஃபால்ஸ் வேண்டுமாம்! ‘பேபி பிங்க் என்ன’ன்னு கேட்டால், எனக்குச் சொல்லலை! அது உங்களுக்குத் தெரியும் என்கிறாங்க! ஆனால், எனக்கு அந்தக் கலரே புரியலை!” என்று தன் மணிக்குரலில் தெரிவித்தாள்.

மகளைக் கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் போல இருந்த ஆவலைக் கட்டுப்படுத்திக் கொண்டு தலையாட்டினாள் சுதாகரி.

“இதோ, இந்தப் புத்தகம். உனக்காக வாங்கி வந்தேன்!” என்று ஒரு படக்கதைப் புத்தகத்தைக் கொடுத்தாள்.

“தாங்க்ஸ்மா!” என்று புத்தகத்தோடு பறந்தாள் பெண்!

பெருமையோடு பார்த்திருந்துவிட்டு, “உன்னைப் போலவே கெட்டிக்காரி, உன் பெண்! பொறுப்புடன் நடப்பதிலும் சரி... தோற்றத்திலும் சரி!” என்றார் ரங்கநாதன்.

“நிஜமாகவே, என்னைப் போலத்தான்! இல்லையா, பெரியப்பா? மெய்யாகவே, வேறே மாதிரி இல்லைதானே?” என்று ஒரு தவிப்புடன் கேட்ட சுதாகரியின் கண்களில், லேசாக நீர் திரையிட்டிருந்தது!

## அத்தியாயம் – 2



**ம**றுநாள் மதிய உணவைக் கையோடு எடுத்துப் போகச் சொன்னதற்குப் பவித்ரா மறுப்பேதும் சொல்லவில்லை!

“ஸ்பூன் போட்டுத் தாங்கம்மா! ஏன்னா, கை கழுவுகிற இடத்திலே கூட்டமாக இருக்கும்! பெரிய பசங்க, தள்ளி விட்டு விடுவாங்க! ஸ்பூன் இருந்தால், சாப்பிட்டுவிட்டு, அப்படியே வைத்து விடலாம்!” என்று மட்டுமே சொன்னாள்.

அவள் பள்ளிப் பையை எடுத்துவரச் சென்றபோது, “மறுக்கவில்லை பார்த்தாயா? அதேசமயம், செம்மறியாடு மாதிரித் தலையையும் ஆட்டாமல், அதில் என்ன பிரச்னை வரக்கூடும் என்று யோசித்துத் தீர்வும் கண்டுவிட்டாள். பார்! இதைத்தான் நேற்று சொன்னேன்!” என்றார் ரங்கநாதன், பெருமையோடு.

“உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொடுக்கிறீர்களா, பெரியப்பா? என் கெட்டிக்காரத்தனம் எல்லாம் நீங்கள் கற்றுக் கொடுத்ததுதானே?” என்றாள் சுதாகரி, சிறு முறுவலுடன். தொடர்ந்து, “எனக்காக என்னதான் தெரிந்தது?” என்றபோது, குரலில் கசப்பும் எட்டிப் பார்த்தது! “தெரியாமல் என்னம்மா? பெரிய துன்பம் வரும்போது, எல்லோருமே மயங்கித் தயங்குவதுதான். பிறகு, தேவை வந்தபோது, வெளிப்படவில்லையா? நம் வியாபாரத்தையே எடுத்துக்கொள்! நான் செய்கிறவரையில், வெறும் ‘காய்க்கார’னாகத்தான் இருந்தேன்! நீ நடத்தத் தொடங்கிய பிறகு, ‘பெரியவரே’ ஆகிவிட்டேனே! ‘சார்’ என்ற அழைப்பு வேறு! அந்த மரியாதை இப்போதுதானே கிடைத்திருக்கிறது?”

"அதுவும்..." என்று சுதாகரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பவித்ரா தோளில் மாட்டிய புத்தகப் பையுடன் வந்துவிட, அவர்களது 'மலரும் நினைவுகள்' அத்தோடு நின்றது!

"அம்மா, அந்த ஆன்ட்டிக்கு வாங்குகிற பேபி பிங்க், என்னிடம் காட்டிவிட்டுக் கொடுங்கம்மா! அந்தக் கலர், நான் கட்டாயம் பார்க்கணும்!" என்றாள் சிறுமி.

மகளின் ஆர்வத்தையும், மறக்காமல் சொன்னதையும் எண்ணி முறுவலித்தபடியேதான் சுதாகரி, லேடீஸ் கிளப் செகரட்டரிக்காக, ஃபால்ஸ் வாங்கப் போனாள்.

மற்றபடி அவளுக்கு, இது லாபமற்ற வேலையே! துணிக் கடைகளில் எல்லாம், அவளுக்கு விலை குறைத்துக் கொடுப்பதில்லை! ஆனால், மற்ற வாடிக்கை கருதி, இதுபோல லாபமற்ற சிறுசிறு வேலைகளையும், சுதாகரி அவ்வப்போது செய்து கொடுப்பதுண்டு!

அதோடு... செகரட்டரி மகிளா, சக்தி நகர்ப் பெண்களிடையே சற்று செல்வாக்கு உடையவள். அவளைப் பின்பற்றுகிறவர்கள் நகரில் நிறையப் பேர் இருந்தனர்! அவளுக்கு ஒன்று செய்து கொடுப்பது, சுதாகரிக்கு நல்லதாகவே முடியும்!

ஆனால், ஃபால்ஸ் வாங்கப் போன இடத்தில்தான் சுதாகரிக்குச் சற்று வெறுத்துப் போயினது.

டவுனில் பெரிய ஜவுளிக்கடை அது! ஃபால்ஸ் முதற் கொண்டு, பல்லாயிரம் ரூபாய் மதிப்புள்ள பட்டுகள்வரை, எல்லாமே... அங்குள்ள வண்ணங்கள் எங்கும் கிடைக்காது என்பார்கள். அதற்கேற்ப, 'இந்திரதனுசு' என்று அழகாக வானவில்லின் மற்றொரு பெயரைக் கடைக்குச் சூட்டியிருந்தார்கள்! எப்போதும் கூட்டம் அதிகமாக அலை மோதும் கடை அது!



திருமதி மகிளா அவளது சேலையைக் காட்டிக் கேட்டிருந்தது, சற்று அபூர்வமான நிறம்! நாலு கடை தேடி அலைவதைவிட, 'இந்திரதனுசு'க்கே போய், உடனே வாங்கி வந்து விடலாம் என்றுதான் சுதாகரி அங்கே சென்றது. அவள் எண்ணியது போலவே, அவள் தேடிச் சென்றது, உடனே கிடைத்தும்விட்டது. ஆனால், பில் போடும் இடத்தில்தான் காத்திருக்க நேர்ந்துவிட்டது. அதுவும் நியாயமற்று, நெடு நேரமாக!

பில் போட எடுத்துப் போகும் பையன்கள் யாரையும் காணாததோடு, சின்னதாக ஒரே துணிதான் என்பதால், "பில்லிங் அந்தப் பக்கம்... நீங்களே போய்ப் போட்டுக்கோங்கம்மா, ப்ளீஸ்!" என்று, ஃபால்சை, சுதாகரியின் கையிலேயே

கொடுத்துவிட்டு, விற்பனையில் இருந்த பெண், அடுத்த வாடிக்கையாளரைக் கவனிக்கலானாள்.

கூட்டம் நிறைய இருந்ததால், சுதாகரியும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை! அதோடு, விற்பனை செய்கிறவளும், ஒரு 'ப்ளீஸ்' போட்டு, மரியாதையாகத் தானே கேட்டுக்கொண்டாள்!

ஆனால், பில் போடும் இடத்தில், மூன்று கம்ப்யூட்டர்கள் இருந்த போதும், நிறையத் துணிகள் கொண்டு வருகிறவர்களுக்கு பில் போட்டுப் பணத்தை வாங்கிக் கொண்டே இருந்தார்களே தவிர, சின்னதாக ஒரு ஃபால்ஸோடு நின்ற அவளை, யாரும் கண்டுகொள்வதாகவே இல்லை! வரிசை என்கிற வார்த்தையின் பொருள் அங்கே யாருக்கும் தெரிந்த மாதிரியும் இல்லை!

கூட்டத்தில் முண்டியடித்து இடித்துக்கொண்டு போவது, அவளுக்கு எப்போதுமே பிடிக்காது.

இதுவே, ஃபால்ஸ் அவளுக்கு என்றால், இன்னொரு நாள் வந்து வாங்கிக் கொள்ளலாம் என்று துணியைத் திருப்பிக் கொடுத்துவிட்டுப் போயிருப்பாள்! ஆனால், அந்த மகிளாவோ, துணி உடனே வேண்டும் என்றிருந்தாள்.தருவதாக ஒத்துக்கொண்டு, அலட்சியம் செய்யவும் முடியாது!

நெரிசல் சற்றுக் குறைந்தாலும், சட்டெனப் போய் பில் போடுவதற்கான வாய்ப்புக்காக, எரிச்சலை அடக்கியபடி அவள் நின்றுகொண்டிருக்கும்போது, “ஹலோ!” என்று ஓர் ஆண்குரல் அருகில் கேட்டது.

அவளுக்கு மிக அருகில் நின்று, அவளைத்தான் அழைத்துக் கொண்டிருந்தான் ஒருவன்!

இங்குமங்கும் வேகமாகச் செல்லுகிறவர்களுக்கு இடைஞ்சலாகிவிடக் கூடாது என்ற நோக்கத்தில், அவளருகே மிக நெருங்கி, அவன் நின்றிருக்கவும் கூடும்!

ஆனால், எப்போதுமே ஒதுக்கம் விரும்பும் சுதாகரி, அனிச்சையாகச் சட்டெனப் பின்னடைந்து, சிறு புருவச் சுளிப்புடன், கேள்வியாக அவனை ஏறிட்டு நோக்கினாள்.

ஏறிட்டுதான்! சற்று அண்ணாந்து பார்க்கிற உயரம்!

“ஒன்றுமில்லை... ரொம்ப நேரமாக நிற்பதைப் பார்த்தேன்! கொடுங்கள்... உடனே பில் போட ஏற்பாடு செய்கிறேன்!” என்றான் அவன்.

'ஆ...மாம்... வந்துவிடுவான்களே' என்று சுதாகரிக்கு மனம் கடுத்தது!

இதுவே, வயதான ஒரு அம்மா நிற்கட்டும்... ஐயாவுக்குக் கண்ணே தெரியாது! இப்போதானால், இவள் ரொம்ப நேரமாக நிற்கிறாளாம்! எங்கே, எவள் நிற்கிறாள் என்று பார்ப்பதைத் தவிர, இவனுக்கு வேறு வேலை என்ன? இதற்காகவே அலைவது!

மனதை முகம் காட்டாமல் மறைக்க முயற்சிக்கவில்லை, அவள்.

"உங்களுக்கு எதற்கு வீண் சிரமம்? கடவுள் எனக்குத் திவ்யமான இரண்டு கால்களைத் தந்திருக்கிறார் சார்! அதனால், எவ்வளவு நேரமானாலும் நின்று, என் வேலையை நானே பார்த்துக்கொள்ள முடியும்! நீங்கள் போய், நிஜமாகவே தேவைப்படுகிறவர்களுக்கு உதவி செய்யுங்கள்! அதாவது, உண்மையாகவே அடுத்தவருக்கு உதவும் மனப்பான்மை உங்களுக்கு இருந்தால்!" என்று ஏளனமாகக் கூறி விட்டு, அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

புரியாத ஏதோ விசித்திரப் பிராணியைப் பார்ப்பது போல, அவளைப் பார்த்தான் அந்த நெடியவன்.

ஆமாம்! இந்த ரோலக்ஸ் கைக்கடிகாரத்தையும், சான்ஃபிரிஸ்கோ பேன்ட்டையும் பார்த்ததும், எல்லோரும் தலைசுற்றிப் போவார்கள் என்று எண்ணினானாக்கும்!

சுதாகரி தலை திருப்பி நிற்கையிலேயே, மொத்தமாக பில் போடுவதற்குத் துணிகளைக் கொண்டுபோன கடைப்பையன் ஒருவன், அவற்றை கவுன்டரில் வைத்து விட்டு, அவளிடம் ஓடி வந்தான்!

"மன்னிச்சுக்கோங்கம்மா! ரொம்ப நேரமாக நிற்கிறீங்களே! வாங்கம்மா!" என்று அவளை முன்னே அழைத்துச் சென்றான்.



தானாகவே நடக்கிறது பார் என்பதுபோல, அந்த அதிகப் பிரசங்கி நெட்டையனை ஒரு பார்வை பார்க்க, சுதாகரிக்கு ஆசைதான்!

ஆனால், ஓர் அந்நியனைத் தலை திருப்பிப் பார்க்க மனமின்றி, நேரே போய்விட்டாள்!

அப்புறம், அவன் அறிமுகமானவனைப் போல, 'ஈ.... ' என்று இளிப்பான். அப்புறம், அதுவே அங்கங்கே தொடரும்... எதற்கு, இன்னொரு வீண் தொல்லை? அந்த ஒரு துரைப்பாண்டியன் போதாதா? அவனாவது, வெறும் 'ஷோ'காட்டி மட்டும்!

ஆனால், பாண்டியனைப் போல, இவனை விழத் தட்ட முடியுமா என்பதில் சுதாகரிக்குச் சந்தேகம் இருந்தது!

ரசீதையும் துணியையும் வாங்கிக்கொண்டு, திரும்பிப் பாராமலே, அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் அவள்!

துணியைக் கொண்டுபோய், பவித்ராவிடம் அந்த 'பேபி பிங்க்' நிறத்தைக் காட்டியதும், அவளுக்கு ஒரே சந்தோஷம்!

"இப்போ, இந்தக் கலர் எனக்குத் தெரிந்திட்டது!" என்று குதித்தாள்!

உடனே ஏதோ நினைவு வர, “அம்மா, என்னோட ஹேப்பி பர்த்டேக்கு இந்த நிறத்திலேதான் டிரஸ் வாங்கணும்... ப்ராமிஸ்!” என்று தாயிடம் உறுதி பெற்றுக் கொண்டாள்!

“அம்மா! நான் ஹோம்வொர்க் முடித்தாயிட்டுது! டி.வி. பார்க்கலாமா?” என்று அனுமதி கேட்டாள்.

உருகி, “போய்ப் பாருடா... செல்லம்!” என்று அனுப்பி வைத்தாள் தாய்!

அன்று பள்ளிக்கு மதிய உணவு எடுத்து வைக்கும்போது, கூடுதலாக இரண்டு இட்லி வைக்கச் சொன்னாள் பவித்ரா!

“இரண்டா?!” என்று சுதாகரிக்கு ஆச்சர்யம்!

“நீ சொன்ன மாதிரி பசித்துச் சாப்பிடுகிறாளோ, என்னவோ?” என்ற ரங்கநாதனிடம், மறுப்பாகத் தலையசைத்தாள் சுதாகரி!

“ஒன்றுகேட்டால், அப்படி எடுக்கலாம்! ஆனால், இரண்டு... ஊகூம்! என்ன பவி? ஏதேனும் பறவைகளுக்குப் பிய்த்துப் போடுகிறாயா?” என்று மகளிடம் கேட்டாள்.

“இல்லைம்மா!” என்று மெல்ல விவரம் வெளிவந்தது! “ஸ்கூல்ல, ஒரு பொண்ணும்மா... பாவம்! அவளுக்கு அம்மாவே இல்லை. அவளோட பாட்டி, தினமும் ரொட்டிதாம்மா வைக்கிறாங்க! கொஞ்சமா ஜாம் தடவி! காய்ஞ்சு போய்... அவளுக்குச் சாப்பிடவே முடியலைம்மா! நேத்து ஒரு பூரி கொடுத்தேனா? அவளுக்கு, வாயெல்லாம் தண்ணி! அவ்வளவு பிடிச்சுப் போச்சுது! இப்பல்லாம், நானும் அவளும்தான் சேர்ந்து சாப்பிடுகிறோம்மா! பாவம்... அவளுக்குக் கொஞ்சம் கொடுக்கலாமில்லை? அதான்!” என்று நீளமாகச் சொல்லி முடித்தாள் மகள்!

சுதாகரிக்கு மனம் உருகிப் போனது! ஆனால், கொஞ்சம் தயக்கமும்கூட!

ரொட்டியும் ஜாமுமாக, மேல்நாட்டு பாணியில் வளர்கிற பெண்ணுக்கு... இட்லி, இடியாப்பம் என்று கொடுத்து பட்டிக்காடாக ஆக்குவதாகத் தகராறு ஆகிவிட்டால்?

“கொடு! ஆனால், இப்படிச் சாப்பிட்டதாக அவர்கள் வீட்டில் சொல்லிவிடச் சொல்லு!” என்று கூடுதலாக இட்லியும், வெங்காயச் சட்னியும் வைத்து அனுப்பினாள்.

மகளின் யோசனையான பார்வை, அவளுக்கு அப்போது புரியவில்லை!

சில தினங்களில், மகள் கேட்டுக் கொண்டபடி, மதியத்துக்கு முழுத் தேவைக்குமே, அந்த அனிஷாவுக்கும் சேர்த்தே, சுதாகரி உணவு அனுப்பத் தொடங்கினாள். ஒரு சின்னக் குழந்தைக்குக் கொடுப்பதில் என்ன ஆகிவிடப் போகிறது என்ற எண்ணம்!

“அனிக்கு அது பிடிக்கும்... அனிக்கு இது பிடித்தது” என்று பவித்ரா வாயைத் திறந்தால் அனியின் பேச்சாகவே இருந்தது! அந்தப் பேச்சினூடே ஒரு நாள், ரொட்டித் துண்டுகளைத் தூக்கி வீசினால், காக்கைகள் பறந்தபடியே எப்படிப்

பிடிக்கும் என்று பவித்ரா நடித்துக் காட்டவும், சட்டெனப் புரிந்து, “என்னம்மா, அவர்கள் வீட்டில், சொல்லவே இல்லையா?” என்று வினவினாள்.

சற்றே அசடு வழிந்துவிட்டு, “என்ன சொன்னாலும், அனியை அவங்க வீட்டுப் பாட்டி, எப்படியாச்சும் திட்டுவாங்கம்மா! அதான்... அவளுக்குச் சொல்லப் பயம்! காக்காய்க்குப் போட்டுவிட்டு, சாப்பிட்டதாக வீட்டில் சொல்லிவிட்டால், திட்ட மாட்டாங்க இல்லையா?” தன் தோழிக்கு வக்காலத்து வாங்கிப் பேசினாள் பெண்.

அடுத்தவர் வீட்டு விஷயத்தில் தலையீடு என்பதெல்லாம், இவளுக்கு என்ன புரியும்?

அதோடு... பாட்டி என்றால், பாவம். வயது முதிர்வினால் அந்தப் பெண்மணிக்குச் செய்ய முடியவில்லையோ என்று சுதாகரிக்குப் பரிவும் தோன்றியது! ஆள் வைத்துச் செய்ய வசதி இல்லாமலும் இருக்கலாம்!

தாயில்லை என்றால், எவ்வளவு துன்பம் என்று அனிஷாவிடமும் அவள் மனம் உருகியது! ஆனால், தாய் இல்லாவிட்டாலும், தந்தை இருக்கிறான்தானே? மகளைப் பெரிய பள்ளியில் சேர்த்தால் மட்டும் போதுமா? தாயுமானவனாக இருந்து, வளரும் குழந்தையின் மற்ற தேவைகளையும் கவனிக்க வேண்டாமா?

அந்த அப்பா, பாட்டி யாரைப் பார்த்தாலும், அனிஷாவுக்குப் பாதிப்பின்றி, மெல்லச் சொல்ல வேண்டும் என்று மனதுள் குறித்து வைத்தாள், அவள்.

பொதுவாகக் காலையில் மகளைப் பள்ளியில் கொண்டு விடுவது, சுதாகரியின் பொறுப்பு! மாலையில், ரங்கநாதனோ, சுதாகரியோ, யாருக்கு முடிகிறதோ போய்க் கூட்டி வருவார்கள்!

அன்று... சில மொத்த சாமான்கள் வாங்கி வருவதற்காக ரங்கநாதன் டவுனுக்குச் சென்றிருந்ததால், பவித்ராவை அழைத்துவர பள்ளிக்குச் சென்றபோதுதான், சுதாகரி முதல் முதலாக அனிஷாவைப் பார்த்தாள்!

பெரிய கண்களும், மெலிந்த உடலுமாக, அனிஷாவைப் பார்த்ததுமே, சுதாகரிக்கு அந்தச் சிறுமி மீதிருந்த பரிவு இரு மடங்காயிற்று!

பவித்ராவை விட, அனிஷா சில மாதங்கள் சிறியவளாகவே இருக்கலாம்! என்றாலும், இருவரும் ஒரே வகுப்பு மாணவிகள் என்றால், நம்ப முடியாத அளவு அனிஷா ஒடுங்கித் தெரிந்தாள்.

தாயைக் கண்டதும், “அம்மா...” என்று பவித்ரா ஓடி வந்து, பெற்றவளின் கையைப் பிடித்து இழுத்து, குனிய வைத்து, கன்னத்தில் முத்தமிட, மகளைப் பதிலுக்கு முத்தமிட்டபடி பார்த்த சுதாகரிக்கு, அந்தச் சிறுமியின் முகத்தில் தெரிந்த ஏக்கம்... நெஞ்சை இறுக்கிப் பிடித்தது!

முறுவலோடு நோக்கித் தலையசைத்து அவளை அழைத்தவள், மண்டியிட்டு அவளுக்கு ஒரு கன்னத்தைக் காட்டினாள்!

சிறகு முளைத்தாற்போலப் பறந்தோடி வந்த சிறுமி, சுதாகரியின் கழுத்தை இறுக்கிப் பிடித்து, அவள் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

அந்த விநாடியில் இருந்து, இருவருக்கும் இடையே ஒரு பிணைப்பு உருவாகிவிட்டதை வியப்புடன் சுதாகரி உணர்ந்தாள்!

விசித்திரம் என்னவென்றால், அவள் ஏதும் சொல்லாமலே, அந்தச் சிறுமிகள் இருவருமே, அதை உணர்ந்துகொண்டதுதான்! உணர்ந்தது மட்டுமின்றி, குழந்தைகளுக்கே உரிய விதத்தில், அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தவும் முனைந்தனர்.

பெரிய கண்டிப்புக்காரி, கறாரப் பேர்வழி என்று பெயர் வாங்கிய சுதாகரியால், அந்தக் குழந்தைகளிடம் அப்படி நடந்துகொள்ள முடியவில்லை!

இதனால் என்னென்ன பேச்சுகள், பிரச்னைகள் வரப் போகின்றன என்று அந்தக் குழந்தைகளுக்கு மட்டுமன்றி, அவர்களது கெஞ்சலுக்கு மனமிளகித் தலையாட்டிய சுதாகரிக்கும் அப்போது தெரிந்திருக்கவில்லை!

## அத்தியாயம் – 3



**வீ**ட்டிலும் சரி, வெளியிலும் சரி.. சுதாகரி சற்றுக் கண்டிப்பானவள்தான். ஒரே மகள் என்றபோதும், பவித்ராவுக்குத் தடையற்ற சுதந்திரம் கொடுப்பதில்லை! அதிகம் டி.வி பார்க்க விடமாட்டாள். உணவிலும் முதலில் இருந்தே கட்டுப்பாட்டைப் புகுத்திவிட்டதால், அதிலும் பிரச்னை இருந்தது இல்லை!

அதைப் போலவே, செய்கிற தொழிலிலும் கணக்காகத் தான் இருப்பாள்! கடனுக்கு வாங்கவும் மாட்டாள்.. கடன் கொடுப்பதும் கிடையாது!

“இன்னிக்குப் பணம் இல்லை, சுதாம்மா! இந்த சோப்புக்கு, ரெண்டு நாள் கழித்துப் பணம் வாங்கிக்கோயேன்!” என்று, அவ்வப்போது யாரேனும் கேட்கத்தான் செய்வார்கள். ஆனால், “இரண்டு நாட்கள் கழித்துப் பணத்தைக் கொடுத்துவிட்டு, அப்புறமாக நீ வாங்கிக்கொள்!” என்று கொண்டு போன சோப்பைத் திருப்பிக் கொண்டு வந்துவிடுவாள்.

அங்கே அவள் வாங்குகிற பொருட்களின் விலைக்குள் அடங்கினால் மட்டுமே, பண்டமாற்று மாதிரி கொடுப்பாள்.

“வருஷக் கணக்கா தாயாப் பிள்ளையா பழகுறோம், இந்த ஐம்பது ரூபாய்க்கு நம்பமாட்டேன் என்கிறாயே!” என்று குறைப்படுவார்கள்.

ஆனால், “ஒரு நண்பனை விரோதியாக்க, ஐந்து ரூபாய் கடனாகக் கொடு என்பார்கள்! உன்னை விரோதியாக்கிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை, கண்ணாத்தா!” என்று சிரித்த முகமாகவே மறுத்துவிடுவாள் சுதாகரி!

‘உன்னை மற்றவர்கள் எப்படி நடத்தவேண்டும் என்று நீதான் தீர்மானிக்க வேண்டும்’ என்று, ரங்கநாதன்தான் அவளுக்கு ஏற்கனவே கற்றுக் கொடுத்திருக்கிறாரே!

இந்தக் கடன் கேட்கும் பிரச்னை, தானாக நின்று போயிற்று! சுதாகரி கண்டிப்பானவள் என்கிற பெயரும் பரவியது! இது, ஒருவிதத்தில், அவளுக்கு மற்றவர்களின் மரியாதையையும் ஈட்டித் தந்தது!

நடை, உடை, பாவனை அனைத்திலுமே, மற்றவர்கள் மதிப்பைப் பெறுமாறு, தனக்கென்று ஒரு பாணியை ஏற்படுத்திக் கொண்ட சுதாகரி, அதிலிருந்து மாறியதே கிடையாது!

இப்படிப்பட்டவளால், இரு சிறுமிகள் ஆவலும் ஏக்கமுமாக ஓர் கோரிக்கை வைத்தபோது, கண்டிப்போடு மறுக்க முடியவில்லை!

**“இ**ன்றைக்கு அனியை நம் வீட்டுக்குக் கூட்டிப் போவோம்மா!” என்று பவித்ரா கெஞ்சும் குரலில் கேட்டபோது, சட்டென்று மறுத்துப் பேசத்தான் சுதாகரி வாயெடுத்தாள்.

வேற்று வீட்டுக் குழந்தையை, உரியவர்கள் அனுமதியின்றி, சும்மா எப்படி கூட்டிப்போக முடியும்?

ஆனால், பெரிய கண்களை விரித்து, தீர்ப்பை எதிர்நோக்கும் கைதியைப் போல, சுதாகரி என்ன சொல்லப் போகிறாளோ என்று ஏக்கமும் கவலையுமாகப் பார்த்துக் கொண்டிருந்த அனிஷாவின் முன்னிலையில், அவளால் அப்படி கண்டிப்புடன் பேச முடியவில்லை!

எனவே, “அதெப்படிம்மா முடியும்? அனி எப்போது வருவாள், ஸ்கூல் கதையெல்லாம் சொல்லுவாள் என்று அவள் வீட்டில் காத்திருப்பார்கள் அல்லவா? அனி, நம் வீட்டுக்கு வந்துவிட்டால், அவர்கள் ஏமாந்துபோக மாட்டார்களா?” என்று மகளிடம் கூறியபடி, மற்றவளைத் தனியே விட்டுவிட்டுப் போக மனமின்றி, பள்ளியின் கேட் புறமாக எட்டிப் பார்த்தாள் சுதாகரி.

இந்தப் பெண்ணைக் கூட்டிப் போக இன்னமும் யாரையும் காணோமே!

“அம்மா, ப்ளீஸ்மா!” என்றாள் பவித்ரா. “அனி வீட்டிலே ஒருத்தரும் அவளுக்காகக் காத்திருக்கவே மாட்டாங்க! அனியோட அப்பாவோட ஏதோ அத்தையாம். அந்தப் பாட்டிதான் வீட்டிலே! அவங்க டி.வி-யிலே டிராமா பார்த்திட்டே இருப்பாங்க. இவ கூடப் பேசவே மாட்டாங்க! ஏதாச்சும் கேட்டாகூடத் திட்டுவாங்கம்மா! இவ பார்க்க டி.வி கூடக் கொடுக்க மாட்டாங்க! அதான் நம்ம வீட்டிலே கொஞ்ச நேரம் விளையாடி விட்டு போகட்டுமேம்மா? ப்ளீஸ்மா! கூட்டிட்டுப் போவோம்மா!”

அனிஷா இன்னமும், எதுவும் பேசவில்லை! ஆனால், இமை தட்டினால் கூட, தன்னை இங்கேயே விட்டுவிட்டுப் போய் விடுவாளோ என்று அஞ்சியவள் போன்று, விரிந்த விழிகளால், சுதாகரியைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்!

“அதில்லைடா செல்லம்! இப்போது நாம் அனியை அழைத்துப் போய்விட்டால், அவளை வீட்டுக்குக் கூட்டிப் போக வருகிறவர்கள், அவளைப் பள்ளியில்

காணாமல், பயந்துபோக மாட்டார்களா? அதனால்...” என்றவளை இடையிட்டு, “அனியைக் கூப்பிட யாரும் வரமாட்டாங்களே!” என்றாள் பவித்ரா!

திகைப்புடன் சுதாகரி பார்க்கவும், “நானேதான் போகணும், ஆன்ட்டி” என்று மெதுவாகச் சொன்னாள் அனிஷா.

வீடு ரொம்பப் பக்கமோ? ஆனாலும்..

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, சுதாகரி முடிவெடுத்தாள். “எப்படியும், நேரத்துக்கு வீட்டுக்கு வரவில்லை என்றால், வீட்டில் உள்ளவர்களுக்குக் கவலையாகத்தானே இருக்கும்? அதனால், சொல்லாமல் கூட்டிப்போகக் கூடாதும்மா! நாம் மூவருமாக அனிஷாவின் வீட்டுக்குப் போய், அவள் பாட்டியிடம் கேட்டுக் கொண்டு, நம் வீட்டுக்கு அவளைக் கூட்டிப் போவோம்! என்னம்மா அனி, செய்வோமா?” என்று கேட்கவும், தலையை ஆட்டினாள் சிறுமி!



ஸ்கூட்டருக்குப் பழக்கப்பட்டிருந்த பவித்ராவை சைடுகாரில் உட்காரச் சொல்லிவிட்டு, அனிஷாவைத் தன் முன்னே வைத்துக் கொண்டு, வாகனத்தை ஓட்டினாள், சுதாகரி.

ஸ்கூட்டரில் செல்கையில் விரைவிலேயே அனிஷாவின் வீடு வந்துவிட்ட போதும், வீட்டுக்கும், பள்ளிக்கும் இடையே, பத்து நிமிஷ நடையளவு தூரம் இருந்தது.

இவ்வளவு தூரம், இந்தச் சிறு பெண்ணைத் தனியே நடக்க வைக்கிறார்களே என்று யோசித்தவாறு, ஸ்கூட்டரை ஸ்டாண்டு போட்டு நிறுத்திவிட்டு, வீட்டைப் பார்த்த சுதாகரி திகைத்தாள்!

சுற்றிலும் அழகான தோட்டத்துடன் கூடிய கம்பீரமான தனி வீடு! பல நிற மலர்களோடு தோட்டமும், தோட்டத்தின் நடுவில் இதமான வண்ணங்கள் பூசப்பட்ட மாடி வீடும், பொருத்தமாக ‘இந்திர தனுசு’ என்ற பெயரும்... பெயர் வைத்தவர், அந்தத் துணிக்கடை உரிமையாளரைப் போல ரசிகராக இருக்க வேண்டும்!

இங்கே வசிக்கக் கொடுத்து வைத்து இருக்கவேண்டும் என்று எண்ணியவாறு, சுதாகரி குனிந்து அனிஷாவைப் பார்த்தால், நேர் மாறான முக பாவத்தோடு, வீட்டினுள் செல்லப் பிடிக்காமல் இறுகி நின்றாள் அவள்!

தோற்றமும், நடப்பும் எவ்வளவு மாறுபடுகின்றன!

ஆனால், இப்படியொரு வீட்டை, இவ்வளவு அழகாகப் பராமரிக்கும் ஒருவன், மகளிடம் ஏன் அந்த கவனத்தைக் காட்டுவதில்லை?

தயக்கத்துடன் நடந்த அனியின் கையைப் பிடித்தபடி, வீட்டின் உள்ளே சென்றால், அனியின் பாட்டியும், சுதாகரி எதிர்பார்த்ததுபோல இருக்கவில்லை!

பாட்டியம்மாள் அதிக வயதானவளும் இல்லை... செயல்திறன் குறைந்தவளும் அல்ல!

மிஞ்சி, மிஞ்சி ஐம்பதுகளின் முதல் பாதியில் இருக்கக்கூடும்! இன்றைய நிலையில், அது மத்திய வயதுதானே? அந்த வயதில், எவ்வளவோ செய்யலாமே!

ஆனால், பவி சொன்னதுபோல பாட்டியம்மாள் டி.வி முன்னேதான் இருந்தாள்! அதை நிறுத்தாமலேதான், பார்வையைக் கூட டி.வி திரையிலிருந்து சரியாகத் திருப்பாமலேதான் பேசினாள்!

கையில் உணர்ந்த இழுப்பு, வந்த காரியத்தை நினைவூட்ட, அனிஷாவைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போக, பாட்டியிடம் சுதாகரி அனுமதி கேட்டாள்.

“தாராளமா கூட்டிப்போ!” என்றாள் பாட்டி. கேட்பவள் யார், என்ன என்றுகூட சரியாகப் பாராமல்!

“ஆனால், ஒன்று. காதிலே, கழுத்திலே கிடக்கிறது எதுவும் தொலைந்து போய்விட்டது என்று வந்து நிற்கக் கூடாது! நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்! அது, உன் பொறுப்பு!” என்றாள், தொடர்ந்து!

இதற்கு என்ன அர்த்தம்?

பிள்ளையின் நகைகளைத் திருடிவிட்டுக் காணவில்லை என்று கதைகட்ட எண்ணாதே என்று எச்சரிக்கிறாளா? மரியாதையற்ற ஒருமைப் பேச்சு வேறு!

உள்ளே கருகருவென்று எழுந்த காந்தலுடன் பார்த்தபோதுதான், சின்னதாக இருந்தாலும், அனிஷாவின் காதுகளில் கிடப்பது வைரம் என்பதும், சீருடையின் காலருக்குள் தங்கத்தில் ஏதோ மின்னுவதும் கண்ணில் பட்டது!

இந்த நகைகளோடு பிள்ளையைப் பள்ளியில் இருந்து தனியே வரச்சொல்லிவிட்டு டி.வி பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவள், அவளைச் சொல்லுகிறாளா?

ஆத்திரத்துடன் பதில் சொல்லத் திரும்பினால், “அதான் சரின்னுட்டாங்களே! சீக்கிரம் போவோம், வாங்க, வாங்க! போவோம்...” என்று அச்சத்துடன் பாட்டியம்மாளைப் பார்த்தபடி, அனிஷா தன் முழு பலத்துடன் அவளை வாயிற்புறமாக இழுத்தாள்!

நின்றால், பாட்டி வார்த்தை மாறி விடுவாளோ என்ற பயம் போலும், பாவம்!

கோபத்தை அடக்கக் கண் மூடித் திறந்து, “எதுவும் தொலையாது” என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினாள் சுதாகரி.

டி.வி சத்தத்துக்கு மேலாகக் குரலை உயர்த்தி, “ஆறு ஏழு மணிக்குள்ளாகத் திருப்பிக் கொண்டுவந்து விட்டுடு. இவள் அப்பனுக்கு, இது மூஞ்சியைப் பார்க்கப் பிடிக்காது! அவன் வருமுன்னே, எதையாவது தின்னப் போட்டுத் தூங்க வைக்கணும்!” என்றாள் பாட்டி.

பாதகி! இதை, இந்தக் குழந்தையின் காது கேட்கச் சொல்லித்தான் ஆகவேண்டுமா?

சிறுமியின் உடல் சொத்தென்று சோர்வதை உணர்ந்த சுதாகரி, 'உம்'மென்று கூடப் பதில் கொடுக்காமல், பிள்ளைகளை இழுத்துக்கொண்டு வெளியேறினாள்!

**தே**ங்காய்ப்பூ, சர்க்கரை, பொடிசாக உடைத்த முந்திரிப் பருப்பு, டூட்டிஃப்ருட்டி எல்லாம் சேர்த்து, ஈஸ்ட் கலந்து பொங்கிய மைதாவினுள் பூரணமாக வைத்து, பன் பேக் பண்ணி வைத்திருந்தாள் சுதாகரி! இந்தத் தேங்காய் பன், பவித்ராவுக்குப் பிடித்தமானது!

சுவை பிடித்துப்போய்ச் சாப்பிடும்போதே, அனியின் முகமும் மலர்ந்துவிட்டது! சின்னப் பிள்ளைகளுக்கே உரிய இயல்பால், சீக்கிரமே பவித்ராவுடன் சிரித்து விளையாடத் தொடங்கிவிட்டாள்.

ஆனால், சுதாகரிக்குத்தான் கொதிப்பு ஆறவில்லை!

என்ன மாதிரி மனிதன் அவன்? பெற்ற குழந்தையைப் பிடிக்காமல் போவதற்கு?

ரங்கநாதன் எதையோ சொல்ல, உரக்கச் சிரித்த பவித்ராவிடம் பெற்றவளின் கவனம் பாய்ந்தது.



எந்த மாதிரிப் பிறந்தபோதும், பவித்ராவை ஒரு கணமேனும், சுதாகரி வெறுத்திருப்பாளா?

இவ்வளவு மெலிவிலும் பூ மாதிரி அழகாக இருக்கும் அனியை வெறுக்கிறவன் மனிதனே அல்ல! ராட்சஸனாகத் தான் இருக்க வேண்டும்!

அல்லது... பாட்டி பொய் சொல்ல வேண்டும்!

ஆனால், அனிஷாவும் அவளுடைய தந்தையைப் பற்றி நல்லவிதமாக எதுவும் தன்னிடம் கூறியதாகப் பவித்ராவும் சொன்னதில்லை என்பது, சுதாகரிக்கு நினைவு வந்தது! அத்தோடு, பாட்டியின் பேச்சை, அனி மறுக்கவுமில்லையே! என்னமாய்ச் சோர்ந்தாள் சிறுமி!

அனிஷா வேற்று வீட்டுப் பெண்! அவளைப் பற்றி இவ்வளவு மனதைக் குழப்பிக் கொள்ளக்கூடாது என்று தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு, தன் வரவு செலவுக் கணக்குப் புத்தகங்களை எடுத்தாள் சுதாகரி!

அனியைத் திரும்பக் கொண்டு விடுவதற்கும் சுதாகரி செல்லவில்லை!

அங்கே அனிஷாவினுடைய பாட்டி ஏடாகூடமாக ஏதாவது சொல்ல, ஆத்திரத்தை அடக்க முடியாமல் இவளும் ஏதாவது சொல்லிவிட்டால், அப்புறம் அனியோடு தொடர்பே விட்டுப் போய்விடக்கூடும்!

அதோடு, இரு சிறுமிகளுமே ஆசைப்படுவதை உணர்ந்து, தினமுமே இதேபோல அனிஷாவை இங்கே கூட்டிவந்து, கொண்டு விடுவதற்கு அனுமதியும் கேட்டுவரச் சொன்னாள்.

தினமும், சுமார் மூன்று மணி நேரத்தை, அந்தக் குழந்தை சந்தோஷமாகத்தான் கழிக்கட்டுமே! வகுப்பில் அனி பின்தங்கியவள் என்று பவித்ரா சொன்னதுண்டு! ஒரே வகுப்புப் பிள்ளைகள்! இருவரையும் சேர்த்துப் பாடம் படிக்கவும் வைக்கலாம்!

என்னதான் வேற்று வீட்டுப் பெண் என்று பலமுறை தனக்குத்தானே சொல்லிக் கொண்டாலும், தன்னால் அனியை அப்படி ஒதுக்க முடியவில்லை என்று, சுதாகரி உணர்ந்தாள்!

செல்ல நாய்க்குட்டியைப் போலச் சற்று நேரத்துக்கு ஒருமுறை, சுதாகரியிடம் ஓடிவந்து, அவள் மீது உராய்ந்தபடி நின்று, எதையாவது பேசுகிற குழந்தையை, எப்படி ஒதுக்குவது?

நாலைந்து தினங்கள் இப்படிக் கழிந்தன.

இந்த நாட்களில், அனியைப் பற்றிப் பல விவரங்கள் சுதாகரிக்குத் தெரியவந்தன.

அனியுடைய தந்தை இரவில் தாமதமாக வீடு திரும்புகிறவர். காலையில் சீக்கிரமாகப் போய்விடுவார்! அடிக்கடி வெளியூர் போவார். பொதுவாக மகளோடு இருந்து பேச, அவருக்கு நேரம் இருப்பதில்லை. பாடம் கேட்கக் கூட முடியாது! பாட்டி கூடவும் பேச முடியாது. டி.வி-யும் பாட்டிதான் பார்ப்பாள். அதனால், அனிக்கு வீட்டில் போரடிக்கும், ரொம்...ப!

இன்னமும், அனியுடைய தந்தை கெட்டவர் இல்லை என்பதற்கு, ஆதாரங்கள் எதுவும் இல்லை! அதே போலத்தான் நல்லவர் அல்ல என்பதற்கும்!

ஏனெனில், பாட்டியின் பேச்சை முழுசாக நம்ப, சுதாகரி தயாரில்லை!

“இன்றைக்கு அப்பா ஊருக்குப் போனார்” என்றாள் அனி ஒருநாள். “இனிமேல் கஷ்டம்ப்பா! பாட்டி சமையல் பண்ணாது! தினமும் ஹோட்டல் சாப்பாடுதான்! காரமாக பிரியாணி, மீன் குழம்புனு வாங்கிச் சாப்பிடுவாங்க! என்னாலே சாப்பிடவே முடியாது! பிடிக்காது! ரொம்ப காரமாயிருக்கும்!” என்றாள் கவலையோடு!

சுதாகரிக்கும் கவலையாகத்தான் இருந்தது!

மதியத்துக்குப் பள்ளிக்கு ஏதாவது கொடுத்தனுப்பலாம்! மாலையில் வீட்டுக்கு அழைத்துப் போகலாம். மற்ற வேளைகளில்?

ஆனால், அனியின் முக்கியமான தேவை, வெறும் உணவு மட்டுமல்ல. அவளைப் புரிந்து, அக்கறையோடு அவளுக்கு வேண்டியன பார்த்துச் செய்யக்கூடிய ஒருவர்! இயல்பாக, இதையெல்லாம் செய்யும் தாய் இல்லாமல் போனது, பாவம், அவளது தலைவிதி!

ஆனால், குளிப்பாட்டி, தலைவாரி, பாடம் சொல்லிக் கொடுத்து, அவளுக்கு ஏற்ற உணவு தந்து பராமரிப்பதோடு கூடச் சேர்ந்து ஓடி விளையாடுகிற மாதிரி, சுறுசுறுப்புள்ள ஒருத்தியை அவளுக்குத் தாதியாக நியமித்தால், இந்தப் பிரச்சினை அடியோடு தீர்ந்துவிடுமே!

தேவையான பொருளாதார வசதி இருக்கும்போது, அவளுடைய தந்தை, அதை ஏன் செய்யவில்லை என்று சுதாகரிக்கு ஆத்திரமாக இருந்தது!

வீட்டை அழகுபடுத்த இவ்வளவு பணத்தைக் கொட்டுகிறவனுக்கு, மகளுக்காகக் கொஞ்சம் செலவு செய்யக் கை வலிக்கிறதா?

எப்போதாவது, அவனைச் சந்திக்க நேர்ந்தால், இரண்டு வார்த்தை நன்றாகக் கேட்டுவிட வேண்டும் என்று மனதுள் குறித்து வைத்தாள்!

கேட்பதற்கான வாய்ப்பும், அவளுக்கு விரைவிலேயே கிடைத்தது!

**அ**ன்று சனிக்கிழமை!

பாட்டியிடம் கேட்டுக்கொண்டு, அனிஷாவைக் காலையிலேயே, சுதாகரி அழைத்து வந்திருந்தாள். "போ போ. தாராளமாய்க் கூட்டிப் போ! அவள் அப்பன் ஞாயிற்றுக்கிழமைதான் திரும்பி வருவான். அவன் வரும்போது, அவள் ஊர் சுற்றிக்கொண்டு இருக்கக் கூடாது! அவ்வளவுதான். அதனால், ராத்திரிக்குள் திருப்பிக் கொண்டு வந்து விட்டுவிடு! புரிகிறதில்ல? இங்கே, தூங்குகிறதுக்குக் கூட்டி வந்தால் போதும்!" என்று அனுப்பி வைத்தாள் பாட்டி!

ஊகூம்! அனி வளரும் சூழ்நிலை சற்றும் சரியே இல்லை! இந்த மாதிரி ஒருத்தியிடம் பிள்ளையை விட்டுவிட்டுப் போகிறவன் என்ன தகப்பன்?

வீட்டின் பின் பக்கத்தில், ரங்கநாதன் ஒரு தோட்டம் போட்டு வைத்திருந்தார்.

பூச்செடிகள் ஒரு பக்கம்.. கீரை ஒரு பக்கம்! சிறுமிகள் இருவரும், அவரோடு சேர்ந்து, ஓடி ஓடிச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள்.

அதைப் பார்த்து ரசித்தபடியே, காய்கறிப் பாக்கெட்டுகளை சுதாகரி கணக்கிட்டு எழுதிக் கொண்டிருந்த போது, அழைப்பு மணி அடிக்கவே, போய்ப் பார்த்தாள்!

வெளியே நின்றவனைப் பார்த்ததும் அவளுக்குத் திகைப்பாக இருந்தது!

முள் கம்பி வேலிக்கு வெளியே நின்ற நீண்ட காரிடம் அவளது பார்வை பாய்ந்து மீள்கையில், "அவசரப்பட்டு அலட்சியமாகப் பேசிவிட்டோமே என்று, இப்போது வருத்தமாக இருக்கிறதா?" என்று ஏளனமாகக் கேட்டான், 'இந்திர தனுசி'ல் அவசியமற்று அவளுக்கு உதவ முன்வந்த அதிகப்பிரசங்கி!

## அத்தியாயம் – 4




**‘இ**ந்திரதனு’சில் முந்திரிக் கொட்டையாக உதவ முன்வந்தவனுக்கு, இங்கே அவள் வீட்டில் என்ன வேலை என்பதுதான், சுதாகரியின் மனதில் எழுந்த முதல் கேள்வி!

இத்தனை நாட்களாக முயன்று, வேட்டை நாயாக மோப்பம் பிடித்து வந்தானா? அதுவும், அவன் முகத்தில் அடிக்காத குறையாக, அவள் மட்டம் தட்டிய பிறகு ஏன்? அவள் ஒன்றும் அப்படி உலக ரதி அல்லவே!

அதற்குள், அவனது கேள்வியும், ஏளனமும் மனதில் தைத்துவிட, “ஏன் வருத்தப்பட வேண்டும்?” என்றாள், மீண்டும் அலட்சியமாகவே!

தனது விலையுயர்ந்த காரைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு, “அதையெல்லாம் விளக்கிக் கொண்டிருக்க எனக்கு ஆசையோ, அவகாசமோ இல்லை! நான் அனிஷாவை அழைத்துப் போக வந்தேன்! இப்போது என் மகளை வரச் சொன்னால் போதும்!” என்றான் அவன், உதாசீனமாகவே.

இருந்திருந்து, பெண்களைச் சுற்றும் இவனா, அனிஷாவுடைய தந்தை?

ஊருக்குச் சென்ற மனிதன் திரும்பி வந்து பார்த்தால், அருமை மகள் வீட்டில் இல்லையாம்! பாசமிகு தந்தை, உடனே கூட்டிப் போக வந்துவிட்டார்!

அவள் அஞ்சியது போல, அனிஷாவுடைய தந்தை நல்லவன் அல்லதான்!

ஆனால், அதற்காக அவள் சும்மா இருந்துவிட முடியுமா?

ரங்கநாதனின் மேற் பார்வையில், பின்புறத் தோட்டத்தில், செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி, விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் சிரிப்பும் கூச்சலும் வாசல் வரை கேட்டது!

இதைவிட நல்ல வாய்ப்பு, வேறே எங்கே, எப்போது கிடைக்கும்?

சட்டென முடிவெடுத்து, “அனி பற்றி உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும்!” என்று தொடங்கிவிட்டாள் சுதாகரி!

அவன் என்ன என்றுகூடக் கேளாதபோதும், அவள் விடுவதாக இல்லை!

“பாருங்கள் சார்! நான் சொல்லப்போவது, உங்களுக்குப் பிடிக்காதுதான். ஆனால், அதற்காகப் பார்த்து, வாயை மூடிக்கொண்டிருக்க என்னால் முடியாது! அனிக்கு உங்கள் வீட்டில் பராமரிப்பு போதாது மிஸ்டர்! அவளோடு சேர்ந்து விளையாடி, பாடம் கவனித்து, உணவு - உடை கவனித்து எல்லாம் செய்கிற மாதிரி, அவளுக்கு ஒரு...”

“தாய் வேண்டும்! அதுதானே? நீ என்னதான் கரடியாக கத்தினாலும், உனக்கு அந்தப் பதவி கிடைக்காது, பெண்ணே! கடந்த பத்து நாட்களாக, அனியுடைய தாயார் பதவியை அடைவதற்கான முதலீடாக, என் மகளுக்காக நிறையவே செய்தாய் என்று கேள்வி! என் பெண் இங்கே உண்டதற்கு விலையாக இதை வைத்துக் கொள்” என்று பர்சைத் திறந்து, இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்து, சுதாகரியின் கையில் இருந்த கணக்கு நோட்டைப் பிடுங்கி, அதனுள் அந்த ரூபாய் நோட்டுகளை வைத்து, புத்தகத்தை மறுபடியும் அவள் கையில் வைத்தான் அவன்! “இதற்கு மேல், என் மகளைக் கொண்டு என்னைப் பிடிக்க முயற்சிக்காதே, பலனிராது!”

திகைப்பை உதறி, “இல்லையில்லை! நீங்கள் தப்பாக...” என்று சுதாகரி அவனிடம் விளக்க முயற்சிக்கையில், “ஆன்ட்டி... இந்தத் தாத்தா...” என்று அவளிடம் ஏதோ சொல்ல ஓடி வந்த அனிஷா, அங்கே தந்தையைப் பார்த்ததும், அதிர்ந்து நின்றாள்!

மகளின் மனநிலையை அறியவே இல்லையோ, அல்லது அதற்கெல்லாம் மதிப்புக் கொடுத்து அவனுக்குப் பழக்கமே இல்லையோ, அனிஷாவின் முக வாட்டத்தை சரியாகப் பாராமலே, “இன்னொரு தரம் இந்த வீட்டுப் பக்கம் வந்தால், உதை விழும்!” என்று உறுமலோடு, அவள் கையைப் பிடித்து, இழுத்துக் கொண்டு, வெளியே நின்ற காரை நோக்கி வேகமாக நடந்தான் அவன்!

கார் சென்ற பிறகும், சுதாகரி அங்கிருந்து அகலவில்லை!

தந்தையின் கைப்பிடியில் செல்ல நேர்ந்தபோதும், பயமும் ஏக்கமுமாக தலை திருப்பி அவளைப் பார்த்த அனியின் முகமும் சுதாகரியின் மனதை விட்டு அகலவில்லை!

ஆனால், அவளை என்ன மோசமாகப் பேசிவிட்டான்!

அவனுடைய மனைவியாவதற்காக மட்டுமே, அவன் மகளிடம் அன்பு காட்டியதாக எண்ணிவிட்டானே!

இவன் அப்படியென்ன, பெரிய கொம்பன், இவனை மணக்க ஆசைப்படுவதற்கு?

தங்கத் தட்டிலே வைரம் குவித்துக் கொடுத்தாலும், இவனுடைய மனைவியாக வாழ, அவள் சம்மதிப்பாளா?

ஆண்பிள்ளைத் திமிர்! ஒரு கார் இருந்துவிட்டால், இவனது கண்ணசைவுக்காகப் பெண்கள் காத்துக் கிடப்பார்கள் என்று எண்ணுகிற அகம்பாவம்! அசிங்கம் பிடித்த மனம்!

சீச்சீ! அவளை என்ன நினைத்தான், அவன்!

பாவம் அனி! இப்படியொரு தகப்பன் அவளுக்கு!

உலையாய் மனம் கொதித்துக் கொண்டிருந்த அப்போதும், அந்தச் சிறுமி அனியைப் பற்றிய கவலையையும் அவளால் விட முடியவில்லை! அவளுடைய சொந்த மகளின் அதே வயசுதானே?

ஆனால், பெற்ற தந்தை அவன். அவனுடைய சின்ன மகளைக் கூட்டிப் போகிறான்... இடையில், அவளால் என்ன செய்ய முடியும்?



சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுமி, உள்ளே போனவள் திரும்பி வரவில்லையே என்று தேடிக் கொண்டு ரங்கநாதன் வந்தார்!

“எங்கேம்மா அனி?” என்று தொடங்கியவர், சுதாகரியின் முகத்தைப் பார்த்ததும், “என்னம்மா விஷயம்?” என்று விசாரித்தார்.

“அவளுடைய அப்பா கூட்டிப் போய்விட்டார்!” என்றாள் சுதாகரி. ‘புக்மார்க்’ மாதிரி நோட்டுப் புத்தகத்தில் நீட்டிக் கொண்டிருந்த ரூபாய் நோட்டுகளை எடுத்துக் காட்டி, “அனிக்குட்டி நம் வீட்டில் சாப்பிட்டதற்கான பணம்! கொடுத்து விட்டுப் போனார்! இப்படிக் கூட, ஒரு தொழில் தொடங்கலாம்போல இருக்கிறது!” என்றாள் மரத்த குரலில்!

அவளை ஒரு தரம் கூர்ந்து பார்த்துவிட்டு, “அவர்கள் பெண்! அவர்கள் கூட்டிப் போகிறார்கள்! நம் வேலையை நாம் பார்ப்போம்! நான் பவியிடம் பக்குவமாகச் சொல்லுகிறேன்!” என்று சென்றார் பெரியவர்!

தன்னை அறியாமல் இறுக மூடிய சுதாகரியின் உள்ளங்கைக்குள் ரூபாய் நோட்டுகள் கசங்கின.

ரங்கநாதன் என்னதான் பக்குவமாகச் சொன்னாலும், பவித்ராவின் முகம் வாடித்தான் இருந்தது! “சுத்த மோசம்மா அந்த அங்கிள்! நாங்கள் ஜாலியாக விளையாடும்போது, பாதியிலே கூட்டிப் போய்விட்டாரே! அனிக்கு ரொம்பப் பிடிக்கிற தேங்காய் பன் கூடச் சாப்பிடவிடலை!” என்று ஆத்திரப்பட்டாள்.

உண்மைதான். அனிக்குப் பிடித்தமானது என்றே, அன்று மாலைச் சிற்றுண்டிக்கு, சுதாகரி தேங்காய் பன் செய்து வைத்திருந்தாள். அவள் இல்லாமல், வீட்டில் யாருக்குமே, அதைச் சாப்பிட பிடிக்க வில்லை!

“கொஞ்ச நாட்களாக அவர் ஊரிலே இல்லை அல்லவா? வந்ததும், அனியைப் பார்க்க ஆசையா இருந்திருக்கும்! இன்னும், ஊரிலே இருந்து அவளுக்குப் பிடிக்கும் என்று, என்னென்ன வாங்கி வந்திருக்கிறாரோ? அனி அதைச் சாப்பிடுவாள்! நீ இதைச் சாப்பிடு” என்று மகளுக்குச் சமாதானம் சொன்னாள் அன்னை!

“அதெல்லாம் ஒன்றும் வாங்கி வந்திருக்க மாட்டார்! பாட்டிம்மா சொல்லலை? அனியை அவள் அப்பாவுக்குப் பிடிக்காதுன்னு? பாவம், அனி! இந்த பன்னைக் கொண்டு போய், அவளுக்குக் கொடுத்திட்டு வரலாம்மா!” என்று கெஞ்சலாகக் கேட்டாள் அறியாச் சிறுமி!

வேறு வினையே வேண்டாம்! சின்னப் பிள்ளைக்கு, வாய்க்கு ருசியாகத் தின்னக் கொடுத்து, மயக்கி, அப்படியே என் வீட்டு எஜமானி ஆகப் பார்க்கிறாயா என்று, மீண்டும் குதிப்பான், அவள் தந்தை!

ஆசையாகச் செய்து வைத்ததை அனி சாப்பிடவில்லையே என்று சுதாகரிக்கும் வருத்தம்தான்! ஆனால், அவளது எல்லை அவ்வளவுதான்! வருத்தப்படுவதற்கு மேல், என்ன செய்தாலும், எல்லை மீறலாகிவிடும். எனவே, அவள் சும்மாதான் இருந்தாக வேண்டும்!

**ம**றுநாள் பள்ளியில் அனிஷாவைப் பார்க்கையில், சுதாகரிக்குப் பரிதாபமாக இருந்தது! அவள் நிறைய அழுததைப் பவித்ராவும் உறுதி செய்தாள்.

இனிமேல், தோழி, சினேகிதி என்று யார் வீட்டுக்கும் போகக் கூடாது என்று அப்பா சொன்னாராம். போனால், அடி கிடைக்கும் என்று பாட்டியும் மிரட்டியிருக்கிறாள்.. ‘இரவாகுமுன் வரத் தேவையில்லை’ என்று அனுப்பி வைத்த பாட்டி!

அதையும் மீறி, “உங்களோடு வருகிறேனே...” என்று அனியும், “கூட்டிப் போகலாம்மா...” என்று பவித்ராவும் மன்றாடத்தான் செய்தார்கள்.

ஆனால், மனதைக் கல்லாக்கிக் கொண்டு மறுத்து விட்டாள் சுதாகரி. சீருடையில் கண்ணைத் துடைத்தபடி சென்ற அனியின் சின்ன உருவம், இரவு முழுவதும் அவளது தூக்கத்தைக் கெடுத்தது!

அந்தக் குழந்தையின் அருமை தெரியாமல் என்னமோ அவனுக்காக அனியுடன் பழகியதாக... ச்சே... என்ன உளறல்!

நல்லவேளையாக வீட்டிலேயே இருந்து மனம் குமைய நேராமல், சுதாகரியின் தொழில் அவளது கவனத்தைப் பிடித்து இழுத்தது!

கலைச்செல்வி, துரைப்பாண்டி என்று ஊர்ப்புறத்து மனிதர்கள், அவர்களது பிரச்னைகள், அவர்களைச் சமாளிப்பது, கொள்முதல், விற்பனை என்று சுதாகரிக்கு வேறு நினைக்க நேரமில்லை!

அன்று, துரைப்பாண்டியனால் ஒரு பிரச்னை நேர்ந்தது! சுதாகரி, காய்கறிகளோடு திரும்பி வருகையில், எதிரே ஒரு மாட்டுவண்டி வந்துவிட்டது!

ஒடுக்கமான கிராமத்து சாலை! ஒருவர் ஒதுங்கி நின்றால்தான், அடுத்த வாகனம் கடந்து செல்ல முடியும். அதுவும் கவனத்துடன்தான்! தூரத்திலே பார்த்துவிட்டு, அவள் ஹாரன் அடித்தபோதும், வண்டிக்காரன் மாட்டைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யவே இல்லை!

வண்டியோட்டிக்கு அவளிடம் வன்மம் இருந்தது! 'டவுன் பக்கமிருந்து வந்து வாங்குகிறவளுக்கு என்ன தெரியும்' என்று, இரண்டு முறை அவனது காய்கறிகளுக்கு அதிக விலை வைத்து, அவளுக்கு விற்றான்.



அவள் சந்தேகப்பட்டுக் கேட்டபோது, "வேகாத வெயிலிலே, கலப்பை கட்டி உழுதால் தெரியும். இப்படி மினுக்கிக்கிட்டு நோகாமல் வந்து சுருட்டுக்கிறவங்க, அப்படித்தான் பேசுவீங்க!" என்று அநியாயமாகக் குற்றம் சாட்டியதுபோல, ஆத்திரமாகக் கூறினான்!

அதிகப்படியான அந்தப் பேச்சு மட்டுமின்றி, அவன் ஏமாற்றுவதும் நிச்சயப்பட்டுவிட அவனிடம் வாங்குவதைக் சுதாகரி அடியோடு நிறுத்திவிட்டாள்.

பேராசை, பெரு நஷ்டமாக, அவன் வைத்த அதிக லாபத்தோடு, சுதாகரி எப்போதும் தரும் லாபமும் போய்விட்டது! தினமும் கைச்செலவுக்குத் தனியாக கிடைத்த பணம் நின்றுவிட்ட கோபம் அவனுக்கு! அவரவர் வசதி தவிர, தன் தப்பு பற்றி, இப்போது யார் நினைக்கிறார்கள்?

அவள் முடிந்தவரை ஓரமாக ஒதுக்கி, வாகனத்தை நிறுத்தியிருந்தபோதும், வேண்டும் என்றே அவன் நடுரோடில் வந்து முட்டுவது போல நிறுத்தி, "இது மாடுங்கம்மா! தானாத்தான் நிக்கணும்! உங்க வண்டி மாதிரி, இப்பிடித் திருகினாக்க உடனே நிக்காது! இறங்கி, உங்க வண்டியைப் பின்னாலே எடுத்துப் போங்க! என்னோட மாடுகளுக்குப் பின்னாலே போய்ப் பழக்கமில்லே!" என்று இளக்காரமாகப் பேசினான்.

அவன் செய்த தவறு, அவனது வண்டி நில்லாததைக் கவனித்துவிட்டு, வயலின் குறுக்கே இறங்கித் துரைப்பாண்டி விரைந்து வந்ததைக் கவனியாதது!

“ஏலே எருமை, யாருகிட்டடா, மரியாதி இல்லாமப் பேசினே?” என்று வண்டியோட்டி வந்த கந்தப்பனைக் கீழே இழுத்துப் போட்டு பலமாக நாலு அடி, உதை வைத்ததோடு, வண்டியையும், வயலுக்குள் இறக்கி விட்டுவிட்டான், துரைப்பாண்டி.

“வேண்டாம், வேண்டாம் துரைப்பாண்டியன், விட்டுவிடுங்கள்!” என்று சுதாகரி கத்தியதை, அவன் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை!

அறுவடை ஆன வயல்தான்! ஆனால், இனி வண்டியை உயரே ஏற்ற வேண்டுமே! அத்தோடு, அடித்தும் இருக்கிறான். கிராமப் பெரியவர்களிடம் கந்தப்பன் புகார் செய்தால், துரைப்பாண்டியனுக்கும் பிரச்னை தான்! என்ன, ஏது என்று வம்புப் பேச்சும் வரும்!

சுதாகரி கவலையோடு பார்த்தபோது, சல்யூட் அடித்து, “இனிமே, நீங்க வசதியாகப் போங்க, மேடம்! வழி உங்களுக்கு மட்டும்தான்!” என்றான் பெருமையாக!

“என்ன துரைப்பாண்டியன் இப்படிச் செய்து விட்டீர்களே! பாவம், அவர் தனியாக வண்டியை எப்படி உயரே ஏற்றுவார்? யாரையாவது கூப்பிட்டுக் கந்தப்பனுக்கு உதவி பண்ணுங்கள்” என்று அவனிடம் கேட்டுக்கொண்டாள் சுதாகரி.

“என்ன மேடம்! உங்ககிட்டே, என்னா திமிராப் பேசினான்! இவ்வளோ காயங்களை வைத்துக்கிட்டு, உங்க ஸ்கூட்டரை, நீங்க பின்னாலே தள்ள முடியுமா? அதுக்காகத்தான், வண்டியை இறக்கிவிட்டேன்! நல்லாக் கஷ்டப்படட்டும்! அப்பத்தான், அடுத்தவங்க கஷ்டம் புரியும்!” என்றான் துரைப்பாண்டி, ஆத்திரமாகவே.

“இப்போது புரியாமல் பேசுவது நீங்கள்தான். இவ்வளவு பளுவோடு, ஸ்கூட்டரைப் பின்னாலே தள்ளுவது முடியாது என்று கந்தப்பனுக்குத் தெரியாதா? அத்தோடு, மாடுகள் எவ்வளவு நேரம், அசையாமல் நிற்கும்? அவை, அங்குமிங்கும் அலைபாய்ந்தால், வயலுக்குள் இறங்கிவிடும் என்பதும் தெரியாதிராது! ஓர் இரண்டு நிமிஷம் மிரட்டிப் பார்த்து விட்டு, தலைக் கயிற்றை இழுத்து, அவராகவே ஒதுங்கிப் போயிருப்பார்! இதற்குப் போய்... நீங்கள் மெய்யாகவே எனக்கு உதவி செய்ய விரும்பினால், வண்டியை மேலே ஏற்றி விடுங்கள்!” என்றாள் சுதாகரி.

கந்தப்பனுக்கு உதவுவதை விடவும், தனக்காக ஒன்று செய்யப்போய்த் துரைப்பாண்டியன் சிக்கலில் மாட்டிக் கொள்ளக் கூடாதே என்பதுதான் சுதாகரிக்கு!

ஆனால், அதை வெளிப்படையாகச் சொல்லி, அவனுக்கு உச்சி குளிர வைக்க அவளுக்கு விருப்பம் இல்லை! உடனே வீராதி வீரனாக காட்டிக் கொள்ள, அவன் இன்னும் ஏதாவது அசட்டுத்தனம் செய்யக்கூடும்!

அவள் அழுத்தமாகப் பேசியது பலன் தர, எப்போதும் அவனோடு அலையும் நண்பர்களை சைகை காட்டி அழைத்து, எல்லோருமாக மீண்டும் வண்டியைச் சாலையில் ஏற்றினார்கள்.

துரைப்பாண்டியனின் மேற்பார்வையில், மாடுகளை வண்டியில் மீண்டும் பூட்டுகையில், கந்தப்பன், சுதாகரியிடம் வந்தான்.

“யாவாரம் நல்லாப் போகுதா?” என்று பணிந்த குரலில், எங்கோ பார்த்துக் கேட்டான்!

சட்டென விஷயம் புரிய, “உங்கள் வெள்ளரிப் பிஞ்சுகளுக்குத் தனி ருசி போல! அடிக்கடி கேட்கிறார்கள்!” என்று முறுவலித்தாள் அவள்.

முகம் மலர, “எங்க வயக்காட்டுக் கிணறு நல்ல தண்ணி! விளைச்சலும் சாஸ்தி! இப்ப, உங்க விலைக்கே போடலாம்!” என்றான் கந்தப்பன்.

விஷயம் லாபகரமாகவே முடிந்தபோதும், துரைப்பாண்டியனின் அதிகப்படி ஈடுபாடு, அவளுக்குப் பிடிக்கவில்லை!

ஆனால், அவனை எப்படித் தடுப்பது? இந்த யோசனையுடனேயே வேலைகளோடு, கடை வைப்பதற்காக ஓர் இடத்தையும் போய்ப் பார்த்துவிட்டுச் சற்றுத் தாமதமாகச் சுதாகரி வீடு திரும்பினால், அங்கே அனிஷா இருந்தாள்.

கவலையாகப் பார்த்த பெண்ணிடம் உதட்டால் முறுவலித்துவிட்டு, முகம் கழுவும் சாக்கில், உள்ளே சென்றாள் அவள்!

முயன்று மறந்துகொண்டிருந்தது.. அனியுடைய தந்தையின் அநியாயக் குற்றச்சாட்டு, முழுவதாக அப்படியே திரைப்படம் போல நினைவு வந்தது!

பிரச்னைகளுக்கு முடிவே இல்லையா?

நம்மை மீறி வந்தன, வருவன எத்தனையோ? நாமாக வேறு இழுக்க வேண்டுமா?

பின்னோடு வந்த ரங்கநாதனிடம், “என்ன பெரியப்பா இது? அவள் தந்தைக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னேன் இல்லையா? பிறகும் கூட்டி வந்திருக்கிறீர்களே!” என்று சிறு வருத்தத்துடன் கேட்டாள்!

அவர் சொன்ன பதில், அவளை அதிர வைத்தது!

## அத்தியாயம் – 5



**சு**தாகரி வேறு வேலையாகச் சென்றிருந்ததால், பவித்ராவைப் பள்ளியில் இருந்து அழைத்து வர அன்று ரங்கநாதன் சென்றிருந்தார்.

மற்ற சிறுவர் சிறுமியரைப் போல விளையாடிக் கொண்டிராமல் இந்த இரண்டு பிள்ளைகளும் மரத்தடியில் தனியாக நிற்பதைப் பார்த்துவிட்டு ரங்கநாதன் அங்கே சென்றார். பிறகுதான், அனிஷாவின் கண்ணைப் பவித்ரா துடைத்துவிடுவது அவருக்குத் தெரிந்தது!

அனியுடைய தந்தை... மறுபடியும் ஏதோ கொள்முதல் என்று வெளியூருக்குப் போய்விட்டானாம்! வீட்டில் பாட்டி ராஜ்ஜியமாம்! எதற்கெடுத்தாலும் திட்டாம்! வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை என்று அழுகை!

“அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. எல்லோரும் அவரவர் வீட்டில்தான் இருக்கவேண்டும்.. என்று புத்தி சொல்லி, அவர்கள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு வரலாம் என்று கூடப் போனேன். பாதி வழியில் திடீரென்று, ‘வீட்டில் யாருக்கும் என்னைப் பிடிக்கலை! உங்களுக்கும் பிடிக்கலை! அந்த வெள்ளைக் கன்றுக்குட்டி மாதிரி நான் செத்துப் போகப் போறேன்’ என்று கல்வெட்டாங்குழியை நோக்கி ஓடத் தொடங்கி விட்டாள்.”

“ஐயோ!”

கல்வெட்டாங்குழியில் அண்மையில் பெய்த மழையால் நீர் நிரம்பியிருந்ததே!

அந்தப் பகுதியில் அடியில் நல்ல பாறைப் பகுதி இருக்கவே... முதலில் வீடு கட்டியவர்கள், அங்கேயே ஓர் இடத்தில் கல் உடைத்து அதைக்கொண்டே வீடுகளைக் கட்டிக் கொண்டார்கள்! சுமார் ஐந்தாறு மீட்டர் ஆழத்தில் இருமடங்கு பரப்பளவில் கல் வெட்டிய குழி இருந்தது. முதலில் எங்கோ தூரத்தில் வெட்டியதுதான். வீடுகள் பெருகப் பெருக... குழி, குடியிருப்பின் பக்கமாக வந்துவிட்டது. மழைக்காலத்தில் நீர் நிரம்பியிருக்கும். அவ்வப்போது வழி தவறிய கால்நடைகள் விழுந்து செத்திருக்கின்றன!

கட்டிக் கிடக்கும் நீர்! சுகாதாரத்துக்கும் கேடு! பள்ளிப் பிள்ளைகள் அந்தப் பக்கம் விளையாடப் போனால் ஆபத்து என்று குடியிருப்பு வாழ்வோர் சங்கத் தலைவரிடம் சுதாகரி எடுத்துச் சொல்லியிருக்கிறாள்!

ஆனால், ‘ஜிம்’முக்கும், பொழுதுபோக்குக்கும் எவ்வளவோ செலவழித்தவர்களுக்கு இதை எடுத்துச் செய்ய மனமில்லை! அரசாங்க இடம், நாம் கைவைக்க முடியாது என்று சாக்குச் சொன்னார்கள்.

சுதாகரியும் ரங்கநாதனுமாக டவுனில் இருந்த நகராட்சி அலுவலகத்தில் மனுக் கொடுத்தார்கள். கல்வெட்டாங்குழித் தண்ணீரில் விழுந்த கல்லின் கதிதான் அந்த மனுவுக்கும் நேர்ந்தது.

ஏதோ தன்னாலானது. அழுக்கு, பாசி, கொசுக்குஞ்சுகளைத் தின்று தண்ணீரையேனும் சுத்தப்படுத்தட்டும் என்று சுதாகரி கொஞ்சம் மீன் குஞ்சுகளை வாங்கி அந்தக் குட்டையில் விட்டாள். பலன். தண்ணீர் வற்றிய நாட்களில்… அங்கே மீன் பிடித்தார்கள்!

ஆனால், அந்தக் கல் வெட்டாங்குழியைப் பற்றிய கலக்கம், அவளுக்கு எப்போதும் இருந்தது… ரங்கநாதனுக்கும்!

இப்போது மழை நீரால் நிரம்பி இருந்த குட்டையின் கடைசிப் பலி.. அந்த வெள்ளைப் பசுங்கன்று! அதைப் போலவா?

“நான் வேறே என்ன செய்யட்டும்.. சொல்லு? பின்னாலே ஓடிப்போய்ப் பிடித்துக் கூட்டி வந்தேன்.”

“அனியின் வீட்டில் சொல்லிவிட்டீர்களா?”

“ம்ம்… போன் பண்ணினேன், அந்தத் தறுதலைக்கு. ‘அவள் அம்மா புத்தி! வீட்டிலே கால் தங்காமல்… அவளைப் போலவே உயிரை விடப் போகிறது. நாளைக்கு அவள் அப்பன் வந்து காலிலேயே சூடு போட்டால்தான், அந்தக் கழுதைக்கும் புத்தி வரும். பணக்கார வீட்டுப் பெண் என்று பிடித்து இழுத்துப் போய்க் கொஞ்சிக் குலாவுகிற உங்களுக்கும் புத்தி வரும்’ என்று சொல்லி வைத்து விட்டார்கள்! ச்சு… விடும்மா! புத்தி யாருக்குத் தேவை என்று தெரியவில்லை!” என்றார் பயமற்ற பட்டாளத்துப் பெரியவர்.

ஆனால், அனியுடைய தந்தையின் கோப முகமும், கேவலமான வார்த்தைகளும் நினைவுக்கு வருகையில், சுதாகரியால் அப்படி அலட்சியமாக இருக்க முடியவில்லை!

ஒரு சிறு அசைவில்கூடத் தவறான எண்ணம் வந்து விடக் கூடாது என்று அவ்வளவு கவனமாக இருப்பவளைப் பார்த்து என்ன வார்த்தை சொன்னான்! அந்தத் தரக்குறைவான பேச்சு… இன்னொரு தரம் சொல்லவிடக் கூடாது!

அதேசமயம்…

யோசித்தபடி உட்கார்ந்திருக்கையில் அருகில் வந்து கழுத்தைக் கட்டிக்கொண்ட சிறுமியை அணைத்தவளுக்கு, இந்தக் குழந்தை நோகாமல் எப்படிக் காப்பது என்று மனம் கலங்கியது.

அனியுடைய பாட்டி.. முதலில் அவள் இங்கே வருவதற்கு அனுமதித்தவள்தானே? அவளிடம் பேசிப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில், தானே பாட்டியிடம் பேசுவதாகச் சொல்லி, சமாதானப்படுத்தி, அனியை அவளது வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

அன்று... சுதாகரியை வீட்டுக்குள் விடவே, பாட்டியம்மாளுக்கு விருப்பம் இல்லை! ஆனால், அனியின் கையைப் பிடித்துக்கொண்டு பிடிவாதமாக உள்ளே வந்த சுதாகரி, சிறுமியைக் கைகால் கழுவும்படி அனுப்பிவிட்டுப் பாட்டியம்மாளைப் பார்த்தாள்.



“அதான்... கொண்டுவந்து விட்டுவிட்டியே! போகிறது தானே?” என்றாள் அந்த அம்மாள்.

ஒரு மூச்சு எடுத்துக்கொண்டு, “பாருங்கள், அனி சின்னப் பெண்! அவள் வயதுக்கு இங்கே யாரும் இல்லாததால், என் பெண்ணோடு விளையாடுவதற்காக அங்கே வருகிறாள். அதில் தப்பு ஒன்றும் இல்லை என்று அவள் தந்தையிடம், தயவுபண்ணி எடுத்துச் சொல்லுங்கள். உங்களிடம் இதைச் சொல்லவே வந்தேன்!” என்றாள் மெதுவாக.

அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, “சொல்லிட்டேயில்லே.. அட்சரம் பிசகாமல் அதேபோல நடந்துக்கறேன்... போறியா?” என்றாள் வயதால் பெரியவள், எகத்தாளம் கலந்த குரலில்.

‘வெளியேறு’ என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறை! வந்த நோக்கம் பலிக்கவில்லை!

வயிற்றுக்குள் பிசைந்தபோதும்... வேறு என்ன சொல்வது என்றும் புரியாமல், “அனியிடம் சொல்லி விட்டுக் கிளம்புகிறேன்!” என்றாள் சுதாகரி.

“பெத்தவள் கெட்டாள்!” என்றாள் பாட்டி ஏளனமாக. “உன்னைச் சுற்றியும் பார்த்தேயில்லே. இந்த வீட்டுப் பொண்ணு, அன்றாடச் சோற்றுக்கு ஆலாகப் பறக்கிற உன் மகளோடு எப்படிப் பழக முடியும்? நல்ல பள்ளிக் கூடத்திலே படிக்குதே... கௌரவமான குடும்பமாகத்தான் இருக்கும்னு தெரியாத்தனமாக முதலிலே அனியை அனுப்பிவிட்டேன்! வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டிப் பிள்ளையைப் படிக்க வைக்கிற போல! பேசாமல், ஏதாவது ஃபீஸ் இல்லாத சின்ன ஸ்கூலிலே சேர்த்திருந்தால், உனக்குப் பணமும் மிச்சம்... நானும் இப்படி ஏமாந்திருக்க மாட்டேன்!”

பெரியவளின் சின்னக் கண்களின் பளபளப்பு, வேண்டும் என்றே நோகச் சொன்ன வக்கிரத்தை வெளிப்படுத்தியது.

அவளையே நேராகப் பார்த்தபடி, மெல்ல எழுந்தாள் சுதாகரி.

“மேன்மையான பழக்கவழக்கங்கள் வர வேண்டும் என்றுதான் பிள்ளைகளை நல்ல பள்ளிகளில் சேர்த்துப் படிக்க வைப்பது! ஆனால், நீங்கள் அந்த மாதிரிப் பள்ளியிலே, சும்மா ஒரு வெயில் - மழைக்காகக்கூட ஒதுங்கியதே இல்லை என்று இப்போது தெரிகிறது! வரட்டுமா? அடடா! வருவதா? நீங்கள் இருக்கும் இடத்துக்கெல்லாம் வந்தால், என் தரம் என்ன ஆவது? கிளம்புகிறேன்!” என்றவள் திரும்பி மடமடவென்று நடந்தாள்.

மாடிப்படியில் சின்னக் கால்கள் இறங்கிவரும் காலடிச் சத்தம் கேட்டது!

ஒரு கணம் தயங்கியவள் ஒரு தலையசைப்புடன் மீண்டும் வேகமாக நடந்தாள்.

அனிக்கு அவளைப் பெற்ற தகப்பன் இருக்கிறான். மகளின் நல்வாழ்வில் அவனுக்கு இல்லாத அக்கறையோ, உரிமையோ சுதாகரிக்குக் கிடையாது!

குறைவான தூரம்தான்! ஆனால், வாகனமும் தானுமாக உருப்படியாக வீடு வந்து சேர்ந்தது, அவளுக்கே ஆச்சர்யம்தான்!

வாயிலிலேயே நின்ற பவித்ரா, ஸ்கூட்டரை நிறுத்திப் பூட்டியவளிடம் ஓடிவந்து, “அம்மாம்மா, அனி பாட்டிகிட்டே கேட்டீங்களா? அனி இங்கே வர்றதுக்குச் சரீன்னாங்களா?” என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

“இல்லை!” என்றாள் சுதாகரி சுள்ளென்ற குரலில். “இனிமேல் அனி இங்கே வரமாட்டாள்... வரக்கூடாது! அவளைக் கூட்டி வரவேண்டும் என்று கேட்டால், ஏன்... அவள் பேச்சை எடுத்தாலே, நீ என்னிடம் உதைபடுவாய்! நினைவிருக்கட்டும்!” என்று மிரட்டிவிட்டு, திகைத்து நின்ற மகளைப் பாராதவள்போல வேகமாக உள்ளே போய்விட்டாள்.

பாடம் படிப்பது, சாப்பிடுவது, புத்தகப்பை எடுத்து வைப்பது என்று போகப் போக பவித்ரா சமாதானமாகித் தூங்கி விட்டாள்.

தூங்கிய மகளைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்த சுதாகரிக்குத்தான் மனம் ஆறவில்லை!

பேச்சுக்குப் பேச்சு, திருப்பிக் கொடுத்துவிட்டதால் அனியுடைய பாட்டியின் பேச்சு, அவளை அதிகமாகப் பாதிக்கவில்லை! ஆனால், அனி?

பெண்களுக்கு வளர, வளர என்னென்ன வயதில், என்னென்ன கஷ்டங்கள் வருமோ? இந்தச் சின்ன வயதில் கூட நிம்மதியாக இருக்க முடியாவிட்டால் எப்படி?

அனியுடைய தந்தையின் நெடிய உருவமும் ‘என் மகள்’ என்று அவன் இழுத்துப் போனதும் நினைவு வந்தது!

மகளின் பொறுப்பு, அவனதுதான் என்றாலும், கல்வெட்டாங்குழிக்குள் குதித்து விடுவதாக ஓடினாளே என்று அவள் மனம் பதைத்தது!

சின்னப் பெண் ஒரு வேகத்தில் சொல்லியிருப்பாள். குழியருகே போய்த் தண்ணீரைக் கண்டதும் தானாக நின்றுமிருப்பாள்!

ஆனாலும், நடந்ததை எப்படியாவது அவனிடம் தெரிவித்துவிட்டால், அப்புறம் உரிமைக்காரனான அந்தப் பெற்றவன் பாடு! ஆனால், காது கொடுத்துக் கேட்பானா?



நெடு நேரம் விழித்திருந்தவள்... காலையில் எழத் தாமதம் ஆகிவிட்ட போதும், அனியை ஒருதரம் கண்ணாலேனும் பார்த்துவிட வேண்டும் என்ற வேகத்தில் அவசரமாகக் கிளம்பி, பவித்ராவை பள்ளியில் கொண்டுவிட, அவளே போனாள்.

ஆனால், அனிஷா கண்ணில் படவில்லை. பெரும்பாலான பிள்ளைகள் வகுப்பறைக்குள் சென்றுவிட்டிருக்க, “இன்னிக்கு நான் லேட்டும்மா!” என்று பவித்ரா ஓடிப் போனாள்.

அனியும் வகுப்பறைக்குள்ளேதான் இருப்பாள் என்று மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு, சுதாகரி வேலையில் இறங்கினாள்.

மாலையில் சற்று முன்னதாகவே பள்ளிக்குப் போய்க் காத்திருந்தாள். அப்போதும் அனியைக் கண்ணால் காண முடியவில்லை!

அனியின் பேச்சே எடுக்கக் கூடாது என்று கண்டித்துச் சொன்னபிறகு, அவளைப் பார்த்தாயா என்று மகளிடம் கேட்கவும் சுதாகரிக்கு வாய் வரவில்லை!

சாரி சாரியாக வந்தவர்களைக் கண்ணால் சலித்துத் தேடினாள்.

“பசி, பசி!” என்று பவித்ரா குதித்தாள். “சீக்கிரம் ஸ்கூட்டரை எடுங்கம்மா! ரொம்பப் பசிக்குது! காலைலே சாப்பிட்டது..”

தேடுதலிலேயே குறியாக, “என்னடி காலையிலே சாப்பிட்டது? மதியத்துக்குத்தான் ஆப்பம் வைத்தேனே...” என்று மகளுக்கு நினைவுறுத்தியபடியே, தொலைவில் ஒரு கும்பலாகச் சென்றவர்களின் நடுவில் அனி இருக்கிறாளா என்று சுதாகரி தேடினாள்.

“அதை.. அ... அது வந்து... கீழே விழுந்திட்டதும்மா! அதனாலே காக்காய்க்குப் போட்டுவிட்டேன்மா!” என்று விளக்கிவிட்டு, “அம்மா! ப்ளீஸ்மா, ரொம்பப் பசிக்குதும்மா!” என்று கெஞ்சினாள் சிறுமி.

இதற்கு மேல் பசியோடு இருக்கும் மகளை நிறுத்தி வைத்து அனியைத் தேட, சுதாகரிக்கு மனம் வரவில்லை.

ஆனால், சஞ்சலத்தைத் தாங்கவும் முடியாமல், ஸ்கூட்டரை ஓட்டியபடியே, “அனியைப் பார்த்தாயாம்மா?” என்று முயன்று வருவித்த சாதாரணக் குரலில் கேட்டாள்.

“இல்லையேம்மா!” என்றாள் பவித்ரா அவசரமாக. “நீ... நீங்க சொன்ன மாதிரி, அனிகிட்டே நான் பேசவே இல்லைம்மா!”

“ஆனால், பள்ளிக்கு வந்திருந்தாளா?”

“ஓ! வந்திருந்தாளே! ஆனால், நீங்க சொன்னீங்களேன்னு நான் பேசவே இல்லைம்மா!” என்று பெண் அதிலேயே நின்றாள்.

சிறு மௌனத்துக்கு பின், “ஆனால், இப்போது அவள் பள்ளியைவிட்டு வெளியே வரவே காணோமே!” என்றாள் சுதாகரி!

“அதெப்... வந்து... நானும் அவளைப் பார்க்கவே இல்லையே!” என்றாள் பெண். “சீக்கிரமே போயிட்டாளோ... என்னமோ?” என்று ஒரு காரணம் கண்டு பிடித்துச் சொன்னாள்.

“சீக்கிரமே ஏன் போக வேண்டும்? அவளுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையே?” என்று சுதாகரி கவலையுடன் கேட்டாள்.

“நான்தான் பார்க்கவே இல்லையேம்மா!” என்றாள் மகள், மறுபடியும்.

“ஓ!” என்றாள் அன்னை, ஏமாற்றத்துடன்.

பசி... பசி என்று வழக்கத்துக்கு இரு மடங்கு எடுத்து உண்டாள் பவித்ரா! அதற்கும் மேலாக, “நேற்று செய்த ஜாம் பிஸ்கெட் கொஞ்சம் எடுத்துக்கறேம்மா!” என்று அதிலும் கைநிறைய அள்ளினாள். “நான் நிறையச் சாப்பிடப் போறேன்!”

அவள் எடுத்துக் கொண்டிருந்தபோதே, “சுதாம்மா! பவிப் பொண்ணோட சாப்பாட்டுப் பை துலக்க வரலியே!” என்று வந்து நின்றாள், பாக்கெட் போடுவதோடு வீட்டு வேலைகளையும் செய்யும் பூமணி.

“அச்சச்சோ! மறந்து வச்சிட்டு, வந்திட்டேம்மா! நாளைக்குத் தேடி எடுத்திட்டு வந்திடறேன்!” என்றாள் பெண்.

பள்ளிப் பையைத் திறந்து நோண்டியவள், “என் வகுப்பு சினேகிதிகிட்டே கொஞ்சம் பாடம் கேட்கணும்மா” என்று பையை எடுத்துக்கொண்டு, வெளியே ஓடிவிட்டாள்!

“ஏ... ய்! ப... வி!” என்று சுதாகரி வெறும் காற்றைத்தான் கூப்பிடும்படி ஆயிற்று!

கம்பி வேலிக்கு வெளியே, மகள் தனியே செல்வது சுதாகரிக்குப் பிடிக்காது! அம்மாவுக்குப் பிடிக்காததை பவித்ராவும் பொதுவாகச் செய்வதில்லை! பரீட்சை நெருங்குகிறதே என்ற பயமா?

“சுதாம்மா! நான் வேலையை முடிச்சிட்டேன்! இந்த வாரத்துக்கு என் கணக்கு என்னன்னு பார்த்துப் பணத்தைத் தரீங்களா?” என்று பூமணி கேட்கவும் மகளிடம் இருந்து, சுதாகரியின் கவனம் பூமணியிடம் திரும்பியது!

அவள் கணக்குத் தீர்த்து வாங்கிக்கொண்டு சென்றதும், தொழிற்சாலைப் பெரிய பதவிப் பெண்கள் இருவர் காரை எடுத்துக்கொண்டு ஏதோ அவசரத் தேவை என்று காய்கறிக்காக வந்தார்கள்! வெகு சிலது தவிர பெரும்பாலும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாயிற்று!

இதுவே கடை வைத்துவிட்டால், கொஞ்சம் நிறைய வாங்கி வைக்கலாம்! முதல்நாள் மீதியைக் கொஞ்சம் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்வதாகச் சின்ன உணவு விடுதிகள் சில ஒப்புக் கொண்டிருந்தன. முழு நேரமும் கடையில் வேலை செய்யவும், பூமணிக்குத் தெரிந்த இரு பெண்கள் தயாராக இருந்தார்கள்!

ரங்கநாதனும் வந்துவிட, இருவருமாகக் கடை வைப்பது தொடர்பான கணக்குகளில் ஆழ்ந்தனர்.

சற்றுப் பொறுத்து, இன்னும் காணவில்லையே என்று பவித்ராவைத் தேடி ரங்கநாதன் கிளம்பியபோது, வாடிய முகத்துடன் அவளே திரும்பி வந்துவிட்டாள்!

பாடம் அதிகம் போலும் என்று எண்ணிய சுதாகரிக்கு, அதற்குமேல் மகளைக் கண்டிக்க மனம் வரவில்லை!

“அம்மா அல்லது தாத்தாவிடம் அனுமதி பெறாமல், இந்த மாதிரி வீட்டுக்கு வெளியே, தனியாகப் போகக் கூடாது!” என்று சற்று அழுத்தமாகக் கூறியதோடு விட்டு விட்டாள்.

“பசி... பசி” என்று இரவிலும் சற்று அதிகமாக உண்ட பவித்ரா, “டயர்டா இருக்கும்மா! காலையிலே சீக்கிரமாக விழித்துப் படிக்கிறேன்” என்று படுத்து உடனே தூங்கி விட்டாள். தூங்கிய மகளை மூடிவிட, அவளது கார்ட்டூன் படம் போட்ட போர்வையைத் தேடி, அதைக் காணாமல் இன்னொன்றால் மூடி விட்டுவிட்டு, வெளியே வந்து அறைக் கதவைச் சாத்தினால், கார் ஒன்று வேகமாக வந்து நிற்கும் ஓசை கேட்டது!

யாரோ அவசரத் தேவைக்குக் காய் கேட்டு வருகிறார்கள் என்று எண்ணிக் கதவைத் திறந்த சுதாகரியை, முரட்டுத்தனமாகத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்து, “அனி எங்கே?” என்று ஆத்திரத்துடன் உறுமினான் அனிஷாவுடைய தந்தை.

## அத்தியாயம் – 6



அனிஷாவுடைய தந்தையை சுதாகரி சந்தித்த இரு தருணங்களுமே, அவ்வளவு நல்லபடியாக அமையவில்லை! முதல்முறை அவசியமற்று மூக்கை நீட்டியவன், அடுத்தமுறை அநியாயமாகக் குற்றம் சாட்டினான்.

மூன்றாவதாக இப்போதும் அத்துமீறி அவளது வீட்டினுள் புகுந்திருக்கிறான்! அதுவும், அவளைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு! என்ன திமிர் இருந்தால், அவன் அவளைத் தொடுவான்?

ராணுவத்தில் இருந்த ரங்கநாதன், இப்படிச் சற்று ஒதுக்குப்புறத்தில் வீடெடுத்து, சுதாகரி, பவித்ராவோடு குடியேறியபோது, அதை ஏனோதானோ என்று சும்மா செய்யவில்லை! லைசன்ஸுடன் கூடிய துப்பாக்கி அவரிடம் இருந்தது! ஓய்ந்து கிடந்த சுதாகரியை மனதாலும் உடலாலும் திடசாலி ஆக்கி, அவளுக்குத் தன்னம்பிக்கையும் ஊட்டியிருந்தார் அவர்.

எனவேதான், உடல் இறுகி விறைப்புற, "ஏ மிஸ்டர்! முதலில் என் வீட்டை விட்டு வெளியே போங்கள்!" என்று ஆத்திரத்துடன் அவளால் அதட்ட முடிந்தது! அவளது குரலை அவன் லட்சியம் செய்ததாகவே தெரியவில்லை! சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பவித்ரா தூங்கிய அறையின் சாத்திய கதவை நோக்கி வேகமாகச் சென்றான்!

"இன்னோர் அடி எடுத்து வைத்தால், மரியாதை கெட்டுவிடும்!"

தலையை மட்டும் திருப்பி, அவள் இறுகி நின்ற நிலையைப் பார்த்தவன் அப்படி ஒன்றும் பயந்து விடவில்லை! ஆனால், நின்று.. அலட்சியமும் எரிச்சலுமாக, "உன்னுடைய இந்தக் குச்சு வீட்டுக்குள் நிற்க எனக்கும் விருப்பம் இல்லைதான். நான் என் மகளைத் தேடி வந்தேன். அவளை வரச் சொன்னாயானால்.. அழைத்துக்கொண்டு, உடனே போய்விடுகிறேன்!" என்றான் அவன்!

சட்டென தளர்ந்தாள் சுதாகரி! நெஞ்சுக் கூட்டினுள் ஏதோ பிசைய, “அனியைத் தேடி இங்கே வந்தீர்களா? என்ன பைத்தியக்காரத்தனம்? இப்போது, அவள் உங்கள் வீட்டில்தானே இருக்கவேண்டும்?” என்று திகைப்புடன் கேட்டாள்.

“அவள் அங்கே இருந்தால், அவளைத் தேடி, நான் ஏன் இங்கே வரப் போகிறேன்? அனி பள்ளியிலிருந்து வீட்டுக்கே வரவில்லையாம்! கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்று…”

அவனது பேச்சின் பின் பகுதியை ஒதுக்கி, “இவ்வளவு நேரம் வரவில்லை என்றால், தேட வேண்டாமா? அவளை எங்கெங்கே தேடினீர்கள்?” என்று கவலையுடன் வினவினாள் சுதாகரி.

“எங்கே, எதற்காகத் தேடுவது? அதுதான் சொன்னேனே, கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்கிற மாதிரி, அவளுக்கு இங்கேதானே மயக்கம்! நேற்றும் கூட, அவளை இங்கேதானே கூட்டி வந்து குலாவியதாக…”

பொறுமையிழந்து “என்ன நேற்றும்கூட?” என்று எரிந்து விழுந்தாள் சுதாகரி! “என்றைக்காவது, இருட்டும் வரை, அனியை நான் இங்கே இருக்கவிட்டிருக்கிறேனா? அதற்கு முன், உங்கள் வீட்டில் கொண்டுவந்து விட்டு விடுவேனே! அன்று, நீங்கள் கேவலமாகப் பேசிய விதத்தில், அதன்பின் அவளை இங்கே வரவிட்டதும் கிடையாது! நேற்றுக்கூடக் கல்வெட்டாங்குழி… கடவுளே! கல்வெட்டாங்குழி!” என்று சட்டெனப் பதறிப் போனாள்.

“என்ன கல்வெட்டாங்குழி?” என்று திகைத்தான் அவன்.

“ஐயோ, அதில் விழுந்து விடுவேன் என்று மிரட்டியல்லவா, நேற்று இங்கே வந்தாள்! இவ்வளவு நேரம் ஆகிவிட்டதே! நீங்கள் போலீஸில் சொன்னீர்களா? வேறு எங்கே… வேறு தோழிகள்…” என்று பதறியவாறு, கைப்பையைப் பாய்ந்து எடுத்தவள், பின்புறக் கதவருகே நின்று… நடப்பதைக் குறுக்கிடாமல் கவனித்துக் கொண்டிருந்த ரங்கநாதனைப் பார்த்ததும், “பெரியப்பா! இங்கே பவித்ராவின் வகுப்புப் பெண்கள் வீடுகளில் போய், அனியைத் தேடப் போகிறேன். நீங்கள்.. நீங்கள் எதற்கும், போலீஸுக்கு போன் பண்ணி விடுங்கள்” என்றாள். வாயிலை நோக்கி விரைந்தாள்.

வாயிலை அடைந்தவள் ஏதோ யோசித்து, உள்ளே திரும்பி வந்தாள். அறைக் கதவைத் திறந்து, உள்ளே சென்று மகளை மெள்ள அசைத்து எழுப்பினாள்.

பவித்ரா ஓரளவு தெளிவானதும், “பவிம்மா! அனி வீட்டுக்கு வரவில்லையாம்! நே… நேற்று மாதிரி, அந்தக் குட்டை… குட்டையில் விழப் போவதாக அனி சொல்லவில்லையே, செல்லம்?” என்று வினவினாள்.

“அதெல்லாம் இல்லைம்மா! நான் தூங்கட்டுமாம்மா?” என்று கேட்கும்போதே, படுக்கையில் சரிந்தாள் குழந்தை! அதற்குள், அனியுடைய தந்தைக்கும் விஷயம் புரிந்தது போலும்!

“ப்ளீஸ் சார்! உடனே போன் பண்ணி விடுங்கள். என் செல் நம்பர் இதில் இருக்கிறது! என்ன தகவல் கிடைத்தாலும், உடனே எனக்குச் சொல்லுங்கள்!” என்று ரங்கநாதனைத் தானும் கேட்டுக் கொண்டு, சட்டைப் பையில் இருந்து தன் கார்டை எடுத்துக் கொடுத்தான்.



மகள் அறையிலிருந்து வந்த சுதாகரியிடம், “ஒரு நிமிஷம்! காரிலேயே போகலாம். எனக்கு சரியாக அனி வகுப்புப் பெண்கள் வீடு தெரியாது! நீங்கள் வழி சொல்லுங்கள்.”

வேகமாக முன்னே சென்று காரை எடுத்தான், அவள் எதுவும் சொல்லாமலே. முதலில், கல்வெட்டாங்குழிப் பக்கமாகக் கார் வேகமாகச் சென்றது! அந்தப் பகுதிக்கு, ஒழுங்கான வழித் தடங்கள் கிடையாது என்றாலும் மேடு பள்ளங்களினூடேயும் காரை வேகமாகவே ஓட்டினான் அவன்.

குட்டைக்குச் செல்லும் வழியிலேயே முகாமிட்டிருந்த நரிக்குறவர் கூடாரங்களைப் பார்த்ததும், சுதாகரியின் அச்சம் பெரிதும் குறைந்தது! கூடாரங்களில் ஒருவருமே இல்லாமல் விட்டுப் போயிருக்க மாட்டார்கள். யாராவது பெரியவர்கள், முடியாதவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்! ஒரு சின்னப் பெண் தனியாகக் குட்டைப் பக்கம் போவதைப் பார்த்து, அவர்கள் சும்மா இருக்க மாட்டார்கள்.

அவனும் அதையே எண்ணியவன்போல, ஒரு கூடாரத்தின் வெளியே உட்கார்ந்திருந்த முதியவள் ஒருத்தியின் அருகே காரை நிறுத்தினான்.

‘ஒரு சின்னப் பெண் அந்தப் பக்கம் வந்தாளா?’ என்று சுதாகரி விசாரித்ததற்கு, அவள் பெரிதும் எதிர்பார்த்ததுபோல, எதிர்மறை பதிலே வந்தது!

அவள் மதியத்திலிருந்து அங்கேதான் இருப்பதாகவும், இரண்டு வாலிபப் பசங்கள் வந்து குட்டையில் குதித்துக் குளித்தது தவிர, வேறு யாரும் வரவில்லை என்றும் சொன்னாள் அவள்.

“நரிக்கொம்பு வாங்கிக்க, சாமி!” என்று வாய்ப்பை விடாமல் அவள் நீட்டியதை, என்னவென்றுகூடப் பாராமல், அவள் சொன்ன இருபது ரூபாயைக் கொடுத்து வாங்கி வந்து, காரினுள் போட்டான் அவன்!

இருவரும் ஏறிய பிறகும், அவன் காரை உடனே கிளப்பவில்லை. ஸ்டியரிங் வீலில் இருந்த அவனது கைகள் நடுங்குவதைப் பார்த்த சுதாகரிக்கு முதல்முறையாக அவனிடம் மனம் இளகியது! ‘பாவம்.. பெற்ற மனம் தாங்காதுதானே...’ என்று எண்ணும்போதே, இவன் அப்படி ஒன்றும் மகளிடம் உருகுகிறவன் அல்ல என்பது சுதாகரிக்கு நினைவு வந்தது! தாயில்லாப் பெண்ணிடம் கொஞ்சம் அக்கறை இருந்திருந்தாலும், அவளுடைய தோழிகள், வகுப்புப் பெண்கள் யார் வீடும் தெரியாமல் எப்படிப் போகும்?

அன்பு காட்ட வீட்டில் யாருமே இல்லை என்பதுதானே அனியின் பெரும் பிரச்னை! இவன் மட்டும் மகளிடம் பிரியமாக நடந்திருந்தால், இப்படி அவள் வீட்டை விட்டுப் போயிருக்கவே மாட்டாளே! 'தானாடா விட்டாலும் சதையாடும்' என்பார்களே.. அதுபோல, ரத்தத் தொடர்பு காரணமாக வந்த ஒரு சிறு வெளிப்பாடு! அவ்வளவே!

இளகிய மனம் மீண்டும் கடினமுற, "இப்படிச் சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பதற்கு அனி இன்னமும் கிடைத்துவிடவில்லை! காரை குடியிருப்புப் பக்கம் செலுத்தினீர்களானால், அங்கே அனியோடு படிக்கிறவர்களிடம் கேட்டுப் பார்க்கலாம்" என்றாள் சுதாகரி கடுமையான குரலில்.

முதுகுத்தண்டில் ஊசிக் குத்துப்பட்டதுபோல, விலுக்கென்று நிமிர்ந்தான் அவன். சுதாகரியின் பக்கம் திரும்பிய பார்வையைப் பாதியிலேயே கட்டுப்படுத்தி, நேர் எதிரே நிறுத்தி, ஒரு நீண்ட மூச்சை வேகமாக உள்ளிழுத்து வெளியேற்றியவன், உடனே காரைக் கிளப்பினான்.

இரண்டு சிறுமிகள், "அனி வகுப்புக்கு வந்தாள். ஆனால், எப்போது போனாள் என்று தெரியாது" என்றார்கள்.

அடுத்த தெருவில் இருந்த வீட்டுக்குச் செல்லும்போது, "எப்படியும் பள்ளி நேரம் முடியும் முன்பாகவே, அனி எங்கோ போயிருக்க வேண்டும்!" என்றான் அவன். "பள்ளி மணி அடிப்பதைக் கேட்டபடியே, பள்ளி இருக்கும் சாலையில் திரும்பியதாக அத்தை சொன்னார்கள்!" என்று அவன் கூறவும் சடக்கெனத் தலை திருப்பி, அவனைப் பார்த்தாள் சுதாகரி.

பள்ளிக்கு வந்து, ஏதேனும் சொல்லி விரட்டியிருப்பாளா அந்த அம்மாள்? "என்ன?" என்று அவளது பார்வையை உணர்ந்து கேட்டான் அவன்.

"அனியுடைய பாட்டி, எதற்காகப் பள்ளிக்கூடத்துக்குப் போனார்கள்?" என்று விசாரித்தாள் அவள்.

"இதென்ன கேள்வி? அனியைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவதற்காகத்தான் போனார்கள்! இங்கே, அத்தையின் முக்கிய வேலையே அதுதானே?" என்று அவன் சாதாரணமாகப் பதிலுரைக்கவும், சுதாகரி தலைக்கு மேல் வெள்ளம் ஓடுவது போன்ற உணர்வில் திக்குமுக்காடிப் போனாள். பாட்டியம்மாளின் முக்கிய வேலை அதுதானா? இதென்ன புதுக் கதை?

"இல்லையே! ஒரு நாள்கூடப் பாட்டியம்மா, அனியைக் கூட்டிப் போகப் பள்ளிக்கு வந்ததே கிடையாதே!" என்று சுதாகரி கூறவும், கார் அவன் கையில் ஒரு தரம் தடுமாறி நேராயிற்று!

"நீ... நீ... என்ன சொல்லுகிறாய்?"

'நீ...' - அருமை அத்தையம்மாளைச் சொன்னதும், மீண்டும் மரியாதை மறைந்து போய்விட்டது!

எரிச்சலுடன், "ஆமாம் மிஸ்டர்... தினமும், அனி தானேதான் தன்னந்தனியாகத்தான் வீட்டுக்குப் போவாள்! காதிலும் கழுத்திலும் நகைகளைப் போட்டுக்கொண்டு, தனியாகப் போகிறாளே என்று எத்தனையோ நாள் கவலைப்பட்டிருக்கிறேன்! வேற்று ஆள் நடமாட்டம் இருந்தால், அவளுக்குத் தெரியாமல் தூரத்தில் அவளைப் பின்தொடர்ந்து, அவள் வீட்டுக்குள் செல்லும்வரை பார்த்துவிட்டும் போயிருக்கிறேன்! இது சரியில்லை என்று நினைப்பேன். அதைப் போல இன்னும் சிலதும் மனதை உறுத்தும். அன்றைக்குக்கூட, உங்களிடம் நான் இதைத்தான் சொல்ல முயன்றேன். ஆனால், இப்போதும் உங்களுக்கு என் பேச்சை நம்பப் பிடிக்காதுதான்! வேண்டுமானால், அனியுடைய பள்ளித் தோழிகள் யாரிடமாவது, கேட்டுப் பாருங்கள்! உண்மை, அப்போது தெரியும்!" என்றாள் சுதாகரி!

ஒட்ட முடியாதவன் போலக் காரை நிறுத்தினான் அவன்!



"நம்ப முடியாமல் இல்லை... பவி அம்மா! நான், அத்தையை ஊரில் இருந்து அழைத்து வந்ததே, அனிக்கு வேண்டியதைச் செய்யத்தான். அவளுக்கு உணவு, உடை பார்த்துப் பராமரித்து, பள்ளிக்குக் கூட்டிப் போய் விட்டு, கூட்டி வந்து... இப்படி எல்லாம் செய்யவேண்டும் என்றுதான்! இப்படி நடக்கிறது என்றுதான் நினைத்துக் கொண்டும் இருந்தேன்."

ஏளனமாக நகைத்தாள் அவள். "உணவு தருவதா? அந்தம்மாவா? காய்ந்த ரொட்டித் துண்டுகளில், லேசாக ஜாம் தடவி வைப்பதற்கு, அப்படி ஒரு பெயராக்கும்!"

அவனது முகம் மாறிய விதத்தில், மீண்டும் அவள் மனம் இளகியது! மகளுக்காக என்று யோசித்துச் செய்துதான் இருக்கிறான்! அத்தையம்மாள் தப்புக்கு, அவன் என்ன செய்வான், பாவம்!

சற்றுப் பரிவுடன், "இடது பக்கமாகத் தெரு திரும்பினால்... மூன்றாவது ரோசியின் வீடு! சீக்கிரமாகப் போனால் நல்லது! இந்தப் பக்கம் இன்னும் இரண்டு வீடுகள்! குழந்தைகள் தூங்கச் செல்லுமுன் பார்த்துப் பேச வேண்டும்..." என்றவளுக்கு, அந்த இரண்டு பேரிடமும் ஒரு தகவலும் கிடைக்காவிட்டால்... - மனம் கலங்கியது!

ஆனால், ரோசியிடம் வேறு மாதிரி தகவல் கிடைத்தது.

"இன்னிக்கு அனிஷா அழுதிட்டே இருந்தா, ஆன்ட்டி! லஞ்ச்சே கொண்டு வரலை! அவள் பாட்டி கொடுக்கலையாம். நேத்தும் ராத்திரி பட்டினி போட்டாங்களாம். அப்பறம், பவித்ராதான் அவ கொண்டு வந்ததை, அனிஷாக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தா... அப்பறம், அவ வரலைன்னதும், நான் விளையாடப் போயிட்டேன். பார்க்கலை!"

சுதாகரிக்கு நெருடியது! மதிய உணவு கீழே விழுந்ததில், காக்காய்க்குப் போட்டதாகப் பவித்ரா சொன்னாளே! ஆனால், இந்தச் சிறுமி வேறு சொல்கிறாள்...

தீவிரமாக யோசித்தபடி, ரோசியுடைய அன்னையிடம் விடைபெற்றுக்கொண்டு வந்து, காரில் ஏறி அமர்ந்தாள்.

அவள் ஒன்றும் சொல்லாதிருக்கவும் சட்டென பயந்து, “என்ன? வேறே தேட இடம்... உங்களுக்கு நம்பிக்கையே இல்லையா?” என்று கலங்கிக் கேட்டான் அவன்.

அவசரமாகத் தலையசைத்து, “அப்படியில்லை, அனி அப்.. ச்சு! உங்கள் பெயரென்ன? அனி அப்பா, அனி அப்பா என்றுகொண்டு!” என்று பொறுமையற்ற எரிச்சலோடு சுதாகரி கேட்க, “நானும் அப்படித்தானே “பவி அம்மா” என வேண்டியிருக்கிறது?” என்று அதே குரலில் திருப்பினான் அவனும்.

சண்டைக்கோழிகள் போல, ஒரு கணம் ஒருவரை ஒருவர் முறைக்கையிலேயே இருவரும் உடனே முகம் மாறி, “என் பெயர் மகேந்திரன், மேலே சொல்லுங்கள்” என்றான் அவன் அவசரமாக.

தன் பெயரையும் அதே வேகத்துடன் சொல்லிவிட்டு, “பவித்ராவுக்கு ஏதோ தெரியுமோ என்று எனக்கு... தெரியும் என்றுதான் ரொம்பவும் தோன்றுகிறது!” என்றாள் சுதாகரி. சட்டென காரை சுதாகரி வீட்டுப் பக்கம் திருப்பினான் அவன்.

“என்ன தெரியும்? தெரியும் என்று எப்படி நினைக்கிறீர்கள்?”

“மதியம் ஆப்பம் கீழே விழுந்துவிட்டதாகப் பவி சொன்னாள். ஆனால், ரோசி சொன்னது உங்களுக்கே தெரியும்! மாலைச் சிற்றுண்டியும் இரு மடங்குக்கு அதிகம் உண்டாள் என்று அப்போது நினைத்தேன். ஆனால், அனிக்காக எடுத்து வைத்திருப்பாளோ என்று இப்போது தோன்றுகிறது! ஜாம் பிஸ்கெட் டப்பா கிட்டத்தட்டக் காலி! அவளது போர்வையையும் காணோம். ஒரு நாளும் இல்லாத வழக்கமாக சக மாணவியிடம் பாடம் கேட்பதற்காக என்று பள்ளிப் பையோடு, அனுமதி பெறாமலே ஓடிவிட்டாள், பவி. அப்படிப் போகிறவள் அல்ல! போர்வை, பலகாரம் எல்லாம் புத்தகப் பைக்குள் வைத்து, அனிக்குக் கொண்டு போயிருப்பாளோ என்று தோன்றுகிறது! இப்போதும், அனியைக் காணவில்லை என்றபோது, அவள் ஆச்சர்யப்படவே இல்லை! யோசித்துப் பார்த்தால், அவளுக்குத் தெரியும் என்பதோடு, அனியும் ரொம்பத் தூரத்தில் இல்லாமல், ஓரளவேனும் அருகில்தான் எங்கோ இருக்கவேண்டும்!” என்றாள் சுதாகரி. “ஆனால் இது என் ஊகம்தான்!” என்றும் சேர்த்துச் சொன்னாள்.

“இது சரியான ஊகமாகவே இருக்கட்டும் என்று, எனக்காக வேண்டிக் கொள்ளுங்கள் சுதாகரி!” என்று அவன் வேண்டுகையில் செல் சத்தமிட்டது!

ரங்கநாதன்தான். போலீஸ் தொடர்பு அப்போதுதான் கிடைத்ததாம். ஆனால், உரியவர்கள்தான் புகார் கொடுக்க வேண்டும் என்றார்களாம்! “நீங்கள் இருவரும் அப்படியே காவல் நிலையத்துக்குப் போய்ப் புகார் கொடுத்துவிட்டு வந்து விடுங்கள்!” என்றார் அவர்!

செல்லை வாங்கி, “வீட்டுப் பக்கம்தான் இருக்கிறோம் பெரியப்பா! பவித்ராவிடம் இன்னும் கொஞ்சம் விவரம் கேட்க வேண்டும்! வந்து கொண்டிருக்கிறோம்” என்றாள் சுதாகரி.

ஆனால், பவித்ராவோ “தெரியாது, தெரியாது!” என்றதற்கு மேலாக எதுவும் சொல்ல மறுத்தாள், அழுத்திக் கேட்டதற்கும் அழுகையும் ஆத்திரமுமாக, அதையேதான் திருப்பிச் சொன்னாள்! பவித்ராவிடம் அதட்டல் செல்லாது! அவளது பிடிவாதம்தான் அதிகமாகும்! ஆனால், புரிகிற விதமாக எடுத்துச் சொன்னால் ஏற்கிறவள்.

தாயும் மகளும் பேசுவதைக் கவலையுடன் கேட்டவாறு இறுகி நின்றவனை ஒரு தரம் பார்த்துவிட்டு, “பவிம்மா.. அனியுடைய அப்பாவைப் பார்! ஊரிலிருந்து அனியைப் பார்க்க ஆசையாக வந்திருக்கிறார்...” என்ற சுதாகரியின் பேச்சில் குறுக்கிட்டு, “பொய்!” என்று கத்தினாள் பவித்ரா!

“அவங்க வீட்டுப் பாட்டி சொல்லலை... அனி அப்பாவுக்கு அவளைப் பிடிக்காதுன்னு! ஏன், நீங்களும் பொய் சொல்லி, அவங்கப்பாகிட்டே அவளை மாட்டி வைக்கப் பார்க்கிறீங்க?” என்று கோபமாகக் கேட்டாள் பெண். தாங்க மாட்டாமல் அவன் வெளியே சென்றான்.

ஆனால், முன்னெப்போதையும் விட அனி இருக்கும் இடம் பவித்ராவுக்குத் தெரியும் என்பது சுதாகரிக்கு நிச்சயமாயிற்று!

“இல்லைம்மா! அந்தப் பாட்டி சொன்னதெல்லாம் பொய்! ஆனால், அதிருக்கட்டும்! அவள் வீட்டிலே தனியாகப் படுக்கவே, அனி பயம் என்பாளே! இருட்டுக்கு... பூச்சிக்கு... ஜாம் பிஸ்கெட் வாசனைக்கு, நாய், பூனை, எலி கூட நிறைய வரும்...” என்று சுதாகரி வரிசையாகச் சொல்லவும், “அம்மா!” என்று பவித்ரா அலறிக்கொண்டு, ஓடி வந்து தாயின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

“என்னடா செல்லம்?”

“நான் காட்டிக் கொடுத்திட்டேன்னு, அனி நினைப்பாளே!”

## அத்தியாயம் – 7



**சு**தாகரி கணித்தது போலவே, அனிஷா மறைந்திருந்த இடம் அதிகத் தூரமாக இல்லாமல், சக்திநகர் குடியிருப்புக்கு மறுதிசையில், கிட்டத்தட்ட அதே தூரத்தில் இருந்தது.

சக்திநகர் குடியிருப்புப் போலப் பெரிதாக இல்லை என்றாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பல வீடுகளின் கட்டுமானப்பணி நடந்து கொண்டிருந்தது!

கதவு, ஜன்னல் பொருத்தப்படாத ஒரு கட்டடத்தில் அனிஷா ஒளிந்து கொண்டிருந்தாள்.

அன்று வீட்டுக்குத் திரும்பிப் போகவே, அவளுக்கு மிகவும் பயமாக இருந்தது!

முன்தினம் பவித்ராவின் வீட்டில் மகிழ்ச்சியோடு பொழுதுபோயிற்று.

முன் போலவே, தினமும் மாலையில் பவித்ராவோடு, அவள் வீட்டுக்குச் செல்லப் பாட்டியிடம் அனுமதி கேட்பதாகத்தான் பவியுடைய அன்னை அவளோடு வந்தது! ஆனால், என்ன நடந்ததோ, அறைக்குப் போய் அனிஷா முகம் கழுவிவிட்டு வருமுன், ஆன்ட்டி வாயிலைத் தாண்டி விரைந்து சென்று கொண்டிருந்தாள்.

பொல்லாத பாட்டிதான் என்னவோ சொல்லி, அவளை விரட்டியிருக்க வேண்டும்.

சுதாகரியை நிறுத்துவதற்காக, "ஆன்ட்டி. ஆன்ட்டீ..." என்று அவளைப் பின்தொடர்ந்து ஓடினாள் அனிஷா.

ஆனால், இரண்டு எட்டுதான் எடுத்து வைத்திருப்பாள். அதற்குள் பாட்டியின் நீட்டிய கையில், அவளது வழக்கமான கீரைக்கட்டை மாற்றி, உயரத் தூக்கி, சுதாகரி அழகாகக் கட்டிவிட்டிருந்த 'போனிடெயில்' மாட்டிக்கொண்டது.

"ஆ..." என்று வலியில் நின்றுவிட்ட சிறுமியை, அந்தக் கூந்தலைப் பிடித்தே மாடிக்கு இழுத்துப்போய் அவள் அறையில் தள்ளினாள் பாட்டி.

அதன்பின், இடையிடையே வைத்த அடிகளினூடே பெரியவள் பொரிந்து கொட்டிய எதுவுமே அவளது சின்ன மூளைக்குப் புரிபடவில்லை!

எப்போது அடி விழுமோ என்று அந்தப் பயமே அவளுக்குப் பெரிதாக இருந்தது.

இதற்கு முன்னும் இந்தப் பாட்டி, அவளைக் கடுமையாக நடத்தியதுண்டு.

வலிக்கும்படி கையை அழுத்திப் பிடித்திருக்கிறாள், 'அசக்காதேயேன்' என்று தலையில் குட்டியிருக்கிறாள்.

ஆனால், அப்போதெல்லாம் உடலில் வலியைவிட, அவளது திட்டுகளால், மனதில் ஏற்படும் வலிதான் மிகவும் அதிகமாக இருக்கும்.

அம்மாவுக்குப் பிடிக்காது, வெறுப்பாகத்தான் பெற்றுப் போட்டாள். அப்பாவுக்குப் பிடிக்காது, கடனே என்று வீட்டில் வைத்திருக்கிறான். அவளைப் பார்க்கப் பிடிக்காமல்தான் தாமதமாக வருகிறான்... இப்படிப்பட்ட பேச்சுகள், அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மனதைப் புண்ணாக்கியதே அதிகம்.

அதோடு, அதிகம் வலித்துவிடக் கூடாது என்பது போல, ஒரு கட்டுப்பாடும் இருக்கும். ஆனால், இப்போது அவளுக்கு உடலில் வலிக்க வேண்டும் என்றே பாட்டி அடிப்பது போல அனிக்குத் தோன்றியது.

வலித்தது!

வலியில் மிரண்டு அவள் கத்திய போது, "மூச்! சத்... தம்! வாயைப் பொத்து!" என்று மேலும் பலமாக அடி விழவே, கத்தவும் பயந்தாள் குழந்தை.

"போட்டதைத் தின்றுகொண்டு சும்மாயிராமல், அம்மா கொண்டுவரப் பார்க்கிறாயா? அடி பின்னிவிடுவேன். அப்பனுக்கு ஆள் பிடித்து விடப் பார்க்கிறாயா? அம்மாவாடி வேணும், உனக்கு? செருப்பாலேயே அடிப்பேன்" என்று பாட்டியம்மா இன்னும் என்னென்னவோ சொன்னது எதுவும் மனதில் ஏறாமல், அவள் கையையே பார்த்தவாறு அடுத்த அடிக்கு நடுங்கிக்கொண்டு நின்றாள் அவள்.

கடைசியாக... அனியின் கழுத்தைப் பற்றி லேசாக அழுத்தி, "இதோ பார்! இனிமேல் அந்த வீட்டுப் பக்கம் காலடி எடுத்து வைத்தியோ, அப்படியே கழுத்தை நெரித்துக் கொன்றுவிடுவேன். உன் அப்பன் சொல்லி இருக்கிறான். அந்தப் பொம்பளைக்கு அசிங்க ஆசை. அந்த வீட்டுப் பக்கம் போனால், அனியை அடித்துக் கொல்லணும் என்று சொன்னான். கொல்லவா? இப்பவே கொல்லவா? சொல்லு, கொல்லவா?" என்று பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்த சிறுமியிடமே அதட்டிக் கேட்டாள்.

"வே... வேண்... டாம்..."

"இன்றைக்கு நீ அங்கே போனதைச் சொன்னால், உன் அப்பனே அடித்துக் கொன்றுவிடுவான். அவன் வந்ததும், அதைச் சொல்லவா?"

உடல் உதற, "வேண்... டாம்" என்று மீண்டும் பதறினாள் சிறுமி.



ஆனால், அதோடு அனிஷாவை விட்டுவிட, அந்தப் பெரியவளுக்கு மனமில்லை. பாடத்தை அந்தப் பிள்ளை மனதில் இன்னமும் அழுத்தமாகப் பதிய வைக்க வேண்டும் என்று நினைத்தாள். எனவே, "ஆனால், இன்றைக்குப் போனாயே... அதற்குத் தண்டனை வேண்டாமா? உனக்கு இரண்டு நாள், சாப்பாடு கிடையாது. பட்டினியாகவே கிட" என்று அவளைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, கதவை வெளிப்புறமாகத் தாளிட்டுக் கொண்டு போய்விட்டாள்.

பவித்ரா வீட்டில் நொறுக்கியதிலும், அப்போது இருந்த பயத்திலுமாக, அனிஷாவுக்கு இரவு முழுதுமே பசி தெரியவில்லை.

ஆனால், இரவுக்கும் சேர்த்து, காலையில் வயிறு காந்தியது.

பசி வயிற்றைச் சுருட்டியபோதும், பாட்டியம்மாவைப் பார்க்கவே பயமாக இருந்ததால், வேலைக்காரியிடம் போய்க் கூந்தலைக் கட்டிக்கொண்டு, வெற்று வயிற்றுடனேயே பள்ளிக்குக் கிளம்பிவிட்டாள்.

ஆனால், கிளம்பும்போதே அந்த வீட்டுக்கு இனித் திரும்பப் போவது இல்லை என்ற முடிவுடன்தான் கிளம்பினாள். மறுபடி வீட்டுக்குப் போனால், பாட்டி தன்னைக் கொன்று விடுவாள் என்பது அவளுக்கு நிச்சயம். பாட்டி விட்டாலும், அப்பாவும் அதைச் செய்யலாம்.

ஆனால், வேறே எங்கே போவது, எப்படிப் போவது என்றுதான் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அழுகையினூடே கேட்டால், பவித்ராவுக்கும் அதெல்லாம் ஒன்றும் தெரியவில்லை.

மெல்லத் தன் தாத்தாவிடம் கேட்டுச் சொல்வதாகப் பவித்ரா வாக்களித்தாள்.

அதுவரை, பக்கத்திலே எங்கேனும், அனி ஒளிந்து கொள்வது என்று இருவருமாக முடிவு செய்தனர். அவளது தேவைகளான உணவு, தண்ணீர், போர்வை எல்லாம் பவித்ரா கொடுத்தாள்.

அதற்குள் அவளும் அயர்ந்து துவண்டு போனாள்.

ஓரளவு வெளிச்சம் இருக்கும்வரை தைரியமாக இருந்த அனிக்கு, இருள் பரவப் பரவ, உள்ளே குளிரடிக்கத் தொடங்கியது. கொஞ்சம் ஜாம் பிஸ்கெட்டுகளைத்

தின்றாள். தண்ணீர் குடித்தாள். போர்வைகொண்டு, தலை முதல் கால் வரை மூடிக் கொண்டு சுவரில் சாய்ந்து அமர்ந்தவள், அப்படியே தன்னை மறந்து சற்று நேரம் உறங்கினாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ... யாரோ அவளது பெயரைச் சொல்லி அழைப்பது போலக் கேட்டது. யார் என்று கண்டுபிடிக்க முடியாதபடி, ஒவ்வொரு நேரம், ஒவ்வொரு விதமாகத் தெரிந்தது.

பொய்க்குரல் கொடுத்து, யாரோ அவளைப் பிடித்துப் போக வருகிறார்களா?

ஒட்டிக்கொண்ட இமைகளைக் கசக்கித் திறந்து பார்த்தால்... டார்ச் ஒளியைத் தன்மீதும் அடித்து, முகத்தைக் காட்டியவாறு அவளை நெருங்கி வந்தவன், அவளுடைய தந்தையேதான்.

பாட்டியிடம், அவளைக் கொல்லச் சொன்னவன். இப்போது, அவனே...

நடுக்கத்துடன் அசைய மாட்டாமல் நின்றவள், மகேந்திரனின் கை அவளது தோளைப் பற்றித் தூக்கவும் அடக்க மாட்டாமல் வீறிட்டாள்.

“ஷ்... அனி! நான்தான்... அப்பாதான்!” என்ற தந்தையின் குரல், அவளை எட்டியதாகவே தெரியவில்லை.

ஆனால், அந்தக் கட்டடத்தின் மற்றப் பகுதிகளில் தேடிக் கொண்டிருந்த சுதாகரியை அந்தக் குரல் வேகமாக அங்கே கொணர்ந்தது.

தந்தையைத் தள்ளி விலக்க முயன்ற சிறுமியைப் பார்த்ததும், “அனிம்மா!” என்று அவள் கைகளை நீட்டவும், “ஆன்ட்டீ...” என்ற கதறலுடன், அனி அவளிடம் பாய்ந்தாள்.

கழுத்தை இறுகக் கட்டிக்கொண்டு அவளது தோளில் முகம் புதைத்து விசும்பிய குழந்தையை, சுதாகரி முதுகில் தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்துவதைப் பார்த்துவிட்டு, அவள் கையில் இருந்த டார்ச்சையும் வாங்கி, செல்லும் பாதையில் ஒளி பரப்பியவாறு மகேந்திரன் முன்னே நடந்தான்.

பவித்ரா பக்கத்திலேயே நின்று, ஏதேதோ பேச, அனிக்கு உடம்பு கழுவி, கொஞ்சம் மோர் சாதம் பிசைந்து ஊட்டி, மகள் கூடவே அவளைப் படுக்க வைத்தாள் சுதாகரி.

அனியை அழைத்துவர, அவர்கள் இருவரும் சென்றிருந்தபோது, பவித்ரா அவரிடம் விவரித்த அனைத்தையும் ரங்கநாதன் அந்த நேரத்தில் மகேந்திரனிடம் தெரிவிக்கவும், உள்ளூர நொறுங்கிப் போனான் அவன்.

அவன் முகம் இருந்த விதத்தைப் பார்த்து, அவனைச் சற்றுத் தனிமையில் விடத் தீர்மானித்து, பின் கதவைப் பூட்டி வருவதாகச் சொல்லி, உள்ளே சென்றார் பெரியவர்.

அவன் எங்கே தவறினான்?

அழகியான பட்டாம்பூச்சி மனைவி தீப்தியின் நினைவு வந்தது அவனுக்கு! அவள் குழந்தையே வேண்டாம் என்றபோது, பிடிவாதமாகப் பெற்றுக்கொள்ள வைத்ததிலா?

ஆனால், வயிறு பெரிதாகி அசிங்கமாகத் தோன்றும்… அதனால் பிள்ளையைக் கலைக்க வேண்டும் என்று முதல் குழந்தையின்போதே ஒருத்தி ஆடினால், எப்படி சம்மதிப்பது? இத்தனைக்கும், அந்தக் குழந்தை வந்ததே திருமணமான இரண்டாம் ஆண்டில்தான்.

எனவே, அதைத் தப்பு என்று சொல்ல முடியாது.

பிழை என்பதானால், தன்னழகில், தானே மயக்கம் கொண்டிருந்த தீப்தியை அவன் மணந்ததைத்தான் சொல்ல வேண்டும்.

அது முதல் பிழை! முக்கியமான பெரும்பிழை!

தன் முகத்தின்மீது உள்ள கோபத்தில், தன் மூக்கையே வெட்டிக் கொண்டான் ஒரு புத்திசாலி என்பார்கள். அதேபோல, அவனைத் தண்டிப்பதாக எண்ணி, அவளது உயிரையே இழக்க நேரும் என்று எச்சரித்த டாக்டரம்மாவின் அத்தனை ஆலோசனைகளையும் ஒதுக்கித் தள்ளி, மருந்து மாத்திரைகளைத் தூக்கி வீசி, ஆட்டம் போட்டாளே! அப்போது தீப்தியை மனநல மருத்துவமனையில் சேர்க்காதது, அடுத்த தப்பு!

தீப்தி இறந்த பிறகு, அனியைக் கவனித்துக் கொண்டிருந்த அவனுடைய அன்னை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்தபோது, ஊரில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அத்தை சுந்தரியை, அனியைக் கவனித்துக் கொள்வதற்கெனக் கூட்டி வந்தது, மாபெரும் பிழை!

எல்லாவற்றையும் விட மிகப் பெரிய தவறு… தவறு அல்ல! குற்றம் என்றே இப்போது அவனுக்குப் புரிந்திருப்பது என்ன என்றால், பெற்ற மகளிடம் உரிய அன்பைக் காட்டாமல், வேலை… வேலை என்று ஒதுங்கிப் போனது.

வேலையும் ஒரு காரணம்தான்! ஆனால், முக்கியமானது… தாயின் சாயலில் பிறந்திருந்த மகள் அன்னையைப் போலவே ஆடத் தொடங்கி விடுவாளோ என்ற பயம்தான்!

மற்றவரின் அன்பை, அவர்களது பலவீனமாகக் கருதி, முடிந்தவரை பயன்படுத்திக் கொள்வதில் தீப்தி பிஹெச்டி! அதனால்தான், குழந்தை விஷயத்தில் மகேந்திரன் பிடிவாதமாக இருந்ததில், அவளுக்கு அவ்வளவு ஆத்திரம்.

ஆனால், தாயின் சாயல் இருந்ததால் அதைப்போலவே, அவளது குணமும் அனிக்கு இருந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

பச்சை மண்! வளர்க்கிற மாதிரி வளரப் போகிறது! பாவம்! அதைப்போய், ஐந்து வயதில் வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு நோக விட்டுவிட்டானே!

சுற்றிலும், மகேந்திரனின் பார்வை ஓடியது. முக்கால் மனையளவுதான் இடம். நடுவில் ரொம்பவும் சின்னதாய் வீடு. இங்கேதான் சுகம் இருப்பதாக, அவனது அழகான பெரிய வீட்டை விட்டுவிட்டு, அவன் மகள் இங்கே ஓடி வருகிறாள்.



இந்தச் சின்ன வீட்டில் இருப்பவர்களின் பெரிய மனம், விகிதத்தைச் சரியாக்கிவிட்டது போலும்!

அவனைப் பார்த்து, அனி பயந்து மிரண்டதை நினைக்கையில் அவனது நெஞ்சு கூசிச் சுருங்கிப் போனது. அவனிடமிருந்து விலகி சுதாகரியிடம் என்னமாகப் பாய்ந்தாள்.

அந்த சுதாகரிதான், அவனைப் பற்றி என்ன நினைப்பாள்?

என்ன நினைத்தாள் என்பதை பிள்ளைகள் இருந்த அறையிலிருந்து வெளியே வந்த அவளது பேச்சு தெளிவு படுத்தியது.

ஓசையற்றுக் கதவைச் சாத்தியவள், சஞ்சலத்துடன் அமர்ந்திருந்த அவனை நேராகப் பார்த்து, “அனி தூங்கிவிட்டாள். இப்போதைக்கு அவள் இங்கே இருக்கட்டும். அவளை அழைத்துப் போவதைப் பிறகு பார்க்கலாம்” என்றாள் தீர்மானமான குரலில்!

கல்வெட்டாங்குழி அருகில் போலவே, மகேந்திரன் விலுக்கென நிமிர்ந்தான்!

இவள் யாருக்கு உத்திரவு போடுகிறாள்?

அனியுடைய தந்தை, அவன் அல்லவா என்று ஆத்திரத்துடன் நினைக்கும்போதே, அவன் சட்டெனத் தளர்ந்தான்.

இந்தத் தகப்பன் வேண்டாம் என்றுதானே, அனி வீட்டை விட்டு வெளியேறியிருக்கிறாள். அதற்குமேல் தந்தை உரிமைக்கு ஏது மரியாதை?

“உங்கள் உரிமையில் தலையிடுவதாக நினைக்க வேண்டாம்! ஆனால், அவளுக்கு என்னென்ன அபாயங்கள் நேர்ந்திருக்கக்கூடும் என்று ஒரு தரம் யோசித்துப் பாருங்கள். அவளுக்கு அந்த மாதிரி மனநிலை இன்னொரு முறை ஏற்பட விடக்கூடாது. இங்கே அதற்கு வழியிராது. அதனால்தான் சொன்னேன்” என்று அதே குரலிலேயே சுதாகரி சொன்னபோது, மறுத்துப் பேசும் எண்ணம்கூட அவனுக்கு வரவில்லை.

அதோடு, அனியை வீட்டுக்கு அழைத்தாலும், இப்போது அவள் அவனோடு வருவது மிகவும் அரிது. வரமாட்டாள். அவளைக் கட்டாயப்படுத்திக் கூட்டிப் போவதும் நல்லதில்லை.

செய்கையற்ற சோர்வுடன் பின்கழுத்தைத் தேய்த்து விட்டபடி, “அப்படியானால். நான் கிளம்புகிறேன்... ரொம்பவும் நன்றி” என்று எழுந்தான்.

ஒருகணம் அவன் முகத்தைப் பார்த்துவிட்டு, “சாப்பிட்டீர்களா?” என்று சுதாகரி விசாரித்தாள்.

‘என்னது?’ சம்பந்தமே இல்லாமல் என்ன கேள்வி இது? அவன் யோசிக்கையிலேயே, “பெரியப்பா...” என்று ரங்கநாதனை அழைத்து, “இவரைக் கைகால் கழுவ அழைத்துப் போங்கள். நான் தோசை சுடுகிறேன்” என்று சமையல் அறைக்குள் சென்றாள் சுதாகரி.

பெயருக்கு மறுத்தவன் பசி தெரியவும் அதற்கு மேல் பிகு பண்ணாமல், சுதாகரி சுட்டு வைத்த தோசைகளில் மூன்றை உண்டு பசியாறிவிட்டு, உள்ளூர வியப்புடன் கிளம்பினான்.

இந்த சுதாகரி என்ன மாதிரிப் பெண்? இன்றைக்கு இவள் இல்லாமல், அனியைக் கண்டுபிடித்திருக்க முடியாது. அவளைக் காணோம் என்றதும், வினாடி தயங்காமல், அவனைக்கூட எதிர்பாராமல் தேடக் கிளம்பினாள்.

ஆனால், பெற்ற தகப்பன் ஆயிற்றே என்று அவனிடம் பரிவு காட்டினாளில்லை! கிடைத்த வாய்ப்பில் சுருக்கென்ற பேச்சுதான்! ரொம்பக் கடுமை என்று சொல்ல முடியாது! ஆனால், கை பொறுக்காத அதிகச் சூடுதான்!

இப்போதோ... அவனது பசி புரிந்து, அன்னபூரணியாய் உணவு கொடுத்தாள்.

வீட்டை நெருங்குகையில், சுதாகரியின் பேச்சு இன்னமும் புரிந்தது.

அவனுக்கு மகள் வேண்டும் என்றால். அந்த மகளுக்கு ஏற்றபடி, அவனது வீட்டு சூழ்நிலையை மாற்றியாக வேண்டும்.

எப்படி?

## அத்தியாயம் – 8



**கா**ரை ஷெட்டில் நிறுத்திவிட்டு, யோசித்தபடியே மகேந்திரன் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றான். வராந்தாவில் ஷூவைக் கழற்றுகையில், உள்ளே ஹாலில் டீவி ஓடிக் கொண்டிருப்பது கேட்டது.

எப்போதுமே, அப்படித்தான்! கடலை, மிக்ஸ்சர் என்று எதையாவது கொறித்தபடி சுந்தரி அத்தை, டீவி முன்னேதான் இருப்பாள்.

மகேந்திரன் அதைத் தவறாகக் கருதியது கிடையாது. பாவம், ஓரளவு வயதான பெண்மணி! அனியும் தூங்கிவிடுவாள். வீட்டுக்குள்ளேயே தனியாக இருக்கிறவளுக்கு வேறு எப்படி நேரம் போகும் என்று சற்றுப் பரிதாபமாகத்தான் எண்ணுவான். பெற்ற மகனால் கைவிடப்பட்டு சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டவள். இப்போதேனும் சுகப்படட்டும்.. பாவம்!

ஆனால், இன்று மனம் கொதித்தது. அவன் மகளைப் பட்டினி போட்டாளாமே.. அவளைப் பசியில் துடிக்க வைத்துவிட்டு, இவளுக்குச் சாப்பாடு போகக் கொறிப்புக்கு வேறா? இந்த வீட்டில் அவள் இருப்பது, அவன் மகளுக்காக என்பதே மறந்து விட்டதா?

'அப்பாவுக்கு உன்னைப் பிடிக்காது' என்று வேறு, அனியிடம் சொல்வாளாமே.

அனியிடம் மட்டுமல்ல. அந்த சுதாகரியிடமும் சொல்லி இருக்கிறாள். அந்தப் படு சுட்டி பவித்ரா, அதை எவ்வளவு ஆத்திரத்துடன் கூறினாள்.

அள்ளி அணைத்துக் கொஞ்சியது இல்லைதான். ஆனால், மகளிடம் அன்பு இல்லை என்றால், எதற்காகக் கிராமத்திலிருந்து இந்த அம்மாவை இங்கே கூட்டி வந்தானாம்? எல்லாச் செலவுக்கும் கொடுத்து, அதற்கு மேலாக ஒரு தொகையைக்

கையிலும் கொடுப்பது, அனியை நல்லபடியாகக் கவனிப்பதற்காகத்தானே? பிள்ளையிடம் அன்பு இல்லாதவனா, இதுபோல ஏற்பாடெல்லாம் செய்வான்?

எல்லாவற்றையும் கை நீட்டி வாங்கி வைத்துக் கொண்டு, அவனுடைய சின்ன மகளை, இந்த அத்தை என்ன பாடுபடுத்தி இருக்கிறாள்.



அவன் 'ரிமோட்'டை எடுத்து, டீவியை நிறுத்திய பிறகுதான், மகேந்திரன் வீடு திரும்பி விட்டதைச் சுந்தரியம்மாள் கவனித்தாள். அவ்வளவு ஈடுபாடு!

அவசரமாக எழுந்து, "என்ன தம்பி.. அனிக் கண்ணு கிடைத்தாளா? அவளைப் பற்றிய கவலையில் பைத்தியம் பிடித்துவிடும்போல இருந்தது. அதனால், கொஞ்சம் மன மாற்றத்துக்காக டீவியைப் போட்டேன். என்னப்பா.. நான் சொன்ன மாதிரி, அனி அங்கேதானே இருந்தாள்? என்ன வசியம் பண்ணினாளோ.. அந்தக் கைகாரி! உன் மகளுக்கு எந்நேரமும் அங்கேதான் குடியிருப்பு! இப்போது எங்கே அவள்?" என்று பரபரப்பு காட்டி விசாரித்தாள்.

மட்டையாக இறுகியிருந்த கழுத்துப் பின்புறத்தைத் தேய்த்து விட்டபடி, "அனி அங்கே போகவில்லை!" என்றான், மகேந்திரன் அசதியுடன்.

"ஆங்!" என்று தவளையாக வாய் திறந்தாள் சுந்தரியம்மாள். "பின்னே எங்கே போயிருக்கும், இந்தப் பொண்ணு? அய்யய்யோ.. நாலு இடம் தேடினாயா? ஆனால், இல்லப்பா.. அவள், அங்கேதான் இருப்பாள். பிள்ளையை எங்கேயோ ஒளித்து வைத்துவிட்டு, 'இல்லை' என்று அந்த ராங்கிக்காரி உன்னிடம் பொய் சொல்லியிருக்கிறாள். போலீஸோடு போய், அவளை முட்டிக்கு முட்டி தட்டி, விசாரிக்கிற விதமாக விசாரித்தால், விஷயத்தை அலறிக் கொண்டு கக்கிவிடுவாள். ஐந்து, பத்து கொடுத்து, போலீஸைச் சரியானபடி தயார் பண்ணிக் கொண்டு போய்ப் பாருப்பா!" என்று ஆலோசனை வழங்கினாள்.

"அதற்கு அவசியம் இல்லை" என்ற அவன், "அனி இப்போது அங்கேதான் இருக்கிறாள்!"

புரியாமல் அவனைப் பார்த்தாள் அத்தையம்மாள். "என்ன தம்பி குழப்புகிறாய்? இப்போதானே, அனிஷா அங்கே போகவில்லைன்னு சொன்னாய்.. அதற்குள்ளே மாற்றுகிறாயே.. ஏன், அந்தக் காய்க்காரிச்சி ஒளித்து வைத்திருந்த இடத்திலே இருந்து இப்போதான் அனி அங்கே வந்து சேர்ந்தாளா? அவளைப் பிடித்து, இழுத்துட்டு வராமல்.. ஏன் விட்டுவிட்டு வந்தாய்?"

"தலைமுடியைப் பிடித்து இழுத்துக்கொண்டா?"

ஒருகணம் மிரண்டபோதும், உடனேயே சமாளித்து, "நம்ம பொண்ணை, அங்கே விட்டு வரலாமா? எப்படியாவது, கூட்டி வந்திருக்க வேண்டாமா? நம்ம தரத்துக்கு அது போல இடத்திலே அனி இருந்தால் கேவலமில்லை? நாலு பேர் என்ன சொல்லுவார்கள்? யோசிக்காமல் விட்டு விட்டு வந்துவிட்டாயே!" என்று - அதுதான் முக்கியம் போலக் கேட்டாள் சுந்தரியம்மாள். பேச்சை மாற்றும் முயற்சி! ரங்கநாதன் தெரிவித்தது, முழுவதும் உண்மை என்பதன் சான்று.

"நேற்று என்ன நடந்தது?" என்று நேரடி விசாரணையைத் தொடங்கினான் மகேந்திரன்.

"நேற்று உன் மகளை, அந்தப் பொம்பளை, அவள் வீட்டுக்குக் கடத்திக் கொண்டு போய் விட்டாப்பா!"

"எப்போது? இன்று போலவே, நேற்றும் பள்ளிக்குத் தாமதமாகப் போனீர்களா?"

"ஆ.. ஆமாம்.. அவளுக்குச் சாயங்கால டிஃபனுக்கு அல்வா கிளறியதில் லேட்டாகி விட்டது. அதற்குள்ளே.."

"எனக்குப் பசிக்கிறது. நேற்று அனி சாப்பிடாததால், அல்வா மீந்திருக்குமே.. கொஞ்சம் எடுத்து வாருங்கள்."

"அது.. அது.. வேலைக்காரிக்குக் கொடுத்துவிட்டேன்."

"நாளைக்கு வேலைக்காரி வந்த பிறகுதான், அல்வா காரமா, கசப்பா என்று தெரிய வரும், இல்லையா?"

"என்ன தம்பி! ஒரு தினுசாக, என் பேச்சை நம்பாத மாதிரிப் பேசுகிறாய்?"

"மாதிரி என்ன? முதலில் இருந்தே நம்பவே இல்லைதான். எந்த அளவுக்குப் பொய் சொல்லுகிறீர்கள் என்று பார்த்தேன், அத்தை! ஊரிலே நீங்கள் எப்படி இருந்தீர்கள் என்று நினைவிருக்கிறதா? கதிர், நீங்கள் பெற்ற மகன். உங்களை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். மகளும் ஒதுக்கிவிட்டிருந்தாள். சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டு, கிழிந்த சேலையோடு, மேற்கொண்டு கடன் தர மறுத்துவிட்டதால், கடையில் இருந்து வெற்றுக் கையோடு திரும்பிச் சென்று கொண்டிருந்தீர்கள். நன்றி கெட்ட பிள்ளைகளைப் பெற்றிருக்கிறீர்கள் என்று நினைத்துப் பரிதாபப்பட்டு, ஊரில் உங்கள் கடன்களையெல்லாம் அடைத்து, உங்களை இங்கே அழைத்து வந்தேன்.. எதற்காக? என் பெண்ணைப் பாசத்தோடு பார்த்துக் கொள்வீர்கள் என்றுதானே? நீங்களும் என்ன சொன்னீர்கள்? 'சொந்தப் பேரன், பேத்திகளைத் தொட்டுப் பார்க்கவும் பாக்கியம் பண்ணவில்லை.. உன் மகளை என் பேத்தியாக, உன் அம்மாவைப் போலவே பார்த்துக் கொள்வேன்' என்று சொல்லித்தானே, வந்தீர்கள்?

இப்போது. தலைமுடியைப் பிடித்து இழுத்துப் போனீர்களா? அடித்தீர்களாம்.. கொன்று விடுவதாகச் சொன்னீர்களாம்! நான் வேறு.. என்னை வேறு, பயங்கர வில்லனாகச் சித்தரித்திருக்கிறீர்கள். இப்படி என் மகளைக் கொடுமை செய்வதற்கு

என்று நானே ஓர் ஆளுக்குச் சாப்பாடு போட்டு, மாதாமாதம் பணம் வேறு கொடுத்து.. கேவலமாக இல்லை?”

“என்ன தம்பி! கொடுமை, கிடுமை என்று என்னென்னமோ பேசுகிறாய்? உன் மகளுக்கு, அவளைப் பெற்றவள் புத்தி அதிகம். அந்த மாதிரிக் கழுதையாக ஆகிவிடக் கூடாதே என்று கொஞ்சம் கண்டிப்பாக இருந்தேன். உன் அம்மா இருந்தாலும் இதேதான் செய்திருப்பாள். எல்லாம், உன் நிம்மதிக்காகச் செய்தது தான்.”

“நான் அடித்துக் கொல்லச் சொன்னதாக அனியை மிரட்டியதும் அப்படித் தானா? ஏன் அத்தை வீண் பேச்சு? ‘உடையவன் பார்க்காவிட்டால் ஒரு முழம் கட்டை’ என்பார்கள். வெறும் பயிர்களுக்கே அப்படி! நான் என் மகளின் வளர்ப்பை, உங்களை நம்பி முழுதாக ஒப்படைத்துவிட்டு, எப்படிச் செய்கிறீர்கள் என்று கண்காணிக்காமலே இருந்து, பெரிய தப்பு பண்ணி விட்டேன். அவளை என்ன செய்தாலும், உங்களை யாரும் எதுவும் கேட்க மாட்டார்கள் என்ற திமிர் வந்துவிட்டது. அந்தத் திமிரில், யார் காரணமாக இங்கே வந்தீர்களோ, அவளையே கொடுமை செய்யவும் துணிந்து விட்டீர்கள். அந்தத் திமிர் வரக் காரணம் என் தப்பு என்பதால், உங்களிடம் கோபமாகப் பேச எனக்கு விருப்பம் இல்லை. ஆனால், இதற்கு மேல் நீங்கள் இங்கே இருப்பது..”



என்ன வரப் போகிறது என்று புரியவும் சுந்தரியம்மாள் கலங்கிப் போனாள். இந்த அளவு ஆகும் என்று.. அனிக்கு வீட்டை விட்டு ஓடும் அளவு தைரியம் இருக்கும் என்றே அவள் ஒருபோதும் எண்ணியதில்லை. சும்மாவே ஒட்டுதல் காட்டாத தந்தையிடம் பயத்தையும் ஏற்படுத்திவிட்டால், அவன் பக்கமே, பெண் போக மாட்டாள்.. சுதாகரி மாதிரி, வேற்று ஆள் பழக்கமும் ஏற்படாமல் செய்துவிட்டால், பிரச்னையற்று, அப்புறம் எப்போதும் வீட்டில் தன் ஆதிக்கம்தான் என்று திட்டமிட்டு மிரட்டினால்..

“தம்பி, தம்பி, அவசரப்பட்டு ஏதாவது சொல்லி விடாதேப்பா. இனிமேல், நான் பார்த்து நடந்து கொள்ளுகிறேம்பா! நான் யார்? உன் அத்தை! உன்னைக் கொண்டுதானே, அனி எனக்குச் சொந்தம்? அவள் அம்மா மாதிரி வளர்ந்து, உனக்கு இன்னொரு கஷ்டம் வந்து விடக் கூடாது.. உன் பொண்ணை நல்லவளாக வளர்க்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் நான் ஏதோ செய்யப் போக..” என்று கெஞ்சலில் இறங்கினாள் அந்த அம்மாள்.

ஆனால், “மறுபடியும் அதே பொய்யைச் சொல்லாதீர்கள் அத்தை” என்று மகேந்திரன் சீறினான். “என் தப்புக்கு, உங்களிடம் கோபப்படக் கூடாது என்று பார்த்தால் விட மாட்டேன் என்கிறீர்களே. நீங்கள் அனிக்காக, அனியின் நன்மைக்காக எதுவுமே செய்யவில்லை என்று எனக்குத் தெரியும். உங்கள் விருப்பம்போலக் காட்டு ராஜ்ஜியம் நடத்தியிருக்கிறீர்கள். என் உப்பைத் தின்றுகொண்டு, என் மகளைக் கொடுமைப்படுத்தி இருக்கிறீர்கள். கொல்லுவேன் என்று மிரட்டி.. சே, அந்த மாதிரி வார்த்தைகளைக் கேட்கிற வயதா, அவளுக்கு? கழுத்தையும் பிடித்து.. என் பெண் என்னமாக நடுங்கி இருப்பாள்? பாருங்கள் அத்தை, இது அனியின் வீடு. அவள் இருக்க வேண்டிய இடம். ஆனால், நீங்கள் இங்கே இருக்கும்வரை அவள் இங்கே வரமாட்டாள். சுதாகரி அனுப்பவும் மாட்டார்கள். அதனால்..”

ஆவேசமாகக் குறுக்கிட்டாள் பெரியவள். “ஓகோன்னானாம். இப்போதல்ல, விஷயம் புரியுது. எல்லாம் அந்தக் கைகாரியுடைய வேலைதானா? உனக்குத் தூண்டில் போடுகிறாளாக்கும். இடைஞ்சலாக இருப்பேன் என்று அந்த ஜாலக்காரி என்னை விரட்டுகிறாள்.. நீ அது புரியாமல்..”

“அத்தை! நம்மிடம் குற்றத்தை வைத்துக்கொண்டு, அனாவசியமாக அடுத்தவர்களைப் பற்றிக் கண்ட பேச்சு வேண்டாம்” என்று எச்சரித்தான் மகேந்திரன்.

“பேசாமல் எப்படி இருப்பது? அன்றைக்கு, அவளோட இந்தத் திருட்டுத்தனத்தைக் கண்டுபிடித்துச் சொன்னவனே, நீதானே? சொல்லி, அந்த வீட்டுக்கு அனியைப் போக விடக்கூடாதுன்னும் சொன்னியேப்பா? இன்றைக்கு, எவ்வளவு நேரம்ப்பா அவள் வீட்டிலே இருந்திருப்பாய்? இரண்டு மணி நேரமா? அதற்குள்ளே என்ன மாயமோ பண்ணி.. உன்னை அவள் காலடியிலே கவிழ்த்துவிட்டாளே.. அந்த அவிசாரி..”

“அத்தை!” என்ற மகேந்திரனின் அதட்டலில் திகைத்து, அந்த அம்மாள் பேச்சை நிறுத்திக் கவலையுடன் அவனைப் பார்த்தாள்.

பெருமுயற்சி செய்து, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மகேந்திரன் மேலே பேசினான்.. “ஒரு சமயத்திலே, நான் சுதாகரியைத் தவறாக நினைத்தது நிஜமே. நாலைந்து கசப்பான அனுபவங்களின் பயனாக, அனிக்குப் பராமரிப்பு சரியில்லை என்று அவள் இயல்பாகச் சொன்னதைத் தப்பாக எண்ணினேன்தான். ஆனால், இப்போது உள்ள நிலைமை தெளிவான பிறகுதானே, சுதாகரி சொன்னது எல்லாமே சரியென்று தெரிகிறது!”

“இல்லை தம்பி.. இல்லை தம்பி! இனிமேல், அவளை ஒரு வார்த்தை சொல்லலை. என்னை வீட்டை விட்டுப் போகச் சொல்லாதே! இனிமேல், நான் நல்லபடியாக அனியைப் பார்த்துக் கொள்கிறேன்” என்று அத்தையம்மாள் கெஞ்சிப் பார்த்தாள். ஆனால், மகேந்திரன் சற்றும் மனம் இளகவில்லை.

தன்னை வீட்டை விட்டு அனுப்பத்தான் போகிறான் என்று தெளிவானதும் அவள் ஆத்திரத்தைக் காட்டினாள். பெரும் குரலெடுத்து கத்தினாள்.. “டேய்.. நான் உன் அப்பனுக்கு அக்கா! நான் சொல்வதை விட, அந்த மினுக்கியின் பேச்சு பெரிதாகப் போய்விட்டதா? அவள் யார், எப்படிப்பட்டவள் என்று உனக்கு ஏதாவது

தெரியுமா? அவள் வீட்டுக்கு, எத்தனையோ காரும் பைக்கும் வந்து போகிறதே.. சும்மாவா? மகள் ஒருத்தி இருக்கிறாளே.. தாயைப் போலவே ஒரு தீசல் கழுதை. அதற்கு அப்பன் யார் என்று உன்னிடம் சொன்னாளா? எங்கே.. அவளுக்கே தெரிந்தால் அல்லவா சொல்லுவாள்? பள்ளிக்கூடத்திலே, அந்தப் பொண்ணுக்குத் தகப்பன் பேருக்கு நேரே வெறும் கோடுதான் இருக்கிறது. இனிஷியலா, அவள் பேரையேதான் கொடுத்திருக்கிறாள். பிள்ளைக்கு எல்லாமே, அவள் மட்டும்தானாம். அவள் மட்டுமாத்தான் பெற்றுக் கொண்டாள் போல. தறி கெட்டு ஆடி, வயிற்றிலே வாங்கிக் கொண்ட கழுதை..” என்று அந்த அம்மாள் மேலும் தரக்குறைவாக சுதாகரியைப் பற்றிப் பேசவும், மகேந்திரன் மீண்டும் குறுக்கிட்டான்.

“அதெல்லாம் அவரவர் சொந்த விஷயம், அத்தை! அந்தப் பேச்சு இங்கே வேண்டாம்” என்றான் இறுகிய குரலில்.

“எதுடா அவளோட சொந்த விஷயம்? அவள் உன் மகளை மயக்கிப் பிடித்து வைத்திருக்கிறாள். அவள் மூலமா, உன்னையும் பிடிக்கப் போகிறாள். இது, அவளுடைய சொந்த விஷயமா? ஆனால், உன்னை இனிமேல் என்ன பிடிப்பது? நீதான் இப்பவே, அவள் ஊதுகிற மகுடிக்குத் தலை சுற்றி ஆடுகிறாயே.. இல்லாவிட்டால், அந்த மானம் கெட்டவளுக்காக என்னை விரட்டுவாயா? வயதானவள் சாபம். சும்மாவிடாது. அந்த சுதாகரி உருப்படவே..”

இடையிட்டு, “போதும்! சுதாகரி பேச்சு வேண்டாம் என்று சொல்லவில்லை..” என்று மகேந்திரன் புலியாய் உறுமிய விதத்தில், மீண்டும் அத்தையம்மாளின் வாய் தானாக மூடியது.

“உங்கள் செயலுக்கும் பேச்சுக்கும், உங்களை உடுத்த துணியோடு விரட்டவேண்டும். ஆனால், எனக்கு ஒரு தரம் இருக்கிறது. நீங்கள் வந்ததில் இருந்து உங்கள் பெயரில் மாதா மாதம் பணம் கட்டியிருக்கிறேன். அது, சில லட்சங்கள் ஆகியிருக்கிறது..” என்று பாங்க் பாஸ் புக்கோடு, கையில் ஓரளவு பணமும் கொடுத்து, அவளது கெஞ்சல், கூச்சல், சாபம் எதையும் சட்டை செய்யாமல். துணிமணிகளை மூட்டை கட்டவைத்து, டாக்ஸியை வரவழைத்து, வீட்டின் பின்புறக் குடிலில் வசிக்கும் தோட்டக்காரனின் துணையோடு சுந்தரியம்மாளை அனுப்பி வைத்த பிறகுதான், மகேந்திரனுக்கு அந்த வீட்டில் சரியாக மூச்சுவிட முடிந்தது எனலாம்.

ஏதோ கெட்ட வாடை அகன்று, வீட்டுக் காற்று சுத்தமாகிவிட்ட உணர்வு!

இனி, அனியைக் கூட்டி வந்து விடலாம்.

அதே எண்ணத்தோடு, காலையிலேயே கிளம்பி, விலை உயர்ந்த சில சாக்லெட் பார்களை வாங்கிக்கொண்டு சென்றால், சுதாகரியின் பின்னே முடிந்தவரை மறைந்து நின்றுகொண்டு, அவன் மகள், அவனை நிமிர்ந்தும் பார்த்தாளில்லை.

முன்தினம் தோசை சுட்டுக்கொடுத்துச் சாப்பிடச் சொன்ன சுதாகரியும், ஒரு தலையசைப்புக்கு மேல், அவனைக் கண்டுகொள்வதாக இல்லை.

சங்கடத்துடன் பார்த்தால், பிள்ளைகள் இருவருமே, பள்ளிச் சீருடை அணிந்திருந்தனர். சீருடையின் ஓர் அங்கமான வெள்ளை ரிப்பனின் அழகான முடிச்சுடன் கூந்தலைத் தூக்கிக் கட்டிக்கொண்டு அவனுடைய மகள் அனிஷா, சுதாகரியின் அருகில் நிற்க, பவித்ராவின் கூந்தலையும், அதேபோலக் கட்டிக் கொண்டிருந்தாள் சுதாகரி. அதாவது, இருவரும் பள்ளிக்குக் கிளம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

அவனை அங்கே யாரும் ஒரு பொருட்டாக நினைத்துப் பார்த்த மாதிரி கூட இல்லை.

அதெப்படி? அவனுடைய மகளை, ஓர் இக்கட்டான சூழ்நிலையில் அங்கே விட்டு விட்டுப் போனால், அப்புறம் எட்டிப் பாராமலே இருந்து விடுவானா?

மகேந்திரனின் புறமாக லேசாகத் திரும்பியதாலோ, என்னவோ, “தலையை அசைக்காதே, பவி!” என்று குரலில் சற்று அழுத்தத்துடன் கூறினாள் அவளுடைய அன்னை.

அனிஷாவைப் போலவே, பவித்ராவுக்கும் சுதாகரி ‘போ’ கட்ட, மகேந்திரனின் பார்வை அரைகுறையாகத் தெரிந்த மகளிடம் தாவியது.

மகளின் உடை தொளதொளப்பாக இருப்பதைப் பார்த்ததும், அவன் மனம் வருந்தியது. இந்த மெலிவுக்கு அவனும் ஒரு காரணம்தானே? அவனது பார்வையைக் கவனித்துவிட்டு, “பவியுடையது” என்றாள் சுதாகரி.

அதற்குள் கூந்தலைக் கட்டி முடிந்துவிட, பவித்ரா முன்னே வந்து, மகேந்திரனை ஏற இறங்கப் பார்த்து, “ஏன் அங்கிள்? உங்களுக்கு ஏன் அனியைப் பிடிக்கலை?” என்று கோபக்குரலில் கேட்டாள்.

சாதாரணமாக என்றால் தலையைப் பின்னே சாய்த்து, அவள் தோரணையாகக் கேட்ட விதம், மகேந்திரனுக்குச் சிரிப்பு மூட்டியிருக்கும். இந்தக் குட்டியூண்டு வால், பெரிய நீதிபதியைப் போல அவனை என்னமாய்க் கேட்கிறது என்று ரசிக்கவும் தோன்றியிருக்கும்.

ஆனால், இப்போதோ முந்தைய தினம் இவள் இல்லையென்றால், அவனுடைய மகள் என்ன ஆகியிருப்பாள் என்ற எண்ணம் வந்து தொண்டையில் அடைத்தது!

எனவே, பணிவாகவே “அப்படி இல்லைம்மா. அனியை எனக்கு மிகவும் பிடிக்கும்..” என்று தொடங்கியவன் பேச்சில் குறுக்கிட்டு, “பொய் சொல்றீங்க. உங்களுக்கு அனியைப் பிடிக்காதுன்னு அனியோட பாட்டி, நிறைய்யத் தரம் சொல்லிருக்கிறாங்களே” என்றாள் பவித்ரா.

அவன், மகளைப் பார்த்தால்.. அவள் பவித்ராவைப் பார்த்து, அப்படித்தான் என்பது போல ஒப்புதலாகத் தலையை வேகமாக ஆட்டிக் கொண்டிருந்தாள்.

மகேந்திரனின் நெஞ்சு கனத்தது.

அவனுடைய சின்ன மகள், இந்தப் பாதிப்பிலிருந்து எப்போது மீண்டு வந்து, அவனைத் தந்தையாக ஏற்கப் போகிறாள்?

அதைவிடவும்.. எப்படி, என்ன மாதிரி, அவனது அன்பை அவளுக்குப் புரிய வைப்பது?

உதவிக்கு வருவாள் என்று சுதாகரியைப் பார்த்தால். அதற்கான அறிகுறியே அவள் முகத்தில் தெரியவில்லை.

இந்தப் பேச்சில் சற்றும் அக்கறை காட்டாமல், உன் பிரச்னை.. உன் பாடு என்பது போல, இரு பிள்ளைகளுக்கும் அவள் சாப்பாட்டுக் கூடையைத் தயார் பண்ணிக் கொண்டிருந்தது, அவனை இன்னமும் அதிகமாக வருத்தியது.

## அத்தியாயம் – 9



**தோ**ழிக்காகப் பரிந்து வந்த பவித்ராவின் ஆத்திரத்தை மகேந்திரனால் புரிந்து கொள்ள முடிந்தது.

சின்னப் பெண்! அதோடு, அவனைப் பற்றி அறியாமல், தோழிக்காகப் பேசினாள்!

ஆனால், சுதாகரி?

முன்தினம் அவன் பட்ட துன்பம், அவளுக்குத் தெரியும்! மகளிடம் அது பற்றிச் சொல்லலாமே! ஏற்கனவே சொல்லியிருந்தால், பவித்ரா இப்படிக் கேட்டிருக்கவே மாட்டாள்!

ஒருவேளை, நேற்று அவன் கிளம்பியதுமே, அவனை மறந்து போனாளோ? அல்லது...

மனதில் வலியுடன், மகேந்திரன் பவித்ராவிடம் தன்னை விளக்கலானான்.. "அப்படி இல்லைம்மா! எனக்குக் கடையில் வேலை அதிகம்! பெரிய கடை என்பதால், கணக்கு முடித்துவிட்டு வரத் தாமதமாகி விடும்! அதனால், அனியோடு சரியாகப் பேசக்கூட நேரமில்லாது போயிற்று! ஆனால், இதை அந்தப் பாட்டி மாற்றி, அனியிடம் பொய்ச் சொல்லி இருக்கிறார்கள். அப்படிப் பொய் சொன்னதற்காக, அவர்களை வீட்டை விட்டு ஊருக்கே அனுப்பிவிட்டேன். உண்மையாக, அனிதான் என் செல்லம், என் உயிர்!"

சந்தேகமாக அவனைக் கூர்ந்து நோக்கி விட்டு, "காட் பிராமிஸ்?" என்று கை உயர்த்தி, சத்தியம் கேட்டாள் சிறுமி.

அவளைப் போலவே கை தூக்கி, “காட் பிராமிஸ்!” என்று உறுதியளித்துவிட்டு, அவள் கையில், தான் கொணர்ந்த சாக்லெட் பார்களை வைத்தான் மகேந்திரன்!

முகம் மலர நன்றியுரைத்துவிட்டு, “ஏய் அனி! பார்.. அங்கிள் எவ்வளவு சாக்லெட் வாங்கி வந்திருக்கார்னு. அப்போ, அங்கிளுக்கு உன்னைப் பிடிக்கத்தான் செய்யும். எல்லாம் இரண்டு. உனக்கும் எனக்கும் ஆளுக்கு ஒன்றுதானே? அப்படின்னா, என்னையும் உங்களுக்குப் பிடிக்குமா, அங்கிள்?” என்று மீண்டும் அவனை நேராகப் பார்த்துப் பவித்ரா வினவவும், சுதாகரிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

சும்மா ஒரு சமூக முறைமைக்காக வாங்கி வந்தால், என்ன கேள்வி கேட்டுவிட்டாள்! எதையும் தன் பணத்தை வைத்து எடை போடுகிற இவன் என்ன நினைப்பான் என்று தோன்றியபோது, எண்ணியதைத் துணிவோடு பேசும் மகளை அடக்க சுதாகரிக்கு மனமில்லை!

அதேசமயம், மகளுக்கும் அவனுக்கும் இடையே இந்தப் பேச்சு தொடர்வதும், அவளுக்குப் பிடிக்கவில்லை.

எனவே, தன் நெஞ்சில் கை வைத்து, “காட்பிராமிஸ், பிடிக்கும்மா!” என்று மகேந்திரன் கூறியதைக் கண்டு கொள்ளாமல், “பள்ளிக்கு நேரமாகிறது. இரண்டு பேரும் புத்தகப் பைகளை எடுத்து வாருங்கள்” என்று ஸ்கூட்டர் சாவியை எடுத்தாள் அவள்.



“நான் அவர்களைக் காரில் கூட்டிப்..” என்று அவன் தொடங்கியதையும் கவனியாதது போலவே காட்டிக் கொண்டு தன் வாகனத்தைச் சுதாகரி கிளப்ப, முடிந்தவரை தந்தையின் கண்ணுக்கு மறைவாகச் சென்று, ஸ்கூட்டரில் இயல்பாக ஏறிக்கொண்ட மகளைப் பார்த்து, அவன் மனம் இன்னமும் கலங்கியது!

பவித்ராவைப் போல ‘வருகிறேன்’ என்று கையாட்டக்கூட, அனிக்கு மனமில்லையே!

அதை விடவும், சுதாகரிக்கு ஏன் இந்த அலட்சியம்? வீட்டுக்கு வந்தவனை ‘வா’ எனவில்லை. உட்காரக்கூடச் சொல்லவில்லை. ஏன் வந்தாய் என்று, கேளாமல் கேட்பது போல!

அனியின் மனம் சரியாகும் வரை, அவள் இங்கே இருக்கட்டும் என்று சொன்னாள்தான்! ஆனால், அவனுடைய மகள், அவளது வீட்டில் இருக்கையில், அவளை எப்போது எப்படி அவன் வீட்டுக்குக் கூட்டிப் போவது என்பதோடு, அவளுக்கு ஆகும் செலவு பற்றியெல்லாம் அவர்கள் பேசியாக வேண்டாமா?

வேண்டா விருந்தாளியாக நிற்க வைத்துவிட்டுப் போய்விட்டாளே!

வருத்தமும், சங்கடமுமாக எண்ணமிடும்போதே, அவனுக்கு இன்னொன்று நினைவு வந்தது! அவன் நியாயமற்று, அவளைக் கேவலமாக குற்றம் சாட்டியது!

அதற்காகத்தான் இந்த அலட்சியமா? பழி வாங்குவதற்காகவா?

கை நிறைய ஏதோ கீரையோடு உள்ளே வந்த ரங்கநாதன், தன்னந்தனியே நின்ற மகேந்திரனைப் பார்த்ததும், “உட்காருங்கள் மகேந்திரன்! சுதாகரி இப்போது வந்து விடுவாள்” என்றுவிட்டுப் பின்னறைக்குள் சென்றார்.

வந்தேனும் ஒழுங்காகப் பேசுவாளா? யோசனையோடு வாயிலை நோக்கி உட்கார்ந்தால், கார் கண்ணில் பட்டு, அதுவும் சங்கடமாகத்தான் இருந்தது!

இந்தக் காரைக் காட்டியும், சுதாகரியைத் தப்பாகப் பேசியிருக்கிறான். தீப்தி இறந்த பிறகு ஏற்பட்ட பல கசப்பான அனுபவங்களின் விளைவு! தீப்தியே கிட்டத்தட்ட ஒரு மாதிரிதான்! ஆனால், வேறு மாதிரிப் பெண்களும் இருப்பார்கள் என்று அவனுக்கு என்ன தெரியும்? அவன் பார்த்த அவதாரங்கள், அப்படித் தான்!

ஆனால், சுதாகரி மட்டும் நியாயவாதியா? இல்லையே! அவளும்தான் நியாயமற்றும், வலிக்கவும் பேசி இருக்கிறாளே!

பிள்ளைகளைப் பள்ளியில் விட்டுவிட்டுத் திரும்பி வந்த பிறகும், சுதாகரி ஒன்றும் உருகி வழிந்து விடவில்லை!

அவள் வீட்டினுள் வரவும், அவளுக்காகக் காத்திருந்தவர் போல, ரங்கநாதன் வெளியே செல்லத் தயாராக வந்தார். “அரைமணி நேரத்தில் வந்து விடுகிறேன்மா! அப்புறமாக நீ கிளம்பலாம்!” என்று பெண்ணிடம் கூறியவர், மகேந்திரனிடம் ஒரு தலையசைப்புடன் வெளியே சென்றார்.

அவர் சென்றுகொண்டிருக்கும் போதே, “என்ன விஷயம்?” என்று சுதாகரி கேட்டாள், “அனியின் துணிமணி எடுத்து வந்தீர்களா?”

மற்றபடி நீ வரத் தேவையில்லை என்று குறிப்பாகச் சொல்லுகிறாளா? மகேந்திரனுக்குத் திகைப்போடு குன்றலாகவும் இருந்தது. அவனை, இந்த மாதிரி யாரும் நடத்திப் பழக்கம் இல்லை. அதோடு, இந்தத் துணிகள் விஷயம் அவனுக்கு நினைவில் இருக்கவும் இல்லை. அத்தையை அனுப்பிவிட்டால், அனி தானாக வீட்டுக்கு வந்து விடுவாள் என்றுதானே எண்ணியிருந்தான்!

“அதில்லை.. அவளைக் கூட்டிப் போவது பற்றி..” என்று இழுத்துப் பேசியவன் சட்டெனச் சுதாரித்தான். சின்னப் பையன் போல, இது என்ன தடுமாற்றம்? நாலு நூறு மனிதர்களை வைத்து வேலை வாங்குகிறவனின் பேச்சா, இது?

தொண்டையை லேசாகச் செறுமி, குரலையும் சீர்படுத்திக் கொண்டு, சற்று அழுத்தமான குரலில் அவன் தொடர்ந்தான். “அத்தையை அனுப்பிவிட்டேன். அதனால், அனியைக் கூட்டிப் போய்விடலாம் என்று நினைத்து வந்தேன். ஆனால், அவள் என்னையும் தப்பாக எண்ணுவதால், நீங்கள் சொன்னது போலச் சில தினங்கள் இங்கே இருக்கத் தான் நேரும் என்று தெரிகிறது! தேவையான துணிகளைக் கொண்டு வந்து தருகிறேன். நீங்கள் அவளுக்குத் தங்கும் இடம்

தருவதே பெரிது! அதற்குமேல், அவளது உணவுக்கு எவ்வளவு ஆகும் என்று சொன்னால்..”

“நாங்கள் இங்கே உணவு விடுதி நடத்துவதாக, உங்களுக்கு யார் சொன்னார்கள்?”

அவள் பேசிய விதம் எரிச்சலூட்ட, “எந்தவிதமான உரிமையும் இல்லாத இடத்தில், என் மகளை ஓசிச் சாப்பாடு சாப்பிட விட்டுவிட்டு, நான் எப்படிச் சும்மா இருக்க முடியும்?” என்று, அவன் முழுதாகக் கேட்டு முடிக்கு முன்பே, “முடியாவிட்டால் கூட்டிப் போங்கள்!” என்று அவனுக்கு பதில் கொடுத்தாள், அவள்.

என்னமாய் அடிக்கிறாள்!

இப்போதைக்கு அனி இங்கிருந்து வரமாட்டாள். அவளை வலுக்கட்டாயமாகக் கூட்டிப் போவது, ரொம்பவே ஆபத்து! தெரிந்து வைத்துக் கொண்டே குத்துகிறாள்! கட்டிப் போட்டு விட்டு அடிப்பது போல!

செய்கையற்ற கோபத்துடன் மகேந்திரன் ஆத்திரமாகப் பார்க்கவும், “ஆனால், உங்களுக்கு முதலில் இருந்தே அதே எண்ணம்தான், இல்லையா?” என்றபடி, அலமாரியில் வைத்திருந்த வரவு செலவுக் கணக்கு நோட்டை எடுத்து, அதனுள் அப்படியே வைத்திருந்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளையும் எடுத்துக் காட்டினாள் சுதாகரி. “மகளோடு கூட விளையாடும் ஒரு சின்னப் பெண்ணுக்கு இங்கே உண்ணக் கொடுப்பதே, ஏதோ ஒரு வகை லாபத்துக்காகத்தான் என்கிற எண்ணம்! ஆனால், ஒன்று.. இரக்கம், பரிவு, பாசம் இதெல்லாம் புரிவதற்கு, அவரவர்க்குள்ளும் கொஞ்சம் இருக்க வேண்டுமே!”

அன்றையப் பேச்சுக்காகத்தான்! ஒரு பேராசைக்கார அதிகப் பிரசங்கியை மண்டையில் குட்டி, அடக்கி வைப்பதுதான் சரி என்று அன்று பேசியது, இன்று, அவனையே குன்ற வைத்தது.

“என்னை மன்னிக்க வேண்டும், சுதாகரி!” என்று, தன் பிழையை நேர் செய்கிறவனாகச் சட்டெனப் பணிந்தான் அவன். “தீப்தி.. என் மனைவி இறந்தபிறகு, பெண்களால் மிகவும் கஷ்டப்பட்டவன் நான்! என்னிடம் மயங்கியதாகச் சொன்னால் வேறு மாதிரியாகிவிடக் கூடும் என்று எண்ணினார்களோ, என்னவோ… கிட்டத்தட்ட எல்லோருமே, கீறல் விழுந்த கிராமஃபோன் ரிக்கார்டாக ‘அனிக்கு அம்மா தேவை. அதனால்..’ என்று ஒரே பாட்டைத்தான் பாடினார்கள்! உன் பணத்தில், வசதியில்.. ஆசை என்று சொல்லியிருந்தால் கூட, ஏதோ உண்மை சொன்னார்கள் என்ற ஆறுதலேனும் இருந்திருக்கும்! அதிலும் அன்று.. ரொம்பவும் வெறுத்து வந்தபோது நீயும், சாரி.. நீங்களும் அதையே சொல்லவும், என்னடா வேஷம் என்று கொதித்து விட்டது! சாரி.. அன்றைய பேச்சுக்குத் தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்!”

“ஐயோ, இப்படிக் கேட்டால் என்ன செய்வது? போகட்டும் விடுங்கள்” என்று, சிறு சங்கடத்துடன் சன்னமாய் முறுவலித்தாள் சுதாகரி. “ஆனால், மெய்யாகவே எனக்கு உங்கள் பணத்தின் மீது ஆசையில்லை. அதை மனதார நீங்களும் ஒப்புக் கொள்வதனால், இதைத் திருப்பி வாங்கிக் கொள்ளுங்கள்! இன்னும் தருகிற

எண்ணத்தையும் விட்டுவிடுங்கள்!" என்று இரண்டு பண நோட்டுகளையும் அவனிடம் நீட்டினாள்!

"ஐயோ, இப்படிச் சொன்னால் என்ன செய்வது?" என்று அவளைப் போலவே அவனும் கூறவும், அவளுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது!

கூடவே வியப்பும்! அவள் அன்னிய ஆண்களிடம் சிரித்துப் பேசுவதில்லையே.. கூடியவரை அவர்களைத் தவிர்ப்பதுதான் வழக்கம்!

சுதாகரியிடம் பணத்தை வாங்கிக் கொள்ள, மகேந்திரனுக்குச் சற்றும் விருப்பம் இல்லை, அவன் பார்த்த அளவில், தேவைக்குரிய பொருட்கள் தவிர, அழகுக்கு, ஆடம்பரத்துக்கு என்று அந்த வீட்டில் எதுவும் இருக்கவில்லை. அதாவது, அவளது வருமானம் கணக்குப் பார்த்துச் செலவிடும் அளவு சாதாரணம் என்றே, அவனுக்குத் தோன்றியது. அதைப் போய் அவனுடைய மகளுக்குச் செலவு செய்ய வைப்பது என்றால், அவனுக்கு முரண்டியது!

அவனது தயக்கத்தைக் கவனித்து, "பாருங்கள் மகேந்திரன்! இந்தப் பணத்தை எதிர்பார்த்து, உங்கள் பெண்ணுக்கு நான் எதையும் செய்யவில்லை! இதை நான் அனியிடமே கொடுத்து அனுப்பியிருப்பேன்! ஆனால், அதனால் அவளுக்குப் புதிதாக ஏதேனும் பிரச்னை வந்துவிடுமோ என்ற பயம் எனக்கு. அவள் பாட்டியிடம் கொடுத்தால், அது உங்களை வந்து சேருமா என்று சந்தேகம்! என்றேனும் திருப்பிக் கொடுத்து விடுவதில் மட்டும் நிச்சயமாக இருந்தேன்! இப்போது நீங்கள் இதை வாங்கிக் கொள்ளவில்லை என்றால், நீங்கள் நோட் புக்கில் வைத்தது போல, நான்... நான் உங்கள் காரின் வைப்பரில் சொருகி வைத்து விடுவேன்! அதை எடுத்துக் கொள்வதோ, காற்றில் பறக்க விடுவதோ, உங்கள் விருப்பம்" என்று தெளிவாகவும், தீர்மானமாகவும் சுதாகரி கூறவும், அதற்கு மேல் மறுக்காமல், அவன் பணத்தை வாங்கிக் கொண்டான்.



உள்ளூர வேறு யோசனை ஓடியது. ஒருவேளை, இந்தத் தீர்மானமான பேச்சுதான், இவளுடைய கணவனை, இவளிடம் இருந்து, பிரித்து விரட்டி விட்டதோ? மனைவியின் நிமிர்வு, எத்தனை ஆண்களுக்குப் பிடிக்கும்?

அவனுக்குப் பெண்களிடம் மதிப்பு இல்லாதது போல, இவளுக்கும் ஆண்களிடம் வெறுப்பு ஏற்பட, என்னென்ன நடந்ததோ?

பவித்ராவுடைய அப்பாவைப் பேச்சில் கூடக் காணோமே! ஆனால், அது அவன் விஷயம் அல்ல! அவனுக்கு அனிதான் முக்கியம்!

பணத்தைப் பைக்குள் வைத்துக் கொண்டு, “இப்போது என்ன செய்வது, சொல்லுங்கள்? அத்தையை அனுப்பியது மட்டும் அனிக்குப் போதாது போலிருக்கிறதே!” என்று கவலையுடன் கேட்டான் அவன்.

“ஆமாம்!” என்றாள் அவளும், “பாட்டியால், உங்கள் மீதும் அவளுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லாமல் போய்விட்டது! அதோடு பாட்டி இல்லாததால் மட்டுமே, உங்கள் வீட்டில் எல்லாம் சரியாகிவிட்டதாகவும் சொல்ல முடியாது! அனியைப் பராமரித்துக் கவனிக்க ஆள் வேண்டும். தயவு பண்ணித் தவறிக்கூட, மீண்டும் தப்பாக நினைத்துவிட வேண்டாம்! உரிய தகுதிகளோடு கூடிய ‘கவர்னஸ்’ யாரையாவது நியமித்துவிட்டு, அவளை, அங்கே கூட்டிப் போங்கள்! அதுவரை, அவள் பவியோடு இங்கே இருக்கட்டும்! அதற்குள், உங்களிடமும், அவள் மனம் மாறிவிடும் என்று நம்புவோம். அத்தோடு..” என்று உள்ளே சென்று, ஒரு சிறு பொட்டலத்தைக் கொணர்ந்து, அவனிடம் கொடுத்தாள். “இதில் அனி அணிந்திருந்த நகைகள் இருக்கின்றன. இந்த வயதில், பள்ளி போன்ற இடங்களுக்கு இவற்றை அணிவித்து அனுப்புவது நல்லதல்ல. பவி போல, சருமத்துக்குக் கெடுதல் செய்யாத பிளாஸ்டிக் பொருட்களைப் போட்டு விட்டிருக்கிறேன். இங்கிருக்கும்போது, அது போதும்” என்று முடித்தாள்.

எதற்கும் மாறு சொல்ல வழியில்லை!

ஆனால், என்னதான் இந்தக் குடும்பத்தில் எல்லோரும் அனியிடம் அக்கறை காட்டினாலும், அவன் வீட்டில் உள்ள ஏ.சி போன்ற வசதிகள், இங்கு கிடையாதுதானே? ஃபோம் மெத்தை இல்லாமல், தரையில் படுக்க நேரும்! இதையெல்லாம் இவளிடம் சொல்லவும் முடியாது!

ஒரு மாதிரி, தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பது போல, இந்த அளவு, அவனுடைய மகளிடம் அன்பு காட்டுவதே பெரிய விஷயமாக இருக்கையில், இதில்லை.. அதில்லை என்பது சரியில்லை! அதோடு, உடனே முகத்தில் அடித்தாற்போல, அப்படியானால், கூட்டிப் போங்கள் என்று இவள் சொல்லிவிட்டால், இன்னமும் பிரச்னை! சொல்கிறவள் என்றுதான் காட்டிவிட்டாளே!

யோசித்தபடி மகேந்திரன் அமர்ந்திருக்கையில், “நீங்கள் காலையில் சீக்கிரமாகக் கடைக்குப் போய் விடுவீர்கள் என்று, அனி சொல்வாளே!” என்றாள் சுதாகரி!

இன்னும் இருந்தால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியே விடுவாள் போல!

“இல்லை, ஆமாம்! இந்த ஊரில், நீங்கள் சொன்ன மாதிரி ‘கவர்னஸ்’ கிடைப்பது அரிதல்லவா? அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்! எப்படியாவது தேடிக் கண்டுபிடிக்கிறேன்! இப்போது..” என்று மகேந்திரன் கிளம்ப எண்ணியபோது, சற்றே ஒதுக்கி நிறுத்தப்பட்டிருந்த அவனது காரின் பின்னே, ஒரு லாரி வந்து நின்றது!

அதிலிருந்து குதித்து இறங்கிய துரைப்பாண்டியன், ஒரு வாழைக்குலையை அநாயாசமாகத் தூக்கி வந்து, வீட்டின் உள்ளே வைத்தான்.

சுதாகரியைப் பார்த்து வாய் நிறையச் சிரிப்போடு, "மண்டிக்குப் போட எடுத்தாந்தேன், மேடம்! அப்படியே, உங்களுக்கும் ஒன்று கொண்டு வந்தேன்!" என்று அவன் பெருமையாகக் கூறவும், சுதாகரிக்கும் மிகவும் சங்கடமாகிப் போயிற்று.

'நம்ம வயலிலே விளைஞ்சது! சூப்பர் ருசியாக இருக்கும்' என்று எதையாவது தூக்கிக் கொண்டு, துரைப்பாண்டியன் வருவதும், 'இப்படிக் கொண்டு வராதீர்கள்' என்று சுதாகரி மறுத்து, இயன்றவரை திருப்பி அனுப்புவதும் அவ்வப்போது நடப்பதுதான்!

ஆனால், இப்போது மகேந்திரன் இருக்கும் நேரத்தில் வந்தது, செய்வது அறியாது அவளைத் திகைக்க வைத்து விட்டது. இப்போது மறுத்தாலும் நடிப்பாகத் தோன்றும். அதற்காக ஏற்பதும் தவறு. அப்புறம், துரைப்பாண்டியை அடக்கி வைப்பது, மிகவும் கடினமாகிவிடும்! அதோடு, மகேந்திரன் கொடுத்த பணத்தை திருப்பிக் கொடுத்ததே, வெறும் நாடகம் போலத் தோன்றும்!

ஒருவரிடம் ஓசியே பெறும்போது, செய்த செலவுக்கான பணத்தை வாங்கிக் கொள்வதில் மட்டும் என்ன பெரிய அலட்டல் என்று தோன்றாதா?

அவசரமாக யோசித்து, "இந்த மாதிரி வாழைக் குலையெல்லாம், எனக்குச் சரிப்படாது, துரைப்பாண்டியன். அதனால், திருப்பி எடுத்துப் போய்விடுங்கள்!" என்றாள், அவள். அப்படி, அவன் கொண்டு போய்விட்டால், அவன் அதை, அவளிடம் விற்கக் கொண்டு வந்தது போலத் தோன்றிவிடும்!

இதை ஒப்புக் கொண்டு, உடனே போய் விடுகிறவன் துரைப்பாண்டியன் அல்லதான்! ஆனாலும், அப்படிப் போய்விடமாட்டானா என்று ஓர் அற்ப ஆசை! ஆனால், அவள் அஞ்சியது போலவே, "நல்ல கற்பூர வாழை, மேடம்! பழுக்கப் பழுக்கச் சாப்பிடலாம்! நாளாக நாளாகத் தோல் காயுமே தவிர, அழுகாது. பிள்ளை, பெரியவருக்குக் கொடுத்து நீங்களும் நல்லாச் சாப்பிடுங்கள்!" என்று வீட்டுக்காக மட்டுமே கொண்டு வந்தான் என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கினான் அவன்!

வேறு வழியின்றி, "பாருங்கள் துரைப்பாண்டியன், இந்த மாதிரியெல்லாம் எதையும் எடுத்து வரவேண்டாம் என்று உங்களிடம் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். தயவு பண்ணித் திருப்பிக் கொண்டு போய்விடுங்கள்!" என்று, சற்று அழுத்தமான குரலில் கூறினாள் அவள்.

"இல்லை, மேடம்... கொஞ்சம் சாப்பிட்டுப் பாருங்கள். அப்புறம் நீங்களே.."

இவன் பேசிக் கொண்டே இருப்பான்!

வெளியே தெரியாத ஒரு நெடுமூச்சுடன், 'ஒரே ஒரு சீப்புப் பழம் மட்டும் வையுங்கள். அதற்கு மேல், தயவு பண்ணி வேண்டாம். எப்படியும் கெட்டு வீணாகி விடும்!"

பேச்சினூடே தலையை இப்படியும், அப்படியுமாகத் திருப்பி மகேந்திரனை வெறித்துப் பார்த்தவாறு இருந்த துரைப்பாண்டியன்.. சட்டென "சார் யாரு?" என்று நேரே கேட்டுவிட்டான்.

தயக்கமின்றி... அல்லது விரும்பியே சொன்னானோ? மகேந்திரனின் பதிலில், சுதாகரி மனம் குன்றிப் போனாள்..

## அத்தியாயம் – 10



**சு**தாகரியின் வீட்டினுள், ஒரு வேற்று ஆண்மகனைப் பார்த்ததும், துரைப் பாண்டியனுக்கு ஒரே ஆச்சர்யம்! அதுவும், அவன் நாற்காலியில் உட்கார்ந்தும் இருந்தான்!

சுதாகரியின் வீட்டில், வேற்று ஆண்கள் யாரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து, துரைப்பாண்டியன் பார்த்ததே கிடையாது!

ஏன்? இரண்டு ஆண்டுகளாகத் தாயாய், பிள்ளையாகப் பழகுகிறான்! அவனையே, சுதாகரி உட்காரச் சொன்னது கிடையாது! ரங்கநாதன்தான் எப்போதேனும் ஒருமுறை அருகில் அமர்த்திப் பேசுவார்! அதுவும், அவர் தனியே இருக்கையில்தான்!

அந்த அளவுக்கு அவள் நெருப்பு என்பது, அவனுக்குத் தெரியும்! மிக நன்றாகவே!

ஆனால், இப்போது.. யார் இவன்?

வயதும், அப்படி ஒன்றும் அதிகமாகத் தெரியவில்லை!

துரைப்பாண்டியன், மகேந்திரனை வெறித்துப் பார்த்ததும், அவன் யார் என்று கேட்ட விதமும், கொஞ்சம் நாகரீகம் அற்றதுதான்.

இதுவே பெண்ணாக இருந்திருந்தால், 'பழகியவர்கள், துரைப்பாண்டியன்! உங்களுக்குத் தெரியாது' என்றுரைத்து, அத்தோடு முடித்திருப்பாள் சுதாகரி.

ஆனால், ஆணான மகேந்திரனைத் தனிப்படத் தெரிந்தவனாகக் காட்ட அவளுக்கு மனமில்லை. எனவே, “இவர் பெண், என் மகளோடு படிக்கிறாள்” என்றாள் சுருக்கமாக.

இருவருக்கும் அறிமுகம் செய்து வைப்பதுதான் நாகரீகம். ஆனால், பேச்சை வளர்க்க மனமின்றி அவள் சும்மா இருக்க, அதைக் கவனியாதவன்போல, மகேந்திரன் தன்னைத் தானே அறிமுகம் செய்துகொண்டான்.

பேச்சில் ஒரு விநாடித் தொய்வுகூட நேராமல், அவளைத் தொடர்ந்து, “என் பெயர் மகேந்திரன்” என்று அவன் சொன்ன விதம், இப்படி ஒரு வாய்ப்புக்காகக் காத்திருந்தானோ என்று அவளை எண்ண வைத்தது!

சிறு வியப்புடன் அவள் நோக்குகையில், “டவுனில், பெரிய பஜாரில், துணிக்கடை வைத்திருக்கிறேன்! கடையின் பெயர், ‘இந்திரதனுசு’!” என்று கூறிய மகேந்திரனின் பார்வை அவள் முகத்தில் படியவும், சுதாகரியின் ஐயம் தீர்ந்து போயிற்று!

தானாகத் தம்பட்டம் அடிப்பதுபோல இல்லாமல், இதைச் சொல்லும் வாய்ப்பைத் தேடிக்கொண்டே இருந்திருக்கிறான்!

“அடேயப்பா! அந்தக் கடையாங்க? ரொம்ப பெரிசாச்சுதே! நாலோ, அஞ்சோ மாடியில்லை?” என்ற துரைப்பாண்டியனின் பேச்சு, அவளது காதுகளில் ஏதோ வெற்று இரைச்சலாகக் கேட்டது!

இந்திரதனுசு இவனது உடைமை என்றால், அன்று அந்தக் கடையின் முதலாளியாகவே, அவளுக்கு உதவ, அவன் முன் வந்திருக்க வேண்டும்!

அவளை உணர்ந்தவன் போல, அவனது சன்னமான புன்னகையும், போகட்டும் விடு என்பது போன்ற லேசான தலையசைப்பும், அவளது விரிந்த கண்களில் பட, சுதாகரியின் முகம் சூடாயிற்று.

அதென்ன, கூட இருப்பவன் அறியாமல், அவளிடம் குறிப்புக்காட்டல்? சரியே இல்லை!

சுதாகரியின் எண்ணங்களைப் பற்றி அறியாமல், இந்திர தனுசு என்றால் என்னவென்று, பொருள் கேட்டான் துரைப்பாண்டியன்.

“இந்திரதனுசு என்றால், தேவேந்திரனின் வில் என்று அர்த்தம். தேவேந்திரனின் வில்தான் வானவில் என்பார்கள். என் பெயர் மகேந்திரன் அல்லவா? அதனால் பொருத்தமாக, இப்படிப் பெயர் வைத்தார் அப்பா. வானவில்லில் பல வண்ணங்கள் இருப்பது போலக் கடையில் பல நிறங்களில் துணிகள் இருப்பதாகக் குறிப்பு!”

“ஓகோ! அப்ப, இது உங்கள் அப்பாரு வச்ச கடை என்று சொல்லுங்கள்!”

“எல்லா அப்பாக்களும், அவரவர் பிள்ளைகளுக்கு ஏதாவது செய்வதுதானே?”

“செய்றதுதான்! எங்க அப்பாருகூட, நாலு வயல் வாங்கி வச்சிட்டுதான் மேலே போனாரு! நான், என்னா பண்ணினேன்? அப்படியே, சுத்திச் சுத்தி இருந்த துண்டு நிலங்களை வாங்கி, ரெண்டு பங்கு பெரிசாக்கிட்டேன். இப்பப் பாருங்க” என்று கற்பூர வாழைக் குலையைக் காட்டிச் சொன்னான். “வாழையிலே ரெண்டு பெரிய ரூபா லாபம்! சாரும், அப்படி ஏதானும் செய்திருப்பீங்க! பண்ணினீங்கதானே? நீங்க என்ன செய்தீங்க?”

இந்தக் கிராமத்து மைனர், தன்னைக் குறைத்துக் காட்ட முயற்சிக்கிறானோ என்று மகேந்திரனுக்குத் தோன்றியது!

சுதாகரியின் பார்வையில் அவனை உயர்த்திக் கொள்ளவா?

ஏனோ சிரிப்பு வந்தது அவனுக்கு! ‘அவள் வீட்டுக்கு எத்தனை காரு, பைக் வருகிறது’ என்ற அத்தைக்கு, இந்த லாரி பற்றித் தெரியாது போலும்! தெரிந்திருந்தால் சொல்லியிருப்பாள்!

முறுவலித்து, “ஏதோ கொஞ்சம் செய்திருக்கிறேன்! விற்பனைத் தளங்களை, ஐந்து அடுக்காகப் பெருக்கியிருக்கிறேன். வேறு தொழில்களிலும் முதலீடு செய்திருக்கிறேன். ஆனால், அந்தக் கணக்கெல்லாம், என் ஆடிட்டருக்கும் எனக்கும் மட்டுமான ரகசியம்!” என்று நகைத்தான் அவன்.



அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ள முடியாமல் சற்று திகைத்துவிட்டு, “அதாவது, எங்ககிட்டே எல்லாம் சொல்லமாட்டேன் என்கிறீங்க! போகட்டும்! ஏதோ, ஊர் உலகம் செழிப்பா இருந்தால், நமக்குச் சந்தோஷம்தான்! அப்போ, நான் கிளம்புகிறேன், மேடம்! நீங்களும் கிளம்புகிற நேரம்...” என்று மகேந்திரனைப் பார்த்து இழுத்தான், துரைப்பாண்டியன்.

மகேந்திரன், அவளது வீட்டில் உட்கார்ந்திருப்பது, சுதாகரிக்குப் பிடிக்கவில்லைதான். ஆனால், துரைப்பாண்டியன் இல்லாத உரிமையை எடுத்துக் கொண்டு, அவளது வீட்டுக்கு வந்தவனைக் கிளப்ப முயற்சிப்பது, இன்னமும் அதிகமாகப் பிடிக்காமல் போயிற்று!

அவள் வீட்டு விவகாரத்தில், இவன் என்ன தலையிடுவது? அதோடு, அவளுக்கும் சின்னதாக ஒரு கடமை பாக்கி இருந்தது!

“நீங்கள் கிளம்புங்கள், துரைப்பாண்டியன்... ஒரு நிமிஷம்! ஒரு சீப்பும் பழம் தவிர, மற்றதை எடுத்துப் போகச் சொன்னேனே!” என்று கத்தியை எடுத்து வந்து கொடுத்தாள் அவள்.

“என்ன மேடம்! மறந்துவிடுவீங்கன்னு பார்த்தா, கத்தியையே கொண்டுவந்து, தந்துவிட்டீங்களே!” என்று குறைப்பட்டபடி, பெரிய பழங்களாக இருந்த, மேல் சீப்புப் பழத்தை அறுத்து வைத்தான் அவன்.

கோணிப்பை ஒன்றைக் கொண்டு வந்த சுதாகரி, “தாரை, இதில் வைத்து எடுத்துப் போங்கள். பழம் வெட்டிய இடத்துச் சாறில், உடை வீணாகிவிடப் போகிறது” என்று கோணியைக் கொடுத்துவிட்டுக் கத்தியை உள்ளே எடுத்துச் சென்றாள்!

“அதுதாங்க, நம்ம மேடம்! எல்லாவற்றிலும் கவனம், அக்கறை இருக்கும்! வாழைக்கறை பட்டு, அடுத்தவங்க துணி வீணாகிவிடும் என்று எத்தனை பேர் நினைப்பார்கள்?” என்று பெருமிதமாகக் கூறியபடி, வாழைத்தாரைக் கோணியால் சுற்றினான் துரைப்பாண்டியன்.

அவன் ஒரு வழியாகக் கிளம்பவும், உடனேயே, “அன்று ‘இந்திர தனுசி’ல் உங்களைத் தவறாக நினைத்துப் பேசிவிட்டேன். ஸாரி!” என்று வருத்தம் தெரிவித்தவள், தொடர்ந்து கேட்டாள்.. “ஆனால், உங்கள் கடையில், நிறையப் பணியாட்கள்! விற்பனைப் பிரிவில் போலவே, பில் போட உதவுவதிலும் நிறைய ஆட்கள். நான் வெகு நேரமாக நிற்பதைக் கவனித்ததுமே, யாரையாவது சொல்லாமல் நீங்களே ஏன் வந்தீர்கள்?”

அப்படிக் கடையின் அடையாள அட்டை மாட்டிய யாராவது வந்திருந்தால், அவள் அந்தத் தவறு செய்ய நேர்ந்திராதே!

“சொல்லியிருக்கலாம். ஆனால், கிட்டத்தட்ட எல்லோருமே, வேலை செய்து கொண்டு.. அதிகம் வாங்கியவர்களுக்கு உதவிக் கொண்டு இருந்தார்கள்..”

“அப்படியானால், காசுக் கணக்குதான் முக்கியமா?”

“அதுவும் முக்கியம்தான். அத்தோடு, அதிகம் வாங்கியவர்கள், தேர்ந்தெடுப்பதில் அதிக நேரம் செலவிட்டுக் களைத்திருப்பார்கள்! ஒட்டகத் துரும்பு போல, பில் போடக் காத்திருக்கும் நேரம் அந்த வாடிக்கையாளர் மனதில் வெறுப்பேற்றும்! அது வியாபாரத்துக்கு நல்லதல்ல! அதோடு, எல்லாப் பணியாளர்களும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கையில், அவர்களுள் ஒருவனைக் கூப்பிட்டு ஒன்று சொன்னால், ஏதோ அவனைத் தனிப்படக் கண்டிப்பது போன்று தோன்றிவிடும்! அதுவும் சரியில்லை! ஆனால், நான் உங்களிடம் பேசியதைக் கண்டதும் தானாகவே ஒருவன் ஓடி வந்துவிட்டான்தானே?”

கோவையாக அவன் இயம்பியபோது, எல்லாம் சரியாகத்தான் தோன்றியது. விற்பனைத் தளங்களை அவன் ஐந்து அடுக்காக மாற்றிய சூட்சுமமும் கொஞ்சம் புரிந்தது. கடை வைக்கும்போது, விற்பனையைப் பெருக்கி வளர்க்க இதையும் மனதில் வைத்திருக்க வேண்டும்!

“இதெல்லாம் தெரியாமல் கடுமையாகப் பேசிவிட்டேன்..” என்று, மறுபடியும் வருத்தம் தெரிவித்தாள் அவள்.

தலையசைத்து, “விட்டு விடுங்கள்” என்றான் அவன். “அழகாக இருப்பதால், ஆண்களைத் தவறாக நினைக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் உங்களுக்கும் நிறைய நேர்ந்திருக்கலாம்! அதேபோல நானும் மிக மோசமாக உங்களைப் பேசினேன்தானே? இரண்டையும், நீயும்… மறுபடியும் ஸாரி, மிகவும் சின்ன வயதாகத் தோன்றுவதால், சட்டென ஒருமையில் பேச வந்து விடுகிறது! அந்தக் கசப்புகளை, நாம் இருவருமே மறந்துவிடலாம்” என்று முறுவலித்தான் மகேந்திரன்.

மறந்து, சுதாகரி நட்பாகப் பழகுவாள் என்று அவன் எதிர்பார்த்திருக்கலாம்.

ஆனால், முகம் இறுகி, “வேறு ஒன்றும் இல்லையே?” என்று குறிப்பாக கடிகாரத்தைப் பார்த்தது, அவனுக்குத் திகைப்பாகத்தான் இருந்தது! சற்று கடுப்பாகவும்!

இவ்வளவு விளக்கத்தின் பின்னும், ‘போ’ என்கிறாளே! இருந்து வம்பளப்பதற்கு, அவனும் ஒன்றும் வேலை வெட்டி இல்லாதவன் அல்ல!

வீட்டுக்குச் சென்று மகளின் துணிமணி, பல் துலக்கும் பிரஷ், சீப்பு போன்றவற்றைச் சேகரித்து, கடைக்குச் செல்லும்போது கொடுக்க வந்தால், சுதாகரி கொள்முதலுக்குப் போய்விட, ரங்கநாதன் மட்டுமே வீட்டில் இருந்தார்.

அவரிடம் சுதாகரியைப் பற்றி கேட்கலாமா என்று தோன்றிய எண்ணம் உடனே மறைந்தது! அவன் விசாரித்தது சுதாகரிக்குத் தெரிய நேர்ந்து, ‘மகளைக் கூட்டிப் போய்விடு’ என்றாளானால், அது பெரும் பிரச்னையாகி விடும்! ‘நீ அவளைப் பார்க்க வராதே’ என்றாலும் அதே போலத்தான்.

இரண்டு விதமாகவும், அவள் சொல்லக் கூடியவளும் கூட.. எனவே, பெட்டியை அவரிடம் கொடுத்து புன்னகையோடு இரண்டு வார்த்தை பேசிவிட்டுக் கிளம்பிப் போனான் அவன்.

அன்றிலிருந்து, கடைக்குக் கிளம்பும்போது, திரும்பி வரும்போது, உணவு இடைவேளையின்போது என்று ஏதாவது ஒரு நேரத்தில், சுதாகரியின் வீட்டுக்கு, மகேந்திரன் வரலானான். வரும்போதெல்லாம் சாக்லெட், ஐஸ்கிரீம் என்று எதையாவது வாங்கி வந்தான்.

அவன் வந்த காரணம், மகள்! தந்தை கெட்டவனில்லை என்று புரிந்து, அவனோடு வீடு திரும்புவதற்கு அனி தயாராக வேண்டும் என்பது அவனது நோக்கம்! ஆனால், தெருவுக்கே கேட்கும் அளவுக்கு அங்கே சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் அனி, தந்தையைக் கண்டதும், மிரட்சியோடு, சுதாகரியின் பின்னே மறைந்து விடுவாள்.

அன்றுபோல, முரட்டடியாகத் தன்னை இழுத்துப் போய் விடுவானோ என்ற பயம்! அங்கே கூட்டிப் போய்விட்டால், என்ன நடக்குமோ? அன்றைய ஒரு நாள் இரவு, அவள் மனதில் தந்தையை அரக்கனாக்கி வைத்திருந்தது!

இந்த அச்சத்தின் காரணமாக, அவள் முன்னிலும் அதிகமாக, சுதாகரியிடம் ஒண்டினாளே தவிர, அவன் விரும்பியது நடக்கவில்லை..!

அதோடு, நல்ல மதிப்பெண் வாங்குவது, அழகாக எழுதுவது, ஏவாமலே செய்யும் நல்ல செயல்களுக்காகப் பரிசாக என்று மட்டும் பவித்ராவுக்குக் கிடைக்கும் விருப்பப் பொருட்கள் உரிய மதிப்பை இழந்து போவது, சுதாகரிக்குப் பிடிக்கவில்லை!

ஆனால், அவன் எதற்காக இவற்றை வாங்கி வருகிறான் என்பது புரிந்ததால், தடுத்துச் சொல்வதற்கு அவளால் முடியாது போயிற்று! இப்படி அவன் அடிக்கடி வரும் வேளைகளில் பேச்சு வாக்கில் சுதாகரியின் தொழில், குடும்ப நிலவரம் பற்றி, மகேந்திரன் ஓரளவு அறிந்தான்!



கடை வைக்கும் யோசனையை அவன் பாராட்டினான். “தொழில் என்றால் வளர்ச்சியை மனதில் வைத்துக் கொண்டே இருப்பதுதான் சரி. இடம் பார்த்து விட்டீர்களா?” என்று விசாரித்தேன்.

“இரண்டு மூன்று இடம் பார்த்தோம். இப்போது, வீட்டு உரிமையாளருடைய மகள் வெளிநாட்டிலிருந்து திரும்பி, இங்கே வந்துவிடலாம் என்று கேள்வி. அப்படி நடந்தால், இந்த வீட்டைக் காலி பண்ண நேரும்! சும்மாவே, கடை வைக்கும்போது, அருகிலேயே வீடும் இருப்பது நல்லது என்பது சுதாகரியின் கருத்து. எனவே, வீடும் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்” என்றார் ரங்கநாதன்.

அதுபற்றி மகேந்திரன், சுதாகரியிடம் ஒரு யோசனை தெரிவித்தான்.

“வேறு வீடு பார்ப்பானேன், சுதாகரி? பேசாமல், என் வீட்டுக்கே வந்து விடுங்களேன்!” என்றான் அவன்.

‘என்ன பேச்சு இது?’ என்பதுபோலப் பார்த்துவிட்டு, “இல்லை. சரிப்படாது!” என்று சுருக்கமாக மறுத்தாள் அவள்.

“ஏனோ? யோசித்துப் பாருங்கள். சக்திநகர்க் குடியிருப்பில்தான் கடை போடப் போகிறீர்கள். என் வீடும் அங்கே தான் இருக்கிறது. உங்களோடேயே இருக்க முடியும் என்று அனியும் சந்தோஷப்படுவாள். எனக்கும் நிம்மதியாக...” என்று வற்புறுத்தினான் மகேந்திரன்.

அவள் தீர்மானமாகத் தலையசைத்து மறுக்கவும், “ஏன்?” என்று காரணம் கேட்டான் அவன்.

“தப்பாகத் தோன்றும்” என்றாள் அவள், மீண்டும் சுருக்கமாகவே.

“என்ன தப்பாக?”

பொறுமையிழந்து, “இதைத்தான் அசட்டு ஆண்பிள்ளைப் பேச்சு என்பது!” என்று கடுத்தாள் அவள். “நம் இருவரையும் பற்றித் தவறாகப் பேச மாட்டார்களா?”

“நான் அடிக்கடி வந்து போவது மட்டும்? அதைப் பேச மாட்டார்களா?”

“அப்படியானால் வராதீர்கள்!” என்றாள் முகத்தில் அடித்தாற்போல! ஒரு கணம் மலைத்து நின்றான் மகேந்திரன்.

பிறகு, “மகாபாரதத்து பீமனிடம் எத்தனையோ நல்லகுணங்கள். ஆனால், துரியோதனனை நாபிக்குக் கீழே அடித்துக் காலை உடைத்தான். நியாயமற்ற தாக்குதல்! அதை விடவும், எதிர்க்கும் சக்தியற்றுக் கீழே கிடந்தபோது, பீமன் அவன் மேல் ஏறிக் குதித்தானாம். உன் பேச்சும் அதுபோல! அனிக்காக, உன்.. உங்கள் வீட்டுக்கு நான் வந்தே ஆக வேண்டிய நிலை என்பது உங்களுக்குத் தெரியும்! இந்த நிலையில், கட்டிப் போட்டு அடிப்பது போல, இந்த பேச்சு, உங்களுக்குத் தகுதியில்லை, சுதாகரி! ஒன்றை நினைத்துப் பாருங்கள், தினமும் இரவில் களைத்துத் திரும்பி வரும்போது, எனக்கென்று யாருமே இல்லாத அந்த வீட்டுக்குள் செல்லும்போது, எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்கும்? நீங்கள் அங்கே வந்தால், எல்லாவற்றுக்கும் தீர்வு கிடைக்குமே என்று நினைத்தேன். நீங்களானால், என்னை இங்கேயே வராதே என்று விரட்டுகிறீர்கள்!” என்றான் வருத்தத்தோடு.

அப்போதைக்கு சுதாகரி எதுவும் சொல்லவில்லை.

ஆனால், அன்று அவன் விடைபெற்றுக் கிளம்பும்போது, “பவிம்மா! நீ ஏதோ புது வகையான ‘க்ளே’ வேண்டும் என்றாயே! நாளைக்கு வரும்போது, வாங்கி வருமாறு அங்கிளிடம் சொல்லியனுப்பு. அப்புறம் பணம் கொடுத்து விடலாம்!” என்று மகளிடம் சொன்னாள்.

சட்டென முகம் மலர, “என்னவென்று சொல், பவி! கட்டாயம் உனக்கும் அனிக்கும் சேர்த்து வாங்கி வருகிறேன்!” என்று அது பற்றிக் கேட்டுக் கொண்டு போனான் மகேந்திரன்.

அன்றிரவு..

பிள்ளைகள் தூங்கியபிறகு, வீட்டின் பின்புறம் இருந்த சிமெண்ட் பெஞ்சில், வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள் சுதாகரி.

ரங்கநாதன் கவனித்து, அவளிடம் வந்து, “என்னம்மா? என்ன யோசனை?” என்று விசாரித்தார்.

“அந்த மகேந்திரனைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன், பெரியப்பா! அவ்வளவு பெரிய வீட்டில் தனியாக.. வீட்டுக்கு வரும்போது, அவர் வருவது பற்றிச் சந்தோஷப்பட யாரும் இல்லாமல் இருப்பது பாவம் தான் இல்லையா?”

“ஆ.. மாம்மா! ரொம்பப் பாவமாகத்தான் தெரிகிறது...”

“பா..வம்தான்! ஆனால், எல்லாம் அவராக இழுத்துக் கொண்டதுதானே! முதலிலேயே அனியிடம் அன்பு காட்டி வளர்த்திருந்தால், அவள் அங்கே போகமாட்டேன் என்பாளா? எல்லாம் ‘இட்டாருக்கு, இட்ட பலன்’! நான் படுக்கப் போகிறேன், பெரியப்பா! குட்நைட்!” என்றுவிட்டு எழுந்து, வீட்டினுள் சென்றாள் சுதாகரி.

யோசனையோடு அவளைப் பார்த்தபடி நின்றார், ரங்கநாதன்.

## அத்தியாயம் – 11



**அ**ன்றிலிருந்து வெளியே தெரியாமல், ஒரு சில மாற்றம், சுதாகரியின் அந்தச் சின்ன வீட்டில் நிகழலாயிற்று!

பொதுவாக, மகேந்திரன் மகளைப் பார்க்க வரும் தருணங்களை, சுதாகரி அவ்வளவாகக் கண்டுகொள்ள மாட்டாள். பார்த்தால், "இப்படி சாக்லெட் வாங்கி வராதே.." என சொல்ல வேண்டி இருக்கும்! ஒதுங்கிப்போய், அவள் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால், அவன் பாடு, அவனுடைய மகளின் பாடு! உண்ணவோ, குடிக்கவோ ஏதாவது கொடுப்பதோடு சரி!

அவளது வேலைக்கு இடைஞ்சலாக அனி ரொம்பவும் ஒட்டினால், வேறு எதையாவது செய்கிற சாக்கில் விலகிப் போய் விடுவாள்.

ஆனால், இப்போது அப்படியின்றி, "அனி, நீ அப்பாவுக்குச் சுண்டல் கிண்ணத்தைக் கொண்டு போய்க் கொடு. பவி, தண்ணீரை எடுத்து வரட்டும்" என்று இருவரையுமாகச் சேர்த்து அவனிடம் அனுப்பினாள்.

"நேற்று வரைந்த படத்தை இருவரும், உன் அப்பாவிடம் காட்டுங்கள்!" என்று காட்டச் செய்தாள்.

"காலையில் பார்த்த குட்டி பூங்காவை, அப்பாவைக் கூட்டிப் போய்க் காட்டுங்கள்!" என்று மூவரையும் சேர்த்து, வெளியே அனுப்பினாள்.

"அவரவர் ஐஸ்கிரீமை, அவரவர் கையில் கொடுங்கள்" என்று அவனையும் ஏவினாள்.

அவளது விரிந்த நேர்ப் பார்வையில் இருந்த செய்தியைப் புரிந்து கொண்டு, மகேந்திரனும் ஏற்றபடி நடந்து கொண்டான்.

“ஆஹா! எனக்கு இரண்டு வெயிட்டர்களா? இந்தக் குட்டி வெயிட்டர்களுக்கு என்ன ‘டிப்ஸ்’ தரலாம்? ஆளுக்கு ஒரு கிஸ்?” என்று கொஞ்சினான்.

படங்களைப் பாராட்டினான்.

ஐந்தாறு பூச்செடிகளே இருந்த அவர்களது குட்டிப் பூங்காவை ஆடோ, மாடோ தின்று விட்டுப் போய் விட்டதே என்று அவர்களோடு சேர்ந்து வருத்தப்பட்டான்!

அதற்கும் அடுத்தபடியாக, “இருவரையும் காரில் கூட்டிப் போய் வருகிறேன்” என்று அழைத்துச் சென்று, இருவர் கைகளிலும் விளையாட்டுச் சாமான்களோடு திருப்பிக் கொணர்ந்து விட்டான்.

இந்த நேரம் அவன் வரக்கூடும் என்று பவித்ரா வாயிலில் நிற்க, உள்ளிருந்த வண்ணமே, அனியும் எட்டிப் பார்ப்பதைத் திருப்தியுடன் கண்டாள் சுதாகரி.

என்ன இருந்தாலும் ரத்த உறவு! விரைவிலேயே, தந்தையுடன் செல்வதற்கு, அனி தயாராகிவிடுவாள் என்று ஒருவிதத் திருப்தியுடன் எண்ணுகையில், தன்னையறியாமல் சுதாகரிக்குப் பெருமூச்சும் வந்தது!

இரட்டையர்கள் போல, இரு சிறுமியருக்கும் சேர்த்தே எல்லாம் செய்து பழகிவிட்டது. இனி ஒருத்திதான் இருப்பாள் என்றால், நெஞ்சுக்குள் கொஞ்சம் பிசையத்தான் செய்தது! ஆனால், அன்றாட வேலையில் சீக்கிரமே சரியாகிப் போகும் என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள் அவள்!

இந்நிலையில், அந்த வார விடுமுறையாக சனி, ஞாயிறு வந்தது! சனிக்கிழமை, மகேந்திரனுக்கு கடை இருந்ததால், மறுநாள் அவனோடு பிள்ளைகளை வெளியே அனுப்பினாள்.

மதிய உணவு செய்து தருவதாக அவள் சொன்னபோது, அன்றைய பொறுப்பு தன்னுடையது என்று சொல்லிவிட்டான் மகேந்திரன்.

சொன்னபடியே, காலையில் பிள்ளைகளை மேஜிக் ஷோ ஒன்றுக்கு அழைத்துப் போனவன், மதிய உணவைப் பெரிய ஹோட்டலில் வாங்கிக் கொடுத்தான். அங்கேயே சிறுவர் பகுதியில் சற்று நேரம் விளையாட விட்டுவிட்டு, சுமார் மூன்று மணியளவில், தூக்கம் கண்களில் சொக்க, இருவரையும் வீட்டுக்கு அழைத்து வந்தான் மகேந்திரன்.

பிள்ளைகளை தூங்க வைத்துவிட்டு, அவனுக்கு ஒரு கப் காபி கொண்டு போய்க் கொடுத்தாள் சுதாகரி.

“அப்பாடி!” என்று நெட்டி முறித்தவனிடம், “என்ன? பெரிய வேலையா? ரொம்பவும் போரடித்ததா?” என்று சிறு முறுவலுடன் வினவினாள்.

முகத்தில் ஆச்சர்யம் தோன்ற, “இல்லையில்லை” என்று மறுத்தான் அவன். “இவ்வளவு உற்சாகமாகப் பொழுது போகும் என்று நானே எதிர்பார்த்திருக்கவில்லை!” என்று சிரித்தான்.

“பிள்ளைகளை ரசிக்கக் கற்றுக் கொண்டால், அவர்களின் அழுகை கூட சங்கீதம்தான், கோபத் தோற்றமும் அழகிய சித்திரமே!” என்றாள் அவள் அனுபவப் புன்னகையோடு.

அவளது முகத்தைப் பார்த்தபடி, “உண்மைதான்!” என்றான் அவன், குரலிலும் ஆச்சர்யத்துடன்.

மகளைப் பற்றிய பழைய நினைவுகளில் மூழ்கி இருந்தவள், நிகழ்வுக்குத் திரும்பி, “அனியின் ஐந்து ஆண்டுகளை வீணாக்கி விட்டீர்களே!” என்று குறைப் பட்டாள்.

“உண்மைதான். ஆனால், இரட்டை இன்பமாகப் பவியும் சேர்ந்து கிடைத்திருக்கிறாளே!” என்றான் அவன் பதிலுக்கு!

இல்லையென்று சொல்ல முடியாது. இரண்டு சிறுமிகளும், சளசளவென்று பேச்சும் சிரிப்புமாக வளைய வருவதைப் பார்க்கையில், மிகவும் அழகாகத்தான் இருந்தது!

ஆனால், இது எத்தனை நாள்? அனி அவள் வீட்டுக்குப் போய்விட்டால், அதோடு நின்று விடும் தானே?



அவளது மனதைப் படித்தவன் போல, “அதனால்தான் எல்லோரும் அங்கேயே..” என்றவன், அவள் முகம் மாறவும், “இல்லையில்லை! ஒரு பேச்சுக்குச் சொன்னேன்! மற்றபடி வந்துதான் தீர வேண்டும் என்று உன்னை... மறுபடியும் ஸாரி, உங்களை நான் கட்டாயப்படுத்தவில்லை, சுதாகரி!” என்று அவசரமாகச் சொன்னான் மகேந்திரன்.

சமையல் அறைக்குள் ஏதோ செய்து கொண்டிருந்தார் போலும்.. வேலை முடிந்து வெளியே வந்த ரங்கநாதன், இவர்கள் இருவரும் பேசியதைக் கேட்டதன் அறிகுறியாக, “எப்படியும், சுதாகரி உங்களைவிட இளமைதானே, மகேந்திரன்? பேசாமல், நீ, வா, போ என்றே பேசுங்களேன்! சின்னப் பெண்ணாக இருக்கிறாளே என்ற உணர்வில் நீ என்பதும், உடனே மன்னிப்புக் கேட்பதும் எதற்கு? அனியுடைய அப்பாவாக இருந்துகொண்டு, அந்நியர் போல, அனாவசியமாக மரியாதையும் அவசியம் இல்லை. சும்மா, சுதாகரியை ஒருமையிலேயே கூப்பிட்டுப் பேசுங்கள்!” என்றார் அவர்.

“நீங்கள் சொல்லுகிறீர்கள், சார்! சுதாகரிக்கு என்ன அபிப்ராயமோ?” என்றான் மகேந்திரன், சந்தேகமாக!

மற்றவர்களிடம் தான் கடைப்பிடித்து வரும் தூரம் குறுகிவிடுமோ என்று சுதாகரிக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லைதான்! ஆனால், அந்த நேரத்தில், வெளிப்படையாக ஒன்றும் சொல்ல முடியாமல், “இதிலென்ன அபிப்ராயம்? எப்படிக்

கூப்பிட்டாலும் எனக்கு ஒன்றுதான்!" என்று அதில் ஒன்றுமில்லாததுபோலக் காட்டிக் கொண்டாள், அவள்!

அன்றிலிருந்து மகேந்திரன், சுதாகரியிடம் ஒருமையில் பேசலானான்! என்னவோ, அவளுக்கும் அது இலகுவாகப் பழகிப் போயிற்று.

இதேபோல, மகேந்திரன் தொடர்பாக இன்னொரு சந்தர்ப்பத்திலும், அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்காவிட்டாலும், சுதாகரி மறுக்க மாட்டாமல் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று!

அன்று ஒரு பந்த் தினம்! திடீர்க் கடையடைப்பு!

பிரதானக் கடை வீதியில் கலவரம் ஏற்பட்டால், கடைக்கு அதிகப் பாதிப்பு ஏற்படக் கூடும் என்று எண்ணிய மகேந்திரன், அன்றைக்கு கடைச் சிப்பந்திகளுக்கு லீவு கொடுத்துக் கடையை மூடிவிட்டு, வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.

அனி வீட்டை விட்டுச் சென்றதில் இருந்து, மகேந்திரன் வெளியேதான் சாப்பிடுவது. அன்று ஓட்டல்களில் எதுவும் தயார் பண்ணக்கூட மாட்டார்கள் என்பது நினைவு வர, அவசரமாக சென்று மூடிக் கொண்டிருந்த ஒரு கடையில் இரண்டு நூடுல்ஸ் பாக்கெட்டுகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான்.

சாதத்துக்குத் தொட்டுக் கொள்ள கீரையைத் தனியாக வைப்பதை விட, வேறு வடிவில் கொடுத்தால், இலகுவாக உள்ளே இறங்கும் என்பது, அவள் அனுபவத்தில் கண்டது! அன்று வல்லாரைக் கீரையை வெங்காயம், கறிவேப்பிலையோடு கடலை மாவுக் கலவையில் சேர்த்து, பக்கோடாவாக எண்ணெயில் இட்டுப் பொரித்து, சுதாகரி எடுத்துக் கொண்டிருந்தபோது, வீட்டு டெலிபோன் மணி அடித்தது!

எடுத்துக் கேட்டுவிட்டு, "அம்மா, அங்கிள் உங்களிடம் ஏதோ விவரம் கேட்க வேண்டுமாம்" என்று பவித்ரா அறிவித்தாள்.

"கையில் மாவும்மா! என்ன விவரம் வேண்டும் என்று நீயே கேட்டுச் சொல்லு!" என்றாள் சமையல் அறையில் இருந்த சுதாகரி உரக்க!

சொன்னபடி செய்துவிட்டு, "அம்மா, நூடுல்ஸை வேக வைத்தால் வேகவே மாட்டேன் என்கிறதாம்! கல்லு மாதிரிச் சேர்ந்து போகிறதாம்! என்ன செய்வது என்று அங்கிள் கேட்கிறார்!" என்றாள் பவித்ரா.

"தனியாக ஒரு கப் தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் சேர்த்து, தீயைக் கொஞ்சமாக வைத்து, மறுபடியும் வேக வைக்கச் சொல்லு!" என்று மகள் மூலம், மகேந்திரனுக்குச் சுதாகரி தெரிவித்தாள்.

சற்று நேரத்தில் மீண்டும் போன் வந்தது!

இப்போது, "அம்மா! நூடுல்ஸ் உறையின் மேல் போட்டிருப்பது போல காரட், பட்டாணி ஒன்றும் வரக் காணோமே என்று அங்கிள் கேட்கிறார்!" என்று கத்திச் சொன்னாள் பவித்ரா.

“அதெல்லாம் நாம்தான் வெட்டிச் சேர்க்க வேண்டும்” என்று சொன்ன சுதாகரிக்கு, மொழுக்கென்று வெறும் நூடுல்ஸை வைத்துக் கொண்டு விழிக்கும் மகேந்திரனை எண்ணுகையில் பாவமாக இருந்தது!

அதே தோற்றம், பவித்ராவுக்கும் தோன்றியது போலும்! “அம்மா, அங்கிள் பாவம்மா! அவரை இங்கேயே சாப்பிட வரச் சொல்லலாம்மா!” என்றாள் கெஞ்சலாக.

சந்தேகத்துக்கு எட்டிப் பார்த்தபோது, ரிசீவரின் வாயை மூடாமலே பவித்ரா பேசுவது தெரிந்தது! எல்லாவற்றையும், அவனும் கேட்டிருப்பான்! இனி, வேண்டாம் என்று எப்படிச் சொல்வது?

எனவே, இது நல்லதில்லை என்று தோன்றியபோதும், மகளிடமும் மறுக்க மாட்டாமல், மகேந்திரனை அங்கே உண்ண அழைக்க வேண்டியதாயிற்று! “அந்த நூடுல்ஸை, அப்படியே பாத்திரத்தோடு எடுத்து வரச் சொல்லு, பவி. இங்கே கொஞ்சம் காய்கறி வதக்கிப் போட்டுக் கலந்து சாப்பிடலாம்! அங்கே வீணாகி விடும்” என்றாள் அவள்.

மகேந்திரன் கொண்டு வந்த நூடுல்ஸை வாங்கி, அதிகப்படியாக இருந்த நீரை வடித்து, வதக்கி வைத்திருந்த காய்களைச் சேர்த்து அதையும் உண்ணுமிடத்தில் வைத்தாள் சுதாகரி.

“நிஜமாக, இது நான் கொண்டு வந்ததே தானா?” என்று மகேந்திரன் வியந்து கேட்டபோது, சுதாகரிக்கே சிரிப்பு வந்தது!



உணவு முடிந்ததும், ரங்கநாதன் சற்று நேரம் படுத்திருக்கப் போனார்.

சுதாகரி அடுப்படி ஒதுக்கும் வேலையில் ஈடு பட்டிருக்க, மகேந்திரனை கேரம் விளையாடக் கூப்பிட்டாள் பவித்ரா. “நீங்கள் வாங்கித் தந்த கேரம் போர்டு அங்கிள்.. அதனால், கட்டாயமா எங்களோடு விளையாட வரணும்!” என்றாள் அவள், கண்டிப்பான குரலில்.

அவளது காரண, காரியம் அவனுக்குப் புரிய வில்லைதான். ஆனால், அவள் ஆவலும் அதிகாரமுமாகக் கேட்ட விதம் பிடித்தது! கூடவே, அவனுடைய மகளின் கண்களிலும் ஆர்வம் இருக்கவும் மகேந்திரன் சந்தோஷமாக சம்மதித்தான்.

போர்டை எடுத்து வைத்து, இரு சிறுமியருமாகக் காய்களை அடுக்கினர்.

“நானும் அனியும் ஒரு செட்! நீங்கள் தனி! உங்கள் வயசு என்ன, அங்கிள்?” என்று பவித்ரா விசாரித்தாள்.

“முப்பது. ஏன்?”

"யார் யார் எத்தனை தரம் காயை அடிப்பது என்று கணக்குப் போடத்தான்!" என்று பவித்ரா விளக்கியபோது, அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

லேசாகப் புருவம் உயர்த்தி, "நான் விளையாடி ரொம்ப நாள் ஆகிவிட்டதால், ஆட்டம் மறந்து விட்டது போல! என் வயதுக்கு, காயை எத்தனை தடவை அடிப்பது?" என்று மகேந்திரன் வினவினான்.

"நிஜமாகவே, அப்பாவுக்கு விளையாட்டு தெரியலை!" என்று தோழியின் காதுக்குள் பகிரங்க ரகசியம் பேசினாள் அனிஷா. "இப்ப, எப்படி விளையாட?"

"அங்கிளுக்கு நான் சொல்லிக் கொடுக்கிறேன், அனி! சீக்கிரமாகக் கற்றுக் கொள்வார். அங்கிள், நாங்கள் ரெண்டு பேரும் சேர்ந்து பத்து வயசு! சரியா?"

"நீ சொன்னால், சரிதான்மா!" என்றான் அவன் பணிவாக.

"ம்ம்ம்.. எப்படியும் சரிதான்! இப்போது, உங்களுக்கு முப்பது வயதுன்னால், எங்களை மாதிரி... பத்து, இருபது... முப்பது! மூன்று தடவை! மூன்று மடங்கு இல்லையா? அப்படின்னால், உங்களுக்கு மூன்று தடவை அதிகமாக, நாங்கள் காய் அடிப்போம்! புரியுதா?"

பவித்ரா கணக்கிடுவதை உள்ளூர ரசித்தபடி, "இல்லையேம்மா!" என்று ஒன்றும் புரியாதவனைப் போலக் கையை விரித்தான் மகேந்திரன்.

"அச்சோ! இங்கே பாருங்க, அங்கிள். எங்க அம்மாவுக்கு, இருபத்திரெண்டு வயசு! சுமாரா எங்களை விட, இரண்டு தடவை கூடுதல்னு வச்சுப்போம்! அப்போ, நானும் அனியும் ஆளுக்கு ஒரு தரம்னால், அம்மாவுக்கு ஒரே ஒரு டைம்தான், அடிக்கக் கொடுப்போம்! அதே போல, நாங்க ரெண்டு பேருமாக மூன்று தரம் அடித்த பிறகுதான், நீங்க ஒரு தடவை அடிக்கலாம்! இப்ப புரியுதா?"

"ம்! நல்லாவே புரியுது! முன்னே புரியாமல் இருந்தது கூட, நிறைய புரிந்து போயிற்று!" என்றான் அவன் வியப்புடன்!

விளையாடும்போது, அவன் வேண்டும் என்றே சிறுசிறு தவறுகள் செய்யவும், இரு சிறார்களுக்கும் சிரிப்பு தாங்கவில்லை!

ஒருதரம் அவன் 'மைனஸ்' போட்டபோது, "ஸ்ட்ரைக்கரை உள்ளே போடக்கூடாதுப்பா! வெள்ளை, கறுப்புக் காய்களைத்தான் போடணும்! இல்லையானா, தோத்து விடுவீங்க!" என்று அனி சொல்லிக் கொடுக்க, தோல்வியே வெற்றியாகத் தோன்றியது மகேந்திரனுக்கு.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு, யாருடைய உந்துதலும் இல்லாமல், அவளே அப்பா என்று அழைத்து, அவனோடு பேசினாளே!

அதுவும், அவன் தோற்பது பிடிக்காமல்!

இரவு உணவுக்காக சுதாகரி செய்து கொடுத்த உணவுப் பொட்டலத்துடன் கிளம்பிய மகேந்திரன் "உன்னிடம் ஒன்று கேட்கலாமா?" என்று மெதுவாக வினவினான்.

எத்தனை முறை அனுபவப்பட்டுவிட்ட விஷயம்!

என்ன வரக்கூடும் என்று ஊகித்த சுதாகரியின் உடல் லேசாக இறுகியது.

கைக்கடிகாரத்தின் பட்டையைச் சீர் செய்தபடி, "இது, பேச்சு சுதந்திரம் உள்ள நாடு, மகேந்திரன். உங்கள் விருப்பம்போல, எதையும் கேட்கலாம்!" என்றாள், முயன்று வருவித்த இலகுக் குரலில்.

யோசனையாகக் கூர்ந்து, "அதேபோலப் பதில் சொல்வது, உன் உரிமை எனப் போகிறாய்போல?" என்றான் அவனும் இலகுவாகவே.

விழிகள் பளிச்சிட அவனை நோக்கி, "ரொம்பவே சரிதான்!" என்று பதிலிறுத்தவள், அவளது பதிலை அவன் ஏற்ற விதத்தில், தன்னை மீறி முறுவலித்தாள்.

## அத்தியாயம் – 12



**வா**ர்த்தைகளில் இருந்த எச்சரிக்கையைப் புரிந்து கொண்டவனாக, மகேந்திரன் அப்போதைக்கு, அவளிடம் எதையும் கேளாமலே கிளம்பிவிட்டான்.

ஆனால், அவ்வப்போது அவனது பார்வையில் யோசனையைக் கண்டபோது, அந்தக் கேள்விகளை, அவன் ஒரேயடியாக மூட்டை கட்டி வைத்து விடவில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது!

மூக்கு அவனுடையது, தேவையற்று நீட்டி உடைத்துக் கொள்வதும், கொள்ளாததும் அவன் விருப்பம் என்று லேசாகத் தோளைக் குலுக்கியதோடு, சுதாகரி அதை மனதிலிருந்து ஒதுக்கினாள்.

எல்லாம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்!

ஆனால், இந்த மாதிரி ஒன்றை ஒதுக்க முடிவது, எவ்வளவு பெரிய வரம்! இதைப் பயிற்றுவித்தவரும் ரங்கநாதனே!

மூச்சுப் பயிற்சி, ஆழ்நிலைத் தியானம் போன்றவற்றோடு, அன்றாடச் செயல்களில் மனதை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வது என்று மனதைக் கட்டுப்படுத்தப் பல்வேறு பயிற்சிகள் கற்றுக் கொடுத்திருந்தார்!

"இருக்கும் அறையின் ஜன்னல் கம்பிகளை எண்ணும்மா. அது உருட்டுக் கம்பியா, நீட்டுப் பட்டையா? என்ன பெயின்ட்? பிடிவாதமாக இப்படியே யோசித்துக் கொண்டே போ! வேண்டாத நினைவு, தானாக ஓடிவிடும்.. உடம்பு சரியில்லாத

உன் பெரியம்மாவை விட்டுவிட்டுப் போக நேர்ந்த போது, எங்கள் கேப்டன் எனக்குக் கற்றுக் கொடுத்தார்..”

‘எத்தைத் தின்றால் பித்தம் தெளியும்’ என்ற நிலையில் இருந்த பெண்ணும், அலுப்பு சலிப்பை ஒதுக்கி, அதை, அப்படியே பின்பற்றினாள்.

மற்றபடி, எண்ணி எண்ணி நைந்தே, சுதாகரி என்ன கதியாகியிருப்பாளோ!

யோசித்துக் கொண்டிருக்கும்போதே, அன்று பேச்சு சுதந்திரம் பற்றிக் கூறியபோதே, கிண்டலை உடனே உணர்ந்து, மகேந்திரன் ஏற்பப் பேசியது, சுதாகரிக்கு நினைவு வந்தது!

பொதுவாகப் புரிந்து கொள்ளாமல், தொடர்ந்து கேட்பவர்கள்தான் அதிகம்!

புரிந்தாலும், வம்புக்கு அலைகிற புத்தி, “தப்பாக நினைத்துக் கொள்ளாதே, தப்பாக நினைத்துக் கொள்ளாதே” என்று பத்து தரம் முன்னுரை, பின்னுரையாகச் சொல்லி, பத்து தரமும், பத்து விதமாக அதையே கேட்பார்கள்!

“தப்பாக நினைத்துக் கொள்ளாதே..” என்று சொல்லித் தொடங்கும்போதே, கேட்பது தப்பு என்று தெரிந்தே கேட்கிறார்கள் என்று, சுதாகரிக்குத் தெரிந்து போகும்!

எனவே, அவர்களுக்கான அவளது பதிலில், இன்னும் கொஞ்சம் அதிகமாகவே ஏளனமும் காரமும் இருக்கும்.

மகேந்திரன் எப்படி வருகிறான் என்று பார்க்க வேண்டும்!

ஆனால், கடுமையாகப் பேசும்படி, நேராமல் இருந்தால் நல்லது! அனியுடைய தந்தை ஆயிற்றே!

பாவம், அனிஷா இன்னமும், அவளுடைய தந்தையிடம் கலகலப்பாகப் பேசத் தொடங்கவில்லை! முன்னைப்போல, சுதாகரியின் பின்னே மறைந்து கொள்வது இல்லைதான்! ஆனால், பவித்ரா கூட இருந்தால் மட்டுமே, ஏதோ கேட்டதற்கு பதில் சொல்லுவாள்.

பாவம் குழந்தை! உள்ளூர என்னமாகப் பயந்திருந்தால், இன்னமும், இப்படி இருப்பாள்!

பெரும்பாலும் பவித்ரா வாயடி அடிக்க, இவள் பக்கத்தில் நின்று, அனேகமாகத் தலையை ஆட்டுவதிலேயே, அவளது உரையாடல் முடிந்து போகும்!

மகேந்திரன் அதைக் கவனித்து, “அனி என்றைக்கு ‘பூம் பூம்’ மாடு ஆனாள்?” என்று படு சீரியசாக, ஒரு நாள் கேட்டான்.

“பூம்பூம் மாடா? அது என்ன மாடு, அங்கிள்? பசு மாடு, எருமை மாடுதானே உண்டு?” என்று விவரம் கேட்டாள் பவித்ரா.

“உக்கூம் அதானே!” என்று அதற்கும் தலையாட்டினாள் அனி.

“இதுவும் வெறும் மாடுதான்.. குட்டியாக இருக்கும்.”

“அப்போ மாட்டுக்... இல்லை, கன்றுக் குட்டி! அப்படித்தான் சொல்லணுமின்னு, அம்மா சொல்லித் தந்திருக்கிறாங்க. அப்புறம்? கன்றுக்குட்டி எப்படி பூம்பூம் மாடு ஆச்சுது?”

“இது கன்றுக்குட்டி இல்லைம்மா. அந்த மாடே, கொஞ்சம் சின்னதாக இருக்கும்! அந்த மாட்டுக்காரன் ஏதாவது கேட்டால், ‘ஆமாம், ஆமாம்’ என்கிறதுபோல, அந்த மாடு தலையை ஆட்டும்! அதைத்தான் பூம்பூம் மாடு என்கிறது!” என்று விளக்கினான் மகேந்திரன்.

சற்று யோசித்துவிட்டு, “அனி, நீ இனிமே சும்மா தலையை ஆட்டக் கூடாது.. என்ன?” என்று தோழியிடம் சொல்லிவிட்டு, “அங்கிள், நான் அந்த மாடு பார்க்க வேணுமே!” என்று ஆர்வமாகக் கேட்டாள் பவித்ரா.

பழைய மாதிரி தலையை ஆட்டப்போன அனி, சமயத்தில் நினைவு வந்து அதை நிறுத்திக்கொண்டு, “நானும்!” என்றாள் தயக்கமாக.

“டவுனில் அந்த மாட்டுக்காரன் அவ்வப்போது வருவான். அப்படி வரும்போது, நான் உங்களை அழைத்துப் போய்க் காட்டுகிறேன்!” என்று வாக்குறுதி கொடுத்தான் மகேந்திரன்.

சொன்னது போலவே, ஒரு தரம், காரை அனுப்பி, இரு பிள்ளைகளையும் அழைத்து வரச் செய்து, காட்டவும் செய்தான்.

வண்ண வண்ணத் துணிகளோடு, உருமி மாதிரி ஒரு வாத்தியத்தைத் தேய்த்துத் தேய்த்து அடித்தபடி, நல்ல நல்ல விதமாக ஆரூடம் கூறி, மாட்டைத் தலையாட்ட வைத்ததை, இரு சிறுமிகளும் கண்கொட்டாமல் கண்டு ரசித்தனர்.

மாட்டுக்காரனுக்குப் பணம் கொடுத்து அனுப்பி விட்டு, இருவருக்கும் ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்து, கிட்டத்தட்ட ஒரே மாதிரியான இரு ஃப்ராக்குகளையும் கடையில் இருந்து எடுத்துக் கொடுத்து, இருவரையும் காரிலேயே திருப்பி அனுப்பி வைத்தான் மகேந்திரன்.

அவன் எதிர்பார்த்தது போலவே, ஆடை அனுப்பியதை, ஆத்திரத்துடன் எதிர்த்தாள் சுதாகரி.

“உங்கள் மகளுக்கு எதை வேண்டுமானாலும் கொடுங்கள். ஆனால், பவிக்கு வேண்டாம்!” என்று, பவித்ராவுக்கான உடையை அவன் முன் வைத்தாள்.

“ஏன், நீ பவிக்கும் அனிக்கும் வேறு வேறு உணவா தருகிறாய்? உலகில் நீ மட்டும்தான், நியாயமும் நேர்மையுமாய்ப் பாரபட்சமற்று நடக்கலாம் என்று, சட்டதிட்டம் ஏதேனும் இருக்கிறதா?” என்று அவன் வினவியபோது, அவள் வாயடைத்துப் போனாள்!

சொல்வதறியாது ஒரு கணம் தவித்துவிட்டு, "பாருங்கள் மகேந்திரன், இது போல விலை உயர்ந்த பொருட்களை, நான் யாரிடமும், இலவசமாக வாங்குவதில்லையே! தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் சுதாகரி சற்று இறங்கிய குரலில்!

"புரிந்து கொள்ளாதது நீதான். இது ஒன்றும் இலவசம் இல்லை!" என்றான் மகேந்திரன், பதிலுக்கு.

அவள் நேராகப் பார்க்கவும், "கணக்கிட்டுப் பார், சுதாகரி, நீதான் மனதால் கணக்கிடுவதில் புலியாமே! பிள்ளைகள் சொன்னார்கள்.. அனி இதுவரையிலும் உண்டது, அனியோடு கூடச் சேர்த்து, எனக்கும் தந்தது.. எல்லாவற்றுக்கும் விலை போட்டால்.." என்று இழுத்தான் அவன்.

"அன்றாட உணவுக்குப் போய்.."

"அன்றாட உணவுதான்! ஆனால், அதைக் கொடுக்கிற விதம்? இங்கு வந்து, இந்த ஒரு மாதத்துக்குள், அனி எப்படி இருக்கிறாள், பார்! என் நன்றியை, நான் எப்படித் தெரிவிப்பது? கடன்பட்ட உணர்வு, உன்னைப் போலவே எனக்கும் பிடிக்காது, சுதாகரி! அதுவும், எப்படிப்பட்ட கடன்! நான் என்னதான் செய்தாலும், அதற்கு ஈடாகுமா?"

அவளுக்குள் இருந்த நேர்மை அவன் சொன்னதை ஏற்றுக் கொண்டது!



அவளுடைய குடும்பம் அனிக்குச் செய்திருப்பது.. செய்து கொண்டிருப்பது பெரிய நன்மைதான். அனியின் தயக்கம், கலக்கம், சட்டென பயப்படுவது.. எல்லாமே கிட்டத்தட்ட மாறிவிட்டது எனலாம்! சிரிப்பும் விளையாட்டுமாக இன்னொரு பவியாகவே அவள் மாறிக் கொண்டிருந்தாள்.

தந்தையிடம் மட்டும், இன்னமும் சிறு ஒதுக்கம் அவளுக்கு இருக்கத்தான் செய்தது! அதுவும், அவன் கிளம்புகிற நேரம் சுதாகரியின் ஆடையைப் பற்றியபடி தான் கையாட்டுவாள். சட்டெனப் பிடித்து, இழுத்துக் கொண்டு போய்விடுவானோ என்ற பயம், முழுமையாகத் தீரவில்லை என்பது, சுதாகரியின் கருத்து!

மற்றபடி, அனி ஒரு சாதாரண ஐந்து வயதுச் சிறுமியாக வாழத் தொடங்கியிருந்தாள்.

ஆனால், இதில் எதையும், சுதாகரி பலனை எதிர்பார்த்துச் செய்யவில்லையே! பலனாக ஒன்றைப் பெறும்போது, அந்த உதவி வியாபாரம் ஆகிவிடாதா?

மகேந்திரனோ, ஒரு வழிப்பாதையாக வாங்கிக் கொண்டே இருப்பதற்கு அவன் பிச்சைக்காரன் இல்லை என்றான்.

இது மறுக்க முடியாத வாதமாகத் தோன்ற, அப்போதைக்கு சுதாகரிதான் பின்வாங்கும்படி ஆயிற்று!

இது போன்ற பரிசுகளை அவள் வரவேற்கவில்லை என்று தெரியப்படுத்தியாயிற்று என்பதோடு, அவள் திருப்தியடைய வேண்டியதாயிற்று!

அவள் தெரியப்படுத்தியதை மகேந்திரன் ஏற்றானா, இல்லையா என்று அவன் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், அவன், தன் சொந்தக் கருத்துக்களை அவ்வளவு எளிதாக விட்டுக் கொடுக்கிறவன் அல்ல என்றே சுதாகரிக்குத் தோன்றியது!

அனியின் பிறப்பே, அதற்குச் சான்றுதானே?

பின்னர் அவளை வளர்த்த விதமும் கூட, அதைத்தான் வலியுறுத்திற்று!

ஆனால், அதெல்லாம் அவன் வீட்டு விவகாரம்! அவனது அதிகாரம் செல்லுபடியாகக் கூடிய இடம்! இங்கே, அவள் வீட்டில், அவனது கருத்தை எப்படிப் புகுத்தலாம்?

சின்னஞ்சிறு விஷயங்களில் இருந்து, பெரிய பிரச்னை வரை, தானாக யோசித்து முடிவெடுத்துத் தன் பொறுப்பாய்ச் செயலாற்றிப் பழகிவிட்ட சுதாகரிக்கு இது குறுக்கீடாகத் தோன்றியது!

ஆனால், அனி இங்கிருக்கும் வரைதானே என்று எண்ணியவளுக்கு, அவள் இல்லாத வீட்டைக் கற்பனை செய்து பார்ப்பதும் கடினமாகவே இருந்தது! ஆனாலும், அவள் அடுத்தவர் வீட்டுப் பெண்!

இதையெல்லாம் மனதில் உருட்டிக் கொண்டிருக்கும் போதுதான், அனிக்கான 'கவர்னஸ்'க்காக, மகேந்திரன் முயற்சி எடுத்தது போலவே தெரியவில்லையே என்றும், சுதாகரிக்குத் தோன்றியது.

இப்போது அது பற்றி மகேந்திரனிடம் கேட்டால், உடைப் பரிசு பிரச்னையைப் பெரிதாக்குவதுபோலத் தோன்றும்.. கூடவே, அனியை வீட்டில் வைத்துக் கொள்ளப் பிடிக்காதது போலவும் தோன்றும் என்று எண்ணி, அந்தப் பேச்சைத் தள்ளிப் போட்டாள் அவள்.

எப்படியும், அது பொய்தானே? அனி, எத்தனை நாள் இங்கே இருந்தாலும் சந்தோஷம்தானே?

இந்நிலையில், மகேந்திரன், சுதாகரியிடம் ஓர் உதவி கேட்டான்.

அனிக்கு, அவளது வீட்டிடம், தனது என்கிற உரிமை உணர்வு வர வேண்டுமாம்! சொந்த வீட்டுக்கு அழைத்துப் போய், அவளது அறை, விளையாட்டுச் சாமான்கள், தோட்டம், ஊஞ்சல், கம்ப்யூட்டர் எல்லாம் காட்டினால், குறைந்தபட்சமாக, வீட்டிடம் அவளுக்கு இருக்கும் வெறுப்பேனும் மாறக் கூடும் அல்லவா?

"தாராளமாகக் கூட்டிப் போங்களேன்" என்றாள் சுதாகரி.

"அதற்கில்லை.. பவித்ரா இல்லாமல், அனி என்னோடு வர மாட்டாளோ என்று சந்தேகம். அதுவும் வீட்டுக்கு நீயும் கூட வந்தால் நன்றாக இருக்கும்!" என்றான் அவன்.

இந்த விஷயத்தில், அவளுக்கு மகேந்திரன் மீது பரிதாபம்தான். ஆயினும், அவனது வீடு வரை செல்ல மனமின்றி, "வேறு வேலை இருக்கிறது! பிள்ளைகளை மட்டும் கூட்டிப் போங்கள்" என்று முடித்து விட்டாள்.

அதற்குமேல் அவளை வற்புறுத்திப் பயன் இராது என்று புரிந்திருந்ததால், மகேந்திரன் மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை!

ஆனால், கிளம்பும் முன், அனிதான் பெரிய ஆட்டம் காட்டி விட்டாள். அந்த வீட்டுக்குப் போகவே முடியாது என்று ஒரே அழுகை! கண்ணீர்!

பவித்ரா எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவள் ஏற்பதாக இல்லை!

மகேந்திரனுக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கும் என்று, சுதாகரிக்கு ரொம்பவே மனம் உருகிப் போயிற்று!

எனவே, அவளாகவே முன்வந்து, "என்ன அனி, உன் வீட்டில் உன் அறையில் இருக்கும் விளையாட்டுச் சாமான்களை.. இன்னும் கம்ப்யூட்டர்கூட இருக்கிறதாமே, அதையெல்லாம் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன்! நீயானால், ஒன்றையுமே எனக்குக் காட்ட மாட்டாய்போல இருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு, "ஹூ..ம்!" என்று சோகம்போல சத்தமாகப் பெருமூச்சு விட்டாள்.

அனியின் தேம்பல் சட்டென நின்றது.

"அப்போ, நீங்களும் கூட வருவீங்களா, ஆன்ட்டி?"

முதல் முதலாகப் பார்த்தபோதுபோல, இமை தட்டாத பார்வை!

"பின்னே? உன் அறையை நானும், பவியும் எப்படிப் பார்ப்பது? இங்கிருந்தே, 'சூ! மந்திரகாளி'யிலா? ஹாரி பாட்டருக்குக்கூட அப்படிப் பார்க்க முடியாதேப்பா! அல்லது, முடியுமா?" என்று சுதாகரி இலகுவாகக் கூறவும், அனி சிரித்தாள்.

"அப்பாடி!" என்ற பவித்ரா, அன்போடு, தோழியின் கண்ணீரைத் துடைத்துவிட்டாள். "அனி, இனிமேல் நீ அழவே கூடாது. என்ன? நீ அழுதால், எனக்கு எவ்வளவு கஷ்டமாக இருக்குது, தெரியுமா?"

வியந்த முறுவலுடன், பெரியவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பிள்ளைகள் இருவரும் காலணிகளை மாட்டிக் கொண்டு கிளம்புகையில், சுதாகரிக்கு மகேந்திரன் நன்றி தெரிவித்தான்.

“உன் பொறுப்பில், பவி அருகில் அனி இருக்கும்போது, எனக்கு எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது சுதாகரி. அனி வீட்டுக்கு வருவாளோ, வந்தாலும் எப்படி நடந்து கொள்வாளோ என்று, எனக்கு உள்ளூரப் பயம்தான். ஆனால், உன்னை அழுத்திக் கூப்பிடவும் தயக்கமாக இருந்தது! என் பிரச்னை புரிந்து, நீயாகவே வருவதற்கு நன்றி!” என்றான் அவன்.

ஒரு கணம் தயங்கிவிட்டு, “இது சற்று அவசியமற்ற நன்றி, மகேந்திரன். கடைக்கு ஓர் இடம் பார்ப்பதற்காக, நானே, அந்தப் பக்கம் வருவதாக இருந்தேன். இப்போது, ஸ்கூட்டரில் வருவதற்குப் பதிலாக, அனியோடு காரில் வரப் போகிறேன். அவ்வளவே!” என்றாள் அவள்.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, சன்னமாய் முறுவலித்தான் அவன். “அப்படியானால், எங்களோடு காரில் வருவதற்காகவாவது, நான் நன்றி சொல்லலாம் அல்லவா?”

“அப்படிப் பார்த்தால், பெட்ரோல் செலவு மிச்சமானதற்கு, நான்தானே நன்றி சொல்ல வேண்டும்?”

“மறுக்க முடியாத கேள்வி! ஆனால், நான் ஒன்றும், ‘நன்றி அவசியமில்லை’ என்று தட்டிக் கழிக்க மாட்டேன்! உங்களுக்கு உதவி செய்யக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று அழகான ஒரு வணக்கத்துடன் ஏற்றுக் கொள்வேன்!” என்றான் அவன், கிண்டல் குரலில்.

“நாகரீகம் தெரியவில்லை என்று, நாகரீகமான குட்டா? ஆனால், வரவும் செலவும் சமமாகி விட்டதால், நான் நன்றி சொல்லவும் தேவையில்லையே!” என்றாள் அவளும் கேலியாகவே.

“நன்றிக்கு அலைவதாக, இது, சரியான பதில் குட்டு!” என்று அவன் நகைக்க, அவளுக்கும் சிரிப்பு வந்தது.

நால்வருமாகக் காரிலிருந்து இறங்கியபோது, வீட்டு வேலையாட்களின் கண்களில் தெரிந்த ஆர்வம், வராமல் இருந்தோமில்லையே என்று அவளை எண்ண வைத்தது!

இதற்குத்தான், எதையும் எண்ணித் துணிய வேண்டும் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்று நினைத்த போதும் எதையும் முகத்தில் காட்டிக் கொள்ளாமல், பிள்ளைகளோடு சேர்ந்து, அனியின் அறைக்குச் சென்றாள்.

பவித்ராவின் ஆர்வத்தில், அனியின் கலக்கம் விரைவிலேயே மறைந்தது. இருவரும் சேர்ந்து கம்ப்யூட்டரில் மீன் பிடிக்கிற விளையாட்டில் ஆழ்ந்துவிட, அவர்களிடம் சொல்லிவிட்டு, சுதாகரி அங்கிருந்து கீழே வந்தாள். வளைவான படிக்கட்டுகளின் வழியே இறங்கி வருவது, சுகானுபவமாக இருந்தது!

“என்ன, சிரிப்புச் சத்தம் காதைப் பிளக்கிறதே!” என்று, அவள் இறங்கி வருவதைப் பார்த்தபடி, ஹாலில் இருந்த மகேந்திரன் புன்னகையோடு கேட்டான்.

"ம். கம்ப்யூட்டரில் ஏதோ தூண்டிலில் மீன் பிடிக்கிற விளையாட்டு. 'லோட்' பண்ணி வைத்திருக்கிறீர்களே! அதன் விளைவு!" என்றவள் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு, "நான் கிளம்புகிறேன்" என்றாள். "பிள்ளைகளிடம் சொல்லி விட்டேன். அவர்கள் என்னைத் தேட மாட்டார்கள்!"

"அடுத்த தெரு முனையில் உள்ள இடம் என்றால், அங்கே என் பேச்சுக்கு மதிப்பிருக்கும்! நானும் வரட்டுமா?"

இவனும் அவளுமாக, ஒன்றாகச் சென்றால், அந்த மதிப்பு மட்டுமின்றி, அவளிடம் உள்ள மரியாதையும் கந்தலாகி விடாதா?

"வேண்டாம், நான் தனியாகவே பார்த்துக் கொள்வேன்!" என்றாள் அவள் தெளிவாக.

அவள் முகத்தைக் கூர்ந்துவிட்டு, "பவி அப்பாவின் பாதிப்பு என்று தெரிகிறது!" என்றான் மகேந்திரன்.

சிறு அமைதியின் பின், "பதிலையே காணோமே!" என்றான் அவன்.

"இது பேச்சுரிமை உள்ள தேசம் என்று, நான்தான், உங்களிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே!" என்று புன்னகை செய்தாள் சுதாகரி.

அவன் முகம் லேசாகக் கன்றியது! ராட்சஸி! சடக்கென்று முகத்தில் அடிக்க இவள் தயங்குவதே இல்லை! ஆனால், அவனும் ஒன்றும் அசடன் அல்லவே!

## அத்தியாயம் – 13



முகத்தில் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் செருப்பைக் கழற்றி விட்டிருந்த இடத்தை நோக்கி சுதாகரி நடக்க, மகேந்திரனும் கூட நடந்தான்.

"ஏன் சுதாகரி, வம்பு பேசும் ஆவலில்தான் கேட்க வேண்டுமா? ஒரு நண்பனாக விசாரிக்க கூடாதா?" என்று முயன்று வருவித்த சாதாரணக் குரலில் வினவினான்.

"இருப்பதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் நட்பு."

"வள்ளுவர் அப்படிச் சொல்லவில்லையே! நட்பு ஆராய்தல் என்று ஓர் அதிகாரமே எழுதியிருக்கிறார்!"

பார்வை ஒருதரம் அவன் மீது பாய்ந்து மீள, "ரொம்ப நல்லது! தேடுங்கள் கண்டடைவீர்" என்றாள் அவள்.

"தேடத்தான் செய்கிறேன்!" என்றான் அவனும்.

செருப்பை மாட்டியபடி, "உலகம் பரந்து கிடக்கிறது! எங்காவது கிடைக்கும்!" என்றாள் சுதாகரி, விட்டேற்றியாக.

"நான் இங்கேயே கண்டுபிடிப்பதாக இருக்கிறேனே!"

செருப்பை மாட்டிக்கொண்டு திரும்பினாள் அவள். "நெய்வேலியில் நிலக்கரியையும், கோலாரில் தங்கத்தையும் தேடினால் அர்த்தம் உண்டு! இல்லாத இடத்தில் எதற்காக.."

"இருக்கும் என்கிற நம்பிக்கைதான். புதையலே கிடைக்கலாமே!" என்று விடாமல் தொடர்ந்தான் மகேந்திரன்.

சிறு கேலியாக, மட்டம் தட்டுதலாகத் தொடங்கியது தான். ஆனால், இப்போது நிலை கொள்ளாத ஆழத்துள் இறங்கி விட்டாற்போலத் தோன்றவும்,

“பேசிக்கொண்டே இருந்தால், நேரம் போய்க் கொண்டே இருக்கும்! கிளம்புகிறேன்!” என்று வாயிலை நோக்கி விரைந்தாள் அவள்.

“ஓட்டம்?” என்றவனின் குரல், சிரித்தது!

“பேச்சு சுதந்திரம் போலத் தான், கருத்து சுதந்திரமும்! யாரும், என்ன வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளலாம்! பிள்ளைகளை, இடையிடையே எட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள்!” என்றவள் திரும்பிப் பாராமல் நடந்தாள்.

சிறு வேகம் கலந்த நிமிர் நடை!

சற்று முன் மாடிப்படியில் இலகுவாக அவள் இறங்கி வந்தது மகேந்திரனுக்கு நினைவில் அப்படியே வந்தது!

கடைசல் பிடித்த கைப்பிடிப் பகுதி, அழகான கிரில், ஏறி இறங்குவதை எளிதாக்கும் அளவான படிகள்! இவற்றுக்காகச் செலவு செய்த சிந்தனையும் பணமும், சுதாகரி ரசித்து இறங்கிய விதத்தில் நியாயப்படுத்தப்பட்டுவிட்டதாக அவனுக்குத் தோன்றியது!

இன்னும், யோசித்து யோசித்துக் கட்டிய வீடு முழுவதையும் சுதாகரிக்குக் காட்டி மகிழ ஆசை வந்தது!

ஆனால், எந்த வினாடி நத்தையாகக் கூட்டுக்குள் சுருட்டிக் கொள்வாள் என்று தெரியாமல், எதை எடுத்துச் சொல்ல?

சுருட்டிக் கொண்டாலும் பரவாயில்லை! பட்டென்று வலிக்கக் கொட்டியும் விடுகிறாளே!

பதினேழு வயதில் பிள்ளையையும் கொடுத்து, இப்படி ஓர் உயர்வான பெண்ணை விட்டுப் பிரிந்து போனவன் எப்படிப் பட்டவனாக இருப்பான்?

இந்தக் குறுகுறுப்பு, அன்று கேரம் விளையாடிய நாள் தொட்டே, மகேந்திரனுக்கு இருந்தது!

பெரியவர் ரங்கநாதனிடம், அது பற்றித் தனிமையில் பேசியும் இருக்கிறான்.

சுதாகரியை விடவும், அவர் சகஜமாகப் பழகுவதாக அவனுக்குத் தோன்றும்! ஆனால், அவருமே, “அது அவள் விஷயம். சொல்வதும் சொல்லாததும் அவள் விருப்பம்! சொல்லக் கூடும் என்றால், அவளே சொல்லுவாள்!” என்று மறுபடியும் கேட்க முடியாமல் ஒரேயடியாக முடித்துவிட்டார்.

அடுத்து, துரைப்பாண்டியன்!

இத்தனை நாளில், சுதாகரியின் வீட்டிலும், டவுனிலுமாக அவனை நாலைந்து தரம் பார்க்க நேர்ந்துவிட்டது! முதலில் இருந்த சிறு வெறுப்பு மாறி, இப்போது அவன் சாதாரணமாகவே பழகினான்.

குழந்தை அனிக்காக மட்டுமே அந்த வீட்டில், மகேந்திரனுக்கு அனுமதி என்று புரிந்துகொண்ட மாதிரி!

சுதாகரியிடம் அவனுக்கு இருந்த பிரமையும், பிரமிப்பும், அவனது ஒவ்வோர் அசைவிலும், பேச்சிலும் வெளிப்பட்டது! பாசம், மரியாதை எல்லாமே அதிகம்! மிகவும்!

ஆனால், அவ்வளவே! அதற்கு மேல், அவனுக்கு ஏதும் தெரிந்திருக்கும் என்று, மகேந்திரன் எண்ணவில்லை!

தெரிந்திருந்தால் குறிப்பாகவேனும் பெருமை அடிக்காமல், அவனால் இருக்கவே முடியாதே!

இருக்கட்டும்! என்றோ ஒருநாள், தன்னிடம் சுதாகரியே சொல்லுவாள் என்று எண்ணினான் மகேந்திரன். அந்த நாள் வந்தே தீரும்!

அதற்குள் அவசரப்பட்டு, உள்ளதையும் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று எண்ணும்போதுதான், அவனுக்கே ஓர் உண்மை புரிந்தது! முகம் முறித்து, அவளை அடியோடு இழந்துவிட, அவன் கொஞ்சமும் தயாரில்லை! அதனாலேயே இந்த கேலி, கிண்டலுக்கு மேல், அவளை வற்புறுத்தவோ, வெளிப்படையாகத் தூண்டித் துருவவோ, அவனுக்குத் தைரியம் இல்லை என்கிற உண்மை!



**ம**கேந்திரனோடு பேசியதை எண்ணிப் பார்த்தவாறே, வீட்டு சுற்று மதில் தாண்டிச் சென்றவளுக்குச் சட்டென மனம் கலங்கியது!

இந்த மாதிரிப் பதிலுக்குப் பதில் கேலியும் கிண்டலுமாகப் பேசி எத்தனை காலம் ஆகிவிட்டது! இந்த மகேந்திரன் சட்டெனப் புரிந்து கொள்வதாலோ என்னவோ, கொஞ்சம் வாய்ப்பூட்டு கழன்று கொள்கிறது!

எப்போதுமே அப்பாதான் தொடங்குவார். "அம்மாவுக்கு என் மேல் என்னம்மா கோபம்?" என்று.

அவள் ஆர்வமும், கேள்வியுமாகப் பார்க்கும்போதே, "இன்று மோர்க் குழம்பில் வடை போட்டு வைத்திருந்தாள், பார்! அப்பா.. அம்மா..! பல் வைத்தியரிடம் போகாமல், இரவு தூங்கவே முடியாது என்று நினைக்கிறேன்!" என்பார் ஒரு கண் சிமிட்டலோடு!

"போங்கப்பா! நான் ஸ்கூலில் இருந்து வந்து சாப்பிட்டேனே! நன்றாகத்தான் இருந்தது!" என்பாள் பெண்!

"நிஜமாகவா?"

“நிஜம்ப்பா! ஒரே ஒரு பல்தான், ஓரமாய்க் கொஞ்சம் உடைந்து போயிற்று! மற்றபடி, ருசி ரொம்பவே நன்றாகத்தான் இருந்தது!”

“ம்ம்ம்... அம்மா என்கிறதற்காகச் சொல்லுகிறாயோ, என்னவோ? எதற்கும், இன்னும் ஒரு நாலு வடை சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லுகிறேனே! மேடம்! ரொம்பக் கொஞ்... சமாய், வெறும் பத்தே பத்து வடை எடுத்துத் தருகிறீர்களா?” என்பார் அப்பா!

“அடடா! நான் போக வர உப்புப் பார்த்ததில் எல்லாமே காலியாகிப் போயிற்றே!” என்று அம்மா சொல்லவும், அதிர்ந்து, “அடிப்பாவி! எனக்கு, உனக்கு என்று எல்லோரும் பிய்த்துக்கொண்டு போனதில், பாதியே பாதி வடைதான் எனக்கு மிஞ்சிற்று! சரி, வீட்டில், நம் பத்தினித் தெய்வம், எப்படியும் நமக்காகக் கொஞ்சம் வைத்திருக்கும் என்று ஆசையோடு வந்தால், சரியான சாப்பாட்டுராமி, ருசி பார்ப்பதிலேயே கா...லி பண்ணி விட்டேன் என்கிறாயே!” என்று தந்தை சோகிக்க, “சரி சரி, புலம்பாதீர்கள், சாமி! நிறைய இருக்கிறது!” என்று வடைகளோடு, நல்லதாக ஓர் இனிப்பையும் கொண்டுவந்து வைப்பாள் அன்னை!

அதேபோல, அப்பா வாங்கி வரும் சேலையை, “என்னைக் கோரக் கிழவியாகக் காட்டினால்தானே, இன்னொரு மகளா என்று கேட்க மாட்டார்கள்!” என்று கிண்டலடித்தபடியே கட்டிக்கொண்டு, அம்மா ரதி மாதிரி நிற்பாள்!

அக்கம்பக்கத்தாரோடு அன்பாகப் பழகுவதும், சிரிப்பதும்.. எல்லாம் இந்தப் பிறவியில் நடந்தது தானா?

கிறீச்சிட்ட பிரேக்கும், “ஏம்மா, பார்த்துப் போவதில்லையா?” என்ற ஆத்திரக் கேள்வியும், சுதாகரியை நிகழ்காலத்துக்குக் கொண்டு வந்தன.

கூடவே, “சுதாகரி, நீயா?! அடடா, கண்ணிலே என்னம்மா கண்ணீர்?” என்ற அக்கறையும்!

மகளிர் மன்றத் தலைவி மகிளா!

அவள் பார்க்கக் கண்ணீரே வடித்திருக்கிறாள்! கேவலம்!

கண்ணைத் துடைத்தபடியே அவசரமாக யோசித்து, “காய்கறிக் கடை பற்றிச் சொன்னேனில்லையா, மிஸஸ் மகிளா! அதற்காகத் தெருமுனைக் கடையைப் பார்க்க வந்தேன். திடீரென்று ஒரு காற்று! கசக்கினால், கண்ணில் விழுந்த தூசி உறுத்தி, அது வேறு தொல்லையாகி விடக் கூடாதே, கண்ணில் வரும் நீரில் தூசி தானாக வெளியேறி விடாதா என்று பார்த்தேன். பாருங்கள், அது பார்வையை மறைத்து... நீங்கள் மட்டும் சரியான நேரத்தில் பிரேக் போட்டிராவிட்டால், பெரிய ஆபத்தாகிப் போயிருக்கும்! ரொம்ப நன்றிம்மா!” என்று ஒருவாறு கோர்வை காத்து விளக்கியவள், “இந்தச் சேலை உங்களுக்கு மிகவும் அழகாக இருக்கிறதே!” என்று ஐஸ் வைத்துப் பேச்சைத் தன்னிடம் இருந்து மாற்றினாள்.

மகிழ்ச்சியோடு முறுவலித்து, "நீ 'ஃபால்ஸ்' வாங்கித் தந்த சேலைதான்! உன் பெண்.. பவித்ராவிடம்தான் கலர் சொன்னேன்! பேபி பிங்க் என்றால் என்ன என்று அவள் கேட்டதற்கு எனக்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை! நீ கரெக்டாக வாங்கித் தந்தாயே!" என்று பாராட்டிவிட்டு, "உன் சுட்டிப் பெண் எப்படி இருக்கிறாள்? அவளுக்கு ஒரு சினேகிதி வந்திருக்கிறாளாமே! அவள் அம்மா, அந்த தீப்தி மாதிரி இல்லாமல், நன்றாகப் பழகுகிறாளா? அப்போதே, நாங்கள் எல்லாம், 'பாவம் மகேந்திரன்' என்று பேசிக் கொள்வோம்! ஆனால், அவரிடமும் பெரிய குறை உண்டு! பெண்களையே பிடிக்காதாம்! தப்பில்லையா?" என்று தானாக விவரம் சொன்னாள்.

சுதாகரி பேசாது நிற்கையிலேயே, மேலும் தொடர்ந்து, "பெண்கள் பிடிக்காது பாட்டை விட்டு விட்டு, பேசாமல், மிஸ்டர் மகேந்திரன் இன்னொரு திருமணம் செய்து கொண்டிருக்கலாம்! அதை விட்டு, அந்த உறவுக்காரக் கிழவியைக் கொணர்ந்து வைத்து, அந்தக் குழந்தை வீட்டை விட்டு ஓடி.. பெரிய கூத்தாகி விட்டதாம்! அன்றைக்கு மன்றக் கூட்டத்துக்கு அப்புறமாகப் பேசிக்கொண்டிருந்தபோது மெர்சி சொன்னாள். அவள் வீட்டுக்கெல்லாம் போய், அவள் பெண் ரோசியிடம் விசாரித்தீர்களாமே.. எப்படியோ, நல்லபடியாகக் கிடைத்தாளே!" என்றவாறு, சுதாகரியின் முகத்தைப் பார்த்தாள், அந்த மகிளா.

மேற்கொண்டு, சுதாகரி விவரம் ஏதேனும் சொல்வாள் என்று எண்ணினாளோ, என்னவோ? கைக்கடிகாரத்தைக் குறிப்பாக ஒரு தரம் பார்த்துவிட்டு, "கடை சொந்தக்காரர் காத்துக் கொண்டிருப்பார்.." என்று இழுத்தாள் சுதாகரி.

"அடேடே, சொன்னாயில்லை.. சரிம்மா, கிளம்பு.. நீ இங்கே கடை வைத்துவிட்டால், எங்களுக்கெல்லாம் வசதியாக இருக்கும், சுதாகரி! உன் வேலை சீக்கிரமாக நடக்கக் கடவுளை வேண்டிக் கொள்கிறேன்! பை!" என்று ஒருவாறு விடை பெற்றுச் சென்றாள், மன்றத் தலைவி.

கடைசியாக வாழ்த்துதான்! என்றாலும், அப்பாடி என்றிருந்தது சுதாகரிக்கு!

என்னவெல்லாம் சொன்னாள் அந்த மகிளா!

அனி, அவள் வீட்டில் இருப்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாளே! எல்லோரும் சேர்ந்து பேசியிருப்பதாக அல்லவா தெரிகிறது! இதற்கு மேல், இவர்களது வாய்க்கு அவல் போடக் கூடாது. எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

முதல்படியாக, இனி, இந்த மாதிரி நெகிழ்வுக்கு இடம் தரக் கூடாது என்று, தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டபடி, காலை எட்டிப் போட்டு வேகமாக நடந்தாள் அவள்!

சற்றுப் பொறுத்து, சுதாகரி திரும்பி வந்தபோது, விளையாட்டு முடிந்து, பவித்ராவும், அனிஷாவும் சாப்பாட்டு மேஜையில் உட்கார்ந்து, வளவளவென்று பேசியவாறே எதையோ நொறுக்கிக் கொண்டிருந்தார்கள்!

சத்தமின்றி வந்து எட்டிப் பார்த்துவிட்டு, "அடடா! வெறும் பாவ்பாஜிதானா? நானும், நீங்கள் இரண்டு பேருமாகப் பிடித்த மீன்களைத்தான் சமைத்துச் சாப்பிடுகிறீர்களாக்கும், நமக்கும் இரண்டு கிடைக்குமாக்கும் என்று நினைத்தேனே!" என்றாள் சுதாகரி.

"ஹையா ஆன்ட்டீ!" என்று, குஷன் போட்டு உயரமாக்கியிருந்த இருக்கையில் இருந்து குதித்து ஓடி வந்து, அவளது இடுப்பைக் கட்டிக் கொண்டாள் அனிஷா!

"ஐயே அம்மா, கம்ப்யூட்டரில் இருக்கும் மீனை யாராலாவது பிடித்துச் சமைக்க முடியுமா? தப்பு! தப்பு!" என்றபடி, ஒரு ரசகுல்லா ராஸ்பெரியை எடுத்து, வாய்க்குள் திணித்துக் கொண்டாள் பவித்ரா.

"எல்லாம் ஆன்ட்டிக்கும் தெரியும்! அவங்க சும்மா விளையாட்டுக்குச் சொன்னாங்க!" என்று சுதாகரிக்கு வக்காலத்து வாங்கினாள் அனி! "அப்படித்தானே, ஆன்ட்டி?"

"ஆமாம்.. செல்லம்! நீ போய்ச் சீக்கிரம் சாப்பிடு! இரண்டு பேரும், வீட்டுக்குப் போய் வீட்டுப் பாடம் செய்ய வேண்டுமே, நினைவிருக்கிறதா?" என்று சுதாகரி நினைவுபடுத்த, "ம்! இரு...க்குது!" என்று இருவரும் அசுவாரசியமாக கோரஸ் பாடினர்.

"நீ என்ன சாப்பிடுகிறாய், சுதாகரி?" என்று ஒரு தட்டை எடுத்தான் மகேந்திரன்!

"நானே எடுத்துக் கொள்கிறேன்!" என்று, பெயருக்கு எதையோ வைத்துக்கொண்டு கொறித்தாள் சுதாகரி.



இவனோடு பழக்கம் முதிர்வதை நிறுத்த வேண்டும்! என்ன இலகுவாகக் கேலி பேச வந்துவிட்டது!

"இடத்து உரிமையாளர் என்ன சொன்னார்?" என்ற அவனது கேள்விக்கும் "பேச்சு வார்த்தையில் இருக்கிறது" என்றதோடு முடித்துவிட்டு, பிள்ளைகள் உண்டு முடித்ததும், இருவரையும் கிளப்புவதில் முனைந்தாள்.

மூவரையும் காரில் கொண்டுவந்து விட்டுவிட்டு, மகேந்திரன் நன்றி தெரிவிக்க முனைந்தபோது, "அதுதான் முன்பே சொல்லிவிட்டீர்களே! அனி, பவி இரண்டு பேரும் புத்தகப் பையை எடுங்கள்!" என்று அவனைத் தட்டிக் கழிக்கவே முயன்றாள்.

ஆனால், "ரொம்ப நாளைக்குப் பிறகு, வீடு எனக்கு வீடாக இருந்தது! அதற்கும் நன்றி!" என்று அவன் தொடர்ந்து சொன்னபோது, அவளுக்கு மனம் உருகிப் போயிற்று!

"அனியும் மகிழ்ச்சியாகப் பொழுது போக்கினாள் அல்லவா? இனி மறுக்காமல் வருவாள். அவ்வப்போது வெளியே அழைத்துப் போவதற்குப் பதிலாக, உங்கள் வீட்டுக்கே கூட்டிப் போங்கள்!" என்று வழி சொல்லிக் கொடுத்தாள்.

கூடவே தன் தீர்மானமும் நினைவு வர, "ஆனால், பிள்ளைகளை மட்டுமே கூட்டிப் போய்ப் பழக்குங்கள்! அதுதான் இன்னமும் நல்லது!" என்று சற்று அழுத்தமான குரலில் கூறி முடித்தாள்.

சற்று விசித்திரமாகப் பார்த்தானே தவிர, மகேந்திரன் மறுத்து வாதாடவில்லை.

சுதாகரியின் ஆலோசனையை முழுமையாக ஏற்றவன் போல, மகேந்திரன் அடிக்கடி வந்து, பவி, அனி இருவரையும் அவனது வீட்டுக்கு அழைத்துச் சென்றான். விற்பனை அதிகமாக நடக்கும் மாலை வேளையில் கூடக் கடையை பொது நிர்வாகியின் பொறுப்பில் விட்டு விட்டு, மகளுக்காக அவன் வந்து போகலானான்!

அங்கே சிறுமிகள் இருவரும், தோட்டத்திலும், உள்ளேயுமாக, அவர்கள் விரும்பிய விளையாட்டு விளையாடிவிட்டு, அவர்களுக்குப் பிடித்தமானது என்று, அவன் வாங்கி வைத்திருக்கும் சிற்றுண்டியை உண்டு விட்டுத் திரும்பி வருவார்கள்!

விடுமுறை நாட்களில் மதிய உணவுக்கே கூட்டிப் போய்விடுவான்! அடுத்தபடியாக, மகளை வீட்டில் இரவில் தங்க வைக்க, மகேந்திரன் திட்டமிட்டான். வழக்கம் போலப் பவித்ராவையும் சேர்த்துதான் அழைத்துப் போனான்.

ஆனால், பவித்ரா பிறந்ததில் இருந்து, அவளை ஒரு நாள்கூடப் பிரிந்தறியாத சுதாகரி, தூக்கமின்றித் திண்டாடிப் போனாள்.

போனாவது செய்து பேசலாமா என்று ஏங்கிய மனதைப் பிடிவாதமாக அடக்கிக்கொண்டு அவள் உட்கார்ந்திருக்க, அதிகாலையிலேயே போன் மணி அடித்தது!

எந்தப் பிள்ளைக்கு என்னவோ என்ற கலக்கத்துடன் பாய்ந்து சென்று எடுத்தால், பவித்ராதான் பேசினாள்!

"அம்மா, குட்மார்னிங்!" என்று தொடங்கி, வழக்கம் போலவே கலகலத்தாள் அவள்.

"அம்மா, நேற்று ராத்திரி நாங்கள் மூன்று பேருமாக சமையல் செய்தோமே! அங்கிளுக்கு, நானும் அனியும், சேர்ந்து நூடுல் உடைத்துக் கொடுத்தோம்! அங்கிள் காய் வெட்டி.. இரு.. இரு.. அம்மா அனி பேசணுமாம்!" என்று மற்றவளிடம் கொடுக்க, "குட்மார்னிங் ஆன்ட்டி! நல்லாத் தூங்கினீங்களா?" என்று கொஞ்சினாள் அவள்.

"ஆன்ட்டி, அப்பா நேற்றுக் காய் வெட்டும்போது அழுதிட்டார்!..." என்று அவள் கூற இடையிட்டு, "இல்லைம்மா! உங்களை மாதிரி, வெங்காயத்தைக் கழுவிட்டு வெட்டுங்கன்னால் கேட்காமல் சும்மா வெட்டி, அங்கிள் கண்ணெல்லாம் ஒரே தண்ணி! அனி முதல்லே பயந்திட்டு அழாதீங்கப்பான்னு, அவளும் அழப்

போனாள்! அப்புறம்...” என்று இருவருமாக மாற்றி மாற்றிக் குதூகலத்துடன் பேசியதைக் கேட்டுவிட்டு, மலர்ந்த முகத்துடன் ரிசீவரை வைத்தாள் சுதாகரி.

பிள்ளைகள் இருவரும் உதவி செய்ய, கண்ணீர் வழிய மகேந்திரன் சமையல் செய்த காட்சியைக் கற்பனை செய்து பார்த்த சுதாகரிக்குச் சிரிப்பும் வந்தது! அதே சமயம் அவர்களோடு இருந்து, அந்தச் சமையல் காட்சியை நேரில் பார்க்கவில்லையே என்று ஓர் ஏக்கமும் பேரலையாக அவளுள் எழுந்தது!

## அத்தியாயம் – 14



பட்டாளத்துப் பழக்கமாக, எப்போதுமே ரங்கநாதன் அதிகாலையில் எழுந்து நடக்கப் போய்விடுவார். நடை முடிந்து திரும்பி வந்தவர், டெலிபோன் அருகே சுதாகரி முறுவலோடு நிற்பதைக் காணவும், "என்னம்மா, அதற்குள் தாங்கவில்லையா? போன் பண்ணிப் பிள்ளைகள் குரலைக் கேட்டுவிட்டாய் போல? முகமெல்லாம் பூரித்துப் போயிருக்கிறதே!" என்று சன்னச் சிரிப்புடன் வினவினார்.

"ஐயோ, நான் பண்ணவில்லை, பெரியப்பா! எல்லாம் உங்கள் பேத்திகள்தான்! நேற்றைய இரவுக்கு நூடுல்ஸாம்! எப்படி சமைத்தார்கள்.. எப்படி காய் வெட்டினார்கள்.. என்று மாற்றி மாற்றி, இரண்டு பேரும், ஒரே அளப்பு! அதுதான் சிரிப்பாக வந்தது!" என்று சிரிப்பின் காரணத்தை முழுமையாக அவரிடம் விவரித்தாள் அவள்.

அவள் சொல்லி முடிக்கையில், அவர் முகமும் முறுவலில் மலர்ந்திருந்தது!

"இப்படியே போனால், அனி சீக்கிரமாக, அவளுடைய தந்தையோடு ஒட்டிக் கொள்வாள் என்று நினைக்கிறேன், பெரியப்பா! ஆனால்.."

"ஆனால் என்ன, சுதாம்மா?"

"மகேந்திரன் இன்னமும் அனியைக் கவனித்துக் கொள்ள ஆள் பார்க்கவில்லையே! அதற்கான ஆள் இல்லாமல், அவளை எப்படி அனுப்புவது? ஆனால், அது பற்றி அவரிடம் கேட்கவும் தயக்கமாக இருக்கிறது பெரியப்பா.."

"என்னது? உனக்கா கேட்கத் தயக்கம்?" என்று வியப்புடன் கேட்டார் பெரியவர்.

லேசாக முகம் கன்ற, "முகத்தில் அடித்தாற் போலப் பேசுகிறவள்தானே என்று சொல்லாமல் சொல்கிறீர்களா, பெரியப்பா? எனக்கு.. எனக்கு அனியை சீக்கிரமாகக் கூட்டிப் போங்கள் என்று சொல்லுகிற மாதிரி.. அனி இங்கிருப்பதைத் தொல்லையாகக் கருதுகிற மாதிரி தோன்றிவிடுமோ என்பதுதான் தயக்கம்! அதிலும், விஷயம் அந்தத் தொனியில் அனி காதுவரை எட்டியது என்றால், குழந்தை நொந்து போவாள் இல்லையா? அதுதான் கலக்கம்! முக்கியமாக, அதனால்தான் தயக்கமும்!" என்றாள் சுதாகரி.

"அது..வும் சரிதான்! உன்னைப் போலவே, எனக்கும், அந்தப் பெண்ணிடம், நம் பவி போலப் பிடிப்பு வந்துவிட்டது! பாவம்! தாய் ஏக்கத்தில், அவள் உன்னிடம் இப்படி இழைகிறாள்.. திருப்பித் தனியாக எப்படி அனுப்புவது என்று, எனக்கே சஞ்சலம்தான்!" என்றார் ரங்கநாதன், பெண்ணைக் கீழ்க் கண்ணால் நோக்கி.

முகத்தில் கவலை படர, "ஆமாம்.. பெரியப்பா! எனக்குக் கூட அடிக்கடி, இதே கவலைதான். இங்கே கலகலவென்று சுற்றுகிறவள், அந்தப் பெரிய வீட்டில் எப்படி தனியாக.. சரி, சரி! இதில் நாம் கவலைப்பட்டு, ஆகப் போவது ஒன்றும் இல்லை. 'கவர்னஸ்' பற்றி, மகேந்திரனிடம் கொஞ்சம் தெளிவாகப் பேசவேண்டும்!" என்றாள் சுதாகரி.

என்ன இருந்தாலும், பணத்துக்காக வேலை செய்கிறவளிடம், எந்த அளவுக்கு, உண்மையான அன்பு இருக்கக் கூடும்? ஆனால், உரியது இல்லை என்கிற போது, கிடைப்பதைக் கொண்டுதான் திருப்தி அடைந்தாக வேண்டும். உண்மையோடு கடமையைச் செய்கிறவர்கள் கிடைப்பதே இன்றைக்கு அபூர்வம் ஆயிற்றே!

மகேந்திரனும், அதைத்தான் சொன்னான்.

அவள் தயங்கித் தயங்கி, அந்தப் பேச்செடுக்க முனைந்தபோது, புரிந்துகொண்டு, அவனாகவே தன் முயற்சிகளைப் பற்றித் தெரிவித்தான்.

'கவர்னஸ்'க்காகப் பலபேரிடம், சொல்லி வைத்திருக்கிறானாம்! ஆனால், அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என்றால், என்னமோ பெரிய உதவி செய்கிற மாதிரி எண்ணிக் கொண்டு, புத்தி சொல்லத் தொடங்கி விடுகிறார்களாம்!

புதிதாக ஒன்றுமில்லை! பெண்ணுக்கு ஓர் அம்மாவைக் கொண்டு வருகிற வழியைப் பார்க்க வேண்டுமாம்! கேட்கக் கேட்க, அவனுக்கு ஆத்திரமாக வந்ததாம்!

"அப்படி ஒருத்தி வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு, அனியை கொடுமைப்படுத்தினால் என்ன ஆகும் என்ற யோசனையே இல்லை, பார்! இவர்களது உதவியே வேண்டாம் என்று, வேலைக்கு ஆள் தேடித் தரும் நிறுவனத்தில் பெயரைப் பதிந்து வைத்ததும் பெரும் துன்பமாகிப் போயிற்று! தினந்தோறும் யாரையாவது அனுப்பினார்கள்தான்! ஆனால், வந்தவர்கள் யாருமே, அனியை ஒரு குழந்தையாக எண்ணுவது போலவே தெரியவில்லை! அவர்கள் சம்பாதிப்பதற்கு ஒரு கருவி.. அவ்வளவே! வீட்டில் டி.வி இருக்கிறதா என்பதுதான், எல்லோருக்கும் முக்கிய கேள்வி! சுந்தரி அத்தை ஒருவரிடம் பட்டது போதாதா?

அம்மாடியோ என்று பெரிய கும்பிடு போட்டு அனுப்பிவிட்டேன்!" என்று மகேந்திரன் சொன்ன தினுசில், சுதாகரி முறுவல் செய்தாள்!

"இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள், சுதாகரி! எப்படியாவது, யாராவது கிடைப்பார்கள்! நான்.. கொஞ்சம் வயது அதிகமாக.. அத்தை அளவு இல்லாமல், ஆனால் ஓரளவு கூடுதல் வயதில் தேடுகிறேன். அந்த வயதில், எல்லோரும் அவரவர் குடும்பத்தில், வசிக்கிற இடத்தில் ஐக்கியப்பட்டு விடுகிறார்களா? பழகிய இடத்தை விட்டுவிட்டு, இந்த மாதிரி தனிமையான இடத்துக்கு வந்து வசிப்பது பிடிக்கவில்லையாம்! பார்ப்போம்! ஆனால், பாவம்.. நீதான் இன்னும் கொஞ்ச நாள் சிரமப்பட வேண்டும்போலத் தெரிகிறது!"



அவன் வயது பற்றிக் கூறியதில் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, "அனியால் எனக்கு சிரமமே கிடையாது, மகேந்திரன்! உங்களுக்கு அங்கே தனியாக கஷ்டமாக இருக்கிறதே என்றுதான், 'கவர்னஸ்' பற்றி நான் கேட்க எண்ணியதே!" என்று விளக்கினாள் அவள்!

"நான்தான்..." என்று தொடங்கியவன், தலை அசைத்துப் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவள் ஏறிட்டு நோக்கவும், முறுவலித்து, "எல்லாம் சீக்கிரமே சீர் செய்து விடலாம் என்ற நம்பிக்கைதான்! முயற்சி செய்கிறேன்தானே?" என்றான் மகேந்திரன்.

அவனுக்கே சீக்கிரமாக ஆள் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை! அதை, இப்படி சமாளிக்கிறான் என்று எண்ணினாள் சுதாகரி.

ஆனால், அனி எத்தனை நாள் அவளுடன் இருந்தாலும், அவளுக்கு மகிழ்ச்சிதானே? இடையில், துரைப்பாண்டியன் ஒரு நாள்.. தன் மாநிற முகத்தில் வெட்கக் கன்றலோடு வந்து, "வீட்டிலே, கல்யாணப் பேச்சு எடுக்கிறாங்க மேடம்!" என்று, தரையைப் பார்த்தவாறு தெரிவித்தான்!

முகத்தில் மலர்ச்சியோடு, "ரொம்ப சந்தோஷம்! எப்போது திருமணம், துரைப்பாண்டியன்?" என்று விசாரித்தாள் சுதாகரி!

அப்போது அங்கிருந்த மகேந்திரனும், "ஆமாம்! மிகவும் மகிழ்ச்சியான விஷயம் சொல்லியிருக்கிறீர்கள்! திருமணத்துக்குத் துணிமணி எல்லாம் நம் கடையிலேயே எடுத்துக் கொள்ளுங்கள், துரைப்பாண்டியன். அசல் விலைக்கே தரச் சொல்லி ஏற்பாடு பண்ணுகிறேன்! உட்கார்ந்து சொல்லுங்கள்! எப்போது திருமணம்?" என்று, கையை நீட்டி, இன்னொரு நாற்காலியை இழுத்துப் போட்டு, உபசரித்து வினவினான்.

உட்கார்ந்து, இன்னமும் அதிக வெட்கப்பட்டவாறு, "ஐயோ, என்னங்க நீங்க, அதுக்குள்ளே இப்படியெல்லாம் கேட்கிறீங்களே! இப்பதான் பெண் வீட்டுக்காரங்க, வீட்டைத் தேடி வராங்க! முன்னெல்லாம், அடிதடிக்காரன், முரட்டுப் பய, கலர் பார்க்கிறவன்னு எனக்குக் கெட்ட பேரு! பொண்ணைப் பெத்தவுங்க, எட்டிக்கூடப்

பார்க்க மாட்டாங்க! மேடம், நல்ல வலுவா ஒரு பாடம் சொல்லிக் கொடுத்தாங்களா? தோட்டம், துரவைப் பெருக்கி, நானும் ஒரு மனுசன்னு பேரெடுத்து விட்டேனில்ல? இப்ப, தினமும் வந்து மொய்க்கிறாங்க! எங்க அம்மாளுக்கு ஒரே சந்தோசம்! சீக்கிரமாப் பண்ணிக்க.. என்று ஒரே தொணப்பு! ஆனா, பொண்ணு பார்க்கப் போறபோது மேடம் கூட வர வேணும்! முடிவும் நீங்களேதான் பண்ண வேணும்!" என்று நெளிந்தான் அவன்.

"அதெல்லாம் சரிவராது, துரைப்பாண்டியன். உங்களுக்குப் பிடித்த பெண்ணை, நீங்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்! பெண்ணுக்குப் பிடித்தமா என்று மட்டும் ஒரு வார்த்தை கேட்டு விடுங்கள். அது போதும்! அது முக்கியமும்கூட" என்றாள் சுதாகரி!

"அதுதான், கொஞ்சம் கஷ்டம்னு தோணுது மேடம்! பொண்ணு பேசி வரவுங்க ஊரெல்லாம், ரொம்பப் பட்டிக்காடாத் தெரியுது! பொண்ணு கூடப் பேச விடுவாங்களான்னு தெரியலை!" என்று கவலைப் பட்டான் துரைப்பாண்டியன். அவனது மேலூரை மனதுள் எண்ணிப் பார்த்த சுதாகரிக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது! இவன், இன்னோர் ஊரைப் பட்டிக்காடு என்கிறானே!

"அப்படியானால், கீழூர் கலைச்செல்வி மாதிரி யாரையாவது, உங்களோடு அழைத்துப் போய், அவளை விட்டுக் கேட்கச் சொல்லுங்கள்! கலைச்செல்வி கூட, உங்களுக்கு ஏதோ சொந்தம்தானே?" என்றாள் சுதாகரி.

துரைப்பாண்டியனின் முகம் சட்டெனப் பிரகாசமடைந்தது! மகேந்திரனைப் பார்த்து, "இதுதான் நம்ம மேடம் என்கிறது!" என்றான் பெருமையாக.

மற்றவன் புன்னகையோடு நோக்கவும், "பாருங்க, அந்தப் பொண்ணு கிட்டே எப்படிப் பேசுகிறதுன்னு நான் அப்படிக் குழம்பிக்கிட்டு இருந்தேன். எப்படி சாதாரணமா வழி சொல்லிட்டாங்க, பாருங்க!" என்று விளக்கிவிட்டு, மீண்டும் சுதாகரியிடம் திரும்பினான்.

"அதிலே பாருங்க மேடம், பொண்ணு பேசி வராங்களே, மேல வளவு, சின்னக் காட்டூரு எல்லா இடத்திலேயும் கலைச் செல்விக்கு அம்மா வீட்டு உறவுக் காரங்க இருக்கிறாங்க. அதனாலே, அவளையே கூட்டிப் போகலாம்! நல்ல யோசனை சொல்லித் தந்ததுக்கு டாங்.. நன்றி மேடம்! வரட்டுமா? நம்ம திரட்டிலே போட்டது! கொஞ்சூண்டு கடலை கொணர்ந்தேன். அவித்துக் கொடுத்தா, பிள்ளைகளுக்கு நல்லது! நல்ல காரியம் சொல்ல வந்தப்ப கொணாந்தது, வேணாமின்னு சொல்லிடாதீங்க! வரட்டுமா?" என்று எழுந்து, சுதாகரி மறுத்து ஏதும் சொல்லு முன்பாக, வேகமாகச் சென்று விட்டான்!

அவன் செல்வதைப் புன்னகையோடு பார்த்திருந்துவிட்டு, "பயங்கரமான பக்தன்!" என்றான் மகேந்திரன். "விட்டால், உன் காலிலேயே விழுந்து விடுவான் போல!"

"ம்! அம்மனுக்குப் பதிலாகக் கோயிலுக்குள் உட்கார வைக்காத குறைதான்! சும்மா இருந்தால் தேவலையே என்று, சில சமயம் தோன்றும்! சரியான வழிகாட்டுதல் இல்லாமல் வளர்ந்தவர் என்று நினைக்கிறேன்! திருமணமாகி மனைவி

வந்துவிட்டால், நல்லபடியாக இருப்பார். கடவுள் அருளால் நடக்கட்டும்!" என்றாள் அவள்.

யோசனையோடு, "துரைப் பாண்டியன் சொன்ன ஊர்களில், என் தூரத்து உறவினர்களும் இருக்கிறார்கள் என்று ஞாபகம்! பூர்வாங்கம் அங்கேதான்!" என்றான் அவன்.

"சத்தமாகச் சொல்லாதீர்கள்! நகரத்துப் பெரிய மனிதர் என்கிற மரியாதை போய், பட்டிக்காடு பட்டியலில், உங்களையும் துரைப்பாண்டியன் சேர்த்துவிடப் போகிறார்!" என்று புன்னகையோடு எச்சரித்தாள் சுதாகரி.

"அதைவிட மோசம், அந்தப் பெண்ணின் அபிப்பிராயத்தை நேரில் கேட்டுச் சொல்லும்படி, என்னைத் தூது அனுப்புவதுதான்!" என்றான் மகேந்திரன்.

"சே! அதெல்லாம் செய்யமாட்டார்!"

"எல்லாம் செய்வார்! பெண்ணின் சம்மதத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நீ சொல்லிவிட்டாய். தலை கீழாக நின்றாவது, அதை அறிவதுதான் துரைப்பாண்டியனுக்கு முக்கியமே தவிர, அறியும் வழிமுறை அல்ல!" என்று முடித்தான் அவன்!

மறுக்க மாட்டாதபோதும், "எப்படியோ, மணக்கப் போகும் பெண்ணின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க நினைக்கிறாரே! அதுவே பெரிது!" என்றாள் சுதாகரி பாராட்டாகவே. ஆனால், மகேந்திரனின் கண்களில் யோசனையைக் கண்டதுமே, வாயை விட்டிருக்கக்கூடாது என்று தோன்றியது அவளுக்கு!



அவன் என்ன எண்ணுகிறான் என்பதைக் கிட்டத்தட்ட அவளால் ஊகிக்கவும் முடிந்தது! ஆனால், தவறைத் திருத்தவும் அவளுக்கு மனமில்லை! அப்புறம், அதிலிருந்து இன்னமும் வேண்டாத பேச்சுகள் தொடரும்! அதைவிட, என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ளட்டும் என்று விட்டு விடுவதும் மேல்! கேட்டால் பதில் வராது என்பது, அவனுக்கும் தெரியும்தானே?

சற்றுக் கூர்மையாகப் பார்த்தபோதும், மேற்கொண்டு அவனும் எதுவும் கேளாததால், அப்போதைக்குப் பிரச்னை இல்லாது போயிற்று! ஆனால், இன்னமும் ஏதோ உள்ளூர உறுத்த, அன்றைய நிகழ்வுகளை மீண்டும் மனதில் கொண்டு வந்து ஆராய்ந்தவளுக்கு, உறுத்தலின் காரணம் புரிந்தது!

மகேந்திரன் இயல்பாக நாற்காலியை இழுத்துப் போட்டு, துரைப்பாண்டியனை உட்காரச் சொன்னது! அவள் வீட்டில், அவளது விருந்தாளியை, அவன் உபசரிக்கிறான்! முதல் நாளன்று மகேந்திரனைக் கிளப்புவதற்குத் துரைப்பாண்டியன் முயன்றதுபோல, இதுவும் ஒருவகையான உரிமை மீறல் தான் அல்லவா? அந்தச் சமயத்தில், அவளே உணராதபடி, எவ்வளவு இயல்பாக நடந்திருக்கிறது!

இப்போதும், மகேந்திரன் திட்டமிட்டு இந்த உரிமையைக் கைப்பற்றி இருக்கிறான் என்று, சுதாகரி கருதவில்லை! நன்கு பழகிவிட்டதால், அவனே அறியாமல் நடந்ததுதான்!

அனியை முன்னிட்டு அடிக்கடி வந்து போய் எல்லோரிடமும் நன்கு பழகிவிட்டதால், அவனது உபசாரமும் தானாக வந்த உணர்வுதான்! அதை அவள் கவனியாததும் அப்படித்தான்.. துரைப்பாண்டியைப் பாராட்டுவதாக எண்ணி, அவள் வார்த்தையை விட்டது கூட, அந்த மாதிரிதான்!

எலியை விரட்டுவதற்காகப் பூனை வளர்க்கத் தொடங்கிய சன்னியாசி, சம்சாரியான கதை போல, அளவு மீறும் முன் இதை நிறுத்த வேண்டும்! ஆனால், அனி அவள் வீட்டுக்குப் போன பிறகு, மகேந்திரனின் வரவுகள் தானாகக் குறைந்து, நின்றும் விடப் போவதுதான் என்பதால், இப்போதைக்கு அவள் சற்று ஒதுங்கிப் போனாலே போதுமானது!

ஒதுங்க வேண்டும் என்று சுதாகரி தனக்குள் எண்ணிக் கொண்டபோதும், எண்ணத்தைச் செயல்படுத்துவது கடினமாக.. அதற்கான வாய்ப்புக் கிட்டாமலே இருந்தது எனலாம்!

ஒன்று மாற்றி ஒன்று என்று, ஏதோ ஒரு காரணம்!

முதலாவதாக, அனிஷாவின் பிறந்த நாள் வந்தது!

எப்போதுமே துடிப்பாக முந்திக்கொண்டு செயல்படும் பவித்ரா, தோழியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தையும் உற்சாகத்துடன் திட்டமிடத் தொடங்கி விட்டாள்.

அனிக்குக் கொடுக்க வேண்டிய பரிசுகள், அன்றைய உணவு மெனு, வீட்டை அலங்கரிப்பது.. எல்லாமே!

அவளது ஆலோசனைப்படி, பார்ட்டி உடைகளோடு பார்பி, குறிப்பிட்ட வீடியோ கேம் எல்லாம் வாங்கி பார்சல் செய்து வைக்கப்பட்டன.

டூட்டி ஃப்ரூட்டி, தேங்காய்ப்பூ பன், சாக்லெட், ஐஸ்கிரீம், பீட்ஸா என்று, இருவருக்கும் பிடித்தமான உணவு வகைகள்.

கடைசியாக, முன்னேற்பாட்டின்படி, சிறுமிகள் இருவரையும் அழைத்துக் கொண்டு ரங்கநாதன் வெளியே சென்றுவிட, மகேந்திரனும், சுதாகரியுமாக பார்ட்டி அறையை அலங்கரித்தார்கள்!

உப், உப்பென்று பலூன்களை ஊதுவதும், உடையும்போது சிரிப்பதும், உடையாததைக் கட்டுவதும், வண்ணக் காகிதங்களை ஒட்டுவதுமாக உற்சாகமாக விழா வேலை செய்யும்போது, யார், எங்கே ஒதுங்கிப் போவது? ஒதுங்கும் நினைவுகூட, சுதாகரிக்கு வரவில்லை!

கடைசியாக விளக்கை அணைத்து வைத்திருந்து, அனியை உள்ளே கூட்டி வந்தபின் விளக்கைப் போட்டு, பலூன் உடைத்து, கேக் வெட்டி, 'ஹாப்பி பர்த்டே' பாடி, பரிசு கொடுத்து.. எல்லோருக்குமே மகிழ்ச்சி மட்டும்தான்!

ஆனால், கடைசியாகப் பரிசு கொடுத்து முடிக்கும் நேரத்தில், மகேந்திரன் கொண்டுவரச் செய்த இரு சைக்கிள்களையும் பார்த்ததும், சுதாகரியின் முகம் கருத்துவிட்டது!

ஆனால், அவளுமே பிள்ளைகளுக்குள் வேறுபாடு தோன்றிவிடக் கூடாது என்று, அவள் கொடுத்த பார்பி, ரங்கநாதன் கொடுத்த வீடியோ கேம் எல்லாமே இரண்டாகவே வாங்கி வைத்திருந்ததால், வெளிப்படையாக அப்போது எதுவும் சொல்லவும் முடியவில்லை!

அதுவும், சைக்கிள்களின் சீட், மணி, முன்புறத்தில் அழகான கூடை, சரிந்து விழுந்து விடாமல் இருப்பதற்காக இரு புறங்களிலும் வைக்கப்பட்டிருந்த ஸ்டாண்ட் எல்லாவற்றையும், இரு சிறுமியருமாக, ஆவலாகத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்த பிறகு, அவளால் என்ன சொல்ல முடியும்?

அதற்கும் மேலாக, மகேந்திரன் பிடித்துக் கொள்ள, இரு பெண்களும் உற்சாகக் கூக்குரலுடன் வெள்ளோட்டம் ஓட்டிப் பார்த்துவிட்டு, பெரிய சாலைப் பக்கம் சைக்கிளில் போவதில்லை என்று அவனிடம் உறுதிமொழியும் கொடுத்த பிறகு?

இரு மக்களையும் பொறுமையும் பிரியமுமாக மகேந்திரன் சைக்கிளில் உட்காரவைத்து, ஓட்டிச் சென்றதைப் பார்க்கையில் மனதில் நேர்ந்த நெகிழ்வு வேறு!

ஆனால், அப்போதைக்கு சுதாகரி சும்மா இருந்தாலும், மறுநாள் காலையில் அவனை பார்க்க நேர்ந்தபோது, ரங்கநாதனோடு பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, "இந்த சைக்கிள் இரண்டாயிரம் ரூபாய் என்று கேள்வி. இந்தாருங்கள்!" என்று குரலில் ஓர் அழுத்தத்துடன் கூறிப் பணத்தை நீட்டினாள்.

இதை எதிர்பார்த்தே இருந்தவன் போல, "நான் சைக்கிள் கடை வைத்திருப்பதாக, உனக்கு யார் சொன்னார்கள், சுதாகரி?" புருவம் உயர்த்திக் கேட்டான் மகேந்திரன்.

அவளது சாப்பாட்டுக் கூடைப் பேச்சைச் சொல்லிக் காட்டுகிறானாம்! திருப்பிக் கொடுக்கும் வாய்ப்புக்காகக் காத்துக்கொண்டே இருப்பான் போல!

ஆனால், அதுவும் இதுவும் ஒன்றாக முடியுமா?

பொறுமையை இழுத்துப் பிடித்திருப்பதை வெளிப்படையாகக் காட்டியவாறு, சுதாகரி பேசத் தொடங்கினாள்.

## அத்தியாயம் – 15



**த**ன் கருத்தை எடுத்துச் சொல்வதிலோ, மனநிலையை வெளிப்படையாகக் காட்டுவதிலோ, சுதாகரிக்குத் தயக்கம் இருக்கவில்லை.

கருத்து சரியா, தவறா என்பதில் ஐயம் இராதபோது, அதைச் சொல்ல ஏன் தயங்க வேண்டும்?

அதேபோல, அவனது செயல், தனக்கு எரிச்சலூட்டி இருப்பதையும், மகேந்திரன் அறிந்தால்தானே, மேற்கொண்டு இது தொடராமல் இருக்கும்?

எனவே, மனதை மறையாத.. ஆனால், கோபத்தைக் கட்டுப்படுத்திய குரலில், "பாருங்கள் மகேந்திரன், எதற்கும் ஓர் அளவு இருக்கிறது! இவ்வளவு விலை உயர்ந்த பொருளை, நான் சும்மா வாங்கிக் கொள்ள முடியாது! என்னைக் கடுமையாகப் பேச வைக்காமல், தயவுசெய்து பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்!" என்றாள் சுதாகரி.

"உன் கடுமையான பேச்சு, உனக்குக் கேடயமா, ஆயுதமா சுதாகரி? கேடயம் என்றால், என்னிடம் உனக்கு அது தேவையில்லை! ஆயுதம் என்றாலும், அதனாலும் பயனில்லை! பொறு, பொறு! நான் சொல்லி முடித்து விடுகிறேன்! இந்தக் கொடுக்கல், வாங்கல் பற்றி, நாம் ஏற்கனவே பேசி முடித்து விட்டோம். கணக்குப் போட்டால், நீ செய்து இருப்பது, இதை விடவும் கூடுதலாகத்தான் வரும்! எனவே, அந்தப் பேச்சு இப்போது வேண்டாம். அடுத்து, உன் கடுமையான பேச்சு! அது வெறும் வெற்று மிரட்டல்தான் இல்லையா? யோசித்துப் பார், அனியின் மனம் நோக, நீ நடப்பாயா? மாட்டாய் என்பது எனக்குத் தெரியும்! என்னைப் போலவே, உனக்கும் அது நிச்சயம்!"

கண்மூடித் திறந்து, "எனக்கு என்று சில வரைமுறைகள் வைத்திருக்கிறேன், மகேந்திரன்! அவை மீறப்படுவது, எனக்குப் பிரியமில்லை!" என்றாள் அவள்.

“மீறப்படவில்லை என்பதுதானே, என் வாதமே!” என்ற மகேந்திரன்.. “யதார்த்தமான பெண் நீ, சுதாகரி! இதை ஏன் பெரிதாக நினைக்கிறாய் என்றே எனக்குப் புரியவில்லை!” என்று முடிக்காமல் நிறுத்தி, அவள் முகத்தைப் பார்த்தான்.

எலியை விரட்ட பூனைக் குட்டியை வளர்த்த சன்னியாசியைப் பற்றி, அவள் தனக்குள் நினைக்கலாம்! ஆனால், அதை, இவனிடமே எப்படிச் சொல்வது?

அவள் பேசாதிருக்கையில், அவனே தொடர்ந்தான். “நான் அதிகப்படி உரிமைகள் எடுத்துக் கொள்ளக்கூடும் என்ற அச்சமா, சுதாகரி? அன்று துரைப்பாண்டியனை உட்காரச் சொன்னபோதே, உன் முகம் மாறியதோ என்று எனக்குச் சந்தேகம்! நான் வேறு என்ன செய்ய முடியும்.. சொல்லு! அனியுடைய அப்பாவாக அடிக்கடி வரும் பழக்கத்தில், நான் இங்கே உட்கார்ந்து பேசுகிறேன்! பாவம், வெள்ளை மனிதர்! அவர் நிற்பது பொருந்தாமல் தன்னியல்பாக உட்காரச் சொன்னேனே தவிர, எந்த உரிமை காட்டும் எண்ணத்திலும் இல்லை, சுதாகரி! பொது இடமாய், ஒரு ஹோட்டலில் பார்த்திருந்தால் கூட, நான் அவரை உட்காரச் சொல்லியிருப்பேன். அவ்வளவே! அதை நீ பெரிதாக நினைக்கத் தேவையே இல்லை!” என்றான் விளக்கமாக.

பூனைச் சாமியார் கதை, இப்போது சுதாகரிக்கே பொருத்தமற்றுத் தோன்றியது! மகேந்திரன் சொன்ன யதார்த்தமும் சரியாகவே தோன்ற, அதையும் மறையாது ஒப்புக் கொண்டாள். “நீங்கள் சொன்ன கணக்கு சரிதான் என்றாலும், சைக்கிளின் விலை சற்று மருட்டிவிட்டது, மகேந்திரன்! இனி, இந்த மாதிரியாக எதுவும் வேண்டாம், ப்ளீஸ்! பவித்ரா வெளிப்படையாகப் பேசுகிறவள், நான் அதைத் தடுப்பதும் இல்லை. நீங்கள் சைக்கிள் வாங்கிக் கொடுத்ததாக, வெளியே பேச்சுப் பரவினால் நன்றாயிருக்குமா? அதனால்..”

“நெருப்பை ஈ மொய்க்க முடியாது என்று இந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும், சுதாகரி! ஆனாலும், உன் கருத்தை நினைவில் வைத்துக் கொள்கிறேன்! இனிமேல் கவலை வேண்டாம்! சரிதானா?” என்று அவன் இதமாகக் கேட்கவும், மனம் வெகுவாக லேசாகிப் போயிற்று அவளுக்கு!

சுதாகரியின் விருப்பத்தை மனதில் அழுத்தமாகப் பதித்துக் கொண்டவன் போல, அதன்பிறகு மகேந்திரன் அவளுக்குச் செய்த சில பல உதவிகளில், அவனது காசு, பணம் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்பதோடு செய்தவற்றை அவன் உதவியாகவே ஒப்புக் கொள்ளவில்லை!

உதவியாக எண்ணி அவள் நன்றி தெரிவிக்க முனைந்தபோது, “நீ செய்ததற்கு, இது பொன் வைக்கும் இடத்தில் பூ” என்றான் அவன்! அதிலும் கூடப் பலது, தானாக நடப்பதாம்!

முதலாவதாக, ஒருநாள் போன் செய்து, “பக்கத்துக் கல்யாண மண்டபத்துக்குக் காய்கறி சப்ளை பண்ண உன்னால் முடியுமா? வழக்கமாகப் பண்ணுகிறவர் ஏதோ அவசரம் என்று ஊருக்குப் போய்விட்டார். உனக்கு நாலு மணிவரை அவகாசம் இருக்கிறது!” என்றான் அவன்.

சற்று யோசித்துப் பார்த்துவிட்டு, “முடியும்! முகவரி சொல்லுங்கள்!” என்றாள் சுதாகரி! தந்தைக்கு உடல்நலக் குறைவு என்று திடுமென ஊருக்குப் போன பழைய காய்கறி விற்பனையாளர், தந்தைக்கு உதவியாக ஊரிலேயே தங்கிவிட, அதிலிருந்து, அந்தக் கல்யாண மண்டப வாடிக்கை சுதாகரியினது ஆயிற்று!

அவ்வப்போது மொத்த லாபம் என்று நன்றி தெரிவிக்க முனைந்தால், அவன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை!

“அது பெரிய உதவி அல்ல!” என்றது தவிர.




அவன் அலட்சியப்படுத்திய தினுசில், சுதாகரிக்குமே, அப்படித்தானோ என்றுகூட ஒருதரம் தோன்றி விட்டது!

கல்யாண மண்டபத்திலிருந்து, அவசரத்துக்கு ஏதாவது துணி வாங்க வந்திருப்பார்கள்! மொத்தமாகச் சோறு வடிக்கக் கூட, காடாத் துணியைத்தானே பயன்படுத்துகிறார்கள்! அவர்களது பேச்சினூடே, இந்தக் காய்கறிச் சிக்கல் பற்றின பேச்சு வந்திருக்கும்! தன் வாடிக்கையாளர்களுக்கு உதவும் முயற்சியாக மகேந்திரன், அவளிடம் கேட்டிருப்பான்!

நல்லவன் என்பதால், உரிய அளவுக்கு அதிகமாக நன்றி ஏற்கப் பிடிக்கவில்லை போலும்! எப்படியும், அவனுக்கு ஒரு பைசா லாபம் இல்லாதபோதும், அவளது பெயரைச் சொல்லத் தோன்றியதே.. அதுவே பெரிதுதான்! ஆனால், அவனே சொன்னதுபோல இது பெரிய உதவியும் அல்லதான்! அந்த வகையில், மகேந்திரன் சொல்வதும் சரிதான்..

இந்த ரீதியில் அவளது எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தபோதுதான். திடுமென, என்ன வெகு நேரமாக, மகேந்திரனைப் பற்றியே யோசிக்கிறோமே என்று அவளுக்குத் தோன்றியது!

அவன் ஏதோ அந்த நிமிஷத்தில், அவளது பெயர் நினைவு வந்து, சொன்னான்.. அது, அவளுக்கு நன்மையாக முடிந்தது! ஒவ்வொரு விற்பனையிலும், சுளையாக ஐநூறுக்கும் மேலாகக் கிடைக்கிறது! அவ்வளவே!

அத்தோடு விஷயமும் முடிந்ததுதானே? அதற்கு மேலாக, அடிக்கடி அவனைப் பற்றியே என்ன நினைப்பு?

யாரைப் பற்றியும், அதுவும், ஆண்களைப் பற்றி அதிகம் நினைக்கக் கூடாது என்று மனதுக்குக் கடிவாளம் இட்டுப் பிடிவாதமாக சுதாகரி வேறு விஷயங்களைப் பற்றி சிந்திக்கலானாள்.

கடைசி 'டெர்ம்' தொடங்கிவிட்டதால், பிள்ளைகளுக்குப் பாடப் பயிற்சியும் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டியிருந்ததால், மனதைக் கட்டுப்படுத்த, சுதாகரி அதிகச் சிரமப்பட வேண்டியிருக்கவில்லை!

கோடிட்ட இடங்களில் உரிய எண் அல்லது எழுத்துக்களைக் கொண்டு நிரப்புவது, எழுத்துக்களை வரிசைப்படுத்தி வார்த்தைகளைக் கண்டுபிடிப்பது போன்ற சில பயிற்சிகளை அவளாகவே எழுதி, இரண்டு காப்பி ஜெராக்ஸ் எடுத்து, பவி, அனி இருவருக்கும் தனித்தனியே வரிசையாக செட் போட்டு, அவற்றை சுதாகரி 'ஸ்டேப்பிங்' பண்ணிக் கொண்டிருந்த போது, வீட்டு டெலிபோன் மணி அடித்தது!

மகேந்திரன்தான்!

பண்ருட்டி பக்கமாக, ஒரு நண்பர் குடும்பத்தில் வாரிசு பிறந்ததைப் பெரிதாகக் கொண்டாடி, மகேந்திரனையும் வற்புறுத்திக் கூப்பிட்டிருந்தார்கள்!

அதிகாலையிலேயே கிளம்பிப்போய், இரவில் திரும்பி விடுவதாகத் திட்டம்! இப்படி இடையில் போன் பண்ணுகிறானே.. என்னவோ, ஏதோ என்று சுதாகரி ஒரு கணம் பதறிப் போனாள்.

ஆனால், அவள் ரொம்பவும் கலங்குமுன்னராக, மகேந்திரன், தான் அழைத்ததன் விவரம் தெரிவித்தான்.

"இங்கே என் நண்பருடைய நெருங்கிய உறவினர் முந்திரிப் பருப்பு ஏற்றுமதி செய்கிறவர். நல்ல தரமான முந்திரிப் பருப்பு, விலை மிகவும் மலிவாகத் தருகிறேன் என்கிறார். வெளி விலைக்கு, நாற்பது சதவீதம் குறைவு! உனக்கு பயன்படுமா? திருமண மண்டபத்துக்குக் காய்கறிகளோடு, இதையும் நீ விற்கலாமே என்று நினைத்தேன்! மற்றவர்களுக்கும், காய்கறி தவிர, வேறு பொருட்களும் நீ வாங்கிக் கொடுக்கிறாய்தானே? இதற்கும் தேவை இருக்குமா என்று பார்! ஒரு மணி நேரத்துக்குள் முடிவு சொன்னாயென்றால், நான் வரும் போதே, இருபது முப்பது கிலோ வாங்கி வந்துவிடுவேன்! விற்கிற விதம் பார்த்து, மேற்கொண்டு வாங்கிக் கொள்ளலாம்!" என்றான் மகேந்திரன்.

நானாகக் கேட்கவில்லை! போகிற இடத்தில், இப்படி ஏதாவது கிடைக்கிறதா என்று பார் என்றுகூடச் சொல்லி அனுப்பவில்லை! நானாக அவனை நினைக்கக் கூட இல்லை! அவனை நினைக்கக் கூடாது என்று, நான் நினைத்திருந்ததும், அவனுக்குத் தெரியாது!

மகேந்திரன், தானாகச் செய்கிற உதவி! ஒரு பொதுப் பணி மாதிரியான செயல்! செய் தொழில் அளவில், இதில் நல்ல லாபம் வரும்! எனவே, இதை விடுவது மடத்தனம்!

மகேந்திரன் சொன்ன ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே, சுதாகரி, அவனுக்கு போன் செய்துவிட்டாள், முந்திரிப் பருப்பை வாங்கி வருமாறு!

பருப்பின் தரமும் மிகவும் நன்றாக இருக்கவே, வேகமாக விற்றுத் தீர்ந்துவிட, மகேந்திரனுடைய நண்பரிடம் வாடிக்கையாக முந்திரிப் பருப்பு வாங்கத் தொடங்கினாள் சுதாகரி.

அதில் கிடைத்த லாபத்தை எண்ணி, அவள் நன்றி தெரிவிக்க முயன்றபோது, "விற்பதற்கான பொருள் அவரிடம் இருந்தது! அந்தப் பொருளின் தேவை உனக்கு இருந்தது! இருவரையும் கை காட்டி விட்டது தவிர, நான் ஒன்றும் செய்யவில்லையே! எதற்காக, இந்தத் தேவையற்ற நன்றி?" என்றான் அவன்!

அடுத்து, ஒருநாள், "இந்த ஷர்ட் அணிந்து பாருங்கள், அங்கிள்!" என்று ஒரு ஷர்ட்டுடன் வந்தான் மகேந்திரன். ரங்கநாதன் ஷர்ட்டுடன் உள்ளே செல்ல, சுதாகரி லேசான புருவச் சுளிப்புடன் பார்த்தாள்.

"பெரிதாக ஒன்றுமில்லை, சுதாகரி! ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில், கடையில் சரக்குக் குறைப்பு விற்பனை ஒன்று நடத்துவது உண்டு! கடையில் எவ்வளவு குறைவாகச் சரக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்கு வரி குறையும். சரியாகச் சொல்லப் போனால், மிகவும் உண்மையாக விலைக் குறைப்பு விற்பனை, இது மட்டும்தான் என்பேன்! கடைக்கு வந்து ஆறே மாதங்கள் ஆனவற்றைக்கூட, இந்த விலைக் குறைப்பு விற்பனையில் சேர்த்து விடுவோம்! அதற்காகக் கடையில் சரக்குகளைப் பிரித்து எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்! கூடக் கொஞ்சம் பழசாகி விட்டவற்றைக் கடை ஆட்களுக்கு ஒரு செட் சும்மாவே கொடுப்பதுண்டு! இதுவும், இதுபோல வேறு நிறங்களில் இன்னும் இரண்டும் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன! இதன் அளவு, நம் கடை ஆட்கள் யாருக்கும் சரியாக இல்லை! அங்கிளின் வயது, பட்டாளத்துத் தோள் விரிவு நினைவுக்கு வந்தது! எடுத்து வந்தேன்.." என்றவன், குரலைத் தணித்து, "உன் உத்தமக் காசு பணக் கொள்கைக்கு ஒரு பாதகமும் நேர்ந்துவிடாது, சுதாகரி! இந்த ஷர்ட்டுகளின் விலை அதிகம் கிடையாது என்பதோடு, அனிக்கு அங்கிள் செய்வதற்கும், நான் கொஞ்சமேனும் திருப்பிச் செய்ய வேண்டும்தானே?" என்று முடித்தான்.



தலையசைத்து, "இதற்கே இவ்வளவு சொல்கிறீர்கள்! அப்படிப் பார்த்தால், பவிக்காகவும், கூடவே எனக்காகவும், நான் அவருக்கு எவ்வளவு செய்ய வேண்டும்?!" என்றாள் சுதாகரி குரலில் நெகிழ்வுடன்.

"உனக்கு, அவர் உறவினர் சுதாகரி, ரத்த சம்பந்தம்."

"இல்லை.." என்று தொடங்கியவளின் பேச்சு சட்டென நின்றது. உதடுகளை இறுக மூடி நிறுத்தியிருந்தாள்!

"சுதாகரி?"

மகேந்திரனின் குரலில் இருந்த கேள்வி, சுதாகரிக்குப் புரியாமல் இல்லை! தரையைப் பார்த்தவண்ணம், ஒரு கணம் முகம் இறுக நின்றாள் அவள்.

மெல்ல நிமிர்ந்து, “ஆமாம், மகேந்திரன்! பெரியப்பா எனக்கு உறவு முறையில் பெரியப்பா அல்ல! அவருடைய மனைவியைப் பெரியம்மா என்று கூப்பிட்டு, அந்தப் பழக்கத்தில் பெரியப்பா ஆனவர்! ஆனால், மனதளவில் அதே உறவுதான். என்னைப் பெற்ற தந்தைக்கும் மேலாகப் பரிவு காட்டி, என்னை ஒரு மனுஷியாக்கியவர். இந்த உண்மை வேறு யாருக்கும் தெரியாது.. உங்களிடமே, எப்படி வாய் விட்டேன் என்று எனக்கே புரியவில்லை! தயவு பண்ணி மனதோடு வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாகப் பெரியப்பாவிடம் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதீர்கள்! அவருக்கு உறவு முக்கியம்!” என்றாள் அவள் அவசரமாக.

“நிச்சயமாய்!” என்று உறுதியளித்தான் அவன்! “ஆனால், முன்னெப்போதையும் விட இப்போது, அவர் மீது எனக்கு மரியாதை அதிகம் ஆகியிருக்கிறது!” என்றான் தொடர்ந்து.

“வெறும் மரியாதையா? என்னைப் பொறுத்தவரை, பெரியப்பா கடவுளுக்குக் சமம்!” என்றாள் சுதாகரி நெகிழ்ந்த குரலில்.

கதவு திறக்க, புது ஷர்ட்டை அணிந்துகொண்டு ரங்கநாதன் வெளியே வந்தார்! “இந்த பட்டன் போடுகிற ஓட்டையைக் கொஞ்சம் பெரிதாக்க வேண்டும், மகேந்திரன்! அதில் பட்டனைத் திணிக்குமுன், இவ்வளவு நேரம் ஆகிவிட்டது.. மற்றபடி, அளவு வெகு கச்சிதமாக இருக்கிறது! அளவு எடுத்துத் தைக்கிற தையல்காரன்கூட, எனக்கு இவ்வளவு சரியாகத் தைத்தது இல்லை!” என்று மகிழ்ச்சியுடன் கூறினார் அவர்!

“ரொம்பவும் மகிழ்ந்து விடாதீர்கள், பெரியப்பா! இப்போது கச்சிதமாக இருக்கிறது என்றால் நனைத்ததும் உங்கள் புகழ்ச்சியால் வந்த பாசத்தில், ஷர்ட் உங்களை அதிகமாக இறுக்கிப் பிடித்துவிடப் போகிறது!” என்று கேலிக் குரலில் எச்சரித்தாள் பெண்.

“துணி சுருங்கும் என்று, என் கடைச் சரக்கை உங்கள் மகள் கேவலமாகப் பேசிவிட்டாள் அங்கிள்! இந்த அவமானத்தை ஈடுகட்டுவதற்காக, நான் தரும் மூன்று சட்டைகளையுமே நீங்கள் மறுக்காமல் பெற்றுக் கொண்டாக வேண்டும்!” என்று லகுவாகவே ஒரு பரிசை மூன்றாக்கினான் மகேந்திரன்.

“ஐயோ! மூன்றெல்லாம் வேண்டாம் மகேந்திரன்!” என்றார் பெரியவர், சட்டையை லேசாக வருடியபோதும், அவசரமாக!

“சும்மா வாங்கிக் கொள்ளுங்கள் பெரியப்பா. பணம் கொடுத்துவிடலாம்!” என்றாள் சுதாகரி,

“ஏனோ? என் மகளுடைய தாத்தாவுக்கும் எனக்கும் உள்ள விவகாரம் இது! இதில் மற்ற யாரும் அநாவசியமாக மூக்கை நீட்ட வேண்டாம் என்று, உங்கள்

பெண்ணிடம் சொல்லி வையுங்கள் அங்கிள்!" என்றான் மகேந்திரனின் போலி அதட்டலாக!

"அதில்லை மகேந்திரன்.. மூன்று என்றால்.. ரொம்ப அதிகமாக.." என்றவரை இடைமறித்து,

"சொன்னதையே சொல்வதாக எண்ண வேண்டாம், அங்கிள்! ஆனால், அனியை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்ட விதத்துக்கு, நான் இதைவிட நூறு மடங்கு செய்தாலும், குறைவுதான்! அத்தோடு, இந்த ஷர்ட்கள் மூன்றும் வந்து, இரண்டு முழு ஆண்டுகள் முடிந்தாயிற்று! விற்பதானால், இதற்குள் விற்றிருக்கும். இப்போது, இந்த ஷர்ட்டுகள் கடையில் இருக்க, இருக்க, அங்கே இடமும் அடைசல்! இவற்றின் கொள்முதல் விலையோடு, மேலும் மேலும், அதற்கான வட்டியும் நஷ்டம்! அதனால்தான்.." என்று ஏதேதோ கதை சொல்லி, ஷர்ட்டுகளைக் கொடுத்துவிட்டே போனான் மகேந்திரன்.

அவன் கிளம்புகிறபோது, வழியனுப்புகிறவள் போலக் கூட வந்து, "ஆக, கொள்முதல் விலையோடு மேலும் மேலும் வட்டி சேர்ந்து அதிக நஷ்டமாவது, சும்மா கொடுத்துவிட்டால், லாபமாகி விடும் போல! வியாபாரத் தந்திரம் பிரமாதமாக இருக்கிறது!" என்றாள் சுதாகரி கிண்டலாக!

சற்றே அசடு வழிய, "நீ கண்டுபிடித்து விடுவாய் என்று, எனக்கு நிச்சயம்தான்! ஆனால், நீ சொன்னதைக் கேட்ட பிறகு, அங்கிளுக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்று ஒரு வேகம்! இது ஒன்றும், அதற்கு ஈடு அல்ல. தயவு பண்ணிக் கெடுத்து விடாதே, சுதாகரி.. ப்ளீஸ்!" என்று கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டான் அவன்!

"நானும் அப்படித்தான் ஊகித்தேன்! அதனால்தான் பெரியப்பா முன்னிலையில் எதுவும் சொல்லவில்லை! ஆனால், இதற்கு மேல் எதுவும் வேண்டாம்! தயவு பண்ணி!" என்றாள் அவள்.

"தாங்க்ஸ்! ஆனால், அங்கிளிடம் சொன்னது போல, இதுதான் உண்மையான தள்ளுபடிக் காலம்! இப்போது அவசரத் தேவை இல்லாவிட்டால்கூட, மொத்தமாக உன் ஆண்டுத் தேவைக்கே வாங்கி வைத்துக் கொள்ளலாமே! இரவு ஒன்பது மணிக்கு மேல் பிள்ளைகளோடு வந்தால், நிதானமாக அணிந்து பார்த்தே எடுக்கலாம்! உங்களைத் திருப்பி வீட்டுக்கு அனுப்புவது என் பொறுப்பு!" என்றான் அவன்.

"வியாபாரத்தை இந்த அளவுக்கு எப்படிப் பெருக்கினீர்கள் என்று இப்போது புரிகிறது!" என்று கிண்டலடித்தபோதும்.. இந்த வாய்ப்பை மறுப்பது தவறு என்று தோன்றிவிட பிள்ளைகள், பெரியவரோடு, 'இந்திரதனுசு'க்கு சுதாகரி சென்றாள்.

இப்படி ஒன்று மாற்றி.. ஒன்று என்றால், எப்படி மகேந்திரனை தூர நிறுத்துவது!

## அத்தியாயம் – 16



வெளியே 'ஷட்டரை'ப் பாதிக்கு மேலாக இறக்கி வைத்திருந்தார்கள். மகேந்திரன் சொல்லி வைத்திருந்ததால், ஆள் வந்து, சுதாகரி குழுவினரைத் தனி வழியில் அழைத்துச் செல்ல, உள்ளே ஜகஜ்ஜோதியாக இருந்தது!

துணிகளை பிரிக்கிற வேலை அங்கங்கே நடந்து கொண்டிருக்க.. ஒருபுறமாக ஏதோ படப்பிடிப்பும் நடந்து கொண்டிருந்தது!

அவர்களைப் பார்த்ததும் மகேந்திரன் அருகில் வர, ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "சினிமா எடுக்கிறாங்களா, அங்கிள்?" என்று விவரம் கேட்டாள் பவித்ரா!

நிழலாய் அவளைத் தொடர்ந்து சென்ற அனி, "நம்ம கடை சினிமாவில் வருமாப்பா?" என்று தன் பங்குக்கு விசாரித்தாள்.

"இது சினிமா இல்லைடா, கண்ணுங்களா! விளம்பரப் படம். சினிமா தியேட்டர்களிலும், எல்லாத் தமிழ் சேனல்களிலும்.."

"இந்தப் பற்பசைக்கெல்லாம் டி.வி-யிலே காட்டுவாங்களே! அது போலவா?"

"அதேதான் செல்லம்! இரண்டு பேரும் வருகிறீர்களா, பக்கத்தில் போய்ப் பார்ப்போம்! நீ துணிகளைப் பார், சுதாகரி! மணி, மேடத்துக்குக் காட்டுப்பா!" என்று, அவளுக்கு உதவிக்கு ஓர் ஆளை ஏற்பாடு செய்து விட்டு, பிள்ளைகளை அழைத்துப் போனான் மகேந்திரன்.

அந்த மணி மிகவும் உதவியாக இருக்க, வீட்டில் எல்லோருக்குமே நாலைந்து செட் எடுத்து வைத்தாள் சுதாகரி. அனிக்கும் சேர்த்துதான். அனிக்கு இப்படி பண லாபம் பார்த்து வாங்க வேண்டிய தேவை இல்லை என்றாலும், அவளுக்கு இல்லாமல், பவித்ராவுக்கு மட்டுமாய் எதையும் எடுத்து வைக்க, சுதாகரிக்கு மனம் வரவில்லை!

அப்புறம், தனக்கு ஒன்றும் இல்லையே என்று அனி வாடிப் போக மாட்டாளா?

இப்படித்தான், மகேந்திரனுக்கும் தோன்றியிருக்குமோ?

ஆனால், இப்போது அவன் ஏதாவது சொல்லிக் காட்டக் கூடும்..

எடுத்து வைத்த உடைகளை சிறுமியர் இருவருக்கும் அணிவித்து அளவு பார்க்கலாம் என்று தேடினால், அவர்கள் இன்னமும் படப்பிடிப்புப் பகுதியில்தான் நின்றுகொண்டிருந்தார்கள். அழைத்து வர அருகில் சென்ற போது, விளம்பரப் படத்தில் கதாநாயகிபோல நடுநாயகமாக நின்று கொண்டிருந்த பெண், சிரித்த முகமாய் ஏதோ கூற, மகேந்திரனும் அவள் முகத்தைப் பார்த்தபடி கவனமாகக் கேட்டிருந்தான்!

வழுவழுவென்று ஒளி வீசிய அந்தப் பெண்ணின் சருமத்தைப் பார்க்கையில், வெயில் - மழை பாராமல் அலைந்து, சற்றுக் கருத்திருந்த தன் முகம் நினைவு வந்து, சுதாகரி சற்றே மனம் குன்றினாள்.

ஒரு காலத்தில், ‘என் மகளின் சருமம் இருட்டிலும் ஒளி வீசும்’ என்பாள் அவள் தாய்! சுதாகரியும், அப்படி ஒன்றும் தன்னைப் பற்றிய அக்கறையே இல்லாதவள் அல்ல! அவ்வப்போது, பாலேடு, பழக்கூழ் என்று எதையாவது முகத்தில் ஊற வைத்துக் கழுவுவது உண்டுதான்!

ஆனால், இந்தப் பெண்ணின் சருமப் பாதுகாப்பின் முன், அது மிகக் குறைவாகத் தோன்றியது!

அந்த மாடல் பெண்ணின் தொழிலின் முக்கிய மூலதனமே, அவளது அழகுதானே? இன்னமும் அதிகமாக கவனித்துதானே ஆக வேண்டும்?

நேரத்தை வீணாக்க மனமின்றி அருகில் செல்ல, மகேந்திரன் பார்த்துவிட்டு, டைரக்டர், மாடல் என்று அங்கிருந்தோருக்கு, அவளை அறிமுகம் செய்து வைத்தான்.

“நல்ல வாய்ப்பும்மா! எதற்கும் யோசித்து முடிவு சொல்லுங்கள்!” என்றார் விளம்பரப் படத்தின் இயக்குநர்.

என்னவென்று தெரியாவிட்டாலும், அப்போது நின்று பேச மனமின்றி, “பிள்ளைகள் தூங்குகிற நேரம் ஆகிவிட்டது! முடிந்தவரை சீக்கிரமாகக் கிளம்ப வேண்டும்! எதுவானாலும், நாளைக்குப் பார்க்கலாம்!” என்றவள் சற்றே போரடித்து நின்ற இரு சிறுமிகளையும் பார்த்து, “உடைகளை அணிந்து பார்க்க வேண்டும். வாருங்கள்!” என்று அழைத்துச் சென்றாள்.

“முதலில் திட்டமிட்டபடி இன்னொரு ‘டேக்’ எடுத்து வையுங்கள். இதோ வருகிறேன்!” என்று சுதாகரியுடன் சென்று, அவள் எடுத்து வைத்த துணிகளை பார்வையிட்டான் மகேந்திரன்.



அனிக்கும் சேர்த்து எடுத்து வைத்திருந்தவற்றைப் பார்த்ததும் லேசாக முறுவலித்தானே தவிர, ‘என்னைச் சொன்னாயே’ என்பது போல எதுவும் சொல்லாமல் எல்லாவற்றையும் விவரம் குறித்துக்கொண்டான்.

அனியின் உடைகளுக்கானதை அதில் கழித்து, சுதாகரியிடம் மட்டும் காட்டிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு, அந்த மணியை அழைத்து, “எல்லோரையும் வீட்டில் விட்டுத் துணிகளையும் கொடுத்துவிட்டுத் திரும்பி வா!” என்று பணித்தான்.

எல்லோரையும் பார்த்து, ஒரு தரம் கையாட்டியவன், மறுபடியும் உள்ளே சென்றுவிட்டான்.

“மணி பத்துக்கு மேலே ஆகிறதே! எல்லோரும் எப்போது வீட்டுக்குப் போவீர்கள்?” என்று மணியிடம் ரங்கநாதன் கேட்டார்.

“அது ஆகும்ங்க ரெண்டு மணி, மூணு மணி ஆகும்! எந்நேரமானாலும், பிரித்து அடுக்கி வைத்து விட்டோமின்னால், நாளைக்குக் காலையிலே ‘சேல்சு’க்கு வர்றவங்களுக்கு வசதியாக இருக்கும்! நாமளும், நிம்மதியாகத் தூங்கி எழுந்து மதியம் வந்தால் போதும்!” என்றான் அவன்.

மகேந்திரன் எத்தனை மணிக்குத் தூங்கப்போய், எத்தனை மணிக்குத் திரும்புவானோ என்று சுதாகரிக்குத் தோன்றியது. ஆனால், ‘அவனது தொழிலுக்காக உழைப்பதுதானே? செய்ய வேண்டியதுதான்!’ என்றும் எண்ணிக்கொண்டாள் அவள்.

ஆனாலும், நள்ளிரவுக்கு மேல் அலுத்துக் களைத்து வீடு திரும்பும்போது, அந்த வீட்டில் தனியாக.. பாவம் தான்!

மறுநாள் காலையில் அவள் வீட்டுக்கு வந்த மகேந்திரனிடம் சோர்வுக்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை!

“எல்லா உடைகளும் பிடித்ததா?” என்று பவி, அனியிடம் கேட்டு, அவர்களின் சந்தோஷமான தலையாட்டலில் மகிழ்ந்தான்.

“உங்கள் சாக்லெட் ஃபிரிஜ்ஜில் இருக்கும்! மாலையில் எடுத்துக் கொள்ளுங்கள்! இனிமேல், கொஞ்சநாள் நான் அதிகம் வரமாட்டேன். அதற்கும் சேர்த்து, சாக்லெட் நிறையக் கொண்டு வந்தேன். எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் காலி பண்ணக் கூடாது! என்ன?” என்று ரங்கநாதனோடு பள்ளிக்குக் கிளம்பிய அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு, சுதாகரியிடம் திரும்பினான்.

“அந்த இயக்குநர் யோசிக்கச் சொன்னாரே, அது..” என்று தொடங்கி, அந்த விவரம் சொன்னான்.

“அனி, பவி.. இரண்டு பேரும் பார்க்கப் பளிச்சென்று இருக்கிறார்களாம்! நடிக்க வைக்கலாமா என்று என்னிடம் கேட்டார்! எனக்கு விருப்பமில்லை என்று சொல்லி விட்டேன். அவர், உன்னிடம் கேட்கச் சொன்னார். உனக்கு ஒரு வேளை..”

“ஊகூம்! இல்லை! அப்புறம் படிப்பில் கவனம் குறைந்து போகும்! இருவருமே இப்போது, வகுப்பில் முதல் ஐந்துக்குள் இருக்கிறார்கள்! வளர்ந்து, பிற்காலத்தில் அவர்களாக முடிவெடுக்கிற காலத்தில் எப்படியோ செய்து கொள்ளட்டும்! ஆனால், இப்போதைக்கு எனக்கு அவர்களது படிப்புதான் முக்கியமாகத் தெரிகிறது! அப்புறம், ‘துள்ளித் திரிகின்ற காலத்திலே..’ என்கிற பாட்டுமாதிரி ஆகிவிடக்கூடாது..” என்றவள், அவன் பார்த்த விதத்தில், “அந்தப் பாடல் உங்களுக்குத் தெரியும்தானே?” என்று கேட்டாள்.

“என்ன பாட்டு?”

“அதுதான்! ‘துள்ளித் திரிகின்ற காலத்தில் என் துடுக்கை அடக்கிப் பள்ளியில் விட்டிடாத பாதகனான என் தந்தையே’ என்று, சிறு வயதில் படிக்காமல் சுற்றி அலைந்த ஒருவன், பிற்காலத்தில் தன் கல்லாமைக்கு தந்தையைக் குற்றம் சாட்டிய பாடல்! அதுபோலப் பிள்ளைகள், பிற்காலத்தில் நம்மை நொந்துகொள்ளக் கூடாதில்லையா? அதனால், நீங்கள் வேண்டாம் என்றது சரிதான்!” என்றாள் சுதாகரி.



“நல்ல பாட்டு! சயமத்தில், அது உனக்கு நினைவு வந்ததும் பிரமாதம்தான்! ஆனால், படிப்புக்காக மட்டுமின்றி, அந்தப் பகட்டு, ஆளாளுக்குக் கொஞ்சல், பாராட்டு எல்லாமாகச் சேர்ந்து, அனிக்கு, அவள் அம்மா புத்தி வந்துவிடுமோ என்று எனக்குப் பயம்!” என்று மகேந்திரன் தொடர்ந்து கூறவும், சட்டென சுதாகரியின் முகம் கடுத்தது!

“அதென்ன.. சும்மாச் சும்மா இதொரு வார்த்தை? வளர்க்கிற விதமாக வளர்த்தால், நல்ல மாதிரியாக வளர்ந்துவிட்டுப் போகிறாள்! அதைவிட்டு, எப்போது பார்த்தாலும், அம்மா மாதிரி ஆகிவிடுவாள் என்று, இந்த எண்ணம் உங்களை விடவே விடாதா?” என்று ஆத்திரப் பட்டாள் அவள்!

“என்னைச் சொல்லுகிறாயே.. உனக்கு அந்த மாதிரி எண்ணமே இல்லையாக்கும்? பவி, அவள் அப்பா மாதிரி ஆகிவிடுவாளோ என்று நீ எத்தனையோ விதத்தில் கவனமாக இருக்கவில்லை?” என்று திருப்பினான் மகேந்திரன்.

அவன் சொல்வது உண்மைதான்! ஆனாலும், சுதாகரிக்கு உள்ளே வேறு ஒன்று உறுத்தியது!

அவ்வப்போது, 'பவி அப்பா' என்று பேசுகிறான்! வேண்டும் என்றே பேச்சில் கொண்டு வருகிறானோ?

புருவம் சுளித்து, "என் விஷயம் வேறு! என்னவென்றே தெரியாமல், ஏதாவது சொல்லாதீர்கள்!" என்று எரிச்சலாகக் கூறினாள், அவள்.

"சொன்னால், தெரிந்து கொள்கிறேன்!"

"நீங்கள் தெரிந்து கொள்ளத் தேவையும் இல்லை! அதனால், அந்தப் பேச்சும் வேண்டாம். விடுங்கள்!" என்றாள், அவள் கறார்க் குரலில்!

அதற்குமேல், தூண்டித் துருவ தைரியம் இல்லாமல், அக்கறையற்றவன்போல தோளைக் குலுக்கிவிட்டுப் போனான் மகேந்திரன்!

ஆனால், வெகு நேரம் சுதாகரிக்கு மனம் சரியில்லாமல் போயிற்று!

அவள் முயன்று மறந்ததையெல்லாம், இவன் ஏன் நினைவு படுத்துகிறான்!

'வராதே, போ' என்பதுபோல ஏதாவது கடுமையாகப் பேசி வாயை அடைக்கலாம் என்றால், அதற்கும் வழியில்லை! அனியை வருத்தப்படுத்த அவளால் மெய்யாகவே முடியாது! அல்லது, 'பேச்சு வார்த்தையைப் பிள்ளைகளோடு மட்டும் வைத்துக்கொள்' என்று கூறி விடலாமா?

அது.. சின்னப் பிள்ளைகள் காய், பழம் விடுவது போல, சிறுபிள்ளைத்தனமாக அல்லவா தோன்றும்! அதோடு, அனி, பவியிடம் என்னவென்று விளக்குவது?

தொடர்ந்த சில தினங்கள் மகேந்திரன் அந்தப் பக்கம் வராமலே இருந்ததால், இந்தப் பிரச்னை மேற்கொண்டு எழ வழியில்லாது போயிற்று!

இரு சிறுமியரும், அடிக்கடி வாயிலில் நின்று எட்டிப் பார்த்தனர்! கார் சத்தம் கேட்டால் ஓடிப் போய்விட்டு, மகேந்திரனைக் காணாமல், ஏக்கத்துடன் திரும்பி வந்தனர்!

இரண்டு, மூன்று நாட்கள் கவனித்துவிட்டு, "இந்த சனிக்கிழமை, மகேந்திரனின் கடைப் பக்கம் போகலாம் என்று இருக்கிறேன். இரண்டு வேஷ்டிகள் வாங்க வேண்டும்!" என்றார் ரங்கநாதன்.

சனிக்கிழமை!

புரிந்துகொண்டு புன்னகையோடு, "அனி, பவியையும் கூட்டிப் போங்கள், பெரியப்பா! இருவரும் வாசலிலேயே நிற்கிறார்கள்!" என்றாள் பெண்.

"முக்கியமாக, அவர்களுக்காகத்தான் சுதாம்மா, நான் கடைக்குக் கிளம்பியதே!" என்றார் அவர் உற்சாகத்துடன்.

“அப்படித்தான் ஊகித்தேன். ஆனால், தொல்லையாகத் தோன்றினால், விரைவிலே திரும்பி விடுங்கள்!” என்று சொல்லி, சுதாகரி அவர்களை அனுப்பி வைத்தாள்!

மகேந்திரனின் காரில் திரும்பி வந்ததாலேயோ என்னவோ, கிளம்பி சுமார் ஒன்றரை மணி நேரத்தில், மூன்று பேரும் வீட்டில் இருந்தனர்!

வண்டியை அனுப்பிவிட்டு, “ஆனால், நீ சொன்னதுபோலத் தொல்லை மாதிரிதான் தோன்றிவிட்டது, சுதாம்மா! பாவம், மனிதருக்கு நின்று பேச நேரமில்லை! துணி அடுக்குகள் காலியாவது பார்த்து, எடுத்து வரச் சொல்லி.. யாராவது அசந்து தெரிந்தால், உட்காரச் சொல்லிவிட்டு, மகேந்திரனே துணி எடுத்துக் காட்டுகிறார்! ஐந்து தளமும் சுற்றிக்கொண்டே இருக்கிறார்! அதனால்தான் உடனே கிளம்பிவிட்டோம்! அந்த வேலையிலும், எப்படி வந்தோம் என்று கேட்டு, திரும்பிவர காருக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்!” என்று, ரங்கநாதன் வியந்து பேசினார்!



“வேலை இவ்வளவு அதிகம் இருக்கும் என்று உனக்கு எப்படி சுதாம்மா தெரியும்?” என்று வியப்பு காட்டியே அவளையும் கேட்டார்!

“மற்றபடி, மகளைப் பார்க்க இப்படி அடியோடு வராமல் இருக்க மாட்டாரே!”

“ஆமாம்மா! எவ்வளவு சரியாக அவரைக் கணித்திருக்கிறாய்! ஆனால், நான் அதை நினைக்கவே இல்லை, பார்! ஆனால் ஒன்று, மகேந்திரன் பார்க்க வருவது, அனியை மட்டும் அல்ல..” என்று நிறுத்தினார் அவர்!

அவள் கேள்வியாய் நோக்கவும், “நீ அனியிடம் அன்பாயில்லை? அதுபோல, அவரும் பவியையும் சேர்த்துதான் பார்க்க வருகிறார், சுதாகரி!” என்றார் பெரியவர்.

இயல்பாக ஏற்று, அவள் தலையாட்ட, “அப்புறம் இன்னொன்றும்மா.. அங்கே மகேந்திரன் மதியம் சாப்பிடுவதுபோலவே, தெரியவில்லை! மற்றவர்களை, செட் செட்டாகச் சாப்பிட அனுப்புகிறார். இவரை யார் அனுப்புவது? காரை ஓட்டிவந்தவன் கூட, வருத்தப்பட்டான்.”

சுதாகரிக்கும் சற்று வருத்தமாகத்தான் இருந்தது! கொஞ்சம் கோபமாகவும்!

வேறு யாரும் இல்லாதபோது, தான்தானே தன்னைப் பார்த்துக்கொள்ள வேண்டும்? இது புரிகிற வயதாகவில்லையா? இதை ஒருவர் சொல்ல வேண்டுமா?

ரங்கநாதன் தொடந்து பேசினார். “அவர்.. அனியுடைய அப்பா.. நல்ல மனிதரும்கூட! நீ ஏதாவது செய்து தந்தாய் என்றால், கொண்டுபோய்க் கொடுத்து, மதியம் ஒருவேளையாவது, அவரை நல்லபடியாகச் சாப்பிட வைக்கலாம் என்று நினைத்தேன்.”

“என்ன பெரியப்பா.. இதற்குப்போய், நீங்கள் இவ்வளவு பேசவேண்டுமா? பழகிய ஒரு மனிதருக்கு உணவுதானே? செய்து கொடு என்றால், சேர்த்துச் செய்து தந்துவிட்டுப் போகிறேன்!” என்ற சுதாகரி சட்டெனச் சிரித்தாள்! “ஹூம்! மூன்று சட்டைகளைக் கொடுத்து, உங்களை சாப்பாடு தூக்கி ஆக்கிவிட்டாரே!” என்றாள் கேலியாக!

நினைவுபடுத்திக் கொள்கிறவர் போலத் தலையைத் தட்டி, “ஆகா! அது வேறு இருக்கிறதே! நீ சொன்ன மாதிரி சட்டைகள் மூன்று! அதற்கும் சேர்த்துச் செய்வதானால், விருந்துச் சாப்பாடே போட வேண்டும்! அதனால்.. ‘கல்யாண சமையல் சாதம்’ பாட்டில் வருகிற மாதிரி புளியோதரை, லட்டு, முறுக்கு..” என்று அவர் தொடங்க, “ஐயோ, பெரியப்பா, என்னாலாகாது! விடுங்கள்!” என்று உள்ளே சென்ற சுதாகரி, அன்றைய மெனு பற்றிய யோசனையில் ஆழ்ந்தாள்.

மகேந்திரனுக்கு என்ன பிடித்தமாயிருக்கும்?

அன்றிலிருந்து தினமும் மகேந்திரனுக்கான மதிய உணவு, சுதாகரியின் வீட்டிலிருந்து சென்றது! ரங்கநாதனே உணவை எடுத்துச் சென்று, அருகிலிருந்து சாப்பிட வைத்தார்!

“நீ ஏதாவது ஒரு கலந்த சாதமும், தயிர் சாதமும் பொருத்தமான வியஞ்சனமுமாக வைப்பது, ‘வேகமாகச் சாப்பிட்டுவிட்டு, வேலையைப் பார்க்கப் போவதற்கு வசதியாக இருக்கிறது’ என்று சொன்னாரம்மா!” என்று ஒருநாள் ரங்கநாதன் சொன்னபோது, அதையே யோசித்துச் செயல்பட்டிருந்த சுதாகரிக்கு சந்தோஷமாக இருந்தது!

நாலைந்து நாட்கள் கழித்து, ரங்கநாதன் மிகவும் மகிழ்ச்சியோடு திரும்பி வந்தார்.

“என்ன பெரியப்பா, முகத்தில் லைட் போட்ட மாதிரி ஒரே வெளிச்சம்? ஒருவேளை... இன்னும் மூன்று சட்டைகள்.. விற்காமல் இருந்ததாமா?” என்று கேலியாகக் கேட்டாள் மகள்.

“அட அதில்லை, சுதாம்மா! இது முக்கியமான விஷயம்! நம் கடை இடத்துக்கு, ரொம்ப அதிகமாகப் பகடி கேட்டாரே.. அந்த வீட்டுக்காரர்.. அவர், இன்று மகேந்திரனின் கடைக்குத் துணி வாங்க வந்திருந்தார். என்னைப் பார்த்ததும் பேசினார். பேச்சில் கடை விஷயம், மகேந்திரனுக்குப் புரிந்து, அந்த வீட்டுக்காரரிடம் பேசி, அவர் கேட்ட பகடியைக் கால் பங்காக ஆக்கி விட்டார்!” என்றார் குதூகலமாக.

லேசாகப் புருவம் சுருக்கி, “அதெப்படி? நம்மிடம் கொஞ்சமும் குறைக்க முடியாது என்றாரே!” என்று உணர்ச்சி காட்டாத குரலில் சுதாகரி விசாரித்தாள்.

‘அதான்மா.. மகேந்திரன் பேசிய விதம் அப்படி! ‘பகடி இவ்வளவு கொடுத்தால், முதலீடு குறைந்து, லாபமும் குறைந்து போகும். உங்கள் இடத்துக்கு வந்து, ஒருவர் நன்றாயிருந்தால்தானே, உங்களுக்குப் பெருமை’ என்று கேட்டார். இரண்டு பேருக்கும் ரொம்பத் தெரியும்போல! ‘இந்தப் பகடிப் பணம் வந்துதான், உங்களுக்கு

ஆக வேண்டுமாக்கும்' என்று ஏதோ கிண்டலாகச் சொன்னாரா.. வீட்டுக்காரர், தலையாட்டி விட்டு, உன்னிடமும் சொல்லச் சொன்னார். ஆனால், இன்னும் இரண்டு மாதம், அவருக்கு வீடு வேண்டுமாம்! அப்புறம், வீடு, கடை இரண்டையும் ஒன்றாகத் தந்து விடுகிறாராம்! நல்லவேளை, இனி வேறு இடம் தேடி, அலைய வேண்டியது இல்லை!"

அந்த வகையில், சரிதான்! ஆனால், சுதாகரிக்கு ஓர் உறுத்தலும் இருந்தது! ஒரு வாரத்துக்குப் பிறகு, அன்று கடைக்குச் செல்லுகிறபோது, இடையில் வந்து எட்டிப் பார்த்த மகேந்திரனிடம் அவள் அதைக் கேட்டாள்.

"கடை, இடம் பற்றி பெரியப்பா சொன்னார்.. எனக்கு, நானே.. இதுவரை நாங்களே சமாளிக்கவில்லையா? முன்னேறவில்லையா? நீங்கள் எதற்கு அநாவசியமாக இதில் தலையிடவேண்டும்?"

"உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே, அவர் எனக்குத் தெரிந்தவர், சுதாகரி! உரிமையோடு பேசக் கூடிய அளவு நெருக்கம்!"

"அதற்காக? எனக்காக, நீங்கள் என்ன பேசுவது? அவர் என்ன நினைப்பார்? உங்களுக்கு வேண்டியவள் என்கிற பட்டம் எனக்குப் பிடிக்கவில்லை. வேண்டாம்!" என்று மனதில் இருந்ததை வெளிப்படையாகச் சொன்னாள் அவள்.

"ஓ..!" என்று அவளை ஆழ்ந்து நோக்கினான் அவன்.

"ஒன்று சொல், சுதாகரி.. இத்தனை நாட்களாகச் சாப்பாடு அனுப்புகிறாயே! உனக்கு வேண்டியவன் என்று என்னை நினைக்க மாட்டார்களா? அது மட்டும் பரவாயில்லையா?"

பேச்சிழந்து நின்றாள் அவள்!

## அத்தியாயம் – 17



இந்த மாதிரி, சுதாகரி யோசித்துப் பார்க்கவில்லையே. அனியுடைய தந்தை! கேளாமலே அவர்களுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருப்பவன்! அவன் ஒரு வேளையேனும் ஒழுங்காகச் சாப்பிடட்டும் என்று சாப்பாடு அனுப்பினால், அதற்கு இப்படி ஒரு விளக்கமா? அவளுக்கு வேண்டியவன் என்று, அதனால்தான் உணவு அனுப்புகிறாளாமா?

ஏதேதோ சொல்ல விரும்பியபோதும், ஒன்றும் தோன்றாமல், "உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும் என்று தெரியாமல் போயிற்று!" என்றாள் தடுமாற்றத்துடன்.

"கஷ்டம் என்று நான் சொன்னேனா? நம் துன்பம் கண்டு ஒருவர் உதவ வந்தால், நம்மிடம் அக்கறை இருக்கிறது என்று ஆறுதலாகத்தானே இருக்கும்?" என்று கேட்டான் அவன். "எனக்கு மகிழ்ச்சிதான்!"

"ஆனால், இந்த மாதிரிப் பேச்சு வருவது கஷ்டமில்லையா? அது, மனதுக்கு வெறுப்பாகத்தானே இருக்கும்?"

"அதற்காக உதவிக்கரம் நீட்டினால், ஏற்காமல், முங்கி முழுகித் தத்தளித்துதான் கரையேற வேண்டுமா? அத்தோடு, அப்படியொரு பேச்சும் வரும் என்று என்ன நிச்சயம்? இந்த அவசர யுகத்தில், தனக்கு சம்பந்தம் இல்லாத இதுபோன்ற சின்னச் சின்ன விஷயங்களைத் தேடியலைந்து, அவற்றுக்குத் தப்பான விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்க, யாருக்கும் அவகாசம் இருப்பதில்லை, சுதாகரி!"

"ஏன், உங்கள் அத்தை சொல்லவில்லை?" என்று மடக்கினாள் அவள். "என்னென்ன சொன்னார்கள்? அல்லது என்னதான் சொல்லவில்லை?"

“அத்தை என்னென்னவோ சொன்னார்கள்தான்! ஆனால், ஒன்றின் தப்பு, சரி பற்றிப் பேசுகிற தகுதி, அவர்களுக்கு இருக்கிறது என்றா நினைக்கிறாய்? அந்த அளவுக்கு நீ முட்டாளல்லவே! அத்தோடு, யாரோ, ஏதோ பேசுவதையெல்லாம் பொருட்படுத்திக் கொண்டிருந்தால், வாழ முடியாதும்மா!”

“யார் வாய்க்கு அவல் கொடுக்கவும் எனக்குப் பிடிக்காது!” என்று கறாராகச் சொல்ல முயன்றபோதும் சுதாகரியின் குரல் இறங்கி விட்டது!

“அத்தை வெறும் வாயையே மெல்லுகிறவர்கள்! அவர்களைப் போன்றவர்களுக்குப் பயந்து, என் உதவியை ஒதுக்கினாய் என்றால், அதுதான் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது! நீ தேடும் இடம் சக்திநகர்ப் பகுதியில் என்றதுமே ஏதாவது செய்ய முடியுமா என்று, நீயாக என் உதவியைக் கேட்டிருக்க வேண்டும்!” என்றான் அவன், சிறு கண்டிப்புடன் குறை திருத்துகிறவனாக.

ஆனால், பாம்புச் சீறலாக, “யாரிடமும் உதவி கேட்பது, எனக்குப் பிடிக்காது” என்று கூறி முடிக்குமுன், அவள் முகம் செந்தணலாய்ச் சினந்து, சிவந்து விட்டிருந்தது!

“சுதாகரி..?” என்று வியந்து கேட்டவனின் குரல் காதிலேயே விழாதவள் போல மடமடவென்று உள்ளே சென்றவள், விரைவிலேயே திரும்பி வந்து, “உங்கள் உதவிக்கு நன்றி” என்றாள் சுருக்கமாக, “வேறு ஒன்றும் இல்லையே?”

இல்லாவிட்டால் இடத்தைக் காலி செய் என்கிற குறிப்பு! அனி இந்த வீட்டுக்கு வந்த புதிதில் சுதாகரி பேசிய விதம்!

சுதாகரியின் முகம் கழுவித் துடைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தபோதும், அதுபற்றி மகேந்திரன் எதுவும் கேட்கவில்லை! மாறாக, அதைக் கவனியாததுபோல, வேறு பேசினான்.

“இருக்கிறது, சுதாகரி, அதைச் சொல்லத்தான் வந்தேன்! இன்றிலிருந்து பட்டுச் சேலைகள் பிரிவில், விலைக் குறைப்பு விற்பனை தொடங்குகிறது. முப்பது, நாற்பது சதவீதத் தள்ளுபடியில் நல்ல பட்டுச் சேலைகளே கிடைக்கும்..”

“நான் பட்டுச் சேலை கட்டுவதில்லை!” என்றாள் அவள் சுருக்கமாக.

“துரைப்பாண்டியன் திருமணத்துக்குத் தேவைப்படுமல்லவா?”

“ஏன்? பட்டுச் சேலை கட்டாவிட்டால், கல்யாண வீட்டுக்குள்ளே விட மாட்டார்களா? ரொம்ப நல்லது, போகாமலே இருந்துவிடுகிறேன்!” என்று வெட்டெனப் பதில் சொன்னாள் அவள். வியப்புடன் சுதாகரியின் முகத்தை ஒரு தரம் பார்த்த மகேந்திரன், அதற்குமேல் எதைப் பற்றியும், எதுவும் சொல்லவில்லை.

அவளுக்கு மனம் சரியில்லை என்று, அவனால் புரிந்து கொள்ள முடிந்தது! ஆனால், காரணத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

எப்போதுமே, சுதாகரி உதவியை மறுக்கிறவள்தான். தானாக ஒருபோதும், உதவி கேட்டதுமில்லை! ஆனால், சரியான விளக்கம் கொடுத்தால், அதற்கு மேல், நியாமற்றுப் பேசுகிறவளும் அல்ல! இப்போது என்ன வந்தது?

நின்று, அது பற்றி விலாவாரியாகப் பேச, அப்போது அவனுக்கு அவகாசம் இருக்கவில்லை. அத்தோடு, மேலும் சுதாகரிக்கு எரிச்சலூட்டவும், அவனுக்கு மனம் வரவில்லை. எனவே, மேலே எதுவும் பேசாமலே, மகேந்திரன் விடைபெற்றுச் சென்றான்!

என்றேனும் ஒருநாள், சுதாகரி தானாகவே மனம்விட்டு இதையெல்லாம் அவனிடம் சொல்லத்தானே போகிறாள்!



மகேந்திரனின் முன்னிலையில் மனக் கட்டுப்பாட்டை இழந்தது, சுதாகரியை வெகுவாக வருத்தியது!

மனதை அடக்கிவிட்டோம், வென்றுவிட்டோம் என்று எண்ணியதெல்லாம் எவ்வளவு பெரிய மடத்தனம்! அவள் அடக்கவுமில்லை. ஜெயிக்கவுமில்லை! அடக்கி இருந்தால், அவளது வாய், இன்று இவ்வளவு பேசி இருக்காது!

நல்லவேளையாக, எதனாலோ, மகேந்திரன் அவளது கண்ணீர், கோபம் பற்றி எதுவும் கேட்கவில்லை! எதனாலோ என்ன? பேச்சு சுதந்திரம் உள்ள நாடு என்று, முகத்தில் அடிப்பது போன்ற பதில் வருமே என்ற அச்சத்தினால், அவன் கேட்கவில்லை! அவ்வளவே!

போகட்டும்! அப்படியே நினைத்துக் கொள்ளட்டும்! அவளைக் கேள்வி கேட்டுத் தொல்லை செய்யாமல் இருந்தால், சரி!

வேலை மிகுதியோ? அன்றி சுதாகரியின் வெடுவெடுப்பு காரணமோ? தொடர்ந்து சில நாட்கள்... விலைக் குறைப்பு விற்பனை முடிகிற வரையிலும், மகேந்திரன், சுதாகரியின் வீட்டுப் பக்கம் வரவே இல்லை!

சுதாகரிக்கு உள்ளூர உறுத்தல் இருந்தது! ஆனால், மகேந்திரனுக்காக உணவு தயாரிப்பதையோ, அனுப்புவதையோ அவள் நிறுத்தவில்லை!

அவனுக்கு வேண்டாம் என்றால், 'உங்களுக்கு இருக்கும் வேலைக்கு இடையில், இது வேறு அலைச்சல் வேண்டாம், அங்கிள்! இங்கே பக்கத்திலேயே ஏற்பாடு செய்துவிட்டேன்' என்று, ரங்கநாதனுக்கு நோகாதவாறு சொல்லி அவனால் நிறுத்த முடியும்! அந்த அளவு சாதுரியமோ, வாசாலகமோ இல்லாதவன் அல்ல, அவன்.

எனவே, எதுவானாலும் அவனே முடிவு செய்யட்டும் என்று, ரங்கநாதனிடம்கூட, இந்தப் பேச்சுவார்த்தை பற்றி, சுதாகரி எதுவும் சொல்லவில்லை!

மறைப்பதற்காக அல்ல! ஆனால், மகேந்திரனை அவருக்கும் பிடித்து விட்டிருப்பதால், அவரே உள்ளூர வருத்தப்படலாம் என்று எண்ணியே விடுத்தாள்.

விலைக் குறைப்பு விற்பனை முடிந்த மறுநாள் மாலையில் வீட்டுக்கு வந்த மகேந்திரனின் முகத்தில் களைப்பு இருந்தபோதும், இயல்பான மகிழ்ச்சியே தெரிந்தது! பிள்ளைகளுக்கும், அவனைப் பார்த்ததும் ஒரே கொண்டாட்டம்! ஆளுக்கு ஒரு கையைப் பிடித்துக் கொண்டு தொங்கினார்கள். எனவே, அன்று மக்களை வீட்டுக்கு அழைத்துப் போய், இரவு தன்னோடு வைத்துக் கொள்வதாக மகேந்திரன் சொன்னபோது, நெருங்கி வரும் ஆண்டுத் தேர்வைக் காட்டிக்கூட, சுதாகரி தடுக்கவில்லை.

நல்லவேளையாக பள்ளிக்கு, அதைத் தொடங்கியவரின் நினைவாக மறுநாள் விடுமுறையும் இருக்கவே, பிறகு படித்துக் கொள்ளலாம் என்று அவர்களை அனுப்பி வைத்தாள்.

பவித்ராவைப் போலவே, மகேந்திரனின் இன்னொரு கையைப் பிடித்துக்கொண்டு, நடையில் துள்ளலோடு அனியும் செல்வதைக் கண்ட சுதாகரிக்குத் தன்னை மீறிப் பெருமூச்சு வந்தது!

அனிஷா தந்தையோடு சொந்த வீட்டில் தங்கிவிடப் போகும் நாள் அதிக தூரத்தில் இல்லை! செல்லப் பூனைக்குட்டி போல, அடிக்கடி வந்து உராய்ந்துவிட்டுச் செல்லும் அவள் இல்லாமல் இந்த வீடு எப்படி இருக்கப் போகிறது? ஆனால், அவளைத் தடுக்க நினைப்பது கூடப் பெரும் பாவமே! இந்தப் பிரிவு, தவிர்க்கக்கூடாமல், அனுபவித்தே ஆக வேண்டிய துன்பம்!

முன்போல அதிகாலையில் இல்லாமல், சுமார் ஏழரை மணி அளவில், பவித்ரா போன் செய்தாள்.

“என்ன செல்லம், நேற்று என்ன சமையல்? அங்கிள் அழாமல் காய் வெட்டினாரா?” என்று வேடிக்கையாக விவரம் கேட்டாள் சுதாகரி.

“நூடுல்ஸ்தான் ஆன்ட்டி! அப்பாவுக்கு, அது மட்டும்தானே செய்யத் தெரியும்!” என்றாள் அருகில் நின்று கொண்டிருந்த அனி, “பவி சொன்ன மாதிரி வெங்காயம் வெட்டினதாலே, அப்பா அழலை. ஆனால், ராத்திரி எங்களுக்கு முன்னேயே அப்பா தூங்கிட்டார்! தெரியுமா?” என்று ஆச்சர்யத்தோடு கூறினாள் பெண்!

“ஆமாம்மா!” என்றாள் அடுத்தவளும் அதே குரலில்!

இரு சிறுமிகளும், காதை ரிசீவரில் ஒட்டி வைத்தபடி இடித்துக்கொண்டு நெருங்கி நிற்பதைக் கற்பனையில் ரசித்தபடி, “நிஜமாகவா? எப்படிடாம்மா?” என்று பிள்ளைகளின் எதிர்பார்ப்பை உணர்ந்து, வியந்து கேட்டாள் சுதாகரி.

“அனி, நான் சொல்றேன்! அம்மா, நேற்று ராத்திரி உங்க மாதிரியே, அங்கிள் எங்களுக்கு கதை சொன்னாரா? திடீர்னு கதை நின்று போச்சுது! ஏன்னு பார்த்தா..”

என்று அவள் கூறுகையில் குறுக்கிட்டு, “அப்பா எங்களுக்கு முன்னேயே தூங்கிட்டார், ஆன்ட்டி!” என்று கிளுக்கிச் சிரித்தாள் அனி.

“ஆமாம்மா!” என்று தானும் சிரித்தாள் பவி.

“அப்போது, நீங்கள் இருவரும் அங்கிள்தான் குட்டிப் பாப்பா என்று நினைத்து, அவரை முதலில் தூங்க வைத்து விட்டீர்களாக்கும்!” என்று கூடச் சேர்ந்து சிரித்தாள் சுதாகரி.

மூவருமாகச் சிரிக்கையிலேயே, “ஆனால், ஆன்ட்டி.. அப்பா இன்னும் தூங்கிட்டே இருக்கிறார்! எங்களுக்கானா, ரொம்பப் பசிக்குதே, என்ன செய்ய?” என்றாள் அனிஷா.

“அப்பாவை எழுப்பிக் கேட்பதுதானே?”

“எழுப்பினாலும், ‘ஊம், ஊம்’னு திரும்பிப் படுத்துத் தூங்கிடுறார்மா! எங்களுக்கு ரொம்பப் பசிக்..குது!” என்றாள் பவித்ரா தன் பங்குக்கு!



“ஃப்ரிஜ்ஜெல்லாம் திறந்து பார்த்தோம், ஆன்ட்டி! உள்ளே தண்ணி தவிர, ஒன்றுமே இல்லை! பால்கூட இல்லை!”

சுந்தரி அம்மாள் போனதுமே, அடுப்படியில் உதவி செய்கிற ஆளையும் தேவையில்லை என்று மகேந்திரன் நிறுத்தியிருந்தான். எப்போதுமே, மதியம் வெளியே சாப்பிடுகிறவன், அத்தையம்மாள் வெளியேறிய பிறகு, முழுவதுமே வெளிச் சாப்பாடு என்றாகிவிட்டதும், சுதாகரியும் அறிந்ததே! அவன் வந்தால், கட்டாயமாக எதையேனும் உண்ணக் கொடுப்பதும், அதனால்தான்!

“பாவம்மா!” என்று ரங்கநாதனும் தூண்டுவார்.

காலையில் விழித்ததும், பிள்ளைகளை உணவுக்கு வெளியே கூட்டிப் போகலாம் என்று மகேந்திரன் எண்ணியிருக்கக்கூடும்! ஆனால், எழுப்ப எழுப்பத் தூங்குகிறான் என்றால், அவ்வளவு களைப்பா? அல்லது உடம்புக்கு ஏதாவதா?

“இதோ, எல்லோருக்கும் டிபன் செய்து எடுத்து வருகிறேன். நீங்கள் அங்கிளைத் தொந்திரவு செய்யாமல் விளையாடுங்கள்!” என்று அவசரமாகக் காய்கறி உப்புமா கிளறி, தொட்டுக்கொள்ளப் பச்சடியும், தேங்காய்ச் சட்டினியும் செய்து எடுத்துக்கொண்டு, வீட்டுப் பொறுப்புகளை ரங்கநாதனிடம் ஒப்படைத்துவிட்டு, வேகமாகச் சென்றாள் அவள்.

மகேந்திரனைத் தொட்டுப் பார்த்து வரச்சொல்லி, அவனுக்கு உடம்பில் சூடு எதுவும் இல்லை என்று தெளிவு படுத்திக்கொண்ட பிறகு, இரு பெண்களையும் உண்ண

வைத்தாள். சாப்பிட்டபடியே, முன் தினம் மகேந்திரன் சொன்ன கதையையும், அவன் தூங்கியதையும் சிரிப்பினூடே விவரித்தபடி இருவருமாக உண்டு முடித்தனர்.

வயிறு நிரம்பியதுமே, கம்ப்யூட்டருக்குப் பறந்தவர்களிடம், “இதோ, ‘செல்லோ’வில் அங்கிளுக்கும் வைத்திருக்கிறேன். அங்கிள் விழித்ததும், அவரையும் சாப்பிடச் சொல்லுங்கள்! என்ன?” என்றுவிட்டு, சிறுமிகள் உணவருந்திய இடத்தைச் சுத்தம் செய்தாள் சுதாகரி.

தட்டுகளைக் கழுவப் போட்டுவிட்டு, துடைத்த மேஜை மீது, கழுவித் துடைத்த தட்டு ஒன்றைக் கவிழ்த்து வைத்தபோது, ஏதோ உணர்வு தோன்றத் திரும்பிப் பார்த்தால், ஹாலில் இருந்து சாப்பாட்டு அறைக்கு வரும் வழியில், கலைந்த தலையும், கசங்கிய பைஜாமாவுமாக நலுங்கிய தோற்றத்துடன் நின்று, மகேந்திரன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்!

ஒருசில கணங்கள், என்ன பேசுவது என்று எதுவும் புரியாமல், சுதாகரி மலைத்துப்போனாள்!

மகேந்திரனின் இந்தத் தோற்றம், அவள் கற்பனையில் கூடக் கண்டறியாதது! எப்போதுமே, மகேந்திரனின் தோற்றம், நடை, உடை, பாவனை அனைத்திலும் ஓர் அழுத்தம் இருக்கும்! சில நூறு மனிதர்களுக்கு முதலாளியாக, ஒரு பெரிய நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்துகிறவன் என்பது இன்னோரன்ன வார்த்தைகளால் சொல்லாமலே புரிகிற விதமாக, அலட்டல் இல்லாத கம்பீரம்!

அவனுடைய மகளைத் தேடி அலைந்த போதுகூட, அவன் வலிமை இழந்து தொய்ந்து போனதில்லை! இப்போதும், அவன் சக்தியிழந்து தொய்ந்து போனதாகச் சொல்ல முடியாதுதான். ஆனால், நெற்றியை மறைத்துக் கலைந்து கிடந்த சிகையும், சிவந்த விழிகளும், கசங்கிய உடையுமாக அவனது இந்தக் கலைந்த தோற்றம், ஏனோ சுதாகரியைச் செயலிழக்க வைத்தது! கை, கால்கள் வலுவிழந்து, பலவீனமாகிவிட்டது போன்ற உணர்வு!

எப்போதும், தங்கு தடையின்றி மனதில் நினைத்ததைச் சொன்னவளுக்கு, இப்போது, வாயிலும் பேச்சு வர மறுத்தது! என்ன என்று, ஒன்றும் புரியாமல் திணறியவளுக்கு, அவனும் பேசாமலே நிற்பது உறைத்தது! ஏன்?

கடவுளே! சுதாகரி இங்கே வந்திருப்பது, மகேந்திரனுக்குத் தெரியாது! அதனால்தான், தூக்கத்தில் இருந்து விழித்தவன், உடை மாற்றும் எண்ணமே இல்லாமல், நேரே வந்துவிட்டான்! அவளைப் பார்த்ததும், அதிர்ந்து நிற்கிறான்!

மற்றபடி, இப்படி இரண்டு பட்டனைத் திறந்து போட்டுக்கொண்டு, இரவு உடையில் அவள் முன், அவன் வருவானா, என்ன?

தனது மலைப்பு, திணறலின் காரணமும், சுதாகரிக்கு இப்போது புரிந்துபோனது! போகிற போக்கில் தற்செயலாக, அடுத்தவர் அறைக்குள், அசந்தர்ப்பமான நேரத்தில் எட்டிப் பார்த்துவிட்டது போன்ற கூச்சம்! அதை, அடுத்தவரும் கவனித்துவிடும்போது தோன்றும் பதைப்பு! சட்டென பார்வையை

அகற்றிக்கொண்டு, அவசரமாக அவனுக்கு விளக்கம் சொல்கிறவளாக, "ஸாரி, பிள்ளைகள்.." என்று தொடங்கினாள் சுதாகரி.

அதே சமயத்தில், அதே "ஸாரி, பிள்ளைகள்.." என்று அவனும் தொடங்க, இருவருமே வியப்பும் திகைப்புமாகப் பேச்சை நிறுத்தினர்! ஆச்சர்யத்தில் மலர்ந்த விழிகளால் நோக்கி, மேலே சொல்லும்படி சைகை செய்தான் அவன், அதே சமயம், "என்ன? சொல்லுங்கள்?" என்று சுதாகரியும் அதையே வார்த்தையில் கூறவும், இருவருக்குமே, ஒரு வகையில் மனநிலை லேசாயிற்று!

முறுவலித்துவிட்டு, "பிள்ளைகள் இருப்பதைக்கூட மறந்து தூங்கிவிட்டேன்!" என்று மேஜையைக் காட்டி, "நீ கொண்டு வருமாறு ஆகிவிட்டதே!" என்றான் அவன், சிறு வருத்தத்துடன் கூடிய குரலில்.

"அது ஒன்றும் பெரிய காரியம் அல்ல" என்றாள் அவள்.. குரலில் நிதானம் காட்டி, ஆனால், "உங்களிடம் ஒரு வார்த்தை அனுமதி கேளாமலே இங்கே வந்து, எல்லாவற்றையும் கையாண்டு.." என்று விளக்கியவளை இடையிட்டு, "ஏன்? உன் வீட்டுக்கு நான் வரவில்லையா? உன்னிடம் அனுமதி கேட்டுக்கொண்டா வருகிறேன்? ஒரு தரம்கூடக் கேட்டதில்லையே!" என்றான் மகேந்திரன்.

"அது.. அது வேறு!"

"என்ன வேறு? உன் வீட்டில் எனக்குள்ள உரிமை, உனக்கும் இங்கே நிச்சயமாக உண்டு! சொல்லப் போனால், இந்த இடத்தில், பின்புறமாகத் தோட்டத்தைக் காட்டும் கண்ணாடிப் பின்னணியில், நீ என்னமாகப் பொருந்துகிறாய் என்றுதான், உன்னைப் பார்த்ததும் நினைத்தேன்! வேறு எதுவுமில்லை!" என்று மகேந்திரன் கூற, சுதாகரி மறுபடியும் அதிர்ந்தாள்!

## அத்தியாயம் – 18



**இ**ந்த இடத்தில் சுதாகரி பொருந்துவதா? அவனது வீட்டிலா? என்ன அசம்பாவிதமான பேச்சு இது?

ஏற்கனவே அவனது தோற்றத்தால் அமைதி கலைந்திருந்த அவளது மனம், மேலும் அதிர்ந்தது!

அவளது அதிர்ச்சியை முகத்தில் கண்டு அவசரமாக, "ஊகூம்! தப்பாக எடுக்கவேண்டாம், சுதாகரி! பின்னணியில் கண்ணாடி வழியே தோட்டம் தெரிய, இந்த அழகான வேலைப்பாடமைந்த உணவு மேஜை, பொருத்தமான நாற்காலிகள், சுவரில் பெரிய சித்திரம்.. இப்படிப்பட்ட நேர்த்தியான சூழலுக்கு நீ மிகவும் பொருத்தமாகத் தெரிகிறாய் என்று சொன்னேன்! அவ்வளவேதான்!" என்று விளக்கினான் மகேந்திரன்!

மனம் முழுமையாகச் சமாதானமடைய மறுத்தது, அவளுக்கு! என்னதான் பழகிவிட்டாலும், என்ன வேண்டுமானாலும் சொல்வதா?

உடலும் மனமும் வலுவிழந்திருப்பது போன்ற அந்த நிலை வேறு எரிச்சலூட்ட, "அதாவது, என் குச்சு வீடு குறைவாகத் தெரிகிறது என்கிறீர்களாக்கும்!" என்று, இன்னொரு வகையில் குற்றம் கண்டாள் சுதாகரி.

"அச்சோ! எதிலும் தப்பு தேட வேண்டுமா? பட்டுச் சேலை அழகு என்றால், வாயில் சேலை கோரம் என்றாக வேண்டுமா? ஒவ்வொன்றில், ஒரோர் அழகு!"

அதற்கும், "துணிக்கடைக்காரராகப் பேசுகிறீர்கள்!" என்றாள் அவள்.

“அடடா, என்ன சொன்னாலும் தப்பாகப் போகிறதே! வேண்டாத மருமகள் கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்பது இதைத்தான் போலும்! பாவம் அந்த மருமகள்! அதாவது.. பாவம், இப்போது இந்த மகேந்திரன்!” என்று கேலியாக என்றாலும், அவன் தனக்கே இரக்கப்படவும், அவளுக்குக் கொஞ்சம் ஒரு மாதிரியாகிவிட்டது.

எதற்காக இப்படி எரிச்சலைக் காட்ட வேண்டும்? பாவம்! ஏற்கனவே, இரண்டு வாரமாக மிக அதிக வேலையில் களைத்திருப்பவன்! அதையும் மீறி, வேடிக்கையாகவே பேச முயற்சிக்கிறான்! அவளுக்கு என்னவோ குழப்பம் என்றால், பாவம்.. அவன் என்ன செய்வான்?

தலையசைத்து, மெல்ல முயன்று முறுவலித்து விட்டு, “நீங்கள் சாப்பிட்டு ஓய்வெடுங்கள். அனி, பவியைக் கூட்டிக் கொண்டு நான் கிளம்புகிறேன்” என்றாள் அவள்.

உடல் அலுத்துக் களைத்திருப்பவனுக்குப் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதும், கொண்டு வந்து விடுவதுமாக, எதற்கு அனாவசிய அலைச்சல்?

ஆனால், “இல்லை, சுதாகரி! அவர்கள் இன்று இங்கே இருக்கட்டும். நேற்று அவர்களோடு சரியாகப் பேசக்கூட இல்லாமல், தூங்கி விட்டேன். இன்றேனும் அதற்கு ஈடுகட்ட வேண்டும்!” என்றான் மகேந்திரன்.

சற்றுத் தயங்கி, “ரொம்ப ஆட்டம் போட விட வேண்டாம். இன்னும் ஒரு வாரத்தில், ஆண்டுத் தேர்வு தொடங்குகிறது. முடிந்தவரை, சீக்கிரமாகவும் கூட்டி வந்து விட்டுவிடுங்கள்!” என்றவள், ஹாலில் சுத்தம் செய்யும் சத்தம் கேட்கவும், “வேலைக்காரிக்கும் கொடுக்கலாம் என்று நிறையத்தான் கொண்டு வந்தேன். உங்களுக்குப் போக மீதி இருப்பதைப் பாத்திரத்தோடு வைத்து வீணாக்கிவிடாமல், லோகுவிடம் கொடுத்து விடுங்கள். சாப்பிட்டு விட்டுப் பாத்திரங்களைக் கழுவி வைத்துவிட்டுப் போகட்டும்!” என்றுவிட்டுக் கிளம்பினாள்.

சுதாகரி இயல்புக்குத் திரும்பிவிட்டாள் என்று தெளிவாகவும், மகேந்திரனின் கண்கள் பளிச்சிட்டன!

“சரிங்க மேடம்!” என்று பணிவாக உரைத்தவன், தொடர்ந்து, “அதுதான் நம்ம மேடம் என்கிறது! ஒன்றைச் செய்யும்போதே, நாலையும் கவனிப்பது!” என்று துரைப்பாண்டியனைப் போலச் சொல்லிக் காட்டிச் சிரித்தான்.

கூடச் சேர்ந்து முறுவலித்தாலும், “சென்றமுறை அனுப்பிய பாத்திரங்கள் ஒரே நாற்றமடித்ததாக எங்கள் வீட்டுப் பூமணி புலம்பியது, எனக்கல்லவா தெரியும்!” என்று திருப்பிக் கொடுத்துவிட்டே சுதாகரி கிளம்பினாள்!

“அந்த ‘நாலில்’ பூமணியும்தான் அடக்கமாம்!” என்று மகேந்திரன் சொன்னது, நன்றாகக் கேட்டபோதும், காதில் விழாததுபோல விரைந்து வெளியேறினாள் அவள்.

உடலின் வெலவெலப்பு முழுதாக மறையாத நிலையில், அவனோடு நின்று பேசிக்கொண்டிருக்க அவளுக்கு மனமில்லை! பேச்சினூடே, இன்னோர் அதிர்ச்சி கிடைத்தால், அவளால் நிச்சயமாக சமாளிக்க முடியாது!

அத்தோடு, அவனுக்கு பதிலுக்குப் பதில் சொல்லிக் கொண்டே இருந்தால், நாள் முழுவதுமே காணாமல் போய்விடக் கூடும்!

அப்படிக் காணாமல் போக்கடிப்பதற்கு, அவளுக்கு அவகாசமும் கிடையாது! இப்போது வந்ததற்கே, அவள் வேக வேகமாக ஓடவேண்டும்!

மகேந்திரனிடம் வாதாடிக்கொண்டு நில்லாமல் உணவறையை விட்டு வந்துவிட்டபோதும், ஹாலில் பெருக்கிக்கொண்டிருந்த லோகுவைப் பார்த்து முறுவலித்து, அவளிடம் குசலம் விசாரித்தாள் சுதாகரி.

பாக்கெட் போடும் பூமணி மூலமாக, சுதாகரிக்கும் அவள் அறிமுகமானவளே! சமயத்தில், அவளே பூமணிக்கு உதவியாகவோ, பதிலாகவோ வருவதும் உண்டு.

எனவே, அவளிடமும் மீதமாகும் உணவு பற்றிச் சொல்லிவிட்டே சுதாகரி வீடு திரும்பினாள். அவனுக்கு இருக்கும் அலுப்பில், மகேந்திரன் மறந்தாலும் மறந்துவிடுவான்! உணவு கிடைக்கும் என்பதில் லோகுவுக்கும் மகிழ்ச்சி!

அன்றைய தினத்துக்குப் பிறகு, காலை வேளைகளில் ஒரு கணம் எட்டிப் பார்ப்பதோடு, மகேந்திரன் திரும்பவும் காணாமல் போனான்!

விலைக் கழிவு விற்பனையின் பின், கடையின் சரக்கு முழுவதையும் கணக்கெடுத்து, மறுபடி வாங்க வேண்டியவற்றைக் கணக்கிட்டுத் தேவைப் பட்டியல் தயாரிக்கிற வேலை நடப்பதாக, ஏற்கனவே சொல்லியிருந்தான் அவன். இது முடிந்ததும், கொள்முதல் வேலை தொடங்கும் என்றும்!

ஆண்டுத் தேர்வு முடியும்வரை படிப்பில் ஈடுபட்டிருந்த சிறுமிகள் இருவரையும், தேர்வு முடிந்ததும் அழைத்துப் போய், ஒரு நாள் முழுவதும் ஊர் சுற்றிக் காட்டிக் கூட்டி வந்து விட்ட மகேந்திரன், மறுநாளே, கொள்முதலுக்காக வெளியூர் சென்றுவிட்டான்.

இரண்டு மூன்று நாட்கள் சற்றுச் சோர்வுடன் சுற்றி வந்த பவித்ரா, அன்று அலுப்புடன் தாயின் அருகே வந்து உட்கார்ந்தாள்.

விடுமுறை நாட்களின் பொழுது போக்காக வண்ணம் தீட்டுவதற்காக, இரு பெண்களுக்கும் படங்கள் வரைந்து கொண்டிருந்தாள் சுதாகரி.

மகள் உட்கார்ந்த விதத்தில் அவள் மனநிலை உணர்ந்து, “என்னடா கண்ணு.. உனக்கு என்ன படம் வேண்டும்? அனிக்கு சூரியகாந்திப்பூதான் வேண்டுமாம்! உனக்கு என்ன பூ, சொல்லு!” என்று கேட்டாள்.

“ஏதாச்சும் ஒண்ணு! எனக்கு ஒன்றுமே பிடிக்கலை!” என்றாள் பெண் அசுவாரசியமாக!

“ஏண்டாம்மா, ஒன்றும் பிடிக்கவில்லை?”

“பின்னே என்னம்மா? பள்ளிக்கூடமும் இல்லை, அங்கிளும் வரலை! ரொம்ப போரடிக்குது! நிஜமாக ஒன்றுமே பிடிக்கலை!” என்றாள் பெண்.



“ஓ! வேணுமானால், எங்கயாவது போய்விட்டு வரலாமா? சினிமா போவோமா? அல்லது, ஐஸ்கிரீம் வாங்கித் தின்றுவிட்டு வரலாமா?”

“ம்ம்ம்.. அதெல்லாம் விட, எனக்கு அங்கிளைத்தான் பார்க்கணும்போல இருக்குதும்மா! ரொம்ப!”

“ஆமாம், எனக்கும் அப்பாவைப் பார்க்கணும் போலத்தான் இருக்குது!” என்று அனிஷா இடைச்செருக, பவித்ரா தொடர்ந்தாள்.

“எனக்கு அங்கிள் வீடு ரொம்பப் பிடிக்குதும்மா! அங்கேயே இருக்க வேணும்போல, ஆசையா இருக்குதும்மா!” என்று குரலில் ஏக்கத்தோடு மகள் கூறவும், சுதாகரி திடுக்கிட்டாள்.

இது என்ன புதுப் பிரச்னை? இதை எப்படிக் கையாள்வது?

சுதாகரி யோசிக்க, அவள் மீது சலுகையாகச் சாய்த்திருந்த தலையைத் தூக்கித் தோழியை வியப்பாகப் பார்த்துவிட்டு, “எனக்கு இந்த வீடுதான் ரொம்ப நல்லாருக்குப்பா!” என்றாள் அனி. “இங்கே தான் எப்பவும் ஜாலி!”

‘மனம் கொண்டது மாளிகை!’

அந்த வீட்டின் வசதிகளைப் பார்க்கையில் ஆசை ஏற்படுவது இயற்கை!

அங்கிருக்கும் ஏ.சி-க்கும் ஊஞ்சலுக்கும் மகள் ஏங்குகிறாளோ என்று எண்ணி, “கடை வைத்து நிறையப் பணம் வந்ததும் நாமும் அதேபோலவே வீடு கட்டலாம், பவிம்மா!” என்று சுதாகரி மகளைத் தேற்ற முயன்றாள்.

ஆனால், அடுத்த அதிர்ச்சியாக, “வீடு மட்டும் எதுக்கும்மா? அங்கே போனா, அங்கிளும் கூட இருப்பார் இல்லையா? அங்கிள் கூடவே இருக்கணும் என்றுதான், எனக்கு ஆசையாக இருக்குதும்மா!” என்றாள் பெண்! “அங்கிள், எவ்வளோ உயரம்!”

கடவுளே! என்ன தப்பு நடந்து விட்டது!

அனிக்கு அப்பாவிடம் பிடிப்பு வரட்டும் என்று முயன்றதற்கு, பவி மனதில் அல்லவோ பெரும் ஏக்கத்தை ஏற்படுத்தி விட்டாள்!

தாயையும், தாத்தாவையும் மட்டுமே அறிந்து வளர்ந்த சிறுமி! அதிலேயே திருப்தியாக இருந்தவளும்கூட!

இப்போது தந்தை வயதில் ஓர் ஆண்மகன்.. அவளை ஓர் இளவரசியாக நடத்துகிறான்.

‘பவி, பவிம்மா’ என்று அவளைக் கொஞ்சுகிறான்! தூக்கிக்கொண்டு அலைகிறான்!

வலிவும், வனப்புமாக அவனது அன்றைய தோற்றம், நினைக்கையில், சுதாகரிக்கே வெல வெலக்கிறதே.. இந்தச் சின்னக் குழந்தைக்கு அவன் ஹீரோவாகத் தெரிவதில், என்ன வியப்பு இருக்கிறது?

வியப்பதற்கு இல்லைதான்! ஆனால், வளர விடுவது கூடாது! இதை எப்படி மாற்றுவது?

சீக்கிரமே அனி அவள் வீட்டுக்குப் போய்விடுவாள்.. கொஞ்ச காலம் வீடு வெறிச்சோடிக் கஷ்டமாக இருந்தாலும், கொஞ்சம் கொஞ்சமாக அது பழகி, எல்லாம் பழைய மாதிரி சரியாகிவிடும் என்று எண்ணியது, எல்லாம் தலைகீழாய்த் தவறாகிப் போயிற்று!

அனிக்கானால், தந்தையோடு சொந்த வீட்டில் வசிக்கும் எண்ணமே வருவதாக இல்லை! இந்த வீடுதான் சொர்க்கம் என்கிறாள்! மாறாகப் பவித்ராவோ, அந்த அங்கிள்தான் உலகம் என்கிறாள்! இந்த அதல பாதாளச் சறுக்கலை எப்படி சீர்ப்படுத்துவது?

மகேந்திரனிடம் இதற்கு விடை கிடைக்குமா?

அதற்கு முன், முதலில் ரங்கநாதனிடம் இந்தப் பிரச்னை பற்றிப் பேசினாள் சுதாகரி!

“அப்படியா?” என்று மிகவும் ஆச்சர்யப்பட்டார் அவர். “பவி, உள்ளூர அப்பாவுக்காக ரொம்பவும் ஏங்கியிருப்பாள் போலல்லவா தெரிகிறது! பாவம்மா, குழந்தை! உனக்குப் பிடிக்காதோ என்று, இத்தனை நாள், செல்லம் மனதுக்குள்ளே குமைந்திருக்கிறது! எவ்வளவு அறிவாளி பார்!” என்று பேத்தியைப் புகழ்ந்தார்.

“அதிருக்கட்டும், பெரியப்பா! இப்போது, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு என்ன?”

“எனக்குத் தெரிந்து ஒரு தீர்வும் இல்லை! ஆனால், நீ வேண்டுமானால், அனியிடம் பேசிப் பாரேன்! அவள், தந்தையிடம் போய்விட்டால்..”

ஓரக் கண் பார்வையில் சுதாகரியின் முகம் வாடுவதைக் கண்டு முறுவலித்தார் அவர்.

ஆனால், அவரே அதிசயிக்கும் விதத்தில், மனதைக் கல்லாக்கிக்கொண்டு, அனியிடம் “அப்பாவிடம் போய் இருக்கிறாயா, கண்ணு?” என்று மெல்லக் கேட்டாள் சுதாகரி.

பெரிய விழிகளால் அவளைப் பார்த்து, “நீங்களும், பவியும் கூடவே வருவீங்களா, ஆன்ட்டி?” என்று கேட்டாள் சிறுமி.

பேச முடியாமல், சுதாகரி மறுப்பாகத் தலையசைக்கவும், “அப்போ, நானும் போகவே மாட்டேன்!” என்றாள் அனி தீர்மானமாக.

சொன்னதோடு நில்லாமல், எழுந்தோடி வந்து, சுதாகரியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, “பவிக்காக வேணுமானா, அப்பாவை இங்கே வரச் சொல்லிடுவோமா?” என்று கேட்டு, அவள் பங்குக்கு ஒருதரம் சுதாகரியை அதிர வைத்தாள்.

அதிர்ச்சியோடு, சுதாகரிக்குக் கண்களும் கலங்கின. எவ்வளவு அன்பு! கூடவே, எவ்வளவு புத்திசாலித்தனமாக, ஆன்ட்டி எதற்குக் கேட்கிறாள் என்று யோசித்து, அதற்கொரு தீர்வையும் கண்டு சொல்கிறாள்!

சிறுமியை முன்னே இழுத்து முத்தமிட்டு, “வேண்டாமடா செல்லம்!” என்றாள் சுதாகரி.

மிகுந்திருக்கும் கடைசி மார்க்கமாக, சரக்கு கொள்முதல்களின் இடையே ஒருநாள் வந்த மகேந்திரனிடம் பிரச்னையை எடுத்துச் சொன்னாள் சுதாகரி.

“லகுவான தீர்வு இருக்கிறது! ஆனால், அதைச் சொல்லி, ‘அசட்டு ஆண்பிள்ளைப் பேச்சு’ என்று வாங்கிக் கட்டிக்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை!” என்று, கண்ணில் சிரிப்புடன் அவன் கூறவும், அவள் முகம் கடுத்தது.

“சீரியசாகப் பேசுகையில், அது புரியாமல் வேடிக்கை பண்ணுவதுதான், அசட்டுத்தனமாகத் தெரிகிறது! பிரச்னையின் முக்கியத்துவம் பற்றி யோசித்துப் பேசுங்கள், மகேந்திரன்!” என்றாள் அவள் கோபமாக.

“ஸ்ஸ்.. ஆ! சூடு அதிகமாக இருப்பதுபோலத் தோன்றுகிறது! ஆனால், என் தீர்வு அதுதான்!” என்றான் மகேந்திரன்.

“அதுதான் முடியாது என்று அப்போதே சொன்னேனே!”

“ஏன் முடியாது?”

“என் காரணமும், உங்களுக்கு நன்றாகவே தெரியும்!” என்றாள் அவள் எரிச்சலாகவே.

அவளை ஓரக் கண்ணால் பார்த்து “நீ வாயால் சொன்ன காரணம் தெரியும்! ஆனால், உன் மனதில் வேறு பயமோ என்று, எனக்கொரு சந்தேகம்!” என்றான் அவன்.

“என்ன பயம்?” என்றாள் அவள் வெடுக்கென.

தோளைக் குலுக்கினான் அவன். “நீதான் மகா புத்திசாலியாயிற்றே! கண்டுபிடியேன்!”

அன்று அவன் வீட்டோடு பொருந்துவதாகச் சொன்னது நினைவு வர, அவள் முகம் கனன்றது. “மகேந்திரன்!” என்று ஆத்திரத்துடன் அழைத்து, “என்ன உளறல் இது?” என்று அதட்டிக் கேட்டாள்.

“உளறலாக எனக்குத் தோன்றவில்லை. வேறு எதற்காக நீ அங்கே வர மறுக்க வேண்டுமாம்? நீதான் சொல்லேன்!”

“வேறு எதற்காகவா? திமிரா? நீங்கள் என்ன உலக மகா மன்மதன் என்று எண்ணமா? அனிக்கு அப்பாவாக இருப்பதால், தப்பினீர்கள்! இல்லாவிட்டால், விரட்டியடித்துத் திரும்பிப் பாராமல் ஓட வைத்திருப்பேன்!” என்றாள் அவள் சின மிகுதியில்!

அவளையே பார்த்து, “அப்பாடி, என்ன கோபம்! அனல் பறக்கிறதே! அதில், தீப்பொறி மாதிரி என்ன வார்த்தைகள்!” என்றான் அவன்!

“நான் அப்படித்தான்! கோபக்காரிதான்! கடுமை தான்! வெறுப்பதும், விலகுவதும் உங்கள் விருப்பம்! எதுவானாலும், எனக்கு அக்கறையில்லை!” என்று எடுத்தெறிந்து பேசினாள் அவள்.

“வெறுப்பதா? ரோஜாவில் முள் இருப்பதால், அதை வெறுத்து விடுகிறோமா?” என்று கேட்டான் மகேந்திரன்! “பறித்து சூடிக் கொள்வது இல்லை?”

“என்னது?!” என்று கனல் எழ விழித்தாள் அவள்.

“ஐயையோ! எல்லாவற்றையும் தப்பாக எண்ண வேண்டாம், சுதாகரி! முள் இருந்தாலும், ரோஜாவை உயர்வாகத்தானே கருதுகிறோம்! முள்ளுக்காக வெறுப்பதில்லையே! உன் கோபம், கடுமையை ஒதுக்கி, நல்லதைப் பாராட்டுவது என்ற பொருளில்தான் சொன்னேன்.. அவ்வளவே!” என்று, தன் பேச்சுக்கு விளக்கம் சொன்னான் மகேந்திரன்.

இது சமாளிப்பாகவே இருந்தாலும், இந்த விளக்கத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பதும், அசிங்கமாகவே தோன்றும்!

அன்றிரவு தோட்டத்தில் வெகு நேரம் உட்கார்ந்திருந்தாள் சுதாகரி. சற்று நேரம் பார்த்துவிட்டு, வந்து, “என்னம்மா?” என்று விசாரித்தார் ரங்கநாதன்.

“ஒன்றுமில்லை, பெரியப்பா?”

“குரலில் வேறு, கண்ணீர் தெரிகிறது?”

“பெரிதாக எதுவுமில்லை, பெரியப்பா! இன்னும் நிறைய முட்களை வளர்த்திருக்க வேண்டுமோ என்று தோன்றுகிறது! இனியேனும்.. சரி, நீங்கள் போய்ப் படுங்கள், பெரியப்பா. நான் சற்று நேரம், இங்கே இருந்து விட்டு வருகிறேன்.”

## அத்தியாயம் – 19



**அ**தன்பின் மகேந்திரன் வந்த ஓரிரு தருணங்களில், சுதாகரி வீட்டில் இருக்கவில்லை! அதற்கேற்ப வேலைகளை அமைத்துக்கொண்டாள் எனலாம். பொதுவாக ரங்கநாதன் எடுத்துச் செய்யும் வேலைகளைக்கூடத் தானே செய்வதாக இழுத்துப் போட்டுக்கொண்டு செய்தாள்.

அவளது மனம் புரிந்திருந்ததால், பெரியவரும் ஒரேயடியாக மறுக்காமல், விட்டுக்கொடுத்து அவளை அனுப்பி விட்டு, பிள்ளைகளை கவனிப்பதற்காக வீட்டில் இருந்தார்.

ஒருதரம் இரு மக்களையும் வீட்டுக்குக் கூட்டிப் போய், வைத்திருந்துவிட்டு, மறுநாள் திருப்பிக் கூட்டிவந்து விட்டான் மகேந்திரன்.

எப்போதுமே, அவனும் அதிக நேரம் அமர்ந்திருந்து, சுதாகரியைப் பார்த்துப் பேச முயற்சி செய்யாமல், வேலை, வேலை என்று ஓடவே, ரோஜாப்பூ பற்றி அவன் சொன்ன விளக்கம் நிஜம்தானோ என்று சுதாகரிக்குத் தோன்ற, மெல்ல நிலைமை சீரடையலாயிற்று!

சிறுமியர் இருவருக்கும், மகேந்திரனை அடிக்கடி காண முடியாமல் போனது வருத்தம்தான் என்றாலும், அவன் சில 'வீடியோ விளையாட்டுகள்' வாங்கிக் கொடுத்திருந்ததாலும், 'சம்மர் காம்ப்' ஒன்றில் சுதாகரி அவர்களைச் சேர்த்திருந்ததாலும், அவர்களது விடுமுறை மகிழ்ச்சிகரமாகவே கழிந்து கொண்டிருந்தது!

மகேந்திரன் வந்தால், அதிர்ஷ்டப் பரிசுபோல, அவர்களுக்குத் தனியாக ஓர் ஆனந்தம்!

இடையிடையே துரைப்பாண்டியன் வந்து, அவனது திருமணப் பேச்சுகள் பற்றி அலுப்பும், சலிப்பும், கூடவே கூச்சமுமாக, சுதாகரியிடம் தெரிவித்தான்.

எல்லாம் கொஞ்சமும் படிக்காத குடும்பங்களில் இருந்தே, அவனுக்குப் பெண் கொடுக்க வருகிறார்களாம்! அதிலும், கிட்டி முட்டி அவன் தாய்க்கு ஒரு பெண்ணை பிடித்து விட்டதாம். அவனும் எப்படியோ அந்தப் பெண்ணை எட்டிப் பார்த்துவிடலாம் என்று சென்றால், வயல்வெளியைக் கடக்கும்போதே இனம் கண்டு, பெண்ணைப் பூட்டி வைத்துக் கொள்கிறார்களாம்!

அவர்கள் ஊரில், பெண்ணைப் பார்த்துவிட்டு வேண்டாம் என்று சொன்னால், ரொம்பக் கேவலமாம்!

இவ்வளவு பட்டிக்காட்டுப் பெண் வேண்டாம், கொஞ்சம் படித்தவளாக, நாகரீகமாகப் பார்க்கலாம் என்று தேடினால், அவர்கள், பையனும் படித்திருக்கவேண்டும் என்கிறார்களாம்!

“நாம எங்கே மேடம், அஞ்சாம் கிளாசு பெஞ்சியை மூணு வருஷம் தேய்த்த கேசு! நமக்குக் கீழேதானே, நம்மளும் பார்க்கணும்! அதான், இங்கனக்குள்ளேயே சுத்தி, இதே மேல் என்கிற முடிவுக்கும் வந்திட்டோம்! ஆனா, பெண்ணுக்குச் சம்மதமானு கேட்கிறதுதான், இப்போ பெரும்பாடா இருக்குது!” என்று விவரம் சொன்னான் அவன்!

கலைச்செல்வி மூலம் செய்த ஏற்பாடுகளும் பலனில்லையாம்! மாப்பிள்ளை வீட்டுக்காரி என்று, அவளிடமும் வாயை கப்பென்று மூடிக்கொள்கிறார்களாம்!



“பொண்ணு அபிப்பிராயத்தை எப்படித் தெரிந்து கொள்கிறது என்றே புரியலை, மேடம்! ஆனால், நீங்க சொன்னதுக்கப்புறம், அதோட மனசு தெரியாம, மேலே பேசி முடிக்கவும் எனக்குப் பிடிக்கலை! எங்கம்மாளு கோவப்படுகிறாங்க. ‘என்னையக் கேட்டா உங்கப்பாரு தாலியக் கட்டினாரு’னு கேட்கிறாங்க! நீங்க சொன்னது, படிச்சவுங்களுக்குத்தானாம்..”

“அடடா, உங்கள் திருமணம் என்னால் தடைப்படுகிற மாதிரியல்லவா தெரிகிறது!” என்றாள் சுதாகரி சிறு வருத்தத்துடன்.

ஆனாலும், அதென்ன பெண்ணின் மனம் தெரியாமலே மணமுடிப்பது? ஆடு, மாடு போல ஓட்டி வருவது?

நல்லவேளையாக, அடுத்த முறை வந்தபோது, துரைப்பாண்டியன் இன்னொன்று சொன்னான்.

பெண்ணின் ஊரில் புது வீட்டம்மா என்று ஒரு பெரியம்மா வந்திருக்கிறார்கள்!

“அது என்ன புது வீட்டம்மா?”

“பழைய வீடுதான் மேடம்! பண்ணைக் குடும்பத்திடம் இருந்து, லட்ச ரூபாய்க்கு வாங்கி, வெள்ளையெல்லாம் அடித்து, பெரிய தோரணயா அங்கே வசிக்கிறாங்க! நிறைய வயசு இருக்கும்! அவங்ககிட்டே அந்த ஊரிலே எல்லாருக்கும் மருவாதி! உங்க மாதிரி, டவுனு பாஷையிலே, நல்லாப் பேசுறாங்களா.. அவங்க சொன்னா, எல்லாரும் கேட்பாங்க. அவங்களை விட்டுக் கேட்கலாம்! விஷயத்தைச் சொன்னா, உதவி செய்ய முடியாதுன்னு சொல்ல மாட்டாங்க! அது.. சொல்ல மாட்டாங்கதானே மேடம்?”

“மாட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது! எதற்கும், கலைச்செல்வியைக் கூட அழைத்துப் போய், அந்த அம்மாவிடம் முதலில் அறிமுகம் செய்து கொள்ளுங்கள்!”

“சும்மாப் போகவா? ஏதாச்சும்.. லாலா கடை லட்டு, மிட்டாய் வாங்கிட்டுப் போகவா?”

“வயதானவர்கள் என்கிறீர்கள். அதனால், லட்டு மிட்டாயெல்லாம் வேண்டாம். உங்கள் விளை பொருட்கள் இரண்டு மூன்று வகை எடுத்துப் போங்களேன்! அப்புறம் விஷயத்தைச் சொல்லுங்கள்!” என்றாள் சுதாகரி.

முகம் வாட, “என்னான்னு சொல்றது, மேடம்? பொண்ணுக்கு என்னைப் பிடிச்சிருக்கானு கேட்கணும்னு வெளியே சொல்ல, வெட்கமா இருக்குதே! அத விடவும், பிடிக்கலைனு அந்தப் பொண்ணு சொல்லிட்டுதுனா, நம்ம ஊர் பயக முன்னலே எனக்கு எவ்வளவு கேவலம்! அது வேறே எனக்கு ரொம்ப பயம்! அந்தம்மாவும்தான் என்னான்னு நினைப்பாங்க?” என்று தன் பல்வேறு கவலைகளையும் கொட்டித் தீர்த்தான், துரைப்பாண்டியன்.

மனதில் இத்தனை குழப்பங்களும், தொல்லைகளும் இருந்தாலும், பெண்ணின் சம்மதத்தை அறிந்து கொள்வதில், துரைப்பாண்டியன் உறுதியாக இருந்தது. சுதாகரிக்கு ஆச்சர்யமாக இருந்தது!

‘எங்க அம்மாள் கண்டிப்பாச் சொன்னதாலே சரீன்னுட்டேன் மேடம்’ என்று அவளிடம் சொல்லி, எளிதாக சமாளித்து விடலாமே! ஆனாலும், அவள் ஒன்று சொல்லிவிட்டாள் என்பதற்காகப் பெண்ணின் சம்மதத்தை அறிவதில் உறுதியாக இருக்கிறான்!

மகேந்திரன் சொன்னதுபோலப் பயங்கரப் பக்தன் தான்! அவன் மேலும் சொன்னதுபோல, வெள்ளை மனிதனும் கூட! சரியாகத்தான் கணக்கிட்டிருக்கிறான்!

துரைப்பாண்டியன் மீது உள்ளூரப் பரிவுடன், “அந்தம்மாவிடம், விளக்கமாக விவரம் சொல்லுங்கள், துரைப்பாண்டியன். அவர்களும் ஒரு பெண்தானே? மணக்க இருக்கும் பெண்ணின் சம்மதம் அறிவதற்காக இவ்வளவு முயற்சி செய்கிறீர்கள் என்பது, அவர்களுக்கும் உவப்பாகத்தான் இருக்கும்! அதனால், அவர்களே, அந்தப்

பெண்ணிடம் உங்களைப் பற்றி உயர்வாகத்தான் பேசுவார்கள்! இப்போதே தன் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்கிறீர்கள் என்று, அந்தப் பெண்ணும் சந்தோஷமாகவே சம்மதிக்கப் போகிறாள்!" என்று சுதாகரி நம்பிக்கையோடு கூறவும், அவனுக்கு வாயெல்லாம் பல்லாயிற்று!

பூரிப்பை அடக்கிக்கொண்டு அவன் பேசத் தொடங்குவதற்கு முன்னதாக, "நல்ல விஷயம் பேசியதால் மகிழ்ச்சியாக இருக்கும் மன நிலையைக் கெடுக்காமல், இந்த அரிசி மூட்டையை எடுத்துப் போய்விடுங்கள், துரைப்பாண்டியன்!" என்று சுதாகரி அழுத்தமான குரலில் கூறவே, நின்று வாதாடாமல், அரிசி மூட்டையைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான் அவன்!

முதல் தடவையாக, அவன் கொண்டு வந்ததைக் கொஞ்சமேனும் வையாமல், நின்று வாதாடாமல், முழுமையாகத் திருப்பி எடுத்துப் போயிருக்கிறான்!

இதே அழுத்தத்துடன்தான் எல்லோரிடமும் பேச வேண்டும் போலும் என்று உள்ளூர எண்ணிக் கொண்டாள் சுதாகரி! முக்கியமாக மகேந்திரனிடம்!

ஆனால், அனியோடு சேர்த்து, பவித்ராவுக்கும் அவன் வாங்கி வருவதை எப்படித் தடுப்பது? தடுக்க நினைப்பதே தவறுபோல அல்லவா பேசி முடித்து விடுகிறான்!

ஒருவேளை, சுதாகரிக்கே ஏதாவது கொண்டு வந்தால், வேண்டாம் என்று விரட்டலாம்! ஆனால் அவன்தான் அதுபோல மாட்டிக் கொள்வதே இல்லையே!

கெட்டிக்காரன்! அவளது மனநிலை புரிந்து, அந்த முயற்சி அவன் பண்ணவே காணோம்! முகத்திலடித்தது போலப் பதில் வரும் என்ற பயமா? அல்லது, அவளது குணம் புரிந்து, அதற்கு மதிப்புக் கொடுக்கிறானா?

எதுவாக இருந்தாலும், இரண்டுமே அவளுக்கு உவப்பாக இருக்கவில்லை! இரண்டிலுமே, அவளது குணம் பற்றி, மகேந்திரன் நன்றாக அறிந்திருப்பது போலல்லவா தோன்றுகிறது?

பூட்டிய கதவுக்குப் பின்னால் என்ன இருக்கிறது என்று தெரியாத வரையில்தான், அது பற்றிய பயம் இருக்கும்! அருகில் நெருங்குவதற்குத் தயக்கமாகவும் இருக்கும்! மகேந்திரனின் சமீபத்திய பேச்சுகளில், அந்தப் பயம், தயக்கம் ஒன்றையுமே, அவள் காணவில்லை! அப்படியானால்..

இப்படிச் சுற்றிச் சுற்றி மகேந்திரனிடமே எண்ணங்கள் வந்து நிற்கவும் சுதாகரி உள்ளூரக் கலக்கமடைந்தாள்.

தேவையற்று ஆண்களை பற்றி நினைப்பது கூடாது என்பது சில ஆண்டுகளுக்கு முன்பாகவே அவள் யோசித்து முடிவு செய்த விஷயம்! மகேந்திரனைத் தூர நிறுத்துவதும், ஓரளவு அப்படியே! அனியை வைத்துக்கொண்டு, வீட்டில் அவனது வரவைத் தடுக்க முடியாது என்றாலும், மனதால் அவனை நினைப்பதைத் தவிர்க்கலாமே! தவிர்த்தே ஆகவேண்டும்!

பிடிவாதமாக, மனதை மாற்றும் பல்வேறு முயற்சிகளில் சுதாகரி ஈடுபட்டாள்.

ஓரிரு முறை கவனித்துவிட்டு, "என்னம்மா, மனது சற்று சஞ்சலப்படுவதுபோலத் தெரிகிறதே!" என்றார் ரங்கநாதன்.

இல்லை என்று மறுக்கப் போனவள் நிறுத்திக் கொண்டாள். அவளது வாழ்வில், அவர் அறியாதது என்ன இருக்கிறது?

"ஆமாம், பெரியப்பா!" என்று உண்மையை ஒப்புக் கொண்டவள், "இந்த அனி வந்து, மனதைக் கொஞ்சம் இளக்கிவிட்டாள்! ஆனால், சீக்கிரமே சரிப்படுத்திக் கொள்வேன்!" என்று முடித்தபோது, குரலில் அழுத்தம் இருந்தது!

யோசனையாகப் பார்த்து, "அனியால்தான் வருத்தம் என்றால், அவளைக் கூட்டிப்போ என்று, மகேந்திரனிடம் கண்டிப்பாகச் சொல்லிவிட்டால் என்ன?" என்று சுதாகரியின் அதிர்ச்சியை உள்ளூரக் குறித்துக்கொண்டவாறு ரங்கநாதன் கேட்டார்.

திடுக்கிட்டு, "என்ன பெரியப்பா, இப்படிக் கேட்டு விட்டீர்கள்? அப்புறம் அனி என்ன ஆவாள்? மிகவும் வருத்தப்படமாட்டாள்? உங்களுக்கும் அனியைப் பிடிக்கும் என்று நினைத்தேனே!" என்று திகைப்புடன் வினவினாள் பெண்!



"பிடிக்கும்மா. இல்லையென்று சொல்லவே முடியாது! ஆனால், அவளது வருத்தத்துக்காக, நாம் எவ்வளவு பார்ப்பது? சொல்லப் போனால், அவளுக்கும் நமக்கும் என்ன? ஒட்டா, உறவா? அப்படிப் பார்க்கும்போது.."

"அப்படிப் பார்க்கும்போது, நானும் பவியும் மட்டும் உங்களுக்கு என்ன பெரியப்பா? எவ்வளவோ துன்பத்துக்கு இடையிலும் எங்களை உதறிப் போனீர்களா என்ன? முழுக்க முழுக்க உங்கள் தலைச் சுமையாக அல்லவா ஏற்றிருந்தீர்கள்? நான் காலூன்றவே எவ்வளவு காலம் ஆயிற்று!"

பழைய கதையை நினைப்பது, ஒன்றிலிருந்து ஒன்றாகப் பல துன்பங்களை நினைவுப்படுத்தி, மனதைப் பலவீனமாக்கும் என்று ஒதுக்குகிறவள்!

அறிந்திருந்தும், அதையே துழாவுகிறவராக, "உன்னை என் பெண்ணாக மனதில் ஏற்றுவிட்டேன். சுதாம்மா! அதன் வழியில் பவியும், என் சொந்தப் பேத்திதானே? பெண்ணும் பேத்தியும் சுமையாவார்களா?" என்றார் பெரியவர்.

"எனக்கும் அப்படித்தான், பெரியப்பா! என் அப்பாவே உங்களில் கலந்துவிட்ட மாதிரி உணர்வு!" என்று நெகிழ்ச்சியோடு கூறியவள் சற்றுத் திகைத்தாள். பிறகு, "அதேபோல, அனியிடமும் எப்படியோ பாசம் வந்து விட்டது பெரியப்பா! பவி

வருத்தப்பட்டால் எப்படித் தாங்காதோ, அதேபோல அனி வருந்தினாலும், என்னால் பொறுக்க முடியவில்லை! அதோடு.. பாவம், யாருமில்லாமல் அவளை அந்த வீட்டுக்கு எப்படி அனுப்புவது? அங்கே தனியாக அவளால் இருக்க முடியாது, பெரியப்பா!" என்றவளின் குரல், இப்போது தடுமாறியது.

"தனி என்னம்மா? அங்கேதான் மகேந்திரன் இருக்கிறாரே! சரியான 'கவர்னஸ்' கிடைக்காவிட்டாலும்தான் என்ன? உதவிக்கு வேலையாட்களை வைத்துக்கொண்டு பார்க்கவேண்டியதுதானே?" என்றார் அக்கறையற்றவற்றவர் போல, ரங்கநாதன்.

"அது.. மகேந்திரன் இருக்கிறார்தான்! ஆனால், இப்போது என்ன நடக்கிறது பாருங்கள்! இப்படிப் பார்த்தும், விலை கேட்டும் வாங்கப் போகிறேன் பேர்வழி என்று, அவர் கிளம்பி ஊர்வழி போய்விட்டால், வெறும் வேலையாட்களிடையே, அனியின் நிலை என்ன ஆகும், பாருங்கள்! உறவே சரிவரவில்லையே! அவளும் அதற்குப் பயந்துதான், அங்கே போகவே முடியாது என்று சொல்லுகிறாள்."

"அப்படியா சொன்னாள்? என்னவோ, நீயும் பவிக் குட்டியும் கூட வரவேண்டும் என்று ஏதோ சொன்ன மாதிரி காதில் விழுந்ததே.." என்று இழுத்தார் பெரியவர்.

"அதுவும் சொன்னாள் பெரியப்பா. அவள் சின்னக் குழந்தைதானே.. ஏதோ, வாயில் வந்ததைச் சொல்லி விட்டாள். ஆனால், அது சரிப்படாது! சரிவராது! கொஞ்சமும்.." என்று படபடத்தவள் சட்டெனப் பேச்சை நிறுத்தினாள். ஒரு பெரிய மூச்சை எடுத்து, தன்னை நிதானப்படுத்திக்கொண்டு, "இருக்கட்டும் பெரியப்பா! இப்போதைக்கு இப்படியே இருக்கட்டும்! இந்தக் கொள்முதல் வேலை முடிந்து, மகேந்திரன் வரட்டும்! என்னன்ன செய்வது என்று அப்புறம் பார்ப்போம்" என்று முடித்தாள்.

"ஆமாம்மா! எல்லாம் அவர் வந்தே பார்க்கட்டும்! அவருடைய மகள்தானே!" என்று அப்போதைக்கு அந்தப் பேச்சை ரங்கநாதனும் விட்டுவிட்டார்!

அந்த முறை கொள்முதல் முடிந்து மகேந்திரன் திரும்பி வருவதற்குப் பத்து நாட்கள் ஆகிவிட்டன! எப்போதும் போல, வந்ததும் 'இந்திரதனுசு'வுக்குப் போய் மேலோட்டமாக ஒருதரம் சுற்றிப் பார்த்துவிட்டு, தலைமை நிர்வாகியிடம் கடை நிலவரம் பற்றிச் சுருக்கமாகப் பேசிவிட்டு அவனது அறைக்குள் சென்று, இலகுவாக அமர்ந்து டெலிபோனை எடுத்தான்.

போனை எடுத்தவர் ரங்கநாதன்தான். ஆனால், பேசுவது யார் என்று புரிந்ததுமே, பிள்ளைகள் இருவரும் நான், நான் என்று போட்டி போட்டுக்கொண்டு அவனோடு பேச ஓடி வந்துவிட்டனர்!

இந்தப் பத்து நாட்களில் அவர்கள் என்னென்ன செய்தார்கள் என்று இருவருமாக ஒருவாறு சொல்லி முடித்த பின், சுதாகரியைக் கூப்பிடச் சொன்னான் அவன்.

"அம்மா இன்னும் காய் வாங்கிட்டு வரவே இல்லையே!" என்று பவித்ரா பதில் சொன்னதுமே, ஒரு விறைப்புடன் நிமிர்ந்தான் அவன்.

“ஆமாம்ப்பா! ரொம்ப நேரமாக ஆன்ட்டி இன்னும் வரலை! தாத்தா கூட, வெளியே, வெளியே போய்ப் பார்த்திட்டே இருக்கிறாங்க!” என்று அனி கூறி முடிக்கும்போது, மகேந்திரன் இருக்கையை விட்டு எழுந்துவிட்டான்.

ரங்கநாதனை அழைத்து, சுதாகரி சென்றிருக்கும் இடங்கள் பற்றி அறிந்துகொண்டு கிளம்பியவனின் கையில் கார் பறந்தது!

சுதாகரியின் தினசரி வழக்கப்படி என்றால், அவள் திரும்பி வந்து சேர்ந்தே, குறைந்தது இரண்டு மணி நேரம் ஆகியிருக்க வேண்டும்! ஒருவிதமான தகவலும் இல்லாமல், இவ்வளவு தாமதத்துக்கு அவன் மனதில் ஒரேயொரு காரணம் மட்டுமே தோன்ற, அவனுக்குக் கதிகலங்கிவிட்டது!

ஒழுங்கற்ற, ஒடுக்கமான கிராமத்துச் சாலை! சமீபத்திய மழையில் இன்னமும் மேடுபள்ளமாகப் பல் சக்கரமாகியிருக்கும்! இதில், எவ்வளவு காய்கறியை வைத்துக்கொண்டு, எப்படி ஓட்டி, சமாளிக்க முடியாமல் எங்கே விழுந்து, என்ன மாதிரி அடிபட்டு..

அதற்கு மேல், அவனால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை! அவளுக்கு உதவி என்று, இன்னும் அதிகப்படிச் சுமையாகக் கல்யாண மண்டப ஒப்பந்தத்தை வேறு ஏற்பாடு செய்துகொடுத்ததை எண்ணி, தன்னைத் தானே நொந்துகொண்டு, நேர் கோணமாகத் திரும்பிய அந்தச் சாலையில் சிரமத்துடன் காரைத் திருப்பியபோது, தூரத்தில்.. ஓர் ஒற்றைப் பனை மரத்தின் அடியில் சுதாகரி நிற்பதை, மகேந்திரன் கண்டான்.

சற்றுத் தொலைவில், அவளது வண்டியும், உடைசலோ.. நெளிசலோ இன்றியே நின்றது!

அவளுக்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்திராமல், அவள் நல்லபடியாகக் கிடைத்தால் போதும் என்று எண்ணியிருந்தவனுக்கு, ‘ஒருவர்க்கிருக்க நிழலாகாத’ பனை மரத்தின் சிறு நிழல் போதாமல் முகம் கன்றிச் சிவந்திருந்தது தவிர, வேறு குறையின்றி அவளைப் பார்த்ததும், நிம்மதிக்கு நேர் விரோதமாக, ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது!

ரங்கநாதன் வாசலிலேயே நிற்கிறார்! இப்போதே ‘ரொம்ப நேரமாக’ எனும் பிள்ளைகள், விரைவிலே தேடத் தொடங்குவார்கள்! அவன், கண்மூடித்தனமாகக் காரை அசுர வேகத்தில் ஓட்டி வந்திருக்கிறான்! இவளானால், ஹாயாக மரத்தில் சாய்ந்துகொண்டு நிற்கிறாள்!

வார்த்தைகளால் குதறி எடுத்துவிடும் வேகத்தோடு, சுதாகரியை நெருங்கினான் மகேந்திரன்!

## அத்தியாயம் – 20



**சு**தாகரி அலுத்துக் களைத்துப் போயிருந்தாள்.

வழக்கமான காய்கறிகளோடு, கல்யாண மண்டபத்து ‘ஆர்டரு’ம் சேர்ந்து, அரை மடங்கு அதிகப்பளுதான். இன்னொரு தடவை வந்து, பாதிக் காய்களை எடுத்துச் செல்லலாமா என்றுகூட, அவள் ஒருதரம் யோசித்தாள்!

ஆனால், இரண்டு முறை வந்து எடுத்துச் செல்லுவதற்கு, காய்களின் அளவு மிகவும் குறைவு! பெட்ரோலும் பொன்னான நேரமும் நிறையவே வீணாகும்! அதைவிட, வேகத்தைக் குறைத்து, மெதுவாக, ஒரு தடவையிலேயே எடுத்துப் போய்விடலாம்!

கிளம்பலாம் என்று பார்த்தால், துரைப்பாண்டியன் வந்துவிட்டான். அவனது திருமணம் பற்றிய கடைசித் தகவல்களை, அவளிடம் ஆவலாகத் தெரிவித்தான்!

புது வீட்டம்மா விஷயமாக, சுதாகரி கொடுத்த ஆலோசனை மிகவும் பயனுள்ளதாக ஆகிவிட்டதாம்! அவனது வயலில் விளைந்த கடலையும், உளுந்தும், அந்தம்மாவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்றாம்! பேச்சுவாக்கில், அவன் வந்த விவரம் தெரிய வரவும், சீக்கிரமாக, ஒருநாள் பெண் வீட்டுக்குப் போகப் போவதாகச் சொல்லியிருக்கிறாள்!

“ரொம்ப சந்தோஷம், துரைப்பாண்டியன்! சீக்கிரமே நல்ல சேதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்போம்! நீங்கள் எதற்கும், அந்தம்மாவை அடிக்கடி போய்ப் பாருங்கள்!” என்றாள்.

“இன்னிக்கே போகப் போறேங்க, மேடம்! கடலையும், உளுந்தும் இன்னும் கொஞ்சம் கொண்டாங்க, காசு வேணுமானாத் தந்து விடறேன்னாங்க மேடம்! அவங்க செய்யப் போகிற உதவிக்குக் காசு என்னாங்க பெருசு? ரெண்டுலயுமே கூடுதலா ரெண்டு ரெண்டு கிலோ கொண்டு போய்க் கொடுக்கலாமின்னு இருக்கேன், மேடம்! நீங்ககூடக் கொஞ்சம் கொண்டு போகலாம்.. நல்ல மணிமணியாக் கடலை..” என்று தொடங்கினான் துரைப்பாண்டியன்.

வழக்கம்போல அவள் மறுக்கவும், “காய்ங்க நிறைய இருக்குதே! நானே கொண்டாந்து தரட்டுமா? ஆளை அனுப்பட்டுமா..?” என்று இன்னொரு வழியில் உதவ முன் வந்தான்.

பிடிவாதமாக அவனது உதவியை மறுத்துவிட்டு, ஒருவாறு சுதாகரி கிளம்பும்போதே, சற்றுத் தாமதம்தான்.

காய்கறிக் கொள்முதல் ஊர்களை எல்லாம் கடந்து, சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரையிலும், ஒரு பிரச்னையும் இல்லை!

அதுவே, ஊர்வலம்போல மெதுவாகத் தான் வாகனத்தை ஓட்டி வந்தாள்! மழையால் பழுதுபட்டிருந்த சாலை என்பதாலும், கொண்டுவந்த கனத்தாலும், இரு மடங்கு கவனம்தான்!

ஆனால், திடுமெனச் சக்கரத்தில் காற்று இறங்கி, வண்டி அவள் கையில் தடுமாறியது!

சமாளித்து நிறுத்திவிட்டு, இறங்கிப் பார்த்தால், இருந்திருந்து, அன்று பார்த்து, டயரில் ஆணி குத்திக் காற்று இறங்கிவிட்டிருந்தது! ஸ்டெப்னி டயரை, முன்தினம்தான் ‘ரிட்ரெட்’ செய்யக் கொடுத்திருந்தாள்!

புதிய டயர் வாங்கியிருக்கவேண்டும்! ஆனால் தொழிலின் வளர்ச்சியால், அன்றைப் போலவே, பல நாட்களில், இந்த ஸ்கூட்டரில் காய்களைக் கொண்டு செல்வது சிரமமாக இருந்ததால், சற்றுப் பெரியதாக, வேறு வாகனம் வாங்கலாம் என்ற யோசனை, ரங்கநாதன், அவள்.. இருவருக்குமே இருந்தது! கடை வைத்துவிட்டால், இன்னும் பெரிய கொள்ளளவு கொண்ட வாகனம், நிச்சயமாகத் தேவைப்படும்! அதை வாங்கித்தான் ஆக வேண்டும்.

இந்தக் காரணங்களால், ஐந்து ஆண்டுகளாக ஓட்டி, ஓட்டிப் பழசாகி விட்டிருந்த ஸ்கூட்டரையே, அவ்வப்போது சிறு சிறு சரிப்படுத்தல்களோடு இருவரும் ஓட்டிக் கொண்டிருந்தனர்!

தேவையானதை, அவ்வப்போது செய்து விடுவதால், இன்று வரை பிரச்னை ஏதும் வந்ததில்லை! ஆனால், இவ்வளவு காலம் உழைத்தது, இன்று மோசமான நேரத்தில், இடத்தில் வாயைப் பிளந்து வைத்தது!

சற்று நேரம், அவளுக்கு என்ன செய்வது என்றே புரியாது போயிற்று!

போக்குவரத்து மிகவும் குறைவான, ஒதுக்குப்புறமான சாலை! அறுவடை முடிந்த நேரம்! எனவே, களை பிடுங்க, தண்ணீர் பாய்ச்ச, உரமிட, மருந்தடிக்க என்று விவசாய வேலை எதைச் செய்யவும், அங்கே யாரும் இருக்கவில்லை! அந்த வழியைப் பயன்படுத்தி, தூரத்து வயல் வேலைகளுக்குப் போகிறவர்களும், ஏற்கனவே சென்றிருப்பார்கள்! காலையில் போகிறவர்கள் பொழுதடைந்துதான் திரும்புவார்கள்!

நேரமோ, கதிரவன் உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்த வேளை!

சாலையோடு போய்க்கொண்டே இருந்தால், ஏதேனும் ஒரு பக்கத்தில், ஒரு குடிசை வீடேனும் இருக்கத்தான் செய்யும்! தூரத்தில், வீடு போலத் தெரியத்தான் செய்தது! ஆனால், எந்த வீட்டிலும் போய் உதவி கேட்க, அவளுக்கு மனமில்லை! அத்தோடு, வண்டி நிறையக் காய்கறியைப் பாதுகாவலுக்கு யாருமில்லாமல் விட்டு அதிக தூரம் போவதும், சுதாகரிக்குத் தப்பாகத் தோன்றிற்று! அன்று மாலையில் திருமண மண்டபத்துக்குக் கொடுக்க வேண்டிய காய்களை, எப்படியோ போகட்டும் என்று விட முடியாது!

அவ்வளவு காய்களோடு, காற்றில்லாத டயருடன் வாகனத்தைத் தள்ளவும், அவளால் முடியவில்லை!

எனவே, ஏதாவது காரணத்தால், யாராவது அந்த வழியே வரமாட்டார்களா என்று காத்திருப்பது தவிர, அவளுக்கு வேறு வழியில்லாது போயிற்று!

எப்படியும், அளவு மீறி, அதிக நேரம் ஆகிவிட்டதால், ரங்கநாதன் ஏதாவது ஏற்பாடு பண்ணுவார்!

அதுவரை, காய்கறியைக் கண் காணித்தபடியே, அக்கம் பக்கம் எங்கேனும் நிற்கவேண்டியதுதான்...!

சுட்டெரித்த வெயிலில், சாலையிலிருந்து சற்று தூரத்தில் நின்ற ஒற்றைப் பனை மரத்தின் சிறு நிழலில் ஒண்டிக்கொண்டு காத்திருந்தாள் அவள்!

இன்னும் தள்ளியிருந்த சில பெரிய மரங்களின் நிழலுக்குச் செல்ல அவளுக்குப் பயம்! யாராவது, சைக்கிள், பைக்கில் வந்து, அவள் குரல் கொடுத்து வரும் முன் தாண்டிப் போய் விட்டால்?

எனவே, வெயில் வெக்கையை சகித்துக்கொண்டு, அங்கேயே நின்றாள்.

வெகு நேரத்துக்குப் பிறகு, கையோடு கொண்டு சென்ற குடிதண்ணீர் பாட்டில் காலியாகிற நேரத்தில், ஒரு கார் வரும் சத்தம் கேட்கவும், இந்தச் சாலையில் காரா என்று, அவளுக்கு முதலில் ஆச்சர்யமே! ரங்கநாதனின் ஏற்பாடு என்றால், ஆட்டோவாக இருக்கும் என்று பார்த்தால், மகேந்திரனின் கார்!

உள்ளம் துள்ளப் பனை மரத்தின் நிழலை விட்டு, சாலைக்கு விரைந்தாள் சுதாகரி.

ஆனால், புன்னகையோடு அருகில் வந்தவளிடம், “இவ்வளவு நேரம் ஆகியிருக்கிறது! ஒரு போன் செய்து, தாமதமாகும் என்று சொல்லும் அளவு, உனக்கு மூளையில்லை?” என்று எரிந்து விழுந்தான் மகேந்திரன்.

உடம்பும் மனமும் எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டு நின்றிருப்பாள் என்று யோசிக்கத் தோன்றவில்லையே!

புன்னகை மறைய, விறைத்து நிமிர்ந்தாள் சுதாகரி. “மூளையைப் பற்றிய கேள்வியை நான்தான், உங்களிடம் கேட்க வேண்டும்! இதை, எந்த நாட்டு தேசிய நெடுஞ்சாலை என்று எண்ணிக்கொண்டீர்கள். அங்கங்கே டெலிபோன் பூத் இருப்பதற்கு? கண்ணைத் திறந்து வைத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பாருங்கள்! அக்கம் பக்கம் எங்கேனும் போன் பூத் இருக்கிறதா என்றேனும் தெரியும்!” என்றாள் ஏளனமாக!

அவள் பேசிய விதம் மேலும் கோபமூட்ட, “ஏன்? இங்கேயே நின்றுதான் பார்த்தாக வேண்டுமா? அல்லது பூத்தில்தான் போன் பண்ண முடியுமா? அங்குமிங்கும் தேடிச் சென்று, ஏதாவது வீட்டில் போன் இருக்கிறதா என்று பார்க்க வேண்டியதுதானே? நகர முடியாதபடி, காலின் கீழ் வேரோடி விட்டாற் போல, இங்கேயே நிற்பதற்கு, சற்று தூரம் சென்று தேடினால் என்ன?” என்று அவனும் எகத்தாளமாகவே கேட்டான்!



அடியோடு மறந்துவிட்டிருந்த இரண்டாவது சந்திப்பின் மகேந்திரன் சுதாகரிக்கு நினைவு வந்தான்! ஆனால், அவனுக்கு மட்டும்தான் அடுத்தவரை மட்டம் தட்டிப் பேச முடியுமா?

“சற்று நின்றாலே காலின் கீழ் வேரோடி விடுவதற்கு, நான் தாவரம் ஆகிவிடவில்லை, மகேந்திரன் சார்! ஆனால், உங்கள் கண்களுக்குப் பார்க்கிற சக்தி மட்டுப்படாமல் இருந்தால், அங்கங்கே தூரத்தில் ஆடு, மாடு மேய்வது தெரியும்! பணம் கொடுத்து, இவ்வளவு காய்கறியை, நான் ஆடு, மாடு தின்பதற்காக வாங்கி வரவில்லை, தெரியுமா? இன்னொரு சின்ன விவரம்! ஸ்கூட்டரில் இருப்பதால், அவை அடுத்தவருக்குச் சொந்தம், தின்னக் கூடாது என்று, ஆட்டுக்கும் மாட்டுக்கும் தெரியாது! பாவம்! ஐந்தறிவுதானே? அதனால், அவைகள் வந்தால் விரட்டுவதற்காக, நான் இங்கேயே நிற்க வேண்டியதாயிற்றே தவிர, காலின் கீழ் வேரோடியதால் அல்ல!” என்றாள் அவள் இளக்காரமாக!

இடையில் அவன் பேச இடமே கொடுக்கவில்லை!

“ஆமாம், பெரிய காய்கறிகள்! பாதி சேதமானால்தான் என்ன பெரிய நஷ்டமாகிவிடும்? இரண்டு மணி நேரம் தாமதமானால், வீட்டில் எல்லோருக்கும் எவ்வளவு கவலையாக இருக்கும் என்று யோசிக்க வேண்டாம்? அது முக்கியமில்லையா?”

அவனது பேச்சின் பின் பகுதியை ஒதுக்கி, “உங்களுக்கு அலட்சியமாகத்தான் தோன்றும்! ஆனால், எங்கள் தொழிலின், பிழைப்பின் ஆதாரம், இந்தக் காய்கள்தான்! அதனால், எனக்கு இவைதான் முக்கியம்! அத்தோடு, நாலு மணிக்கு ‘சப்ளை’ பண்ணுவதாக ஒப்புக்கொண்ட காய்களும் இதில் இருக்கின்றன! நீங்கள் எப்படியோ? எனக்கு வார்த்தை மாறிப் பழக்கம் இல்லை!” என்று ஒரு குத்தலோடு முடித்தாள் சுதாகரி.

“தொழிலில் வாக்குசுத்தம் எல்லாருக்கும் முக்கியம் தான்!” என்றவனின் குரல் பெரிதும் இறங்கிவிட்டிருந்தது! “அத்தோடு, எந்தத் தொழிலிலும் எனக்கு அலட்சியமும் இல்லை.”

ஸ்கூட்டரை நோக்கி நடந்தபடி, “வண்டியில் என்ன தகராறு?” என்று கேட்டதும், அதே இறங்கிய குரலில் தான்!

“டயர் பங்க்சர்” என்றபோது, அடுத்த கேள்வியை எதிர்பார்த்து, அவளது குரல், அவனை விடவும் அதிகமாக இறங்கிவிட்டிருந்தது!

“அதனால் என்ன? பழுதான டயரை மாற்றத் தெரியாமலா, வண்டியை எடுத்துக்கொண்டு, காடோ, மேடோ என்று தன்னந்தனியாக அலைகிறாய்? ஸ்டெப்னியை மாட்டிக்கொண்டு வருவதுதானே? பதினைந்தே நிமிஷத் தாமதத்தில் வீடு வந்து சேர்ந்திருக்கலாம்!” என்றபடி மாற்று டயர் வைக்கும் இடத்தைப் பார்த்தவன், அங்கே எதையும் காணாமல், அவளை நோக்கினான்.

“ஸ்டெப்னியை ரிட்ரெட் பண்ணக் கொடுத்திருக்கிறது!” என்றாள் எழும்பாத குரலில்.

“வாட்?!”

“நாளைக்கு வந்துவிடும்!”

“ஆனால், இன்றைக்கு அதனால் என்ன பிரயோஜனம்?”

பதில் சொல்ல முடியாத நிலை அவன் மீதே எரிச்சலை ஏற்படுத்தியது! அவளே மனம் குன்றி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இவன் என்ன, ஓட ஓட விரட்டுகிறான்?

“உன்னைப்போய், நாலையும் திட்டமிட்டு, அழகாகத் தொழிலை வளர்க்கிறவள் என்று, மனதில் பாராட்டிக் கொண்டிருந்தேன்!” என்று உரக்க முணுமுணுத்துவிட்டு, அவளது வாகனத்தின் கேரியர், சீட்.. முதலிய அனைத்திலும் நிரம்பி வழிந்த காய்கறிக் கட்டுகளை எடுத்துக் காரில் அடுக்கத் தொடங்கினான் மகேந்திரன்!

“யாரும் அரைமனதாக எனக்கு உதவி பண்ணத் தேவையில்லை!” என்றாள் அவள் எரிச்சலோடு!

“உதவி தேவையில்லையா? பின்னே, இங்கேயே நின்று தவம் பண்ணப் போகிறாயா? என்னவோ, பஞ்சாக்கினியின் நடுவே நின்று தவம் செய்ததாகப் பழைய கதைகளில், முனிவர்களைப் பற்றி வருமே..அவர்களுக்குச் சமமாக, இந்த

வெயிலில் நீ தவமும் பண்ணலாம், காய்கறிகளை, வற்றலாக விற்றும் விடலாம்! ஆனால், மண்டபத்துக்காரர், காய்களுக்குப் பதில் வற்றல் வாங்குவாரா என்றுதான் தெரியவில்லை!"

நக்கல்தான்! ஆனால், அவனது வார்த்தைகளால் உருவான கற்பனைக் காட்சி, அவளுக்கு வேடிக்கையாகவும் இருந்தது!

தன்னை மீறி வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "அதற்கெல்லாம் அவசியமே கிடையாது! கொஞ்ச நேரம் பார்த்துவிட்டுப் பெரியப்பா ஏதாவது ஏற்பாடு செய்வார்!" என்று மிடுக்காகக் கூறினாள் அவள்.

"அங்கிள்தானே? வாசலிலேயே நின்று, வழியையே பார்த்துக் கொண்டிருக்கிறார்!" என்று மகேந்திரன் கூறவும், சுதாகரி பரபரப்படைந்தாள்.

அதைக் கவனித்து, "பிள்ளைகளும், ரொம்ப நேரமாக உன்னைக் காணவில்லையே என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்! தாத்தா வாசலிலேயே நின்று வழி பார்ப்பதாகவும், அவர்கள்தான் சொன்னார்கள். ஆனால், ஏதோ ஒருதரம் பிரச்னை ஏற்படுவதோ, அதற்காக எல்லோரும் கவலைப்படுவதோ என்ன பிரமாத விஷயம்? சொல்லப் போனால், யாருக்காகவும் அப்படி எல்லாம் கவலைப்படுவதுதான் தப்பு!" என்றான் மகேந்திரன், விடாமல்.

கண்களை ஒருதரம் இறுக மூடித் திறந்தாள் சுதாகரி!

எதுவும் அவளது தப்பில்லை என்று இவனிடம் வாதாடிக் கொண்டிருந்தால், வீணாக இன்னமும் அதிகத் தாமதம்தான் ஆகும்! பெரியப்பாவுக்கு வீணான துன்பம்!

மேலே எதுவும் பேசாமல், அவளும் சேர்ந்து, காய்களைத் தூக்கிக் காரில் வைக்கலானாள்.

ஸ்கூட்டரை சாலையிலிருந்து இறக்கிப் பூட்டி, சுதாகரி நின்றுகொண்டிருந்த பனை மரத்தின் மீது சாய்த்து வைத்துவிட்டுத் திரும்பி வந்து காரை எடுத்தான் மகேந்திரன்.

அந்தப் பேச்சற்ற அமைதியும் மனதைத் தாக்க, "பாக்கெட் போடுகிற பூமணி வந்ததும், அவளிடம் பிள்ளைகளை விட்டுவிட்டுப் பெரியப்பா என்னைத் தேடி வருவார் என்று நினைத்தேன்.." என்றாள் சுதாகரி மெதுவாக.

"அதுவரை பெரியவர் கவலைப்படுவது? அது பற்றி ஒன்றும் இல்லையா?"

"அப்படிச் சொன்னேனா? ஆனால், இப்போது நான் வேறு என்ன செய்திருக்க முடியும்?" என்று எரிச்சலை அடக்கிக்கொண்டு கேட்டாள் சுதாகரி.

"எத்தனையோ செய்திருக்கலாம்!" என்றான் அவன் இளகாத குரலில்! "முதலாவதாக, ஒரு செல் வாங்கி வைத்திருக்கலாம்.."

அவன் பேச்சில் குறுக்கிட்டு, "ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நேரக்கூடிய ஓர் இக்கட்டுக்காக, சில ஆயிரங்கள் செலவு பண்ணி செல் வாங்கி, சில நூறுகளை

மாதந்தோறும் செலவழிக்கவேண்டும் என்கிறீர்களா? எங்களுக்குக் கட்டுப்படியாகாது!" என்றாள் அவள்.

"கடை வைப்பதற்காகச் சிக்கனமாக இருந்து சேர்ப்பதாக வேண்டுமானால் சொல்லு! மற்றபடி, உன் வருமானத்துக்கு செல் செலவு தாராளமாகக் கட்டுபடி ஆகும்! அத்தோடு, அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு, உனக்குப் பிரச்னையே நேராது என்பதற்கு, ஒரு உத்திரவாதமுமில்லை! இப்போதெல்லாம் ரிட்ரெட் பண்ணும் இடத்தில், பதில் டயர் ஒன்றைக் கேட்டால் தருவார்கள்! அதை வாங்கி வைத்திருக்கலாம். அடுத்து, இந்தச் சுமையை இரண்டாகப் பிரித்து, அங்கிளும் நீயும் ஆளுக்கு ஒரு தரமாகக் கொண்டு வந்திருக்கலாம். அதிகப்படிச் செலவை, ஒரு சிறு விலையேற்றத்தின் மூலம் சமாளித்தும் இருக்கலாம்! எப்படியும், வெயிலில், மழையில் கொண்டு செல்லும்போதும், ஆடு மாடு அருகில் வரும்போதும், காய்களுக்குப் பாதிப்புதானே? வெப்பமோ, நீரோ ஊடுருவ முடியாத ரெக்சீன் போல ஒன்றை, அவசியப்படும்போது பயன்படுத்தவென்று, கைவசம் வைத்திருக்கலாம்! அப்படி வைத்திருந்தால், மூடிப் போட்டுவிட்டு, உதவி தேடி எங்கேனும் போயிருக்கலாம்."

"யாரிடமும் உதவி கேட்பது எனக்குப் பிடிக்காது" என்று சீறினாள் அவள்.

"அதெப்படி? நாமென்ன, தனித்தனி தீவிலா வசிக்கிறோம். அடுத்தவர் தயவே இல்லாமல் வாழ்வதற்கு? தேவைப்படும்போது, உதவி கேட்டுத்தானே.."

"சமயத்தில் உதவிக்கு வந்தீர்கள் நன்றிதான், மகேந்திரன் சார்! ஆனால், அதற்கு மேல், ஒரேயடியாகப் பேச்சை ஓட்ட வேண்டாம்!" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.

வியந்து நோக்கினான் அவன். தோளைக் குலுக்கி, "நல்ல காலம், சீக்கிரமாகக் கடை திறக்கப்போகிறாய்! அப்புறம், இந்த மாதிரித் தனியே காய்களைத் தூக்கிக்கொண்டு அலைவதும், மாட்டிக்கொண்டு விழிப்பதும் நின்று விடும். நிறுத்தி விடு!" என்றான் அவன்.

சற்றே புத்தி கூறும் தொனி!


அவளது தொழிலை எப்படி நடத்தவேண்டும் என்று, அவன் கற்றுத்தருகிறானா?

"ஏன்? இந்தக் காய்கறிக்காரியின் பழக்கம் அவமானமாக இருக்கிறதா?"

முகம் கடுக்க, "கொஞ்சம் நாக்கைக் காட்டுகிறாயா?" என்று கேட்டான் மகேந்திரன்.

"ஏனோ?" என்று மிடுக்காகக் கேட்டாள் சுதாகரி.

## அத்தியாயம் – 21



**சு**தாகரி ஓர் இக்கட்டில் மாட்டிக்கொண்டு நின்றாள்தான். அந்தச் சமயத்தில் மகேந்திரன் உதவிக்கு வந்ததும் உண்மையே! அவளுக்கு மனம் நிறைந்த நன்றிதான். அந்த நன்றியை உரிய வார்த்தைகளால் அவள் தெரிவிக்க, அத்தோடு விஷயம் சுமுகமாக முடிந்திருக்க வேண்டும்!

ஆனால், அவள் என்னவோ வடிகட்டிய முட்டாள் போலவும், அவளுக்குப் புரிய வைத்தே தீரவேண்டும் என்பது போலவும் மகேந்திரன் பேசிய விதம், சுதாகரிக்கு ஆத்திர மூட்டியது!

மகேந்திரன் பெரிய கடை வைத்திருக்கிறான் என்றால், அவளும் ஒன்றும் மோசம் அல்லவே!

ரங்கநாதன் தொடங்கித் தந்தது தான். ஆனால், எவ்வளவோ யோசித்து, சின்னச் சின்ன விஷயங்களிலும் கவனம் செலுத்தி, கடை போடப் பணம் சேரும் அளவுக்கு இந்தக் காய்கறி விற்பனையை வளர்த்தது, அவள் தானே?

அந்தத் தொழிலை எப்படி நடத்துவது என்று அவளுக்கு, அவன் புத்தி சொல்வதா?

இந்தக் கோபத்தில்தான், அவள் சுள்ளென்று பேசியது! ஆனால், வார்த்தைகள் வெளி வந்த உடனேயே, அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது! உதவிக்கு நீட்டப்பட்ட கரம்! அதைப் போய்க் கடித்து விட்டாளே! முதலில் ஒருநாள் குச்சு வீடு என்றது தவிர, அவர்களோடு பழகுவது தரக் குறைவு என்று அவன் வெளிப்படையாகக் காட்டியதே கிடையாது!

காய்கறி வியாபாரத்தைக் குறைத்துப் பேசியதும் கிடையாது.

ஆனால், மகேந்திரன் நாக்கைக் காட்டச் சொன்னதும், கழிவிரக்கம் மாறி, உடனே சுதாரித்தாள் அவள். அவளது ஆத்திரப் பேச்சுக்காக ஏதோ சொல்லப்போகிறான்! அவன் மட்டும், விஷயம் புரியாமல் என்ன வேண்டுமானாலும் பேசலாமா?

ஒருவேளை, மனதிற்குள், தானும், தன் தொழிலும் உயர்வு என்ற எண்ணம் இருந்தாலும், இருக்கலாம்! மற்றபடி, இத்தனை புத்திமதி எப்படிச் சொல்லுவான்?

இந்த எண்ணம் தோன்றவும், சற்று அலட்சியமாகவே காரணம் கேட்டாள் அவள்.

“எதற்காகவா? நாக்கின் அடியில், கத்தி, ஊசி எதையும் பதுக்கி வைத்திருக்கிறாயோ என்று பார்க்கத்தான்! திடீர், திடீரென்று என்ன கூர்மையாக, வலிக்கக் குத்துகிறது! அதுவும் தேவையற்று!” என்று காரணம் கேட்டான் மகேந்திரன்.

“உண்மை சுடும் என்பார்கள்! வலிக்கிறது என்றால், சொன்னதில் உண்மை இருக்கிறது என்றுதான் தோன்றுகிறது!” என்றாள் சுதாகரி விடாமல்.

அவளது தொழிலின் முக்கியப் பகுதியைச் செய்யாதே என்று அவன் எப்படிச் சொல்லலாம்?

“என்ன உண்மை? மண்ணாங்கட்டி!” என்றான் மகேந்திரன், கோபக்குரலில்! தொடர்ந்து, “எந்தத் தொழிலும் கேவலம் இல்லை என்பதுதான் என் கருத்து! சிங்கப்பூரில் இருந்து, இங்கே வந்து ‘ஓனிக்ஸ்’ நிறுவனம் என்ன செய்கிறது? குப்பை அள்ளுகிற தொழிலைத்தானே என்று குறைவாகச் சொல்ல முடியுமா? அரசாங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்துகிற அளவு வளர்ச்சி அதில்! ஏசி அறையில் அமர்ந்து, திட்டமிட்டுச் செயல்படுத்துவதை விட்டு, ‘ஓனிக்ஸ்’ நிறுவனத் தலைவரே நேரில் வந்து தெருதெருவாகப் பெருக்கித் தள்ள வேண்டும் என்பாயா?

ஒரு தொழிலைத் தொடங்கினால், வளர வேண்டும், சுதாகரி! தொடங்கிய இடத்திலேயே நிற்கக்கூடாது. கொள்முதல், விற்பனையின் அளவு அதிகம் ஆகும்போது, அததற்கு ஆள் வைத்து, மேற்பார்வை செய்யலாமில்லையா? இதைச் சொல்லப்போனால், அவமானமா என்று அசட்டுத்தனமாகக் கேட்கிறாயே!” என்று கண்டனக் குரலில் கேட்டான்.

ஒரு கணம் திகைத்தாலும், உடனேயே, “ஆகா, நல்ல யோசனைதான்!” என்று மிகவும் சிலாகித்த சுதாகரி, தொடர்ந்து, “ஆனால், இந்த அருமையான ஆலோசனையைச் சொல்வது யார் என்று கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! தொழில் இந்த அளவுக்கு வளர்ந்த பிறகும், கொள்முதல், கொள்முதல் என்று, பிள்ளைகளின் ஏக்கத்தைக் கூடப் பொருட்படுத்தாமல் ஊர் ஊராக ஓடுகிற ஆள்தானே நீங்கள்! ‘ஊருக்குத்தான் உபதேசம்.. உனக்கல்லடி பெண்ணே’ என்பதுபோல, அடுத்தவருக்கு மட்டும், ஆலோசனைகளை அள்ளி வழங்குவீர்கள் போல!” என்று கிண்டல் செய்வதுபோல, மகேந்திரனை மட்டம் தட்ட முயன்றாள்!

ஆனால், “நம் கடைக்கு எத்தனை இடங்களில் இருந்து துணிமணிகள் வருகின்றன, தெரியுமா?” என்று கேட்டான் அவன்.

அவளது பதிலை எதிர்பாராமலே, “கொள்முதல் செய்யப் போகிறவனை கமிஷன் கொடுத்துக் கெடுத்து மட்டமான சரக்கை அதிக விலைக்குத் தலையில் கட்டுகிற ஆட்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடம், நானே நேரில் போவேன்! மற்ற இடங்களுக்கு ஆட்களை அனுப்புகிறேன். கடையிலும், நம்பகமான ஆட்களை

அங்கங்கே வைத்து வேலை வாங்குகிறேன்! அதைப் போலச் செய் என்றால், என்னிடமே குற்றம் தேடுகிறாயாக்கும்? ஒன்று தெரியுமா? என் தாத்தா, தலையில் துணி மூட்டை சுமந்து, வீடு வீடாகப் போய் விற்றவர்! அவரது பழைய படம் ஒன்றைக் கொடுத்து, துணிச் சுமையோடு இருப்பதுபோல வரையச் செய்து, அந்தப் படத்தைக் கடை உள்ளறையில் மாட்டி வைத்திருக்கிறேன், தொடக்கம் மறக்கக் கூடாது என்பதற்காக! என் தந்தை, மில்களில் இருந்து துணி வகைகளை நேரடியாக வாங்கி வந்து, மற்ற கடைகளுக்கு ‘சப்ளை' செய்து, அந்த வருமானத்தில் கடை தொடங்கியவர்! நான்.. இப்படி வளர்த்தேன்! உன் கடையையும் மேலும் மேலும் வளர்த்து, பெரிய ‘சூப்பர் மார்க்கெட்' ஆக்கி, அதன் முதலாளியாக, நீயும் அமரலாம்தானே? கொள்முதலுக்கும், விற்பனைக்கும் நீயே ஓடிக் கொண்டிருந்தால், ஓர் அளவுக்கு மேல், எப்படி வளர்ப்பாய்? நல்லதைச் சொன்னால் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று, அப்படியென்ன பிடிவாதம்?” என்று ஒரு கேள்வியோடு முடித்தான் மகேந்திரன்!

இதற்கு என்ன பதில் சொல்வது?

ஒரேயடியாகக் காலில் விழுகிற மாதிரி மன்னிப்புக் கேட்க, அவளுக்கு மனம் வரவில்லை! எப்படியும், இன்னதை, இப்படிச் செய் என்று அவளிடம் சொல்லும் உரிமை, அவனுக்கு ஏது? அதே சமயம், இந்த விளக்கத்தை அலட்சியப்படுத்தவும் முடியாது!

எனவே தன்னிலை விளக்கமாக, “எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று எண்ணமில்லை, மகேந்திரன் சார்! ஆனால், உடலும் மனமும் அலுத்திருந்ததால் புத்திமதி பிடிக்கவில்லையோ, என்னவோ? எனக்குப் புத்தி சொல்ல, இவர் யார் என்றும் தோன்றிவிட்டது என்று நினைக்கிறேன்..” என்று, வாழைப்பழத்தில் ஊசி நுழைத்துப் பதில் சொன்னாள் அவள்.

வெகு நேரம், எதுவும் பேசாமலே மகேந்திரன் காரை ஓட்டினான். தன் ‘வாழைப்பழ ஊசி'க்கு இவ்வளவு பலன் இருக்கும் என்று, சுதாகரியே எதிர்பார்க்கவில்லை!

தன் பேச்சின் உள்ளர்த்தம் புரிந்து உள்ளூர வருந்துகிறானோ என்று, உள்ளூர முணுக்கென்று ஒரு வேதனைகூட உண்டாயிற்று!

ஆனால், அந்தப் பேச்சுக்கு இன்னொரு பிரதிபலிப்பு ஒன்றும் உண்டாகக் கூடும், அவளது ‘வாழைப்பழ ஊசி' பூமராங் மாதிரி அவளை நோக்கியே திரும்பி வந்து தாக்கக்கூடும் என்று, அப்போது அவள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை!

அப்படி எதிர்பாராததால், பலன் கருதாமல் உதவி செய்கிறவனை வார்த்தையால் குத்தி விட்டோமே என்று, உள்ளூர வருத்தத்துடன் அவனிடம் வேறு பேச்சாகத் துரைப்பாண்டியனைப் பற்றிச் சொல்லலானாள் அவள்.

குறுக்கிடாமல் முழுதும் கேட்டுவிட்டு, “என்னவோ, அந்தப் புதுவீட்டுப் பெரியம்மாள் அவ்வளவு நல்ல ரகமாகத் தெரியவில்லையே! துரைப்பாண்டியனை ஒரேயடியாக உறிஞ்சி விடக்கூடாதே என்றிருக்கிறது!” என்றான் மகேந்திரன், யோசனையோடு!

“அடடே! எனக்கும் உள்ளூர அப்படித்தான் தோன்றியது!” என்றாள் அவள் ஆச்சர்யத்துடன்.

“ஒரே கருத்து இருப்பது பற்றிச் சந்தோஷமே! ஆனால், அதைக் கொஞ்சம் மரியாதையாகச் சொல்லியிருக்கலாம்!” என்று சிரிக்காமல் அவன் சொல்ல, சுதாகரி சட்டெனச் சிரித்தாள்.

சிரித்து முடித்துவிட்டு, “அந்த ‘அடடே’ உங்களைச் சொன்னதில்லை! சும்மா ஓர் ஆச்சர்ய வெளிப்பாடு!” என்று அவள் விளக்க, “அப்பா! பிழைத்தேன்!” என்று மகேந்திரன் சொன்ன விதத்தில், சுதாகரி மீண்டும் நகைத்த போதும், “எல்லாம் உங்களுக்கும் தெரியும்! தெரியாத மாதிரிச் சும்மா நடிப்பானேன்?” என்றாள், மிடுக்காகவே!



புன்னகையோடு ஒப்புக்கொண்டு, அவன் வேறு பேசலானான்.

வீட்டை அடைந்ததும், பவியும் அனியும், அவன் மீது மரமேறுவது போல ஏறிக் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்க, சிரிப்பும் சளசளப்புமாக, அங்கே சற்று நேரம், ஒரே களேபரமாக இருந்தது!

ரசனையோடு பார்த்த வண்ணமே, காரிலிருந்து, பூமணி, பெரியப்பா உதவியோடு சுதாகரி காய்களை இறக்கலானாள்.

“கல்யாண மண்டபத்துக் காய்களை இறக்காதே, சுதாகரி! நானே கொண்டு போய்க் கொடுத்து விடுகிறேன்” என்றான் மகேந்திரன்.

மறுத்து, “வேண்டாம், பரவாயில்லை. நானே, ஓர் ஆட்டோவில் கொண்டு போய்விடுகிறேன்!” என்றாள் சுதாகரி.

லேசாகப் புருவம் சுளித்து, “ஏன்?” என்று கேட்டான் அவன்.

“எப்போதும் போல, நானே..”

“அதுதான் ஏன் என்று கேட்கிறேன். வெகு சீக்கிரமாக, நான் அந்தப் பக்கமே போகப் போகிறேன். தலைச் சுமை, சிரமம் என்றும் சொல்வதற்கு இல்லை! பிறகேன், ஆட்டோவில் எடுத்துப் போய், இன்னொரு செலவு செய்ய வேண்டும்?”

அடுத்தவர் உதவி அவளுக்குப் பிடிக்காது என்று, இவனிடம் எத்தனை தரம் சொல்வது? மீண்டும் சொன்னாலும், அதற்கும் ஏன் என்று கேட்பான். பிள்ளைகள், பூமணி எல்லோர் முன்னிலையிலும் வேறு கேட்கிறான்!

எரிச்சலை அடக்கிக்கொண்டு, “கல்யாண மண்டபத்துக்காரர் என்ன எண்ணுவார்?” என்றாள் அவள் சிறிதாக்கிய குரலில்.

“என்ன? நண்பர் உதவுகிறார் என்று நினைப்பார்! வேறென்ன பெரிதாய்?”

“அவருக்கு உங்களைத் தெரியும். மண்டபத்தில் அவர் மட்டுமா இருப்பார்? உதவி, உதவி என்று உங்களை உறிஞ்சுவதாக அங்கிருக்கும் மற்றவர்கள் கருதுவார்கள்! அதனால் வேண்டாம்” என்று முடிக்க முயன்றாள் சுதாகரி.

ஆனால், ஏதோ ஒரு வகையில் அவளுக்குப் புத்தி புகட்டிவிடும் மனநிலையில் மகேந்திரன் இருந்தான் போலும்! அல்லது, ஸ்கூட்டர் விஷயத்தில் நீ யார் என்று அவள் கேளாமல் கேட்ட கோபமாகக்கூட இருக்கலாம்! எனவே, “நம் சொந்த விஷயங்களிலும், மற்றவர் கருத்துகளுக்கு ஓரளவுக்கு மேல் மதிப்புக் கொடுக்கக்கூடாது, அப்புறம், தந்தையும் மகனும் கழுதையைச் சுமந்த கதை போல ஆகிவிடும்!” என்றான் தெளிவாக.

அவனது கதை பற்றிய வார்த்தைகள் பவித்ராவைக் கவர்ந்துவிட, “அது என்ன கழுதைக் கதை, அங்கிள்? எதற்கு, அதைப் போய்த் தூக்கினார்கள்? இந்தக் கதை, எங்களுக்கு அம்மாவும் சொல்லலை, நீங்களும் சொல்லலை!” என்றாள் அவள்.

“ஆமாம்! யாரும் எங்களுக்குச் சொல்லவே இல்லை! டீச்சர் கூட!” என்று பின்பாட்டுப் பாடினாள் அனி.

அடுத்து வரப் போவதை உணர்ந்து, “அங்கிள் இன்று தானே ஊரிலிருந்து வந்திருக்கிறார்! அவருக்கு நிறைய வேலை இருக்கும்! அவரைத் தொந்திரவு செய்யக் கூடாது!” என்று தடுக்க முயன்றாள் சுதாகரி.

ஆனால், “தொந்திரவு செய்யலைம்மா! சும்மா, கதைதான் கேட்கிறோம். ஏன்னா, எனக்குக் கதைன்னா ரொம்பப் பிடிக்கும்!” என்று பவித்ராவும், அவளைத் தொடர்ந்து, “ஆமாம், ஆமாம்! நாங்க அப்பாவைத் தொந்திரவே பண்ண மாட்டோம்! அப்பா ஜாலியாகக் கதைதான் சொல்லப் போறார்!” என்று அனியும் கூற, ரங்கநாதன் வாய்விட்டே சிரித்தார்!

“கேட்டாயா, உன் இரண்டு பெண்களும் சாரைத் தொந்திரவு பண்ணுவதாகவே இல்லை! வெறுமனே கதைதானே கேட்கிறார்களாம்! பாவம், ரொம்ப நாள் கழித்துப் பார்க்கிறார்கள்! அவரை விடுவதற்கு, இரண்டுக்கும் மனசில்லை! இருந்து, அவர், அந்தக் கதையைச் சொல்லி விட்டுத்தான் போகட்டுமே!” என்று சிறுமியருக்காக வக்காலத்து வாங்கினார் அவர்.

“என்ன வீட்டுக்காரம்மா.. நான் அந்தக் கதையைச் சொல்லிவிட்டுப் போகலாம்தானே?” என்று குறுஞ்சிரிப்புடன் அனுமதி கேட்டான் மகேந்திரன்.

இரண்டு பெண்களும் மாறி மாறி, மகேந்திரனைத் தொல்லை செய்யவில்லை. கதைதான் சொல்லச் சொல்கிறோம் என்று சொன்ன விதத்தில், சுதாகரிக்குமே

உள்ளூரச் சிரிப்புதான்! ஆனால், கதை அவளைத் தாக்குவது ஆயிற்றே! அதை, அவளும் சும்மா நின்று கேட்பது எப்படி?

மறுக்க முடியாத நிலையில், அதிலிருந்து மீள ஒரு வழி கண்டுபிடித்து, "ஆமாம்! நீங்கள் இங்கே இருந்து, பிள்ளைகளுக்கு நிதானமாகக் கதை சொல்லுங்கள்! நான் காய்கறிகளைக் கொண்டு போகிறேன்!" என்று கிளம்பினாள்.

"ஊஹூம்! ஐந்தே நிமிஷத்தில் முடிகிற கதை! நீ வெளியே போய் ஆட்டோ பிடிப்பதற்குள், நான் கதையை முடித்துவிட்டுக் கிளம்பியே விடுவேனே! பவிம்மா, நீ போய், அம்மாவைப் பிடித்து வைத்துக் கொள். அனி, நீயும்! நான் கதையைச் சொல்லுகிறேன்!" என்று அவன் சொல்லும்போதே அனி ஓடிவந்து சுதாகரியின் இடுப்பைக் கட்டிக்கொண்டாள்.



ஏதோ பெரிய விளையாட்டு மாதிரி, பவித்ராவும் மறுபுறமாக அதையே செய்ய, சுதாகரிக்கு உடலில் குறுகுறுவென்றது!

தன் வீட்டில், தன் விஷயமாக இன்னொருவன் ஏவுவது அவளுக்குப் பிடிக்கவில்லைதான். மகேந்திரனின் சொல்லைக் கேட்டுப் பிள்ளைகள் தன்னைப் பிடித்து வைக்கிறார்களே என்று சிறு கோபமும்தான்!

ஆனால், இதெல்லாம் மீறி, உள்ளூர உற்சாகமாகவும் உணர்ந்தாள் அவள்.

அதற்குள், அவன் புன்னகையோடு கதையைச் சொல்லத் தொடங்கியிருந்தான்.

கழுதையோடு கிளம்பிய தந்தையும் மகனும், அவர்களைப் பற்றிய அடுத்தவர் வர்ணனையைக் கேட்டுக் கேட்டு, ஒருவர் மாற்றி ஒருவராக, பிறகு இருவருமாகக் கழுதைமேல் அமர்ந்துவிட்டுக் கடைசியாக இருவரும் சேர்ந்து கழுதையைத் தூக்கிச் சென்றதை நகைச்சுவை இழையோட மகேந்திரன் சொல்லி முடிக்கையில் எல்லோருக்குமே சிரிப்பு வந்தது!

ஆனால் அத்தோடு நின்று விடாமல், "கதை சொல்லும் அறிவுரை என்ன?" என்று மக்களைக் கேட்டான் அவன். ஒருவரையொருவர் பார்த்துவிட்டு, "எங்களுக்கெல்லாம் படக் கதைப் புத்தகத்திலேயே 'மாரல் ஆஃப் த ஸ்டோரி' என்று போட்டிருக்கும், அங்கிள்!" என்று பவித்ராவும், அவளைத் தொடர்ந்து, "அதை எங்கள் டீச்சர் சொல்லித் தந்த பிறகுதான் நாங்கள் சொல்லுவோம்!" என்று அனியும் சமாளித்த விதம் பெரியவர்களை மீண்டும் சிரிக்க வைத்தது.

புன்னகையோடு கூடவே, "மற்றவர்கள் சொல்வதைப் பற்றி கவலைப்படாமல், நம் வேலையை மட்டும்தான் நாம் பார்க்க வேண்டும் என்பதுதான், இதன் அறிவுரை!" என்று கூறி முடித்துவிட்டு சுதாகரியைப் பார்த்தான் மகேந்திரன்.

“ஆமாம், ஆமாம்! நமக்குச் சரி என்று படுவதைச் செய்தால் போதும்! அடுத்தவர் தலையீட்டை மதிக்கவே கூடாது என்று தெளிவாகச் சொல்கிறது கதை!” என்றாள் சுதாகரி பதிலுக்கு!

மீண்டும் அவளை ஒரு பார்வை பார்த்தது தவிர, மகேந்திரன் அப்போது வேறு எதையும் சொல்லவில்லை!

இந்தப் பார்வைக்கு என்ன பொருள்? யார் என்ன சொன்னாலும், உன் பிடிவாதத்திலேயே நிற்கிறாயே என்றா?

ஆனால், அவன் சொல்படிச் சிறுமிகள் அவளைப் பிடித்துக் கொள்ளவே, காரிலிருந்து காய் இறக்குவது நின்றுவிட, அவன்தானே காய்களைக் கொண்டு செல்கிறான்!

ஆக, அவளல்லவா தோற்றிருக்கிறாள் என்று எண்ணும் போதே, சுதாகரியின் மனம் கலங்கியது! அவள் யாரிடமும் தோற்கக் கூடாதே!

இந்தப் பெரியப்பாவும், பூமணியும் கூட அவனோடு சேர்ந்துகொண்டு காய்களைக் காரிலிருந்து இறக்குவதை நிறுத்திவிட வேண்டுமா? காய்களைக் கீழே இறக்கி விட்டிருந்தால், எப்படியோ மகேந்திரனின் உதவியைத் தவிர்த்திருக்கலாம்!

ஆனால், ஒரு தோல்வியையும் மீறி, உள்ளூரக் குமிழியிட்ட உற்சாகம், அவளுக்கே ஆச்சர்யத்தை அளித்தது!

சில தினங்கள் கழித்து, ஒவ்வொரு காரணமாக மற்றவர்கள் வெளியே சென்றிருந்தபோது கார் வந்து நிற்கவும், கைவேலையை விட்டு வந்து, வியப்புடன் எட்டிப் பார்த்தாள் சுதாகரி!

மகேந்திரன்தான்! இப்போது எங்கே, இங்கே?


வரவேற்பாக ஒரு புன்னகையோடு, “அனி, பவி இரண்டு பேரும் ‘சம்மர் கிளாசு’க்குப் போயிருக்கிறார்களே!” என்றாள் அவள்.

“தெரியும். அவர்களைக் கூட்டிவரப் பெரியவரும் சென்றிருப்பார் என்று தான் இப்போது வந்தேன்!” என்று அவன் கூறவும் சுதாகரிக்குள் ஓர் அபாய மணி அடித்தது!

ஏற்றாற்போல, “உன் கணவரின் முகவரி தேவைப்படுகிறது. தருகிறாயா?” என்று மகேந்திரன் நிதானமாகக் கேட்கவும், சுதாகரி தன் காதுகளையே நம்ப முடியாமல் திகைத்தாள்!

கணவனா? கணவன் என்றுதான் சொன்னானா? எப்படி முடியும்?

## அத்தியாயம் – 22



**சி**ல வினாடி நேரம், சுதாகரிக்கு ஒன்றுமே புரியாத நிலை!

சரியாகத்தான் கேட்டோமா என்று தன் காதுகள் மேலேயே சந்தேகம் வந்தாலும், அவள் கேட்டது அதே வார்த்தையைத்தான் என்பதும் அவளுக்கு உறுதியே!

ஆனால், எப்படிக் கேட்டான்?

பவித்ராவுடைய அப்பா என்று பேச்சுவாக்கில், அவன் குறிப்பிடுவது உண்டு! ஆனால், அதெல்லாம் அந்த சமயத்தில் அவன் பேசும் ஏதோ ஒன்றைத் தெளிவுபடுத்தும் விதத்தோடு தொடர்புடையதாக இருக்கும்.

இப்படி அவள் தனியாக இருக்கும் நேரம் பார்த்து வந்து, அவளுடைய கணவன் என்று ஒருவனின் இருப்பிடம் பற்றி எப்படிக் கேட்கலாம்? அதைக் கேட்க இவன் யார்?

ஆனால், அவளது திகைத்த தோற்றம், மகேந்திரனின் இறுக்கத்தைப் போக்கிவிட, புன்னகையோடு அருகில் வந்து, அவள் முன் சொடக்குப் போட்டு, "ஹலோ, என்ன அவ்வளவு பிரமிப்பு? நான் என்ன சந்திர மண்டலத்து ஆளையா பிடித்து வரச் சொன்னேன்? இங்கேகூட, நீ ஆளைக் கொண்டுவர வேண்டாம் பெண்ணே.. வெறும் விலாசத்தைத் தெரிவித்தால் போதும்! மற்றதை, நான் பார்த்துக்கொள்கிறேன்!" என்றான் இலகுவாக.

'என்ன தைரியம்?' என்று பதறியது அவள் மனது! எங்கே வந்து இருந்துகொண்டு, என்ன பேச்சு பேசுகிறான்! யாரிடம் என்ன கேள்வி கேட்டான்! வெளியே போ என்று விரட்ட மாட்டாள் என்கிற தைரியமா? அன்றைய ஆத்திரப் பேச்சுக்குப் பிறகும், இன்று வரவேற்பதுபோலக் காட்டியிருக்கக் கூடாதோ?

அவள் யார் என்று தெரியாமல்.. முதலில் இவனை.. என்று உலைக்களமாக உள்ளூரக் கொதிக்கும்போதே, 'பொறுமை, பொறுமை' என்று மூளை எச்சரிப்பதில் முனைந்தது!

சுதாகரி சுள்ளென்று சூடாகப் பேசக்கூடியவள்தான்! ஆனால், ஒருதரம் மகேந்திரனே சொன்னதுபோலப் பெரும்பாலும், அந்தப் பேச்சு கேடயமாகவும், ஆயுதமாகவும் மட்டுமே பயன்படுவது.. யாரும் அளவு மீறாமல் சமாளிக்க உதவுவதோடு சரி!

ஆனால், இப்போது.. இது வேறு! பெரிய விஷயம்! அளவு கடந்த அத்துமீறல்! வெறும் சூடான வார்த்தைகளால் மட்டுமே சமாளிக்கக்கூடியது அல்ல! அத்தோடு, அந்த மாதிரிச் சுடு சொற்களை, மகேந்திரன் மதிப்பான் என்று எதிர்பார்க்கவும் முடியாது!

இப்போது அவள் என்ன சொன்னாலும், அது மிகவும் வலுவானதாக.. முடிவானதாகவும் இருக்க வேண்டும்! மீண்டும் இந்தப் பேச்செடுக்கும் தைரியம் அவனுக்கு வரக்கூடாது! திரும்பிப் பாராமல் ஓட வைக்க வேண்டும்! இந்தப் பக்கம் வரவே விடாமல் அவனை விரட்டி அடிப்பதாக..

இல்லை! யோசித்துப் பேச வேண்டும்! உணர்ச்சி வசப்பட்டிருக்கையில், ஆத்திரத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருப்பதில்லை! தீர யோசிக்காமல் பேசக் கூடாது!

தன் வாழ்வை எப்படி நடத்த வேண்டும் என்று பல வரைமுறைகளை வகுத்து, அவற்றைத் தனக்குள்ளேயே சொல்லிச் சொல்லி உருவேற்றி வைத்திருந்தது, நாக்கு நுனியில் துடித்த ஆத்திரப் பேச்சை நிறுத்தி சுதாகரியை யோசிக்க வைத்தது!

எப்படியும், இவன் அனியுடைய தந்தை! இவனை ஒரேயடியாக விரட்ட முடியாது! எனவே, இயன்றவரை அமைதியாகப் பேசியே, அடக்க வேண்டும்!

தன் பதட்டம், கோபத்தைக் கட்டுப் படுத்திக் கொள்வது, அப்போது அவளுக்குச் சற்றும் எளிதாக இருக்கவில்லைதான்!

ஆனால், பிரம்மப் பிரயத்தனம் என்பார்களே, அதுபோல முழு மூச்சாக முயன்று வருவித்த நிதானத்துடன், "தேவையற்ற விஷயத்தில் மூக்கை நீட்ட வேண்டாம், மகேந்திரன்!" என்று கண்டிப்பான குரலில் சுதாகரி எச்சரித்தாள்.

மகேந்திரனும் இதற்கெல்லாம் தயாராகத்தான் வந்திருந்தான் போலும்! "தேவை இருப்பதால்தான் கேட்கிறேன், சுதாகரி! சொல்கிறாயா?" என்று விடாமல் கேட்டான்.

"என்ன தேவை?"

அவளை நேராக நோக்கி, "விவாகரத்து நோட்டீஸ் அனுப்புவதற்கு" என்றான் அவனும் தெளிவாகவே.

விவாகரத்தா? யாரோடு?

அமைதியைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது மிகமிகக் கடினமாகவே இருந்தபோதும், "உங்களுக்கு என்ன தேவை என்று கேட்டேன்!" என்று, அந்த 'உங்களுக்கு'வில் அழுத்தம் கொடுத்துக் கேட்டாள் சுதாகரி.

"எனக்கும் இது தேவைதான், ரொம்பவே! கேட்பதற்கு நான் யார் என்று யோசித்ததாக, அன்றைக்குச் சொன்னாயில்லையா? உரிமையைத் தரும் உறவை ஏற்படுத்திக் கொள்ள முடிவு செய்தேன்.."

யார் விஷயத்தில், யார் முடிவு செய்வது?

"எந்த ஓர் உறவுக்கும், குறைந்தபட்சமாக இரண்டு பேர் வேண்டும் என்பார்கள்!" என்றாள் அவள், ஏளனப் பிதுக்கலுடன்!



பிதுங்கிய உதட்டிலும் முகத்திலும் பார்வை பதிய, "அதற்காகத்தான் உன் உதவியைத் தேடி வந்திருக்கிறேன்!" என்று முறுவலித்தான் மகேந்திரன்.

அவனது பார்வையை அவளும் அறியாமலில்லை!

நெஞ்சில் படபடப்போடு, முகத்தில் அனலடிப்பது போல உணர்ந்தவளின் மனம் சீறியது!

என்ன தைரியம்? என்ன திமிர்! மனதில் எவ்வளவு நிச்சயம் இருந்தால், துணிந்து அவளை இப்படிப் பார்ப்பான்! ஆனால், இவனும் ஆண்தானே?

இனி, இவனிடம் அமைதியாகப் பேசிப் பயனில்லை! சரி வராது என்பதோடு, அவள் பலவீனப்படுவதாகவும் அவன் எண்ணக்கூடும்! அடாவடியாக நடந்துகொண்டால், பெண்கள் அடங்கிப் போய்விடுவார்கள் என்று ஓர் அசட்டு மாயை வேறு, ஊர் உலகில் பரப்பப்பட்டிருக்கிறதே! இதையெல்லாம் உடைத்தே ஆக வேண்டும்!

அத்தோடு, இனியும் அமைதி காப்பது, அவளாலும் முடியாது!

"நீங்கள் அதிகப்படியாகப் பேசுகிறீர்கள், மகேந்திரன். நிறுத்திக் கொள்ளுங்கள்! இல்லையென்றால் கழுத்.. முதலில் இங்கிருந்து போய் விடுங்கள்! அல்லது, மேற்கொண்டு நடப்பது நன்றாயிராது! இதற்கு மேல் நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்!" என்று முகத்திலும் குரலிலும் கடுமை காட்டி எச்சரித்தாள் அவள்.

"வேறு எது நன்றாக இருக்கும் என்கிறாய்?" என்று அவளையே கேட்டான் அவன்.

"உங்களுக்கே தெரியும்! இத்தனை நாள் இருக்கவில்லை?"

"இத்தனை நாள் இருந்ததா? எப்படி? அவ்வப் போது வருவதும், பிள்ளைகளோடு குலவுவதும், நீ தரும் எதையாவது தின்பதும், உன்னிடம் மதிப்பும்

மரியாதையுமாகச் சிரித்துப் பேசிவிட்டு கண்ணியக் கனவானாகத் திரும்பிப் போவதுமாகவா?"

இப்போது ஏளனமாகக் காட்டியது அவன்!

"இது என் இடம்! இங்கே வந்தால், நீங்கள் அப்படித்தான் இருந்தாக வேண்டும்!" என்றாள் அவள் கண்டிப்பான குரலில்!

அவளை ஆழப் பார்த்துவிட்டு, "இனி அது முடியாது சுதாகரி! அடுத்த நிலைக்குப் போயாக வேண்டும் என்கிற நிலை நமக்குள் வந்துவிட்டது! அதனால்.." என்றவனின் பேச்சில் ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் அவள்!

"வாயை மூடுங்கள், மகேந்திரன்! வேறு பேச்சு வேண்டாம் என்று ஏற்கனவே எச்சரித்துவிட்டேன்! இதற்கு மேல், நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்றால், மாட்டேன்தான்! நான் சொன்னதுபோல நடக்க முடியாது என்றால், இனி இங்கே வராதீர்கள்! வர வேண்டாம்! வரவே கூடாது!" என்றாள் அவள் படபடப்பாக!

அவளது பிரதிபலிப்பு எப்படி இருக்கக் கூடும் என்று பல வகையிலும் யோசித்து வந்தவன் போல, சுதாகரியின் எந்த வார்த்தைகளாலும் பாதிக்கப் படாதவன் போன்று, மகேந்திரன் நிதானமாகவே பேசினான்! "மறுபடியும் இந்தப் பேச்சா, சுதாகரி? அது முடியாத காரியம் என்றுதான், ஏற்கனவே பேசி முடித்தாயிற்றே!" என்று நினைவு படுத்தினான்.

அனியின் மேல் அவளுக்கு உள்ள அன்பைப் பணயமாக்குகிறானா? என்ன அநியாயம்!

பொங்கி எழுந்த சீற்றத்தில், "அனிக்காக எதற்கும் தலையாட்டுவேன் என்று எண்ணினீர்களா? போங்கள்! அவளையும் அழைத்துப் போய்விடுங்கள்! உங்கள் சகவாசமே எனக்கு வேண்டாம்!" என்று கத்தினாள் சுதாகரி!

"ஷ், மெள்ள சுதாகரி! எனக்குத்தானே கேட்க வேண்டும்? தெருவில் போகிற யாராவது, இங்கே என்னவோ என்று வந்து நிற்கப் போகிறார்கள்!" என்று ஓரளவு அவளைக் குன்ற வைத்துவிட்டு, மேலே தொடர்ந்து, "ஆனால் நீ, மனமுணர்ந்து உண்மையாகத்தான் சொல்லுகிறாயா?" என்று கேட்டான் அவன்.

உண்மையா?

செல்லப் பூனைக் குட்டி மாதிரி, அவ்வப்போது வந்து உரசிவிட்டுப் போகும் அனியை நினைக்கையில் அவளுக்கு நெஞ்சுக்குள் அடைத்தது! அவளைப் பிரிந்து, சுதாகரி எப்படி இருப்பாள் என்பது இருக்கட்டும்! அனி எப்படி தன்னைப் பிரிந்து இருப்பாள் என்று எண்ணுகையில், சுதாகரிக்கு இதயத்தில் வலியே எடுத்தது!

ஆனால், வலியை அனுபவித்துத்தான் ஆக வேண்டும்! வேறு வழியில்லை!

ஆயினும், அவன் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "நீங்கள்தானே, அடுத்தவருக்காகப் பார்க்கக் கூடாது என்று சொன்னீர்கள்!" என்று அவன் மீதே பழி சுமத்தினாள் சுதாகரி!

"நான் சொன்னதா? ஆனால், அறியாத அடுத்தவரும், அனியோடு நானும், உனக்கு ஒன்றுதானா?" என்று சற்றே கடுத்த குரலில் மகேந்திரன் கேட்டான்.

"ஆ.. ஆமாம்!" என்று விடாப்பிடியாகப் பதில் கூறிய போதும், சுதாகரிக்கே, அவளது குரல் மெலிந்து கேட்டது!

"உளறல்!" என்று நம்பாத பாவனையில் அவன் பார்க்க, அவளும் பிடிவாதத்துடன் தளராமல் நின்றாள்.

பல நிமிஷங்களுக்கு அதிகமானதாகத் தோன்றிய சில வினாடிகளின் பின்னே, தெருவில் எங்கோ ஒரு ஸ்கூட்டர் செல்லும் ஓசை கேட்கவும் சுதாகரி திடுக்கிட்டாள்!

இன்னும் சிறிது நேரத்தில், பிள்ளைகளோடு பெரியப்பா வந்து விடுவார்!

இந்தப் பேச்சின் விளைவாக, இன்றே அனியை இவன் அழைத்துச் சென்று விடுவானா?

இப்போதைக்குத் தள்ளிப்போட்டால், வீட்டுக்குப் போய் யோசித்தான் என்றால், மகேந்திரனுக்கே புரிந்து, புத்தி வந்து, இந்த அசட்டுத்தனத்தை விட்டுவிடலாமே! விட்டுவிடுவான். விட்டுத்தான் ஆகவேண்டும்! நல்லுறவோடு இருப்பதற்கான வழி, அது ஒன்றுதான்!

இருந்திருந்து, அவளது சொந்த விஷயத்தில் போய் மூக்கை நுழைத்துக்கொண்டு.. என்ன மடத்தனம்!

"நீங்கள் வீட்டுக்குப் போய்த் தனியாக இருந்து யோசியுங்கள், மகேந்திரன். அப்போதுதான், உங்களுக்கே இதன் அசட்டுத்தனம் புரியும்! முதலில் கிளம்புங்கள்!" என்று அவனை அங்கிருந்து அனுப்ப முயன்றாள், அவள்!

ஆனால், மகேந்திரன் மறுப்பாகத் தலையசைத்தான்! "யோசிக்கவேண்டியது நீதான், சுதாகரி! என்னைப் பொறுத்த வரையில், எல்லா யோசனையும் முடிந்தாயிற்று! தயக்கமும்கூட. நீயும் யோசித்தால், உன் தயக்கமும் மறைந்து விடும்!" என்று ஆரூடம் சொன்னான்.

பொறுமையிழந்து, "நான் சொல்வது புரியாமல், இப்படி உளறிக் கொட்டாதீர்கள்!" என்று எரிந்து விழுந்தாள் சுதாகரி. ஒரு பெரிய மூச்செடுத்து, "பாருங்கள் மகேந்திரன், என் சொல்லைக் கேட்டு அதன்படி நடப்பதானால் சரி! இல்லாவிட்டால் இப்போதே.." என்று அவள் கறாராகச் சொல்லி முடிக்கும் முன்பாகவே, வெளியே ஸ்கூட்டர் வந்து நிற்கும் சத்தம் கேட்டு, அவளது பேச்சு இடையிலேயே நின்றது.

மேலே எப்படிச் சொல்வாள்?

கலகலவென்று பவியும் அனியும் பேசியவாறு உள்ளே ஓடி வந்தனர். அவரவருக்கு ஏற்ப, “அப்பா!”, “ஹாய் அங்கிள்!” என்று அழைத்து, “வெளியிலே காரைப் பார்த்தோமே!” என்று மகேந்திரனைப் பார்த்து மகிழ்ச்சி யோடு கூவிய இருவரும் முதலில் சுதாகரியிடம் ஓடினர்.



அவளது கையைப் பற்றி இழுத்துக் குனியவைத்து, ஆளுக்கொரு கன்னமாக அவளை முத்தமிட்ட பின், “ஆன்ட்டி இன்னைக்கு எனக்குத்தான் முதல்!” என்று தன் கன்னத்தைக் காட்டி நின்றாள் அனிஷா.

அவளது முதல் முத்தத்துக்குப் போட்டி வருகிறது என்று, ஒவ்வொரு நாள் ஒவ்வொருவருக்கு என்று மாற்றி மாற்றி முத்தமிடுவதை, சுதாகரி வழக்கப் படுத்தியிருந்தாள்.

மகேந்திரன் முன்னிலையில், அதுவும் அன்று அந்த வழக்கத்தைக் கடைப்பிடிக்க அவளுக்கு ஒரு மாதிரி இருந்தபோதும், ஆவலோடு கன்னத்தைக் காட்டி நிற்கும் மக்களிடம் என்ன சொல்லி விளக்குவது?

எதையும் காட்டிக்கொள்ளாமல் முத்தமிட்டுவிட்டு, “அப்.. மகேந்திரன் சார் கிளம்பிக் கொண்டிருக்கிறார்! போய், வழியனுப்பிவிட்டு வாருங்கள்! இன்று என்னென்ன படித்தீர்கள் என்று அப்புறமாகப் பார்க்கலாம்!” என்றாள் சுதாகரி.

கிளம்பு என்று குறிப்பாகச் சொன்னதுதான்!

கூடவே, அவளது தொடக்க மாற்றத்தையும், மகேந்திரன் கவனிக்காமல் இல்லை.

அந்நேரம், ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, அதில் வாங்கி வைத்திருந்த சில பொருட்களை எடுத்துக்கொண்டு உள்ளே வந்த ரங்கநாதனைப் பார்த்துச் சன்னமாக முறுவலித்து, “வாருங்கள் அங்கிள்!” என்றான் அவன்!

அவர் பதிலாகச் சிரிக்கவும், “பிள்ளைகளைக் கை, கால் கழுவப் பின்புறம் அழைத்துப் போங்கள், அங்கிள்! போங்கம்மா! வெளியே போய்வந்தால், கால், கை கழுவ வேண்டுமில்லையா? நீங்கள் தாத்தா கூடப்போய்க் கழுவிவிட்டு வரும்வரை, நான் காத்திருக்கிறேன்! அப்புறமாக, எனக்கு டாட்டா காட்டலாம்!” என்றான் தொடர்ந்து.

யோசனையாகப் பார்த்துவிட்டு, “வாங்க கண்ணுகளா!” என்று, சின்னவர்களைக் கூட்டிச் சென்றார் அவர்!

“நாங்கள் வரைந்ததைப் பார்த்துவிட்டு, அப்புறம்தான் போகணும்!” என்று கத்தியவாறே, பெரியவருடன் சென்றனர் பிள்ளைகள்.

அவர்கள் காது கேளாத தூரம் சென்றதும், சுதாகரி, மகேந்திரனை முந்திக்கொண்டு, “நீங்கள் எதைச் சொல்லுவதானாலும், எனக்கு ஆண்களை அறவே பிடிக்காது

என்பதை நினைவில் வைத்துக்கொண்டு பேசுங்கள்!" என்று அவசரமாகச் சொன்னாள்.

"ரங்கநாதன் சாருடைய பெண்ணாக இருந்துகொண்டு, ஆண்களை வெறுப்பது சரியில்லையே!" என்றான் அவன் லேசாகவே!

"எல்லா விதிகளுக்கும், விதிவிலக்கு என்று ஒன்று உண்டு. அத்தோடு, அவர் முந்திய தலைமுறை!" என்று எடுப்பாகவே பதில் சொன்னாள் சுதாகரி.

"ஓஹோ! அப்படியானால், இந்தத் தலைமுறைக்கும் ஒரு விதிவிலக்கு இருக்க வேண்டும்தானே?" என்று நெஞ்சைத் தொட்டுக்காட்டிக் கண்ணால் சிரித்தான் மகேந்திரன்!

வேடிக்கையாகத்தான் இருந்தது! ஆனால், கூடச் சேர்ந்து சிரிக்கும் மனநிலை அவளுக்குத்தான் இல்லை!

"பெரியப்பாவுக்குச் சமமாகத் தன்னை நினைக்கிறவர்கள், மகாத் தலைக்கனம் பிடித்தவர்களாக மட்டும்தான் இருக்க முடியும்!"

"பெரியவரின் ஆணினத்தில் தானும் பிறந்திருப்பதே பெருமை என்று எண்ணுகிறவனுக்குக் கர்வம் எப்படி இருக்க முடியும்?"

"வாய் வார்த்தைதானே? மாற்றி, மாற்றிப் பேசிக் கொண்டே போகலாம்! உங்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும். கிளம்புங்கள்!"

"ஆமாம், முக்கியமான வேலையை முதலில் பார்க்கத்தான் வேண்டும்! முகவரியைத் தருகிறாயா?" என்று மீண்டும் பல்லவியைப் பிடித்தான் மகேந்திரன்.

சுருசுருவென்று பொங்கிய சினத்துடன், "முடியாது என்றால் முடியாதுதான்! போங்கள்! போய், உங்களால் என்ன முடியுமோ செய்துகொள்ளுங்கள்!" என்று எரிச்சலும் எகத்தாளமுமாகக் கூறினாள் சுதாகரி.

அவனும் நேராகப் பார்த்து, "என்னால் முடியாது என்றா நினைத்தாய்? ஒரு வார்த்தையில் முடிவதற்குச் சுற்றி வளைப்பானேன் என்று பார்த்தேன்! ஆணும் பெண்ணுமாக நானூறு பேரை வைத்து வேலை வாங்குகிறவன், நான். அவர்களுடைய குடும்பம் வரை, அறிந்து வைத்து செயல்படுகிறேன்! இதைக் கண்டுபிடிக்க முடியாதா, என்ன?" என்றான் சவால் குரலில் மகேந்திரன்.

அலட்சியமாகப் பார்த்தாள் அவள். "குட்டிச் சுவரில் போய்த் தலையை முட்டிக்கொண்டே தீருவேன் என்கிறவர்களை, யார் என்ன செய்ய முடியும்? தலை உங்களுடையது! எந்த ஊரிலும் குட்டிச் சுவர்களுக்கும் குறைவில்லை!" என்றாள் எகத்தாளமாகவே!

## அத்தியாயம் – 23




**அ**ன்று தொடர்ந்து நடந்த எதிலும் சுதாகரியால் முழுமையாக ஈடுபட முடியவில்லை!

கை கால்களைக் கழுவிவிட்டு வந்த சிறுமியர், 'சம்மர் கிளாசி'ல் செய்த அவரவர் கை வேலைகளைக் காட்டும் வரை இருந்து, அவர்களுக்கு உற்சாகமூட்டும் விதமாக ஓரிரு வார்த்தைகள் பேசிய பிறகே, மகேந்திரன் அங்கிருந்து கிளம்பிச் சென்றான்!

'நீ அதட்டிப் பேசியதற்காக நான் ஒன்றும் வாலைச் சுருட்டிக்கொண்டு ஓடி விட மாட்டேன்' என்று சொல்லாமல் சொன்னானா? அவளது பேச்சை, மகேந்திரன் கொஞ்சமும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லையே!

'என்ன உரிமை?' என்று யோசித்ததாகச் சொல்லி, வாழைப்பழ ஊசியாக உணர வைத்துவிட்டதாகப் பெரிதாகப் பெருமைப்பட்டுக் கொண்டாளே!

அந்த ஒரு வார்த்தையில், ஆண்களின் இயல்பான வேட்டையாடும் உணர்வைத் தூண்டிவிட்டுத் தொலைத்திருக்கிறாள்! வாழைப்பழ ஊசி பூமராங் ஆகி, இப்போது அவளையே தாக்கியிருக்கிறது!

சாவகாசமாகக் கிளம்பும்போதும், என்னவோ எச்சரிப்பது போல, "நல்ல சேதியோடு திரும்பி வருவேன்!" என்று அவளிடம் வந்து சொல்லிவிட்டுப் போனான்!

என்ன நல்ல சேதி?

அவன் கேட்ட முகவரியோடு வருவதாகவோ? அதற்கு மேல், அவன் விரும்பும், இன்னும் சில முன்னேற்றங்களோடுமா?

எல்லாம், என்ன பைத்தியக்காரத்தனம்! தேடட்டும்! காடோ, மேடோ என்று தேடி அலையட்டும்!

பாவம்தான்! ஆனால், ஒன்றும் பலிக்காமல் தோற்று வரும்போதுதான் புத்தியும் வரும்! இப்போது போலவே இருப்பது மேல் என்று புரியும்!

மனம் என்றால், அடக்கத் தெரிய வேண்டாம்? அவள் அடக்கிக் கொள்ளவில்லை? அவனும் அடிபட்டவன் தானே? பிறகெதற்கு, இந்த முயற்சி?

ஆனால், அவளிடம் இந்த மாதிரிப் பேசும் துணிவு எப்படி வந்தது?

அவள் வாழ்வில் எந்த ஆணுக்கும் இடம் கிடையாது என்று எப்போதோ முடிவு செய்து, அதற்கேற்பத் திட்டமிட்டு வாழ்ந்து வந்தாளே! இவன் விஷயத்தில், எங்கே, என்ன தப்பு செய்தாள்?

பழைய மாதிரியே இருக்கலாம் என்று மகேந்திரன் ஒப்புக்கொண்டு விட மாட்டானா என்று மனம் ஏங்கும் போதே, இன்றைய பேச்சை அடியோடு மறந்து, இனி அப்படி இருக்க முடியுமா என்று அவளுக்கே ஐயமாகவும் இருந்தது!

அவனைப் பார்க்கும்போது, அவளுக்கே நினைவு வராதா? ஒவ்வொரு நிலையில், அவன் என்ன எண்ணுகிறானோ என்று..

இரவில் பிள்ளைகளுக்குக் குடிப்பதற்குப் பால் ஊற்றிக் கொடுப்பதைக்கூட மறந்து அவள் யோசித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டு, ரங்கநாதன் தானே இரு சிறுமியருக்கும் வேண்டியதைக் கவனிக்கலானார்.

'குட்நைட்' சொல்ல இரு பெண்களும் வந்து நின்ற போதுதான், சுதாகரிக்கு இயல்பு வாழ்க்கை நினைவு வந்தது!

ரங்கநாதன் எதையும் துருவிக் கேட்கிறவர் அல்ல! இப்போது, பிள்ளைகளைக் கவனித்த விதமே சான்று.

எனவே, சுதாகரி அவளாகவே அருகில் அமர்ந்து, மகேந்திரனோடு நடந்த பேச்சு வார்த்தை பற்றிச் சுருக்கமாக, அவருக்குத் தெரிவித்தாள்.

மௌனமாகவே கேட்டவரிடம், "என்ன அசட்டுப் பேச்சு, பாருங்கள் பெரியப்பா! குறிப்பாகச் சொன்னால், புரிந்து கொள்ளமாட்டேன் என்கிறார்! அழுக்குக் குப்பையென்று மூட்டை கட்டித் தூரப் போட்டு விட்டது! அதை யாரிடமும் கூறக்கூட எனக்கு விருப்பம் இல்லை! இந்த மகேந்திரனுக்கு நீங்கள் கொஞ்சம் புத்தி சொல்லுங்கள், பெரியப்பா! இதெல்லாம் சரியில்லை.. வேண்டாம் என்று எடுத்துச் சொல்லுங்கள்!" என்று கேட்டுக் கொண்டாள் அவள்.

நடப்போடு, முன் நிகழ்ந்ததும் அறிந்தவர் அவர்!

அவளது தன்மை தெரிந்து, அவளை உருவாக்கியவரும் அவரே என்பதால், அவரது கருத்தும் தன்னைச் சார்ந்தே இருக்கும் என்று எண்ணினாள் சுதாகரி.

ஆனால், சற்று நேரம் பேசாதிருந்துவிட்டு, “இது உங்கள் இருவருக்கும் இடையே உள்ள விவகாரம்! இதில் நான் தலையிட முடியாது, சுதாம்மா!” என்று ரங்கநாதன் கூறவும், பிரமித்துப் போனாள் பெண்!

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, “முன்பு ஒரு தரம் மகேந்திரன் உன்னைப் பற்றிக் கேட்டபோது, அவரிடமும் இதே போலத்தான்.. எதுவானாலும் உன்னிடம்தான் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றுதான் சொன்னேன்! இப்போது, நீயும் வயதான என்னை இதில் இழுக்காதே!” என்று முடித்து விட்டார் அவர்!

ரங்கநாதனின் ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் இருக்கும்! ‘வயதான’ என்றால், உன் சிறு வயதுக்கு ஏற்ப முடிவு செய் என்கிறாரா? சே! அதெப்படிச் சொல்லுவார்? நீ புத்திசாலி, நீயே முடிவு செய்ய முடியும் என்கிறார். அவ்வளவே!

ஒரு வாரமாக மகேந்திரனைக் காணோம் என்றதும், பிள்ளைகள் குறைப்படத் தொடங்கினர்.

“கடையில் பெரிய வேலை எல்லாம் முடிஞ்சாச்சுது.. இனிமேல் அங்கிள் அடிக்கடி வருவார்னு சொன்னீங்களே! வரவே இல்லையே!” என்று பவித்ரா குறைப்பட, அனியும் அவள் மேல் சாய்ந்து, “ஆமாம் ஆன்ட்டி, அப்பா வராமல் ரொம்ப போர்!” என்று வருத்தப்பட்டாள்.

தோல்வியை ஒப்புக்கொண்டு திரும்பி வர மனமின்றி, மகேந்திரன் எங்கெங்கே சுற்றி அலைந்து கொண்டிருக்கிறானோ என்று சுதாகரிக்குமே உள்ளூரப் பரிதாபம்தான்.

ஆனால், வானவில்லின் அடிமுனை கண்டுதான் தீருவேன் என்று ஒருவன் அசட்டுப் பிடிவாதம் பிடித்தால், யார் என்ன செய்ய முடியும்? ஆனாலும், விருதாவாக அலைகிறானே! பாவம்! எத்தனை இடங்களில் முட்டிக் கொண்டு திகைக்கிறானோ?

அதிகம் அலைபாயத் தேவையின்றி, மறுநாளே மகேந்திரன் திரும்பி வந்துவிட்டான்!

பிள்ளைகளோடு சேர்ந்து அவன் லூட்டி அடிப்பதைக் காண, சுதாகரிக்கும் சந்தோஷமாகவே இருந்தது.

அவன் வாங்கி வந்திருந்த, சிறுவர்களுக்கான கட்டுமான செட்டை வைத்து.. அனி, பவியை விளையாடச் சொல்லிவிட்டு, அவள் அருகில் வந்து, பயண விவரம் சொல்லத் தொடங்கியபோதும், அவளுக்கு உள்ளூர எக்களிப்புதான்!

அவனது தோல்வியை அல்லவா ஒப்புக்கொள்ளப் போகிறான்! ஆனால், அவன் சொன்ன விதம் வேறு வகையாக இருந்தது!

“உன் திருமணம் எங்கேயும் பதிவாகவில்லை, சுதாகரி! கோயிலில் கூட மைனர் பெண் என்பதால் தகராறு வரும் என்று உன் பெரியவர்கள் விட்டுவிட்டார்கள் போல? அக்கம் பக்கம் உள்ளவர்களுக்குக்கூடத் தெரியவில்லையே!” என்று வியந்தான் மகேந்திரன். “இத்தனைக்கும் ப்ளஸ்-ஒன் படித்துக் கொண்டிருந்த பெண்! அப்படி என்ன அவசரம்? பெற்றோரும் படித்தவர்களாகவே தெரிகிறது!”

அவசரமா? யாருக்கு?

எதிர்பாராமல் தாக்கிய பழைய நினைவு, சுதாகரியின் நெஞ்சைக் கசக்கியது! ஏற்கனவே பட்டிருப்பது போதாதா? திடும், திடுமென்று அவளை இப்படி தவிக்க வைப்பதே, இவனுக்கு வேலையா?

“எப்படி இருந்தாலும், உங்களுக்கு ஒன்றுமில்லை!” என்றாள் தூக்கி எறிந்தாற்போல.

“இருக்கிறதே! திருமணம் எப்படி என்று தெரிந்தால் தானே, அதை ரத்து செய்வதையும் பார்க்க முடியும்?”

“ஐயோ!” என்றாள் சுதாகரி, அலுப்புடன். “மீண்டும் என்னைப் பொறுமையிழக்கப் பண்ணாதீர்கள், மகேந்திரன்! இதையே தொடர்ந்தீர்கள் என்றால், நான் வேறு முடிவுக்கு..” என்றவள் பேச்சில் குறுக்கிட்டான் அவன்.

“இது என்ன மிரட்டல், சுதாகரி? உனக்கே அசட்டுத்தனமாகத் தெரியவில்லை? நாம் இருவரும், ஒன்றும் தெரியாத சின்னப் பாப்பாக்கள் அல்ல. ஒரு விஷயத்தை ஆய்ந்து, அறிந்து முடிவு செய்யும் அறிவு முதிர்ச்சி இருவருக்குமே இருக்கிறது! என் கட்சியை நான் சொல்கிறேன். உன் காரணம், நீ சொல்லு! யார் பக்கம் யார் வந்தாலும் ஏற்றுக் கொள்ளலாம்தானே? அதை விட்டுப் பேசவே கூடாது என்றால், கொஞ்சமும் சரியில்லை! எனக்கென்னவோ, இதன் காரணம், ஒன்று உன் பக்கம் நியாயம் இல்லை என்று உனக்கே சந்தேகமோ என்று தோன்றுகிறது! அல்லது வேறு என்ன பயம் உனக்கு?”

“வீண் மன வேறுபாடும் வேதனையும் எதற்கு என்றும் எண்ணலாமே!”

“வீணா, அல்லவா என்பதே அது பற்றிப் பேசினால் தானே தெரியும்?” என்று கேட்டான்.

சிறு அமைதிக்குப் பின், “அன்று கேட்பதற்கு நீங்கள் யார் என்று கேட்டு, உங்களைச் சீண்டி விட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன்!” என்று, ஆராய்வது போல எடுத்துச் சொன்னாள் சுதாகரி.

அவனும் யோசித்து, அந்த முடிவுக்கே வரலாமே!

ஆனால், “அப்படி இல்லை” என்றான் மகேந்திரன். “சீண்டல் என்றால், இது சுதந்திர நாடு, என்ன வேண்டுமானாலும் கேட்கலாம் என்றாய் பார்! அதைச் சொல்லலாம்! உனக்கிருக்கும் சுதந்திரத்தை உடைத்து விடும் வேகம், எனக்கு அப்போது தோன்றியிருக்க வேண்டும்! மாறாக, என்னமாகச் சொல்லுகிறாள் என்று ரசிக்கத்தான் தோன்றியது! ஆனால், உன் ஸ்கூட்டர் ரிப்பேரான நாள், நிச்சயமாக ஒரு திருப்புமுனைதான். அவ்வளவு நேரம் நீ வீடு திரும்பவில்லை என்றதும், ஆடிப் போய்விட்டேன்! உடனே கிளம்பி வந்து கிராமத்து ரோடில் உன்னைப் பார்க்கும்வரை.. இனியும் அப்படித் தவிக்க முடியாது, சுதாகரி. உனக்கு ஒரு செல்ஃபோன் வாங்கிக் கொடுக்கும் உரிமை கூட இல்லாமல் இப்படி இருக்க, நிச்சயமாக முடியாது!”

“செல்போன்தானே? நானே வாங்கி வைத்துக் கொள்கிறேன்! எங்காவது ஸ்கூட்டர் நின்று போனால், உங்களுக்கே டெலிபோனும் பண்ணுகிறேன்! ப்ராமிஸ்! போதுமா?” என்று சாதாரணம் போலப் பேச முயன்றாள் சுதாகரி!

புன்சிரிப்போடு, “போதாதே!” என்றான் மகேந்திரன்! “என் தேவைப்பட்டியலில் இன்னும் நிறைய இருக்கிறது! உன் விவாகரத்து.. அப்புறம்..”

“போதும்.. நிறுத்துங்கள்! திரும்பத் திரும்ப என்ன, இதே தொல்லை?” என்றாள் சுதாகரி எரிச்சலுடன்! “எப்போதும் போல இருப்பதை விட்டு, ஏன் இந்தப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள்?” என்று அழாக் குறையாக, அவனிடமே கேட்டாள்.

“ஏனா? ம்ம்ம்.. நான் வேறு மாதிரிச் சொல்ல நினைத்தேன்! ஆனால், ‘சுபஸ்ய சீக்கிரம்’ என்பார்கள்! நான் உன்னைக் காதலிக்கிறேன், பெண்ணே!” என்று உற்சாகத்துடன் அறிவித்தான் மகேந்திரன்!

ஆனால், “அதைச் சொல்லாதீர்கள். வேண்டாம்!” என்றாள் சுதாகரி சிறு வெறுப்போடு.

ஆனால், முதலில் தொடங்கத் தயங்கிக் கொண்டிருந்தவனோ, இப்போது நிறுத்துவதாக இல்லை! தன்னை உணர்த்திவிடும் வேகத்தில், “ஏனோ? உனக்குத் தெரியுமா? அந்த மாடிப்படியில் நீ நிற்பது போல உருவகப்படுத்திக் கொள்ளாமல், நான் அதில் ஏறுவதே இல்லை! நீயும் பவி, அனியும் அங்கே வந்துவிடும் நாளுக்காக ஏங்கவே தொடங்கிவிட்டேன்!” என்றான், தொடர்ந்து.

அவனது வார்த்தைகளில் விரிந்த கற்பனையின் சூடு, அவளால் தாங்க முடியாததாக ஆகிவிட, “எதற்கு? ஏதோ சொல்லுவார்களே, அதைப் போல, என் மகளும், உன் மகளும் நம் மக்களோடு விளையாடுகிறார்கள் என்று சொல்லிக் கொள்வதற்காகவா?” என்று சுள்ளெனக் கேட்டாள், அவள்!

“ஷ், சுதா! என்ன பேச்சு இது? உனக்குக் கொஞ்சமும் தகுதியில்லை! இந்த மகள் பவித்ரா, என் மகளே! அதாவது, நம் மகள்! அனியும் அப்படியே! நம் மக்கள், நம் மக்களோடு விளையாடுவதில், என்ன குறை இருக்கிறது?”

உள்ளூர இன்னமும் கலங்கி, “எனக்கு இது, உகந்தது அல்ல!” என்றாள் அவள், பிடிவாதமாக.

“சரி, இந்த இருவரே எனக்குப் போதும்தான்!” என்றான் மகேந்திரன் லகுவாகவே!

“இந்தப் பேச்சை விடுங்கள் என்கிறேன், மகேந்திரன்!” என்றாள் சுதாகரி ஆத்திரத்தோடு!

ஒருதரம் அவளை ஆழப் பார்த்துவிட்டு, “பவித்ராவுடைய தந்தை வந்து கேட்டால் ஒப்புவாயா?” என்று வினவினான் அவன்.

“சேச்சே!” என்று வினாடி தயங்காமல், பதில் வந்தது!

“பின் என்ன? பிடிக்காத அந்தத் திருமணத்தை ரத்து செய்வதில் என்ன பிரச்னை?”

“திருமணமா?” என்று ஒருமாதிரிக் குரலில் கேட்டாள் சுதாகரி!

“ஆமாம். திருமணம்தான்! பவி பிறக்கக் காரணமான அந்தத் திருமணத்தை ரத்து பண்ணிவிட்டு, நல்லதொரு புது வாழ்வை நாமிருவருமாகத் தொடங்கலாம் என்று தான்..”

நிறுத்தாமல் சொன்னவனின் பேச்சில் குறுக்கிட்டு, “எந்த யுகத்தில் இருக்கிறீர்கள், மகேந்திரன்? குழந்தை பிறப்பதற்குத் திருமணம் என்கிற ஒன்று அவசியம் என்று, உங்களுக்கு யார் சொன்னார்கள்?” என்றாள் சுதாகரி, மிகவும் கடினமான குரலில்.

“சுதாகரி!” என்று அதிர்ந்து நின்றான் மகேந்திரன்! “நீ... நீயா? நடை, உடை, பாவனை எதிலுமே வரைமுறை தாண்டாத நீ.. ந.. நம்பமுடியவில்லையே! ஓ! இ.. இப்போது புரிகிறது! திருமணம் நடந்த அறிகுறியே இல்லாததன் காரணம் என்ன என்று.. இப்போது.. ஆனால்..” மேற்கொண்டு அவன் என்ன சொல்லியிருப்பானோ?

“அம்மா, அங்கிள், இங்கே வாங்களேன்..” என்று பவித்ராவும், “நாங்க ரெண்டு மாடி வீடு கட்டியிருக்கோமே, ஆன்ட்டீ!” என்று அனியும் ஓடிவர, மகேந்திரனின் பேச்சு இடையிலேயே நின்றது!

அவன் என்ன எண்ணுகிறான் என்பது, சுதாகரிக்குப் புரிந்தது! இதை விளக்குவதும் துன்பம்தான்! கூடவே, இனியும் அனியை அவளிடம் விட்டு வைப்பானா என்று, அது வேறு அவளுக்குத் தவிப்பாக இருந்தது!

ஆனால், எதையும் விளக்கும் மனோபாவமும் இல்லாது அவள் திணறுகையில், பிள்ளைகளின் இந்தக் குறுக்கீடு, சுதாகரிக்கு நிம்மதியாகவே இருந்தது!

“வந்து பாருங்க!” என்று இரு பெரியவர்களையும் கைப்பிடியாக இழுத்துக் கொண்டுபோய், தங்கள் திறமையைக் காட்டினார்கள், அவர்களுடைய சின்னவர்கள்!

அதைப் பார்த்து, உரிய வகையில் பாராட்டி முடிக்கும் போது, காய்கறிகளை அங்கங்கே சப்ளை செய்துவிட்டு, ரங்கநாதன் திரும்பி வந்தார்.

தொடர்ந்து வந்தவன் துரைப்பாண்டியன். அவன் இப்போது உற்சாகத்தின் பிடியில் இருந்தான்.

அவனுடைய உறவுக்காரப் பெண் கலைச்செல்வி உதவியால், அவள் அடிக்கடி போகவர இருந்ததால், பெண் வீட்டார், அவளிடம் சாதாரணமாகப் பழகுகிறார்களாம்! தனித்துப் பேச அனுமதிக்கா விட்டாலும், பெண்ணை மறைத்து வைப்பதும் இல்லையாம்! கல்யாணப் பெண்ணே, கலைச்செல்வியைப் பார்த்தால் புன்னகை செய்கிறாளாம்!

“மாப்பிள்ளையோட சொந்தக்காரியைப் பார்த்துப் பொண்ணு சிரித்தால், அவனைப் பிடித்து இருக்கிறதாத்தானே, மேடம் அர்த்தம்?” என்று சந்தேகம் கேட்டான் அவன்.

“ஆ.. ஆமாம்..” என்று சுதாகரி சற்றே தடுமாறுகையில், “நிச்சயமாக!” என்று கை கொடுத்தான் மகேந்திரன்!

முகம் மலர, “நானும் கலைச்செல்வியும் போய்ப் பேசினப்போ, புது வீட்டம்மா கூட இப்படித்தான் சொன்னாங்க! அடுத்த புதன்கிழமை, கலைச்செல்வி அங்கே போகிறப்போ, அவங்களும் கூடப்போய், பொண்ணு கிட்டே, நேரே கேட்டுடறதாகவும் சொன்னாங்க! எல்லாம் நல்லபடியா முடிஞ்சா, சாமிக்குப் பத்து தேங்காய் விடலை போடுறதா, எங்கம்மா வேண்டி இருக்காங்க! பத்தென்ன? நூறே வேண்டிக்கம்மானு சொல்லிட்டேன்! எல்லாம், நம்ம சாமிக்குத்தானே?”என்று திருமணத்தில், தன் விருப்பத்தைத் துரைப்பாண்டியன் வெளிப்படுத்தின விதம், சுதாகரியின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது!

தொடர்ந்த சில தினங்கள், மகேந்திரனால் சுதாகரியைச் சந்திக்க முடியாமலே போயிற்று! அன்று ‘சம்மர் கிளாசி’ல் பிள்ளைகளை விட்டுவிட்டுத் திரும்பி வந்தவளைத் திரும்ப வெளியே கிளம்புகிறபோது, வீட்டருகில் பிடித்தான் அவன்.

“மீண்டும் ஓட்டமா, சுதாகரி?” என்றான் புன்னகையோடு.

“நான் உட்கார்ந்திருந்து உண்பவள் அல்லவே!” என்றாள் அவள் எங்கோ பார்த்து.

“உண்மை! உன்னுடைய இந்தச் சுறுசுறுப்புதானே முதலில் என்னைக் கவர்ந்தது!” என்றான் அவன் பாராட்டு தலாக.

“எனக்கு வேலையிருக்கிறது!”

“எவ்வளவு வேலை இருந்தாலும், சொந்த வாழ்வையும் பார்த்தாக வேண்டும்தானே? சுதாகரி, அன்று நம் பேச்சு முடியுமுன் ஏகப்பட்ட இடையூறுகள் நேர்ந்துவிட்டன. பார் சுதாகரி, எல்லோரும் தப்புத் தவறுகள் செய்வதுதான்! அதை ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ளலாமே தவிர, ஒரு பிழைக்காக, வாழ்நாள் முழுவதும் சிலுவை சுமக்கத் தேவையில்லை! அதனால்..”

சரக்கெனத் தலையைத் திருப்பி, கண்கள் அகல அவனை ஒரு பார்வை பார்த்து, “யாருடைய பிழை?” என்று கேட்டாள் அவள்.

மீதிப் பேச்சு வாயிலேயே உறைய, மகேந்திரன் திகைத்து நிற்கையிலேயே, ஸ்கூட்டரைக் கிளப்பிக் கொண்டு சுதாகரி சென்றுவிட்டாள்!

## அத்தியாயம் – 24



ஒரு சமயத்தில், சுதாகரி சற்று அழுத்தத்தோடு, சிரித்தபடியே என்றாலும் உறுதியோடு எதையும் சொன்னாலோ, அவளுக்குப் பிரியமில்லை என்று காட்டினாலோ, அதற்கு மேல் மகேந்திரன் அதை வற்புறுத்திக் கேட்பது கிடையாது! அதையே தொடர்ந்து பேசவும் மாட்டான்! விட்டு விடுவான்!

ஆனால், இன்றைய மகேந்திரனிடம் அதை எதிர்பார்க்க முடியாது என்பதும் அவளுக்கு நிச்சயமே! எதையும் துருவுவதும், அவனுக்குச் சாதகமாகத் திருப்புவதும், அவனது இயல்பாகிக் கொண்டிருந்தது!

அவனிடம் அவ்வப்போது வாயை விடுவதும் அதற்காக வருந்துவதும், அவளுக்கும் வழக்கமாகிக் கொண்டிருந்தது!

'திருமண அவசியமின்மை' போலவே, 'பிழை' பற்றியும், அவள் சொல்லியிருக்கக் கூடாது!

ஆனால், அதைப் பற்றிய கேள்வியை எதிர்நோக்கி அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தபோது, ஏனோ, அது பற்றி அவன் விசாரிக்கவே இல்லை!

ஒருவேளை, ரங்கநாதனிடம் கேட்டிருக்கலாம்! ஆனால், எப்போது தலையிடுவது இல்லை என்று அவளிடம் சொல்லிவிட்டாரோ, அதன்பின், அவர் வாய் திறக்க மாட்டார் என்பது சுதாகரிக்கு நிச்சயம்! அல்லது மகேந்திரனே, அதைப் பெரிதாகக் கருதாமலும் விட்டிருக்கலாம்! அவனுக்குத்தான் அந்தப் பிழை பற்றி ஏற்கனவே ஒரு கருத்து இருந்தது! அதையே அவள் வலியுறுத்தியதாகவும் எண்ணியிருக்கலாம்! போகட்டும், அப்படியே நினைத்து விட்டுவிடட்டும்!

இந்தத் திருமணப் பேச்சையும் அப்படியே விட்டு விட்டுப் பழைய மாதிரியே இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று மட்டும் அவளுக்கு ஏக்கமாக இருந்தது!

நினைத்துப் பார்ப்பதுகூடக் கூடாது என்று எத்தனையோ விஷயங்களை ஒதுக்கிவிட்டிருந்தவளுக்கு அவன் ஓர் இனிய விருந்தினனாக வந்து சென்ற சந்திப்புகளே போதுமானவையாக இருந்தன! வெகு சில நேரத்து ஏக்கங்களை அடக்கவும் முடிந்தது!

எனவே, அவளது மறுப்பைப் புறக்கணித்து, மீண்டும் மீண்டும் அவன் வந்ததும், வாதாடியதும் அவளுக்குச் சங்கடமாகவும் சஞ்சலமாகவும் கூடவே வருத்தமாகவும் இருந்தது! சில வேண்டாத ஆசைகளைத் தூண்டி விட்டுவிடுவானோ என்று, உள்ளூரப் பயமாகவும்!

திருமணத்துக்கான காரணமாகத் திடுமென, “பவித்ராவுக்கு என்னை ரொம்பப் பிடித்திருக்கிறது!” என்றான் ஒருநாள்.

தன்னை மீறிய ஆச்சர்யத்துடன், “இதில் பவித்ரா எங்கே வருகிறாள்?” என்று வினவினாள் சுதாகரி!

“பெரிதாக இல்லை! ஆனால், அவளுக்குப் பிடிக்காதவனை, நீ ஏற்க மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம்!” என்று அவன் விளக்கம் கூற அவள் அசட்டையாகத் தோளைக் குலுக்கினாள்.



“திருமணமே கிடையாது என்கிறேன்! இதில், பவிக்குப் பிடித்தவர், பிடிக்காதவர் என்கிற பாகுபாட்டுக்குத் தேவையே இல்லை!” என்று முடித்தாள் அவள்.

அலுத்துப்போய், இன்னொரு நாளில், “இந்தப் பேச்சு வேண்டாமே, ப்ளீஸ்!” என்று அவனிடம் கெஞ்சியே கேட்டுக்கொண்டாள், சுதாகரி.

“ஏன்?” என்று, புதிது போலக் காரணம் கேட்டான் மகேந்திரன்.

“அதுதான் சொன்னேனே, எனக்குப் பிடிக்கவில்லை என்று!” என்றாள் அவள்.

“அதை, என் முகத்தைப் பார்த்துச் சொல்லு! என்னிடம் பேசும்போது மட்டும் பார்வை எங்கெங்கோ செல்வானேன்?” - கைப்பையுள் எதையோ தீவிரமாகத் தேடிக் கொண்டிருந்தவள், திடுக்கிட்டு நிமிர்ந்தாள்!

பார்வை தாழ, “எல்லோரும் என்னை என்ன சொல்லுவார்கள்? அனியை வைத்து, உங்களைப் பிடித்துவிட்டேன் என்று பேச மாட்டார்களா?” என்றாள் மெல்லிய குரலில்!

"ஏன்? அனியை அனுப்பி, நான் உன்னைப் பிடித்து விட்டதாகக் கூடக் கூறலாமே! ஆனால், யோசி! அப்படிச் சொல்லுகிறவர்கள், நமக்கு யார்? நமக்கு நல்லது, கெட்டதை நிர்ணயிக்கையில், மற்றவர் பேச்சைப் பொருட்படுத்தக்கூடாது, சுதாகரி!"

"உங்கள் நிலையில் இருந்து, எளிதாக அப்படிச் சொல்லலாம்!" என்றாள் அவள்.

சட்டெனச் சிரித்தான் மகேந்திரன். மனதில் எவ்வளவு நிச்சயம் இருந்தால், இப்படிச் சிரிப்பான்?

"என்ன?" என்றாள் எடுப்பாக.

"என்னை மணந்துவிட்டால், உன் நிலையும் என்னதுதானே? அப்புறம் என்ன? பரவாயில்லை! எனக்காக வாதாட, நீயே நல்ல 'பாயின்ட்' எடுத்துக் கொடுத்தாய்! தாங்க்ஸ்மா!" என்று அவன் உற்சாகத்துடன் கூற, அவள் முகத்தில் அசடு வழிந்தது!

ஆனால், "இப்போது என்ன சொல்லுகிறாய்? சம்மதம்தானே?" என்று அவன் மகிழ்ச்சியோடு கேட்டபோது, அவள் மறுப்பாகத் தான் தலையசைத்தாள்!

ஒரு பெருமூச்சுவிட்டு, "எனக்கு மனம் ஒப்பவில்லை, மகேந்திரன்" என்றாள் மெதுவாக.

அவள் முகத்தைக் கூர்ந்துவிட்டு, "பழைய கதையை மறந்துவிடக் கூடாதா?" என்று மென்மையாக வினவினான், மகேந்திரன்!

திடுக்கிட்டு நிமிர்ந்து, மீண்டும் மறுப்பாகவே தலையசைத்தாள் சுதாகரி!

"ஆனால், ஊர் உலகில் நடக்காததில்லை, சுதாகரி! இப்போது நிறையவே நடக்கிறதே! அதுவும், அறியாத வயதில் என்ன நடந்திருந்தாலும், அது எனக்குப் பெரிதாகத் தோன்றவில்லை! நீ மட்டும் நினைப்பானேன்? எதிர்மறை உணர்வுகளை விட்டுவிட்டுச் சற்று அமைதியாக இருந்து யோசி.. ஆகா, எங்கே யோசிப்பது? வெளியே துரைப்பாண்டியனின் பைக் சத்தம் கேட்கிறது! அவரது திருமணத்தைப் பற்றிய அடுத்த கதை என்று நினைக்கிறேன். அந்தப் பெரியம்மாளைப் பற்றி, எச்சரிக்கையாக ஒரு வார்த்தை போட முடிகிறதா என்று பார்! அப்புறம், அவர் சென்ற பிறகேனும் நான் சொன்னது போல யோசி! நான் பிறகு வருகிறேன்!" என்று கிளம்பினான் மகேந்திரன்.

என்ன யோசிப்பது? சின்ன வயதில் நடந்ததுதான்! ஆனால், அத்தோடு எல்லாம் முடிந்து விடவில்லையே! அன்றோடும் முடியவில்லையே!

தொடர்ந்து எத்தனை வேதனைகள்.. தூண்டி விடப் பட்ட பழைய நினைவுகளில் கண்கலங்கியது அவளுக்கு!

சென்று கொண்டிருந்த மகேந்திரனுக்கு ஒரு சலாம் அடித்துவிட்டு, "மேடம்.." என்று அழைத்தபடி முன்னறைக்குள் காலடி எடுத்து வைத்த துரைப்பாண்டியன் பார்த்தது, சுதாகரியின் அந்தக் கலங்கிய முகத்தைத்தான்!

அவளது கண்களில் என்ன பளபளப்பு? கண்ணீரா?

“மேடம்!” என்றான் அவன் திகைப்புடன்.

“உ.. உட்காருங்கள் இதோ வருகிறேன்!” என்று உள்ளே சென்று, திரும்பிய சுதாகரியின் முகம் தெளிவாக இருந்தது! ஆனால், கழுவித் துடைத்த முகமும், கண்களின் லேசான சிவப்பும் எப்படித் தெரியாமல் போய் விடும்?

அவனுடைய மேடம் அழுதிருக்கிறாள்! மகேந்திரன் இப்போதுதான் போகிறான்! அப்படியானால், மேடம் அழும்படி, அவன் என்ன சொன்னான்? அல்லது.. ஊகூம்! சுதாகரியை, யாரும் எதுவும் செய்ய முடியாது என்பது துரைப்பாண்டியனுக்கு நிச்சயமே! ஆனால், அழ வைத்திருக்கிறானே!

துரைப்பாண்டியனின் உள்ளே ஆவேசம் எழுந்து கொண்டிருந்தபோது, எதிரே வந்து அமர்ந்து, “சொல்லுங்கள் துரைப்பாண்டியன், உங்கள் திருமணம் எந்த நிலையில் இருக்கிறது? பெண் என்ன சொன்னாளாம்?” என்று விசாரித்தாள் சுதாகரி!

அதுவா இப்போது முக்கியம்?

“அது கிடக்குது கழுதை!” என்றான் அவன் அக்கறையற்று.

“ஐயோ, அப்படிச் சொல்லக் கூடாது, துரைப்பாண்டியன்! உங்கள் வாழ்வில் பாதியாகப் போகிறவள்.. ஏன்? இப்போதும் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லையா?” என்று வினவினாள் அவள்.

“அது..” என்று மனதை அவனது திருமண விஷயத்துக்குக் கொண்டு போனான் துரைப்பாண்டியன். “கலைச்செல்வியோடப் போனா, புது வீட்டுப் பெரியம்மாவுக்குப் பாவம், உடம்பு சரியில்லை! மாத்திரையோட, நெத்தியெல்லாம் சுக்குப் பத்து போட்டுக்கிட்டுப் படுத்திருந்தாங்க! ஆஊனு அனத்தலு! கலைச்செல்விதான், கஞ்சியெல்லாம் வச்சிக் கொடுத்துது! தன்னாலே எல்லாம் கெட்டுப் போச்சுதுனு, பெரியம்மாளுக்கு ரொம்ப வருத்தம்! ரெண்டு நாளிலே, அவங்க தனியாவே போய்க் கேட்டு வாரேன்னு சொன்னாங்க, பாவம்!”

உடம்பு சரியில்லை என்று படுத்துக் கிடப்பவளை பற்றி, என்னவென்று எச்சரிப்பது? அவள் யோசிக்கையிலேயே, “வந்து மேடம்..” என்று தொடங்கினான் துரைப்பாண்டியன்.

“உங்களுக்கு யாராலயாவது, என்னமாவது கஷ்டமின்னா, என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லுங்க மேடம்! அப்படியே, ரெண்டா வகுந்திடுறேன்!” என்று கூறி, அவள் முகத்தைப் பார்த்தான்.

“என்ன கஷ்டம்? ஒன்றுமில்லையே!” என்றவளுக்கு மெய்யாகவே, அப்போது ஒன்றும் புரியவில்லை! “என்னவானாலும் நானே பார்த்துக் கொள்வேன்! நீங்கள் போய், அந்தப் புது வீட்டம்மாவுக்கு ஏதேனும் உதவி தேவைப்படுமா என்று பாருங்கள்! உறவினர் யாரும் கூட இல்லை என்றீர்களே!” என்று கூறி, அவனை அனுப்பி வைத்தாள்!

கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக அவளை மறுத்துப் பேசி பழக்கம் இல்லாதிருந்த துரைப்பாண்டியனும் அவள் சொன்னது போலவே கிளம்பிவிட்டான்!

ஆனால், அவனுக்குள் உலைக்களமே எரிந்து கொண்டிருந்தது!

சுதாகரி அழுதிருந்தது அவனுக்கு நிச்சயம்! அதன் காரணம் மகேந்திரனாக இருக்கக்கூடும் என்பதும் கிட்டத் தட்ட நிச்சயம்! ஆனால், இல்லாமலும் இருக்கலாம்!



இப்போது என்ன செய்வது சரியாக இருக்கும்? யாரிடம் ஆலோசனை கேட்பது என்று யோசித்து, சுதாகரியைப் போல 'டவுனு பாஷை' பேசும், புது வீட்டம்மாவிடம் வந்து நின்றான் துரைப்பாண்டியன்!

எப்படியும் அந்தம்மாவுக்கு உதவி செய்யும்படி, சுதாகரி சொல்லியிருக்கிறாள்தானே!

சுக்குப் பற்றும், கஞ்சியுமாகக் குணப்படுத்தி விட்டதாகக் கூறிய அந்த அம்மாள், அவன் வெறும் கையோடு வந்திருப்பதைப் பார்த்துவிட்டு, "என்னவோ கவலையில் இருக்கிறாற்போலத் தெரிகிறதே! என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

"ஆமாம்மா!" என்று நெஞ்சின் சுமையிறக்கினான் துரைப்பாண்டியன். "அனிப் பொண்ணுக்காகத் துணிக்கடைக்காரர், மேடம் வீட்டுக்கு வரதுதான்.." என்று அவன் தொடங்கவுமே பரபரப்படைந்து, "என்னது? என்னது? யார், யாருக்காக, எங்கே வருவது?" என்று ஆத்திரமாகக் கேட்டாள் அந்தப் பெரியவள்!

துரைப்பாண்டியனால் 'புது வீட்டம்மா' என்று பெரிதாகக் கூறப்பட்ட அந்த வயதான பெண், சுந்தரி அம்மாளேதான்!

மகேந்திரன் கொடுத்த சில லட்சங்களோடு, வீட்டுச் செலவுப் பணத்தில் சுருட்டியதும் இருக்கவே, வாழ்க்கை முழுவதும் வசதியாக வாழப் போவதாக எண்ணிவிட்டாள் அந்த அம்மாள்!

திட்டமிட்டுச் செலவு செய்தறியாதவள் என்பதால், வீடு வாங்குவதில் ஒரு லட்சம், வாங்கிய வீட்டை மராமத்து செய்வதில் அரை லட்சம், டி.வி, ஃப்ரிட்ஜ், மெத்தைக் கட்டில், சோஃபா என்று மகேந்திரனின் வீட்டில் அனுபவித்த சுகம் எதையும் விட மனமின்றி, நன்றாகவே செலவு செய்தாள்!

அப்புறம் வக்கணையான சாப்பாடு! கூப்பிட்ட குரலுக்கு வேலையாட்கள் என்று பணம் தண்ணீராக ஓடிக் கொண்டிருந்தது!

இருப்பு வேகமாகக் குறைகிறதே என்று, அப்போது தான் கவலைப்படத் தொடங்கியிருந்தாள் அந்த அம்மாள்! ஆனால், எந்தச் செலவையும் குறைக்கவும்

மனம் இல்லாமல், அவளது இந்தப் பிரச்னைக்குக் காரணம் அந்த சுதாகரிதான் என்று, அவளைச் சபித்துக் கொண்டிருந்த சமயம் அது!

இப்போது தானாகத் துரைப்பாண்டியன், அந்தப் பேச்சுசெடுக்கவும், அவளுக்குப் பரபரவென்று, முழு விவரத்தையும் அறிந்துகொள்ளும் வேகம் வந்தது!

அங்கே இருப்பது அவள் சொத்து அல்லவா? வெளியேற நேரும் என்கிற எண்ணம் இல்லாததால், நன்றாகத் தின்றது தவிர, அப்போது அதிகம் சுருட்டவில்லை! மீண்டும் ஒரு வாய்ப்புக் கிடைத்தால், காலம் காலத்துக்கும் அள்ளிக்கொண்டு வந்து விடலாமே!

அதனால்தான் பரபரப்போடு, அவள் விவரம் கேட்டது!

துரைப்பாண்டியனும் ஒரு வழிகாட்டுதலுக்காகத் தவித்துக்கொண்டு இருந்ததால், அவளது அதிகப்படி ஆர்வத்தைக் கவனியாமல் விவரம் சொல்லலானான்.

“அனிப் பொண்ணு ஒரு சூனியக்காரக் கிழவி கிட்டே மாட்டி, வீட்டை விட்டு ஓடிப் போயிட்டுது! அதிலேருந்து, மேடம் வீட்டிலேதான் இருக்குது! அந்த இந்திரதனுசுக்காரர், மகளுக்காக அங்கே அப்பப்ப வருவாரு! இப்போ மேடத்தை, அவரு அழ வைக்கிறாரோனு ஒரு சமுசயம்! அது மட்டும் நிஜமா இருந்தால், அப்படியே அடித்துத் தொகைச்சிருவேன்!” என்றான்!



‘சூனியக்காரக் கிழவி’ என்ற வார்த்தையில் கொதித்து, “அடுத்தவர்கள் வீட்டுப் பெண்ணை மயக்கிப் பிடித்து.. எனக்கென்னவோ, அந்தப் பொட்டச்சிதான் சரியில்லையோன்னு சந்தேகமாக..” என்று அவள் முடிக்கும் முன்..

“பொட்டச்சியா? என்ன பெரியம்மா, பேச்சு கண்டபடி ஓடுது?” என்று உறுமினான் துரைப்பாண்டியன்!

சுந்தரியம்மாள் திகைத்து நோக்குகையில், “நீயே ஒரு பெண் பிள்ளையாக இருந்துக்கிட்டு இன்னொரு பொண்ணைப் பொட்டச்சி என்கிறாயே! பெண்மணி என்று இருக்குதே தவிர, ஆண்மணினு யாராச்சும் சொல்றதுண்டா? ஒரு பொண்ணைப் பொட்டச்சினு சொன்னா, உன்னைப் பெத்தவளையும் அப்படித்தான் சொல்லணும்? அதனாலே, பொண்ணுங்களைப் பத்திச் சொல்லுகிறப்போ, பெண்மணி அல்லது பெண்பிள்ளைனு சொல்லணுமினு மேடம் எனக்குக் கத்துக் கொடுத்திருக்கிறாங்க! பொட்டச்சினு மேடத்தைச் சொன்னியே, அப்ப நீ யாரு? பொட்டச்சிதானே? நீ சுத்த மோசம் பெரியம்மா!” என்று துரைப்பாண்டியன் குறைப் பட்டான்.

அப்போதும் விட மனமில்லாவிட்டாலும், “அதில்லைப்பா.. இந்த வேலைக்காரப் பெண்ணோடு பேசிக் கொண்டிருந்தேனா? அந்த வார்த்தை தானாக வாயில் வந்துவிட்டது! ஆனால், ஒரு சின்னப் பெண்ணை நல்ல வார்த்தை சொல்லி, அதன் வீட்டில் விடாமல் தன் வீட்டிலே வைத்திருப்பது, அவ்வளவு சரியாகப் படலையே! துணிக்கடைக்காரன் பணத்துக்காக, அவன் பிள்ளையை வைத்து அவனைப் பிடிக்கப் பார்க்கலாம், இல்லையா?” என்று எச்சரிக்கையாகவே பேசினாள் சுந்தரியம்மாள்.

“அப்படி இல்லைனு எனக்கு நல்லாத் தெரியும், பெரியம்மா! பணம், மேடத்துக்குத் தூசு! எங்க அம்மாளு வயசு, உங்களுக்கு இருக்கும்! அம்மாளாவே நினைச்சுச் சொல்றேனே! ஏகப்பட்ட நெலபுலன் எனக்கு! அப்பன் இல்லாத திமிரு! அவுங்க அளகைப் பார்த்து, வைச்சுக்கிட ஆசைப்பட்டேன்! மாட்டேன்னதும், பசப்புனு நினச்சு கையை நீட்டிப்புட்டேன்! அவ்வளவுதான்! என்னை அடிச்சு, உதைச்சு, கீழே தள்ளிட்டாங்க! கஷ்டப்பட்டு உப்பில்லாக் கஞ்சி குடிச்சாலும் குடிப்பாங்களே தவிர, மேடம் தீயாக்கும்! எப்பேர்ப்பட்ட ‘தீ’னு எனக்கு ரொம்ப நல்லாவேத் தெரியும்!” என்றான் துரை பெருமையாக!

‘தீ என்றால் கையைக் காலை ஒடித்து அடுப்பில் வைத்துச் சோறு பொங்கச் சொல்லு’ என்று வக்கிரமாக நினைத்தபோதும், வெளியே அதைக் காட்டிக்கொள்ளாமல், வேகமாக மாற்றுத் திட்டம் தயாரித்தாள் சுந்தரியம்மாள்.

“நீ சொல்வதைப் பார்த்தால், அவள் ரொம்பவும் நல்ல பெண்ணாகத் தெரிகிறதே! அந்தப் பயல்தான், படு வில்லன் போல இருக்கிறது! மகளை உள்ளே அனுப்பி, அவளைத் தொடர்ந்து, தானும் உள்ளே புகுந்துவிடத் திட்டம்ப்பா! அவனை நாலு சாத்து சாத்தி, மகளை இழுத்துக் கொண்டு ஓடச் சொல்லு! எல்லாம் சரியாகிப் போகும்!” என்றாள்.

அவளுள் ஓடிய திட்டம் வேறு!

சுதாகரியிடமிருந்து அனியைப் பிரித்து வீட்டுக்குக் கொண்டு போகச் செய்துவிட்டால், அவளைக் கவனித்துக் கொள்ள ஆள் வேண்டும்! அறியாத அன்னியருக்கு, அறிந்த திருடன் மேல்! ஏற்கனவே மன்னிப்பும் கேட்டிருப்பதால், எப்படியாவது பசப்பி உள்ளே புகுந்து விடலாம் என்று எண்ணினாள்!

அப்படியின்றி, இந்த முரடனின் அடியில் மகேந்திரனின் உயிரே போய்விட்டால்கூட, இன்னமும் நல்லதுதான்! சொந்தக்காரப் பெரியவளாக உரிமையோடு போய் உட்காரலாம்!

அப்புறம், ஆற்றிலே போகும் தண்ணீர் அத்தனைக்கும் அவள்தான் மகாராணி!

மகேந்திரன் சாகாவிட்டால்கூட, அடிபட்டுக் கிடக்கும் போது, துரைப்பாண்டி, சுதாகரி வைத்துக் கொண்டிருக்கும் ஆள், அவனை வைத்து உன்னைப் பிடிக்க, இந்த வேலை என்று ரத்தம் இழந்து, பலவீனமாகக் கிடக்கிறவனை ஏமாற்றி, நிர்வாகத்தைக் கைப்பற்றி விடலாம்!

அப்புறம்.. என்று எண்ணும்போதே வாயில் எச்சில் ஊற, துரைப்பாண்டியனை நன்றாகத் தூண்டிவிட்டாள் சுந்தரியம்மாள்!

சுதாகரி ரொம்ப நல்லவள்! சின்னப் பிள்ளைகள் என்றால், அவள் அப்படியே பாகாக உருகி விடுவாள்! அதைக் கணக்கிட்டு மகளை அங்கேயே விட்டு வைத்திருக்கிறான், அந்தப் பொம்பளைப் பொறுக்கி, மகேந்திரன்! அனியை வைத்து சுதாகரியை மயக்கி, மகள் பின்னோடு, தானும் உள்ளே புகுந்துவிடத் திட்டம்! உயிருக்கே ஆபத்து என்றால்தான் பயல் பயந்து ஒதுங்குவான்! சுதாகரியைக் காப்பாற்ற, எதற்கும் அஞ்சாத வீரன் துரைப்பாண்டியனால் மட்டும்தான் முடியும்!

கொம்பு சீவப்பட்ட காளையாக, இடுப்பில் குத்துக்கத்தியுடன் துரைப்பாண்டியன் கிளம்புவதை, உள்ளூர சந்தோஷத்தோடு பார்த்துக் கொண்டு நின்றாள் சுந்தரி அம்மாள்!

அங்கே என்ன பாதகம் நடந்தாலும், அவளுக்கு சாதகமே!

## அத்தியாயம் – 25

புது வீட்டம்மாவின் வீட்டிலிருந்து கிளம்பிய துரைப்பாண்டியன் நேராக மகேந்திரனின் வீட்டுக்குப் போகவில்லை!



அன்று சுதாகரியின் வீட்டின் வெளியே பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே சென்று கொண்டிருந்தபோது, ‘பிறகு வருகிறேன்’ என்று மகேந்திரன் சொன்னதுபோல, அவன் காதில் விழுந்திருந்தது!

‘பிறகு’ என்றால், அப்போதே கூட, அவன் அங்கே வந்திருக்கலாம்! அன்று கடைக்கு விடுமுறை நாள் என்பதால், அவனுக்கு நேரம் கணக்கல்ல! அல்லது, எப்போது வருகிறான் என்று பார்த்து, அவன் வரும்போது வழி மறித்து, இரண்டு கீறு கீறி மிரட்டினால் அது மேலல்லவா?

ஆனால், ‘வருகிறேன்’ என்றவனைக் காணோமே என்று சுதாகரியோ, ரங்கநாதனோ தேடக்கூடும்! ரங்கநாதனைப் பற்றிய நினைவு வரவும், துரைப்பாண்டியனுக்கு இன்னொரு யோசனை உண்டாயிற்று.

ரங்கநாதன் அந்த வீட்டுப் பெரியவர்! கௌரவமான பட்டாளத்துக்காரர். மகளையும் பேத்தியையும் கண் போலக் காக்கிறவர். அவரிடம் ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டால் என்ன?

மகேந்திரனை எதிர்க்கும் பணபலம் அவருக்கு இல்லாதிருக்கலாம்! ஆனால், மனதுக்குக் கஷ்டம் என்று சொல்லிவிட்டார் என்றால், அதைத் தீர்ப்பதற்குத்தான், இந்த மாவீரன் துரைப்பாண்டி இருக்கிறானே!

‘முன்னே பின்னே யோசிக்காமல் எதையாவது செய்து விடுகிறீர்களே’ என்று சுதாகரி வருத்தப்படுவாள்! தங்கப்பன் வண்டியை வயலுக்குள் இறக்கிய சமயம் திரும்பத் திரும்பச் சொன்னது! இப்போது, இவ்வளவு யோசித்துச் செயல்படுவது தெரியும்போது, மேடத்துக்குச் சந்தோஷமாக இருக்கும்!

சிறுமிகள் இருவரையும் ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு சுதாகரி எங்கோ செல்வது தொலைவில் தெரிந்தது! லீவு நாளில், அவ்வப்போது ஐஸ்கிரீம் சாப்பிட அழைத்துப் போவது பழக்கம்தான்!

பெரியவரை எப்படித் தனியே கூட்டிப் போய் பேசுவது என்று யோசித்துக் கொண்டிருந்த துரைப்பாண்டியனுக்கு இது வசதியாகப் பட, வேகமாக வீட்டுக்குச் சென்றான்!

எப்போதுமே அவனை உட்காரவைத்துப் பேசுகிறவர் ரங்கநாதன். இப்போதும் அவர் மகிழ்ச்சியுடனேயே வரவேற்க, அவரிடம் பேசுவது அவனுக்கும் எளிதாக இருந்தது!

தானறிந்த விவரத்தைச் சொல்லி, "துணிக்கடைக்காரர் நல்லவருனு பார்த்தா, மேடத்தை அழவைக்கிறாரே சார்! புது வீட்டுப் பெரியம்மா, பெறப்பிலேயே பெரிய இடமாம்! பெறந்தது, வளந்தது எல்லாமே, நம்ம மேடம் மாதிரிதான்! நல்லா படிச்சவங்களாம்! அவங்க பேரு கூட, கொஞ்சம் மேடம் மாதிரி, சுந்தரியினு நல்ல பேரு! உங்களை மாதிரி நல்லா விவரம் தெரிஞ்சவங்க! அவங்க சொல்றாங்க, துணிக்கடைக்காரருக்கு மேடத்தைப் பத்திக் கெட்ட நினைப்பு, உசிருக்கு ஆபத்துனு ஆனாத்தான் பயந்து ஒதுங்குவாருங்கிறாங்க! சும்மா ஒரு போடு போட்டிரலாமானு குத்துக் கத்தியைக் கொண்டாந்தேன்! அப்பாலேதான், எதுக்கும் உங்ககிட்டே ஒரு வார்த்தை கேட்டுக்கிடலாமேனு, இங்க வந்தேன்!" என்றான் துரைப்பாண்டியன்.



'சுந்தரி' என்கிற பெயர் எங்கோ உறுத்தியபோது, ரங்கநாதன் அதை ஆராயும் நிலையில் இல்லை!

'நல்லவேளை, வெட்டிவிட்டு வந்து சொல்லாமல், கேட்டுவிட்டு வெட்டப் போகலாம் என்று வந்தானே' என்று உள்ளூர ஆறுதல் அடைந்தபோதும், அவருக்குப் படபடப்பு அடங்க சற்று நேரம் பிடித்தது!

உடலும் மனமும் சற்று அமைதி அடைந்ததும், "உன் மேடத்துக்கும் மனதுக்குள் ஆசைதான், பாண்டியன்! ஆனால், ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன சொல்லும் என்று தயங்கி, மறுத்துக் கொண்டிருக்கிறாள்! மகேந்திரனும், தப்பான முறையில் அணுகவில்லைப்பா! கல்யாணம் செய்து கொள்கிறேன் என்றுதான் கேட்கிறார்!" என்றார் பெரியவர்.

"க.. கல்யாணமா?"

துரைப்பாண்டியனுக்குக் குழப்பம் அதிகமாயிற்றே தவிர குறைவதாக இல்லை. "கல்யாணம் எப்படி சார்? அஞ்சு வயசுப் பொண்ணை வெச்சுக்கிட்டு.. கல்யாணமின்னா எப்படி?" என்று திக்கித் திணறினான்!

"அது ஒரு விபத்து, பாண்டியன்! ஒரு விபத்து மாதிரி நடந்ததற்காக, வாழ்க்கையில் ஒரு சுகமும் காணாமல், காலம் முழுவதும் சுதாகரி இப்படியே இருக்க வேண்டும் என்பாயாப்பா?" என்று ரங்கநாதன் கேட்கவும், சின்னவனின் கண்கள் விரிந்து அகன்றன.

"மற்றதை விடு! உன் மேடம், அந்தப் பெரிய வீட்டு ராணியாக வாழ வேண்டுமா, இல்லையா? நீயே சொல்லு!" என்று தொடர்ந்து கேட்டார் ரங்கநாதன்.

கண்கள் ஏதோ கனவில் ஆழ, யோசனையும், உடன்பாடுமாக துரைப்பாண்டியனின் தலை தானாக ஆடியது!

ஆனாலும், உடனேயே விலுக்கென நிமிர்ந்து, “மேடத்துக்கு ஆசைதான்னு நீங்க சொல்றீங்க! ஆனாக்க, மாட்டேன்னுறாங்கனும் சொல்றீங்க! மேடம் ஒண்ணும் மனசிலே ஒண்ணு வைச்சு, வெளியிலே இன்னொண்ணு பேசுகிற ஆள் இல்லையே! நிஜமாவே அவங்களுக்குப் பிடிக்காமப் போய், துணிக்கடைக்காரர் தொந்திரவு பண்ணிக்கிட்டிருக்காரோ, என்னமோ?” என்று சந்தேகப்பட்டான். “அப்பிடின்னா, அந்தாளை வகுந்துதானே ஆகணும்?”

“அதுதான் சொன்னேனேப்பா.. ஊர், உலகத்துப் பேச்சுக்காகத் தயங்குகிறாள் என்று!”

ஒப்புக்கொள்ளாமல் தலையசைத்தான் அவன்! “மேடம் எப்பவும் தனக்குச் சரினு பட்டதை, ரைட் ராயலா செய்றவங்க! துணிஞ்சு செய்றவங்கனும், எனக்கு நல்லாவே தெரியும்! அதனால, நீங்க சொல்றதை, என்னால நம்ப முடியலை!” என்றான் தீர்மானமாக!

‘இவனை எப்படி நம்ப வைப்பது?’ என்று கவலைப் பட்டார் ரங்கநாதன். நம்பாமல் அவசரப்பட்டு, தப்புத் தண்டாவாக ஏதேனும் செய்துவிடக் கூடாதே!

சற்று யோசித்து, “அப்படியானால் ஒன்று செய்!” என்று ஐயம் தெளிவதற்கான வழியை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார் அவர். “மகேந்திரனை அடிக்கப் போவதாக, சுதாகரிக்குத் தெரியும்படியாகச் செய்துவிட்டுக் கிளம்பு! அவள் மகேந்திரனைக் காப்பாற்ற வருகிறாளா, இல்லையா என்று பார்! சக்தி நகரில் ஒரு சிறுமியின் பிறந்தநாள் விழாவில் பிள்ளைகளைக் கொண்டு விடுவதற்காக, சுதாகரி போயிருக்கிறாள். சீக்கிரமே வந்து விடுவாள்! இன்றைக்கே, இதை.. இந்த சோதனையைச் செய்து பார்த்துவிடேன்!” என்றார்.

கண்கள் விரிய, “ஆங்.. இது நல்ல யோசனை! செஞ்சு பார்க்கலாம்!” என்று அவன் தலையாட்டிக் கூறுகையிலேயே, வெளியே சுதாகரியின் ஸ்கூட்டர் சத்தம் கேட்டுவிட்டது!

உள்ளே வந்தவள், “எட்டரை மணிக்கு மேல் பிள்ளைகளை அழைத்துப் போக, வரச் சொன்னார்கள், பெரியப்பா!” என்று விட்டு, துரைப்பாண்டியனைப் பார்த்து, “ஏதேனும் பிரச்னையா, துரைப்பாண்டியன்? திரும்பவும் வந்திருக்கிறீர்களே! அந்தப் புது வீட்டு அம்மாவுக்குப் பெரிதாக ஒன்றுமில்லையே?” என்று சிறு கவலையுடன் கேட்டாள்!

‘இதுதான் நம்ம மேடம் என்கிறது’ என்பதுபோல, துரைப்பாண்டியனின் முகம் பூரித்து மலர்ந்தது!

“அவங்களுக்கு குணமாகிட்டுது, மேடம்! நான் வந்தது, உங்க விஷயமா!” என்று எழுந்து கொண்டான்.

“மதியம் வந்தப்ப, உங்க கண்ணிலே தண்ணியப் பார்த்தேன், மேடம்! எனக்கு மனசே தாங்கலை! யோசிச்சுப் பார்த்தப்ப, அந்தத் துணிக்கடைக்காரர் வேலைதான்னு புரிஞ்சு போச்சுது! கை, காலு ஒளுங்கா இருக்கப் போய்த்தானே, இந்த வேலை பண்ணினான்? அந்தாளு கையைக் காலை வாங்கினாத்தான் என் மனசு ஆறும்! இல்லாட்டி, உசிரையே வாங்கி விடுறேன்!” என்றபடி, இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து, தான் பார்க்கிற மாதிரி அவளுக்குக் காட்டிவிட்டு, “உங்க கிட்டே சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்! போலீஸ் கீலீசு பிடிச்சாலும், எதுக்குச் செஞ்சேன்னு, உங்களுக்குத் தெரியணுமில்லே?” என்றபடி, பேச்சில் குறுக்கிட சுதாகரி செய்த முயற்சிகளைக் கவனியாதவன் போல, வேகமாகச் சொல்லி முடித்துவிட்டு, அதே வேகத்துடன் வீட்டை விட்டும் வெளியேறினான்!

“துரைப்பாண்டியன்.. துரைப்பாண்டியன்! அப்படி ஒன்றுமில்லை! நில்லுங்கள்!” என்று சுதாகரி பதறியதை, அவன் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை!

நேராகப் போய், ஓர் உதையில் பைக்கைக் கிளப்பிக் கொண்டு சென்றேவிட்டான்!

“பெரியப்பா, போங்கள் பெரியப்பா! போய், துரைப்பாண்டியனைத் தடுத்து நிறுத்தி, மகேந்திரனைக் காப்பாற்றுங்கள்!” என்று பதறினாள் சுதாகரி.

“நானா? அவன் சூறாவளி மாதிரிப் போகிறான்! இந்தக் கிழவன் போய் என்ன பண்ண முடியும்? ஒரு தள்ளு தள்ளினால், எத்தனை குட்டிக்கரணம் போடுவேனோ? மகேந்திரன் என்ன.. சாதாரணமான ஆளா? எல்லாம் அவர் பார்த்துக் கொள்ளுவார்!” என்றவர், சமையல் அறைக்குள் சென்றபடி, “நம் இருவருக்கும்தானேம்மா பலகாரம்?” என்று கேட்டார்.



“அதுவா முக்கியம் பெரியப்பா?” என்றாள் அவள் அழாதக்குறையாக, “இப்போது.. இப்போது.. நானே போய்ப் பார்க்கிறேன், பெரியப்பா! நீங்கள் அதற்குள், துரைப் பாண்டியன் வருவது பற்றி, மகேந்திரனுக்கு போன் பண்ணி எச்சரியுங்கள்!” என்றவாறே வெளியே ஓடிய பெண்ணை யோசனையோடு பார்த்த ரங்கநாதன், கண்மூடிக் கடவுளை வேண்டிக்கொண்டார்!

ஸ்கூட்டரை ஸ்டாண்டு போட்டு நிறுத்தக்கூட இல்லாமல் கேட் அருகே அப்படியே சரிய விட்டுவிட்டு, சுதாகரி மகேந்திரனின் வீட்டுக்குள் ஓடிச் சென்றால்.. துரைப்பாண்டியன் கத்தி முனையில் அவனை மடக்கி நிறுத்தியிருந்தான்!

“நிதானம் துரைப்பாண்டியன்! என்ன விஷயம் என்று முதலில் சொல்லுங்கள்!” என்று மகேந்திரன் கேட்க, “உன்னைக் கொல்றதுக்குக் காரணம்தானே? இதோ சொல்றேன் கேட்டுக்கோ! எங்க மேடத்து மேலே ஆசைப்பட்டுத் தொல்லை பண்ணுறியாமே! கை காலை எடுத்திட்டா.. அதைவிட, உசிரையே எடுத்திட்டா.. நீ எப்படிப்..” என்று துரைப்பாண்டியன் உரக்க மிரட்டிக் கொண்டிருக்கும்போதே, “வேண்டாம், வேண்டாம்!” என்று சுதாகரி குறுக்கே பாய்ந்துவிட்டாள்!

“நீங்க தள்ளுங்க மேடம்! இந்தாளை நான் பார்த்துக்கிடறேன். ஒரே குத்து, உசிரை எடுத்திடுறேன்!” என்று மகேந்திரனை துரைப்பாண்டியன் நெருங்க, நிலை கலங்கி, ஓடிப்போய் மகேந்திரனை மறைத்து நின்றாள் அவள்.

“அதை விட, முதலில் என்னைக் குத்திவிட்டு, இவரிடம் போங்கள்!” என்றாள் கண்ணீருடன்!

“ஷ்.. விலகு சுதா! உனக்கு அடிபட்டுவிடும். தள்ளிப் போ! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்” என்று அவளைப் பற்றி இழுத்து விலக்க முயன்றான் மகேந்திரன்.

“இல்லை. என்னை விலக்காதீர்கள்! என் உயிர் இருக்கும்வரை, உங்களுக்கு எது நடக்கவும், நான் விட மாட்டேன்!” என்றுரைத்து, அவனை முழுமையாக மறைக்க முயற்சித்தவாறே, “இவருக்கு ஒன்று என்றால், நான் தாங்கமாட்டேன், துரைப்பாண்டியன்! வேண்டுமானால், முதலில் என்னை..” என்று தொடங்கியவள், அவன் கத்தியை மடக்கி, இடுப்பில் செருகிக் கொள்ளவும் திகைத்தாள்.

“பெரியவரு சொன்னாப்போலே, நீங்க ரெண்டு பேரும் ரொம்பப் பொருத்தமானவுங்க! நெடுங்காலத்துக்கு நல்லா இருக்கணும்! நம்ம சாமி, ஆண்டவன் உங்களை நல்லா வைக்கணும்!” என்று கைகூப்பி வணங்கிவிட்டு அங்கிருந்து வெளியேறலானான் துரைப்பாண்டியன்!

“ஐயோ, அப்படி ஒன்றும்..” என்று தொடங்கியவளுக்கு மேலே சொல்லப் பயமாகவும் இருந்தது!

ஏதோ நினைத்து அதற்காகக் கத்தியை மடக்கியவன், அது இல்லை என்றதும் மீண்டும் கத்தியை எடுத்துவிட்டால்?

துரைப்பாண்டியன் வெளியே செல்கையில் அவனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வாயிற்காவலன் உள்ளே வந்தான். “வண்டியைப் பூட்டாம அப்படியே விட்டுவிட்டு வந்துட்டீங்கம்மா! பூட்டிட்டேன். இந்தாங்க சாவி!” என்று மரியாதையுடன் சாவியை நீட்டினான்.

அவ்வப்போது அவளைப் பார்த்தவன்தான். அதைப் போல, துரைப்பாண்டியையும் மகேந்திரனோடு பார்த்திருந்ததால் அவனை இவன் தடுக்கவில்லை போலும்!

கையை நீட்டிய மகேந்திரனிடம் சாவியைக் கொடுத்துவிட்டு அவன் செல்ல, “இவனையாவது கூப்பிட்டிருக்கலாமே!” என்றாள் சுதாகரி!

“துரைப்பாண்டியன் கெட்டவரல்ல! அதனால், நானே பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்!” என்றவன் முறுவலித்து, “அதனால்தானே ஒருவிதமாய் நல்ல முடிவும் கிடைத்திருக்கிறது?” என்று மென்குரலில் வினவினான்!

சில கணங்கள் கண் மூடி நின்றவள், மெல்லக் கண் திறந்து அவனை நேராகப் பார்த்தாள். “பவித்ரா எப்படி வந்தாள் தெரியுமா?” என்று கம்மிய குரலில் கேட்டாள்!

"சொல்லு!"

"ஓரளவு ஊகித்திருப்பீர்கள்! ஆனால், அது எப்போது, என்ன மாதிரி நிலையில் நடந்தது என்று.."

தன் சுமையை தாங்கமாட்டாதவள் போன்று, அருகே இருந்த சோபாவில் அமர்ந்தாள் சுதாகரி!

தொய்ந்து கிடந்தவள் மெல்லத் தொடங்கியபோது, அவன் தடுத்தான். "கஷ்டமாக இருந்தால் சொல்ல வேண்டாம் சுதாகரி.."

"இல்லை. நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்! என்ன நடந்தது, எதற்காக எதுவும் வேண்டாம் என்றேன்... எல்லாம்.. எல்லாமே!"



அப்போது சுதாகரிக்கு வயது பதினாறு! ப்ளஸ் ஒன் படித்துக் கொண்டிருந்தாள். அப்பா, அம்மா அவள்.. மூவரும் மட்டும்தான்! சந்தோஷமான குடும்பம்! எப்போதும் வீட்டில் சிரிப்புச் சத்தம் கேட்கும்!

அக்கம்பக்கத்தில் எல்லோரிடமும் நல்ல பெயர். பக்கத்து வீடும் சுதாகரிக்குச் சொந்த வீடு போலத்தான். கூப்பிடுவதே பெரியப்பா, பெரியம்மா என்றுதான். அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாததாலோ, என்னவோ.. இருவருக்கும் அவளை ரொம்பப் பிடிக்கும்! இங்கே என்ன செய்தாலும், அங்கே கொண்டு போய்க் கொடுப்பாள். அவர்களும் அப்படித்தான்! பலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த பெரியம்மாவை, இந்தக் குடும்பத்தை நம்பித்தான் பெரியப்பா விட்டுவிட்டுப் போவார். பெரியம்மாவுக்குப் பிறகும் பெரியப்பாவுடன் அதே பாசம்தான்! அதே பழக்கம்தான்!

அன்றைக்கு.. அந்தப் பொல்லாத நாளன்று, குடும்பத்தினர் மூவரும் ஒரு திருமணத்துக்கு என்று காஞ்சிபுரம் போனார்கள்! தூரத்து உறவுதான்! கல்யாணத்தை விட பாடத்தில் வந்த கோயில்களைப் பார்க்க மகளுக்கு ஆசை என்று, பாதி அதற்காகத்தான் கிளம்பினார்கள்!

தெரிந்த ஆட்டோ ரிக்ஷாக்காரர்! அப்பாவின் உதவியில் லோன் போட்டு, அப்பாவே கொஞ்சம் பணமும் கொடுத்து ஆட்டோ வாங்கியவர். பெட்ரோல் மட்டும் போட்டுவிட்டால், வண்டியை எடுத்துக்கொண்டு வருவார்!

அன்றைக்கும் அது போலச் சென்றபோதுதான் அந்த விபத்து நடந்தது!

"குளக்கரையோ, ஆற்றங்கரையோ அல்லது ஏதேனும் வெறும் பள்ளம்தானோ? இப்போதும் எனக்குத் தெளிவில்லை! சாலையிலிருந்து ஆட்டோவை உருட்டி விட்டுவிட்டு, அந்த லாரி பறந்துவிட்டது! எப்படி முட்டி, எப்படி விழுந்தோமோ? சுய நினைவு வந்து நான் பார்த்தபோது, மற்ற மூன்று பேரும் ஏதோ மாதிரி

நிலையில் கிடந்தார்கள்! கூப்பிடக் கூப்பிட அப்பாவும், அம்மாவும் பதில் சொல்லாதது, ரொம்பப் பயமாக இருந்தது! ஆட்டோ அண்ணன்தான் 'தண்ணீர்' என்று முனகினார்! யா.. யாரையாவது கூட்டி வர வேண்டும் என்று தேடி.. ஓட முடியாமல் அரை மயக்கமாக கீழே விழுந்து மீண்டும் ஓடி.. கடைசியாக ஒரு குடிசையோ, ஷெட்டோ மாதிரி ஏதோ இருந்தது! அதன்கிட்டே போன போது தாடி மீசையோடு ஒருத்தன்.. அவனிடம் சொன்னதும், தண்ணீர் எடுப்போம் என்று வீட்டுக்குள்.." எழுந்துவிட்டாள் அவள்.

கூடவே அவனும்! "போதும், சுதாகரி!"

அவன் சொன்னது காதில் விழவில்லையா?

"எனக்கு எதுவும் புரியவில்லை! ஆட்டோவிலிருந்து வீசி எறியப்பட்டு, முட்டி மோதி உருண்ட அந்த விபத்தே தொடர்கிற மாதிரி, முடிவில்லாத ஒரு பயங்கரக் கனவு போலத்தான் அப்போது தோன்றியது! விபத்தில் அடிபட்டதில் அரை உணர்வாகியிருந்தது, ஓடி வந்ததில் முக்கால் மயக்கமாகி, இந்த.. இந்த இதில், மீதி உணர்வும் போயிருக்குமோ, என்னவோ? ஒரே ஒரு நல்லதாக, அங்கு நடந்த எதுவும் எனக்கு நினைவும் இல்லை! தன்னுணர்வு வந்தபோது, எங்கேயோ தரையில் உருண்டு, எப்படியோ கிடந்தேன்! எழக்கூட முடியாமல், அடித்துப் போட்டாற்போல ஒவ்வோர் அணுவிலும் ஒரே வலி! சமாளித்து கஷ்டப்பட்டு எப்படியோ விபத்து நடந்த இடத்துக்குப் போனால் நாலைந்து பேர் கூடியிருந்தார்கள்! அம்மா, அப்பா முகம் மூடிவைத்திருந்தது! எனக்கு மறுபடியும் மயக்கம் வந்துவிட்டது.."

சுதாகரி சோர்ந்து, சோர்ந்து கிடந்ததை, திடுமெனப் பெற்றோரை இழந்ததின் பாதிப்பு என்றே ரங்கநாதன் கருதினார், அவளைத் தேற்றுவதற்காக அவர் செய்த எந்த முயற்சியும் பலன் தரவில்லை! ஒருநாள், சுருண்டு கிடந்தவளின் வயிறு மட்டும் பெரியதாகக் தோன்றவே, டாக்டரிடம் கூட்டிப் போனார்! சுதாகரி கருவுற்றிருப்பது, அப்போதுதான் தெரிய வந்தது!

"யாராவது பையனைப் பிடித்திருக்கிறதா, பிடித்திருந்ததா என்று பெரியப்பா கேட்டபோது, எனக்கு ஒன்றும் புரியவில்லை! ஏன் என்று தெரிந்தபோது, அப்போதும் அதே நிலைதான்! பல பெற்றோர் கூட ஒப்புக்கொள்வார்களோ, என்னவோ, பெரியப்பா என்னை நம்பினார்! அழித்துவிடலாம் என்று அதற்குரிய டாக்டரிடம் அழைத்துப் போனார், காலம் ரொம்பவே கடந்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள்!

வெறும் மண்ணைப்போலக் கிடந்தேன் நான்! பெரியப்பாதான் யோசித்து, யோசித்து எல்லாமே செய்தார்! எல்லாருக்கும் நல்லவராக இருக்கத்தான் தெரிந்ததே தவிர, அப்பா பணம் அதிகம் சேமித்து வைக்கவில்லை! பெரியப்பாதான் அவரது ஊர் நிலங்களை விற்று, வடக்கே கூட்டிப் போனார்! பழையது எதுவும் வேண்டாம் என்று எண்ணினார் போல! பவித்ரா பிறக்கும்வரை அங்கேதான்!

"ஆனால், எந்த இடத்திலும், அந்த வயதில் வயிற்றைத் தள்ளிக்கொண்டு நின்றால், எவ்வளவு ஏளனம்! அவமானம்! அதற்கும் மேலாக, அவ்வப்போது, ஒன்றும்

புரியாமல் மருட்டிய அந்தப் பயங்கரக் கனவு! விழித்தால் ஒன்றும் நினைவிராது! ஆனால், அதன் பாதிப்பு.. உடம்பு வலிகூட, அப்படியே இருக்கும்! அதோடு, யூகம் என்பது முடியும்தானே? பெரியப்பாவிடம் கூடச் சொல்ல முடியாமல் தவித்த தவிப்பு! எவனோ ஒரு பாவி! ஆனால், வதைபட்டது நானல்லவா? பவித்ரா பிறக்கும்வரை உயிர் எவ்வளவு பெரிய சுமையாக இருந்தது தெரியுமா?"

அப்போது பளு தாங்க முடியாததுபோல சுதாகரியின் தலை பின்புறம் சாய அவள் பெரிய மூச்செடுத்தபோது, மகேந்திரன் பேசினான்.

"அன்று யாருடைய பிழை என்று கேட்டாயே, அந்த முகம் எனக்கு மறக்கவில்லை, சுதாகரி! அந்த முகத்தில்... ஆற்றாமை, கோபம், வெறுப்பு, அருவருப்பு, அட முட்டாளே.. என்று முகத்துக்கு நேரே அழைப்பதுபோல ஓர் எகத்தாளம்! அதன் பின்னணியில், பெரிதாக கற்பனையிலும் அடங்காததாக ஏதோ இருக்கிறது என்பது மட்டும் நிச்சயமாயிருந்தது! அதனாலேயே, அதைப் பற்றி நான் கேட்கத் துணியவில்லை! ஆனால், உன் இழப்பு இவ்வளவு பெரிதாக.. இத்தனையாக இருக்கும் என்று.. கடவுளே!" என்றான் கரகரத்த குரலில்! உணர்ந்திருக்கிறான்!

கேட்கவில்லையே என்று நினைத்தாளே! கேட்காத காரணம், இதுவாக இருந்திருக்கிறது!

மீண்டும் ஒரு பெருமூச்சுடன் சுதாகரி மறுபடி தொடர்ந்தாள்.

"பவித்ரா பிறந்தாள்! அவளுக்கு என் அம்மாவின் தோற்றம்! அப்பாவின் பார்வை! தெளிவு! கனிவு! என் அப்பா, அம்மா இருவரும் திரும்பி வந்ததாக நினைத்தேன்! அவ்வளவு காலத்துக்குப் பிறகு, வாழ்வில் ஈடுபாடு வந்தது! ஆனால், அதுவும்தான் எவ்வளவு கடினமாக இருந்தது! அவ்வளவு சின்ன வயதில், கணவன் இல்லாமல், கையில் குழந்தையோடு நின்றால், மிக மோசமான பெண் என்றுதான் தோன்றும் போலும்! வாழ்வில் ஈடுபாடு வந்தது தெரிந்ததும், பெரியப்பா எனக்குப் போர்க்கலைகள் கற்பித்தார்! மற்ற எது புரியாவிட்டாலும், 'தண்டம்' மட்டும் எல்லோருக்கும் நன்றாகப் புரிந்தது!

ஆனால், அதைப் பயன்படுத்த நேர்ந்த ஒவ்வொரு முறையும், எனக்கு ஆண்கள் மீது வெறுப்பு வளர்ந்தது! பெண்களால் ஏற்பட்ட ஏளனம், அவமானங்களும் கூட, ஆண்களின் மேல் வெறுப்பாகவே மாறியது! கேவலமான ஓர் ஆணால் நேர்ந்த சிறுமைதானே, எல்லாம்?

'பிழையை மறக்கக்கூடாதா?' என்று கேட்டீர்களே! ஏதோ ஒரு சிறு தப்பு செய்திருந்தால் கூட, நாம் செய்த பிழைக்குரிய தண்டனை என்று மனதைக் கொஞ்சமேனும் சமாதானப்படுத்திக் கொள்ளலாம்! ஆனால், அநியாயத்தை சகிக்க நேர்ந்தபோது.. அந்தச் சூடும் வலியும் அனுபவித்தால்தான் தெரியும் மகேந்திரன்!

வாழ்வில் பவித்ரா மட்டும்தான்.. ஆண்களுக்கு இடமே கிடையாது என்று முடிவு செய்து, அதற்கேற்ப மனதைத் தயார் செய்தேன்! காலையில் விழிக்கும்போதும் இரவு படுக்கும்போதும் இன்னும் இடையில் கிடைத்த சமயங்களிலும் இதையே சொல்லி, மனதில் பதித்துக் கொண்டேன். பதினேழில் தொடங்கி இருபது வரை,

என்னை வளர்த்துக் கொண்ட அந்த நாலு ஆண்டுகளில், எவ்வளவு வேதனை! ஆண்களைப் பொறுத்தவரை, என் மனம் கல்லாகக் கடினப்பட்டுப் போனது! இருபதுக்கு மேல் பரவாயில்லை! சூழ உள்ளவர்கள், என்னை, நானாக ஏற்கப் பழகிக்கொண்டார்கள்! என்றாலும்.. நான் அனுபவித்தது, எதுவும் இல்லையென்று ஆகுமா?”

அவள் அருகில் சென்று, “உன்னைத் தொடலாமா?“ என்று மெல்லக் கேட்டான் மகேந்திரன்.

அதிர்ந்து நோக்கினாள் அவள்!

## அத்தியாயம் – 26




பூட்டுக்கு மேல் பூட்டாகப் போட்டுப் பூட்டி வைத்திருந்த வேதனைக் கதை! துன்பகரமான நினைவுகள்! அவற்றைச் சொல்லச் சொல்ல, சுதாகரி அன்றைய கொடிய உணர்வுகளை அப்படியே அனுபவித்துக் கொண்டிருந்தாள். வலி, கோபம், வெறுப்பு! கூடவே, அத்தனையின் கலவையான தவிப்பு!

அந்த நேரத்தில், அவள் அருகில் வந்து, “உன்னைத் தொடலாமா?” என்று மகேந்திரன் கேட்டது, அவளுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது!

அவளது விழிகள் அகலவும், “ஒன்றுமில்லை சுதாகரி. உன்னுடைய இந்த வலியில் கொஞ்சத்தையேனும் என்னால் எடுத்துக் கொள்ள முடிந்தால்..” என்றான் அவன்.

கொத்துப் பூச்சரங்கள் போல அவளை மென்மையாக அணைத்து, மயிலிறகால் தடவுவது போல மென்மையாக வருட, அவளுக்கு விழிகளில் நீர் சுரந்தது!

வலியை எடுத்துக் கொள்கிறானாமே!

சுமையாகத் தோன்றிய தலை, தானாக அவன் தோளில் சரிய, சுதாகரி மௌனமாகக் கண்ணீர் விட்டாள்.

மெல்ல வருடிக் கொடுத்தபடியே மகேந்திரன் சொன்னான். “புரியாத பலதும் இப்போது நன்கு புரிகிறது! அன்று இரவு உடையில்.. சற்றுக் கலைந்த தோற்றமாக என்னைப் பார்த்ததும் அறியாப் பெண்ணாக நீ திணறியது, அவ்வப்போது சுருக்கென்ற வார்த்தைகள், எல்லாவற்றையும் விட, உதவி கேட்பதிலும், பெறுவதிலும் உள்ள வெறுப்பு! புரியாமல் உன்னிடம் கோபப்பட்டேனே” என்று வருந்தினான் அவன்.

மெல்ல விலகி, “ஆண்களுக்கு என் வாழ்வில் இடம் கிடையாது என்பதையும் திரும்பத் திரும்ப உருவேற்றி, மனதில் உறுதிப்படுத்தி விட்டேன். அதை மாற்றுவது எளிதல்ல, அது முடியாது என்பதையும் புரிந்து கொள்ளுங்கள், மகேந்திரன்!” என்றாள் அவள் மெதுவாகவே!

அவளை நேராகப் பார்த்தான் மகேந்திரன்! கனிவுடன் கண்டிப்பாக, “உலக மகா உளறல் என்றால் இதுதான்!” என்றான் தெளிவாக.

“ஏன்.. எப்படிச் சொல்லுகிறீர்கள்?”

“பின்னே என்னவாம்? ஒப்புதலாக உன்னிடமிருந்து, ஒரு வார்த்தை, ஒரு சைகை தெளிவாக வாராதா என்று, இவ்வளவு நாளாக ஏங்கிக் கொண்டிருந்தேன்! சற்று முன்னதாகத்தான், ‘என்னைக் குத்திவிட்டு அவரிடம் போ, அவருக்கு ஒன்று என்றால் தாங்க மாட்டேன்’ என்று உன் நேசத்தைத் தெளிவாக, வெகுளியான துரைப்பாண்டியனுக்குக் கூடப் புரியும்படியாக அறிவித்தாய்! இப்போது திருமணத்துக்கு முடியாது என்றால் அதை, வேறு என்னவென்று சொல்வதாம்?” என்று, அழுத்தம் திருத்தமாகக் கேட்டான் மகேந்திரன்!

“மகேந்திரன்..?” என்று திகைப்புடன் யோசித்தவளின் முகம் எதையோ கண்டு கொண்ட பாவனையில் தெளிவுறலாயிற்று! ஆயினும், அவனை நோக்கி, “கண் முன்னே ஓர் உயிருக்கு ஆபத்து என்றால், அதைத் தடுக்க முயற்சிக்க மாட்டோமா, மகேந்திரன்?” என்று இன்னொரு சந்தேகம் கேட்டாள் அவள். அவனிடம் பதில் இருந்தது!

“செய்வாய் பெண்ணே, செய்வாய்! ஆனால், எப்படி? வேண்டாம், வேண்டாம் என்று சொல்லியிருப்பாய்! கையைப் பிடித்துத் தடுத்திருப்பாய்! யோசி, துரைப்பாண்டியன் நல்லவர்தான்! உன்னைக் கடவுளாக மதிப்பவரும் கூட! இதே ஆபத்து அவருக்கு நேர்ந்திருந்தால், அவருக்குப் பதிலாக, உன் உயிரைக் கொடுக்க முன் வந்திருப்பாயா? முக்கியமாகப் பவித்ராவைக்கூட மறந்து?”

பவியை.. அனியையும் மறந்து.. முடியுமா? கூடவே, இதோ அருகில் நிற்கிறானே.. இவன் நினைவே, அவளை பின்னுக்கு இழுத்திராதா? அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்றவன், “ஞானோதயம்?” என்று கேட்கப் பளீரென்று மலர்ந்த முகத்துடன் தலையாட்டினாள் சுதாகரி.

“நீங்கள் சொல்வது போலத்தான்.. நீங்கள் சொல்வதுதான் சரி, மகேந்திரன்! நான்தான் இவ்வளவு நாள், இதை வேறு விதமாக.. உணர்ச்சி வேகமோ, இந்த வயதின் தாக்கமோ.. அதனால், அதற்கு சாதகமாக நினைக்கிறோமோ என்றெல்லாம் தப்புத் தப்பாக எண்ணித் தவித்திருக்கிறேன் என்று தோன்றுகிறது!”

“நிச்சயமாக அந்த எண்ணம் தப்புதான்! நமக்குள் நேர்ந்திருப்பது, உண்மை நேசமேதான்! மோதல், காதல் என்பார்களே, அது போல முதல் சந்திப்பிலிருந்தே, நமக்குள் அந்த ரசாயனம் நேர்ந்து கொண்டேதான் இருந்திருக்கிறது. நான் முதலிலேயே கண்டு கொண்டேன். எனக்கு நம்பிக்கை தரும் விதமாக, நீயும் ஒவ்வொரு விதமாக நேசத்தை வெளிப்படுத்திக் கொண்டேதான் இருந்தாய்..”

என்றவனைக் குறுக்கிட்டு, "ஹேய் நானா? ஒரு நாளுமில்லை! சும்மாவேனும் கதை விடாதீர்கள்!" என்று சுதாகரி மறுத்தாள்.

பேச்சிலும், செயலிலும் எவ்வளவு கவனத்தோடு இருப்பவள், அவள்! அவள் எப்படி அவன் சொல்வது போல், நேசம் காட்டி நடந்திருப்பாள்? அதிலும் காட்டிவிடக் கூடாது என்றே இரு மடங்கு கவனத்தோடு ஒதுங்கிப் போனாளே!

"கதையா? நானா? சத்திய சோதனை மேல் கை வைத்துப் பிரமாணம் பண்ணாமலே, நான் சொல்வது எல்லாம் உண்மையாக்கும்!" என்றான் அவன் இலகுவாக.

"என்னது? எல்ல்.. லாமா? அந்த எல்ல்.. லாமில் ஏதோ, ஓர் உண்மையை எடுத்து விடுங்களேன் பார்ப்போம்!" என்றாள் அவள் கேலியும் கூடவே ஆர்வமுமாக.

"தாராளமாக! நினைவிருக்கிறதா, அன்று அனியைத் தேடிக் கண்டுபிடித்த நாள்! சாப்பிட்டீர்களா என்று கேட்டு, மூன்று தோசை சுட்டுத் தந்தாயே! தாய்க்குப் பின் தாரம்தானே பசியறிந்து உணவிடுகிறவள்? அதை, அன்றே தொடங்கிவிட்டாய் தானே?" என்றான் அவன்.

"பசித்திருக்கும் ஒரு மனிதருக்குச் சாப்பாடு கொடுப்பதை, இப்படியெல்லாம் விமர்சிக்கலாம் என்று எனக்குத் தெரியாதே!" என்று மறுப்பாகத் தலையசைத்தாள் அவள்.

"அப்படி எத்தனை ஆண்களுக்கு நீங்கள் பசிக்கு உணவு கொடுத்திருக்கிறீர்களாம்? அந்த வகையில் நான் தனிதானே? உன் வீட்டில் உட்காரச் சொன்னதே, நீ வேறு யாருக்கும் கொடுக்காத உபசாரம்!"

"இருக்கலாம்! ஆனால், வேறு யாருமே உங்களைப் போல பார்த்துக் கொள்ளத் தெரியாமல், பெற்ற மகளைத் தொலைத்தவர் இல்லையே! அந்தப் பரிதாபமாகவும் இருக்கலாம்!"

"ராட்சசி! உன் 'சுருக்' பேச்சைத் தொடங்கி விட்டாயே!" என்று அவன் கேட்டது புன்னகையும் கேலியுமாகவே! உணர்ந்து, "ம்! அந்தப் பயம் இருந்தால், சரி!" என்று மிரட்டுவது போலச் சொல்லி முறுவலித்து விட்டு, அவள் தொடர்ந்தாள்.. "ஆனால், நீங்கள் சொல்வது சரிதான், மகேந்திரன்! அனியிடம் எனக்குப் பாசம் ஏற்பட்டிருந்த போதும், அத்தோடு நிறுத்தாமல் உங்களையும் அந்த வட்டத்துள் அனுமதித்தது.. அனுமதிப்பது என்ன? தானாக நடந்தது!"

"தானாகவா? அப்படித் தோன்றும்படித் தெரிவதற்காக, நான் எவ்வளவு சிரமப்பட்டேன், தெரியுமா? கூடுதலாக ஒரு வார்த்தை விட்டால், நத்தையாகச் சுருட்டிக் கொள்வாயோ, உள்ளதும் கெட்டுவிடுமோ என்று யோசித்து, யோசித்து, நான் எவ்வளவு கவனமாக நடந்து கொண்டேன் என்று எனக்கல்லவா தெரியும்? 'இம்'மெனுமுன் அப்படி ஒதுங்கிக் கொண்டும் இருந்திருக்கிறாய்! அந்த 'ரோஜாவும் முள்ளும்' நினைவிருக்கிறதா? உன்னைத் திரும்பவும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருமுன் எனக்குப் பாதி நம்பிக்கையே போய்விடும். ஆனாலும், சின்னச் சின்ன

செயல்கள், வார்த்தைகள்.. பொதுவாகக் கண்களில் கவனம் இல்லாமல், என்னிடம் நீ இயல்பாகப் பேசியது எனக்கு ஆறுதலாக இருக்கும்!"

சஞ்சலத்தோடு, வீட்டுப் பின்பக்கத்து சிமென்ட் பெஞ்ச்சில், இராக்காலங்களில் அமர்ந்திருந்த தருணங்கள், சுதாகரிக்கு நினைவு வந்தன. அவனைத் தொடர்ந்து "நீங்கள் சொல்வது போல, உங்களால் என்னுள் நிறையப் பாதிப்பு இருக்கத்தான் செய்தது மகேந்திரன்! அதை யோசித்துப் பார்த்தும் இருக்கிறேன். யோசித்து, முன்பே சொன்னேனே.. அது போல வயதின் பாதிப்பு என்ற முடிவுக்கு வந்ததால், அதை அடக்க, ரொம்பவே போராடினேன்!" என்றாள் அவள்.



"என்னது? யோசித்துப் பார்த்து வந்த முடிவா? ஆக உன்னை யோசிக்க விடக்கூடாது என்று இப்போது புரிகிறது! குறைந்தபட்சமாகத் திருமணம் முடியும் மட்டுமேனும்! அதனால், உன்னைக் கேளாமலே வெகு சீக்கிரமாக நம் திருமணத்தை நடத்தப் போகிறேன்!" என்று அறிவித்தான் மகேந்திரன்.

"என்னது? மணந்து கொள்கிறாயா என்று நீங்கள் கேட்டு, அதற்குச் சம்மதம் சொல்கிற உரிமை கூட எனக்குக் கிடையாதா?" சோகமாகக் குறை கூறுவது போன்ற குரலில் கேட்டாள் அவள்.

"கிடையாதம்மா, கிடையாது! உரிமைதான் இருக்கிறதே என்று, திடீரென்று நீ திருப்பிக் கொண்டால், நான் என்ன செய்யட்டும்? அதனால், அந்த உரிமை மட்டும் உனக்குக் கிடையவே கிடையாது! ஆனால், திருமணத்தை எங்கே, என்ன மாதிரி நடத்தலாம் என்பதெல்லாம் உன் விருப்பம் போலத்தான். கோயிலில், வீட்டில், நம் ஊர் ரயில் நிலையத்தில்.. எங்கே வேண்டுமானாலும்!"

"ரயில் நிலையத்திலா?" என்று, கண்கள் விரிய வியந்தாள் அவள்.

"ம்ம்! நீ விருப்பப்பட்டால், அங்கேயும்தான்! அதிலும், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் என்றால், இன்னமும் வசதி! கைச்செலவே இல்லாமல், எங்கள் திருமணத்துக்குப் பத்தாயிரம் பேர் வந்தார்கள் என்று பெருமையடித்துக் கொள்ளலாம்!"

'கலீர்' என்று சிரித்து, "ஆஹா! வருகிறவர்களுக்கெல்லாம் உணவு கொடுத்துப் பெரிதாகச் செய்யப் போகிறீர்கள் என்று பார்த்தால், கடைசியில் எவ்வளவு பெரிய கஞ்சப் பிசுநாறி!" என்று சொன்னபோது, அடக்க மாட்டாமல், மேலும் கலகலவென்று நகைத்தாள் சுதாகரி!

முறுவலோடு ரசித்துவிட்டு, "உன் சிரிப்பு எவ்வளவு அழகாக இருக்கிறது! இந்த மாதிரி மனம்விட்டு, நீ இது வரை சிரித்ததே இல்லை தெரியுமா? இனிமேல், நீ

எப்போதும், இப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும், சுதா!" என்றான் உணர்ச்சியோடு, அவன்!

"எனக்கே அப்படித்தான் தோன்றுகிறது, மகேந்திரன்! இன்னும், இன்னும் சிரிக்க வேண்டும்போல! அடைத்து வைத்திருந்ததை எல்லாம் உங்களிடம் சொல்லி விட்டதாலோ, என்னவோ, உடம்பும் மனமும் காற்றுப் போல் லேசாகி.. சுகம்....மாக இருக்கிறது!" என்று, அந்த சுகத்தைக் கண் மூடி அனுபவித்துச் சொன்னாள் அவள்.

நெற்றியில் அவனது இதழ்களை உணர்ந்து, லேசாக அதிர்ந்து கண்களைத் திறந்தால், "நல்ல சமயங்களை நழுவவிடக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்மா! அதனால்தான்!" என்று அப்பாவியாகச் சொல்லி கண்ணால் சிரித்தான் மகேந்திரன்.

கன்னங்கள் சிவந்தபோதும், "அவர்கள் ரொம்ப வம்புக்காரப் பெரியவர்கள் போலிருக்கிறதே!" என்று சொல்லி சமாளித்தாள், சுதாகரி!

அவளையே பார்த்துக் கொண்டிருந்த மகேந்திரன், "என்னிடம் சொல்லிவிட்டதால், மனம் லேசாகி விட்டதாகச் சொன்னாயே சுதா, அன்று யாருடைய பிழை என்று நீ கேட்டபோதே, உன்னிடம் வற்புறுத்திக் கேட்டுச் சொல்ல வைத்திருந்தால், அன்றே நீ சிரிக்கத் தொடங்கியிருப்பாயே!" என்றான் சிறு வருத்தத்துடன்!

"நீங்கள் என்ன வற்புறுத்திக் கேட்டாலும், நான் சொல்லியிருப்பேன் என்றா எண்ணுகிறீர்கள்? ஊஹூம்! இப்போதே எச்சரித்து விடுகிறேன். உங்களுக்குப் பின் வாங்குவதற்கு, இதுதான் கடைசித் தருணம்! என் பிடிவாதம் பற்றி உங்களுக்குத் தெரியாது, மகேந்திரன்! ரொம்ப ரொம்ப அதிகம்! அதிலிருந்து மீள்வதற்கு, உச்சந் தலையில் ஓங்கி அடித்தாற்போல எனக்கு ஒரு பேரதிர்ச்சி தேவைப்பட்டிருக்கிறது! அனுபவிக்கும்போது ரொம்பவே கலங்கிப்போனாலும், தேவைப்பட்ட அதிர்ச்சியைத் தந்து துரைப்பாண்டியன் எனக்குப் பெரிய நன்மை செய்திருக்கிறார்!" என்றாள் அவள்!

"நமக்கு என்று சொல்!" என்று புன்னகையோடு திருத்திவிட்டு அவன் சொன்னான்.. "அந்த நன்மைக்குப் பிரதி உபகாரமாக, அவரது திருமணத்தை நாமே முன்னின்று நடத்தி வைக்க வேண்டும்!" என்று மகேந்திரன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வாயிலில் ஏதோ சத்தம் கேட்டது! போய்ப் பார்த்தால், ரங்கநாதன், அனி, பவியோடு ஒரு போலீஸ்காரரின் பிடியில் சுந்தரியம்மாளும் கூடவே இன்னும் சிலரும் நின்று கொண்டிருந்தனர்!

ஏதோ கத்தியபடி அனியும் பவியும் இவர்களிடம் ஓடி வர, காவலர் விவரம் சொன்னார்! "சார், உங்கள் மகள் அனிஷாவை இந்தம்மா கடத்த முயற்சித்தார்கள் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள்! கேட்டால், சொந்தம், சும்மாதான் கையைப் பிடித்துப் பேசினேன் என்கிறார்கள், இந்தம்மா! உங்களுக்கு உறவு என்றதால், இங்கே கூட்டி வந்தோம்!" என்றார். காவலரை உட்காரச் சொல்லிவிட்டு, ரங்கநாதனை உள்ளே அழைத்து விசாரித்தான் மகேந்திரன்.

நடந்த கதை வேறு!

துரைப்பாண்டியனை உசுப்பி அனுப்பிய சுந்தரியம்மாளுக்கு அத்தோடு திருப்தி ஏற்படவில்லை! கெஞ்சக் கெஞ்சத் தன்னை வீட்டை விட்டு அனுப்பிய மகேந்திரன் அடிவாங்கி, வெட்டும் குத்தும் பட்டுக் கிடப்பதைப் பார்த்து ரசிக்க ஆசைப்பட்டாள்! சந்தடி சாக்கில், உள்ளே நுழைந்துவிடவும் திட்டம் இருந்தது! அது ரொம்ப முக்கியம் ஆயிற்றே!

எனவே, அந்தப் பக்கத்து வாடகைக் கார் ஒன்றை ஏற்பாடு செய்துகொண்டு கிளம்பிவிட்டாள்! அன்றைய நிலையில் அதிகச் செலவே என்றாலும், வரப் போகும் வசதி ஈடுகட்டிவிடும் என்பது, அவள் மனதில் ஓடிய கணக்கு!

சக்தி நகருக்குக் கார் வந்து சேர்ந்தபோது, துரைப் பாண்டியனின் பைக் மூலையில் சக்தி நகருக்கு திரும்புவதை சுந்தரியம்மாள் கண்டாள்.

அவன் வந்த வேலை நடந்தது, நடவாதது தெரியாமல், மகேந்திரனின் வீட்டுக்குள் புக, அவளுக்குத் துணிவில்லை! மகேந்திரன் நல்ல நிலைமையில் இருந்தால், உள்ளே விட மாட்டான்! எனவே, விவரத்துக்காகத் துரைப் பாண்டியனைத் தொடர்ந்து போனால், அவன் அந்தப் பகுதியில் இருந்த கோயிலுக்குள் சென்றுவிட்டான்.

வெட்டிவிட்டு வந்து, கடவுளிடம் மன்னிப்புக் கேட்கிறானா? அல்லது, வெட்டுவதற்கு அனுமதி கேட்கிறானா? எப்படியும், அவன் செய்ய வந்த வேலைக்கு, அடுத்தவர் அறிய அவனுடன் பேசுவது நல்லதல்ல! முக்கியமாக, இந்தப் பகுதியில் உள்ள அடுத்தவர்கள்!

சாமியை வேரோடு கவ்விக் கும்பிடுவது போலக் கோயிலுக்குள் வெகு நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு வெளியே வந்தவனிடம் விசாரித்தவளுக்கு வயிறு எரிந்தது!

மகேந்திரனும் சுதாகரியும் பொருத்தமான ஜோடியாம்! அவர்கள் இருவரும் நன்றாக இருக்கட்டும் என்று கடவுளிடம், இவ்வளவு நேரம் மனமுருகி வேண்டிக் கொண்டானாம்!

“நீயும் அப்படியே வேண்டிக்க, பெரியம்மா! நல்லவங்களுக்கு நல்லது நினைச்சா, நமக்குப் புண்ணியம் சேரும்!” என்றுவிட்டு அவன் செல்ல, அவளுக்கு மனம் கொதித்தது! இன்னும் மூன்று மாதம் போனால், கையில் பணமே இருக்காது! அப்போது புண்ணியமா வந்து, கோழியும் முட்டையும் வாங்கித் தரப் போகிறது? இந்த காருக்கு வேறு, ஆயிரம் ரூபாய் அழுதாக வேண்டும்!

அவளது கொதிப்புக்கு நேர் மாறாக, சின்னப் பிள்ளைகள் கூச்சலிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்! கழுதைகளா என்று ஆத்திரத்துடன் பார்த்தால், அங்கே அனி இருந்தாள்! கூடவே அந்தக் குட்டிப் பிசாசு, பவித்ராவும்!

பணத்தேவை, அவளது கோணல் மூளையை இன்னோர் அவசரத் திட்டம் தீட்ட வைத்தது! இந்தக் காரோட்டி, பிழைப்புக்குச் சாராயம் காய்ச்சுகிறவன் தான். கூடக் கொஞ்சம் பணம் தருவதாகச் சொல்லி, அனியைக் கடத்திப்போய் விட்டால், வேறு ஆள் மாதிரி காட்டி, மகேந்திரனிடம் நிறையப் பணம் பிடுங்கலாம்!

"பிள்ளை பிடிப்பது உன் பொறுப்பு.. காரை ஓட்டுவது என் பொறுப்பு" என்றான் காரோட்டி! அதற்குள் பிள்ளைகளும் ஒவ்வொன்றாகக் கிளம்பலாயினர். வழியனுப்புவதும், விடை பெறுவதுமாக எல்லோரும் வாயிற்புறம் நின்றது வசதியாக, பெரியவர்கள் யாரும் இல்லாத நேரம் பார்த்து, கப்பென்று அனியைப் பிடித்து இழுத்தாள் சுந்தரியம்மாள்.



சட்டென யோசித்து, ஓரமாகக் கிடந்த கல்லை எடுத்து சுந்தரியம்மாளை குறிவைத்து அடித்தாள் பவித்ரா. மற்ற சிறுமிகளும் அவளோடு சேர்ந்துகொள்ள, கல்லடி தாங்காமல் வேறு வழியின்றி அனியை விட்டாள் பெரியவள். கையில் இருந்த கல்லைப் போட்டுவிட்டு "அனீ.." என்று தோழியிடம் ஓடிய பவித்ராவைப் பிடித்து, "பாவி, உன்னால் அல்லவா.." என்று சுந்தரியம்மாள் அவளை அடிக்க முயல, இப்போது தன் தோழிக்காக அனி ஓடிப் போய்ப் பாட்டியின் கையைக் கடித்து, பவித்ராவை விடுவிக்க முயன்றாள். மற்ற பிள்ளைகள் கத்த, வீட்டுப் பெரியவர்கள் வெளியே ஓடி வந்தனர். கூடவே, ரோந்து சுற்றிய போலீஸ்காரரும் அங்கே வந்து சேரவும், காரோட்டி சத்தமின்றி காரை கொண்டு போய்விட்டான்! சுந்தரியம்மாள் மாட்டிக் கொண்டாள்!

பிள்ளைகளை அழைத்துப் போவதற்கு ஸ்கூட்டர் இல்லாததால் நடந்து வந்த ரங்கநாதனும் அப்போதுதான் அங்கே வந்து சேர்ந்தார்! துரைப்பாண்டியன் சொன்ன 'சுந்தரி' என்ற பெயர் சமயத்தில் நினைவு வர, அவருக்கு விஷயம் புரிந்து போயிற்று!

எப்படியும், சுந்தரியம்மாள் பற்றி முடிவு செய்ய வேண்டியவன் மகேந்திரனே என்று, எல்லோரையும் இங்கே அழைத்து வந்தார்! அதற்கு நன்றியுரைத்தான் மகேந்திரன்.

"ஆனால், நீங்கள் எப்போதுமே எனக்கு நல்லதுதான் செய்கிறீர்கள், அங்கிள்! முதன்முதலில் சுதாகரியை இந்த ஊருக்கு அழைத்து வந்ததில் இருந்தே!"

முறுவலோடு அவன் குறிப்பாகக் கூறிய விதத்தில், அவர் முகமும் மலர்ந்தது! "அப்புறமாக எங்களை ஆசீர்வதியுங்கள், அங்கிள்!" என்று அவரது காதோரம் கிசுகிசுப்பாக கூறியவன், தன் அத்தையம்மாளிடம் திரும்பினான்! நடுங்கிக் கொண்டிருந்த அந்த அம்மாள், அவன் காலிலேயே விழப் போனாள். "போலீசிலே மட்டும் மாட்டி விட்டு விடாதேப்பா! நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன்!" என்று கெஞ்சினாள்.

சுதாகரியை ஒருதரம் பார்த்துவிட்டு, வெளியே போய், "சொந்தக்காரப் பெண்மணிதான். பைத்தியக்காரத்தனமாக ஏதோ செய்து விட்டாள். இந்த ஒரு தரம் விட்டுவிடலாம். எடுத்துச் சொல்லி, நானே எச்சரித்து அனுப்புகிறேன்!" என்று

சொல்லி, கூடவே நன்றியும் உரைத்துக் காவலரையும் மற்றவர்களையும் அனுப்பி வைத்தான்!

உள்ளே வந்து, நடந்தது அனைத்தையும் எழுதி, சுந்தரியம்மாளிடம் கையெழுத்து வாங்கினான். “பாருங்கள் அத்தை, இரண்டாவது தடவையாக என் குடும்பத்துக்கு அநியாயம் பண்ணப் பார்த்தீர்கள். இன்னொரு தடவை முயன்றால், இந்த ஒப்புதல் பத்திரம், போலீசிடம் போய்விடும்! என் அப்பாவுடைய அக்கா நீங்கள்! அதனால், உங்களைச் சும்மா தெருவில் விட எனக்கு மனமில்லை! அதனால், மாதம்.. ஒரு நாலாயிரம் ரூபாய் உங்கள் கைக்கு வருமாறு ஏற்பாடு பண்ணப் போகிறேன்! ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை! எந்தக் காரணம் கொண்டும், என் குடும்பத்துப் பக்கம் கூட நீங்கள் வரக் கூடாது! கடிதம், போன், எந்தவிதத் தொடர்பும் கொள்ளக் கூடாது! இந்த நிபந்தனையை நீங்கள் மீறின வினாடியில் இருந்து பணம் வருவது நின்று போகும். உங்கள் ஒப்புதல் பத்திரத்தையும் போலீசுக்கு அனுப்பி விடுவேன். உடனே கிளம்புங்கள்!” என்றான், கண்டிப்பான குரலில்! தப்பித்தேன், பிழைத்தேன் என்று ஓடிப் போனாள் அத்தையம்மாள்!

யோசனையோடு பார்த்து, “புரியவில்லையே! தண்டிப்பதற்குப் பதிலாகப் பரிசு மாதிரிக் கொடுக்கிறீர்களே!” என்று கேட்டார் ரங்கநாதன்.

“பரிசுதான் பெரியப்பா!” என்றாள் சுதாகரி! “துரைப்பாண்டியனை அத்தையம்மா கிளப்பி விட்டிருக்காவிட்டால், எதுவும் நடந்திருக்காதாம்! எனவே அதற்கான கூலிதான், இது! ஆனால், விஷயம் இப்படியென்று அவர்களுக்குத் தெரிந்தால், தொடர் தொல்லையாகி விடக்கூடும் என்றுதான் நிபந்தனையும், மிரட்டலும்!” என்று மலர்ந்த முகத்துடன் விளக்கினாள்.

“கடவுளே! நான் மனதிலே நினைப்பதைக்கூட, அறிந்து கொள்கிற மனைவியா? ஐயோடா! வருங்காலத்தில், ஆசைக்கு ஒரு சின்ன ஏமாற்று வேலைகூடச் செய்ய முடியாது போலிருக்கிறதே!” என்று பயந்தவன் போல் நடித்துச் சிரிக்க வைத்தான் மகேந்திரன்.

மகேந்திரனையும் சுதாகரியையும் ஆசீர்வதித்த ரங்கநாதன், கம்ப்யூட்டரில் விளையாடச் சென்றிருந்த பிள்ளைகளின் சிரிப்பைக் கேட்டு, “அவர்கள் இருவரையும், அம்மா, அப்பா என்று அழைக்கச் சொல்லவேண்டும்!” என்றார் மகிழ்ச்சியோடு!

அவரைப் புன்னகையோடு நோக்கி, “வேண்டாம், பெரியப்பா! இரண்டு பேருமே புத்திசாலிகள்! தானே முடிவு செய்யட்டும்! நாமாக எதையும் திணிக்க வேண்டாம்!” என்று சுதாகரி கூற, “எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. அங்கிள்!” என்ற மகேந்திரன், உடனே சுதாகரியைப் பார்த்து, “ஜால்ரா சரியாகப் போடுகிறேனாம்மா?” என்று அப்பாவி போலக் கேட்டு மற்ற இருவரையும் மீண்டும் சிரிக்க வைத்து, அவனும் மகிழ்ச்சியோடு நகைத்தான்.

அவர்களைப் பெருமிதமாக நோக்கி விட்டு, “கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டியிருக்கிறது! இந்தக் கோயில் வரை போய்விட்டு வருகிறேன். அப்புறமாக வீட்டுக்குப் போகலாம்!” என்று கிளம்பினார்.

அவர் செல்வதைப் பார்த்திருந்துவிட்டு, “இந்தப் பெரியப்பாவைத் தந்ததற்கு, நானும் கடவுளுக்கு நன்றி சொல்லவேண்டும். அவர்தானே, ஓய்ந்து ஒடிந்து கிடந்தவளை நிமிர்த்தி, நல்லபடியாக வாழ வைத்தவர்!” என்றாள் சுதாகரி!

“தாங்கி நிமிர வைத்தவர் அவராக இருக்கலாம். ஆனால், கல் பாறையில் நெல் விளைவிக்க முடியாது சுதாகரி! சக்தி உன்னதுதான்! அதை அவர் தூண்டி விட்டிருக்கிறார். உன்னுள் இருந்த ஒளியைச் சுடர்விட்டுப் பிரகாசமாய் எரிய வைத்த தூண்டுகோல், அங்கிள்! நானும் அதைச் செய்யவே. தூண்டுகோலாக இருக்கவே விருப்பம்! அணைப்பது வேறு விதமாகத்தான்!” என்றான் அவன், பேச்சைக் குரல் மாறாமல் வெகு இயல்பாகத் தொடர்ந்து! விழி விரிய நோக்கியவளின் கையைப் பற்றி முத்தமிட்டு, “அன்பின் அணைப்புடா, கண்மணி!” என்றான் கனிவும் காதலுமாக!